கே. வீ. நடராஜன்

சுவடு



வேலி

கே.வி. நடராஜன்



மனிதநேயத்தை
ஆராதனை
செய்யும்
சிறுகதைகள்



VEALI

Twenty two
short stories
in Tamil by
K.V. NADARAJAN

This edition is for sale in India only

ISBN NO. 1 876626 372

Published by
Dr. Pon Anura

Cover Design &
Illustrations
Elankai Nathan
2/71 New Colony, Second Street,
Kottivakkam, Chennai - 600 041.

வேலி

கே.வி. நடராஜன்

யாழ்ப்பாண
மண்ணின்
இதயத்தை
தேடும்
22 சிறுகதைகள்

மித்ரா வெளியீடு
Mithra Arts and Creations
சிட்னி தென்னை மட்டக்களப்பு

Mithra Books
ISBN 1 876626 372

Apart from any fair dealing for the purpose of Private Study, Research, Criticism or Review as Permitted under the Copyright Act, No part may by reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or any means, electronic, mechanical or photocopying recording or otherwise without prior written permission from the publishers.

Mithra Publication books are Published by
Dr Pon Anura

Production Editor
Espo

VEALI

(A Collection of 22 short stories)
by
K.V. NADARAJAN

Mithra Books First Edition
27th December 2000

Layout
M.Sridharan

Made in India by Mithra Book Makers

Mithra Arts and Creations

1/23 MUNRO STREET
EASTWOOD 2122 AUSTRALIA
Ph: (02) 9868 2567
e-mail: anura@matra.com.au

30 VANNIAH STREET
BATTICALOA (EP)
SRI LANKA

375/8-10 ARCOT ROAD
CHENNAI 600 024 INDIA
Ph: (044) 372 3182
e-mail: mithra@md4.com.in
Fax : 0091-44-4721336

மித்ர : 49
விலை : ~~[illegible]~~ 200/=

27 டிசம்பர் 2000
பக்கங்கள் : 312

என்னுரை

நூலுக்கு முன்னால், ஆசிரியன் சில வார்த்தைகள் சொல்வது சம்பிரதாயமாகும். அந்தச் சம்பிரதாயம் வர வேற்கத் தக்கதே. ஏனெனில் இச்சம்பிரதாயமில்லா விட்டால் ஆசிரியன் தான் உருவாக்கியுள்ள கதைகளைப் பற்றி அறிமுகப்படுத்துவதற்குக் களமில்லாமற் போய் விடும்.

நான் யாழ்ப்பாணத்தவன். யாழ்ப்பாணத்துச் சூழலில் வாழ்பவன். யாழ்ப்பாண மக்களிடம் விசேட, தனித் தன்மையுள்ள பண்பாடு இருக்கின்றது. அவர்களுடைய குறைபாடுகளிலேகூட நமக்கு அனுதாபம் பிறக்கிறது. அவர்களுடைய உள்ளத்து உணர்ச்சிகளையும், நெகிழ்ச் சிகளையும் அவர்கள் மறைக்கிறார்கள். அந்த மறைப்பும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் பிரிக்கமுடியாத ஓரம்ச மாகும். இந்தக் கலாசாரத்தின் இராக்கதப் பிடிக்குள் சிக்கியுள்ள பல பாத்திரங்களையே நான் இந்த இருபத் திரண்டு கதைகளிலும் அறிமுகப்படுத்தியுள்ளேன்.

நான் ஓரளவு துணிவுடன்தான் இச்சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகளைத் தொகுத்திருக் கின்றேன். என்னுடைய நாற்பது ஆண்டு எழுத்துப் பயிற்சியில் அறுவடையான கதைகளுட் சிலவற்றையே தொகுத்துள்ளேன். பொறுக்கு மணிகளல்ல; கிடைத்த மணிகள். பதினொரு கதைகள் கொண்ட 'யாழ்ப்பாணக் கதைகள்' என்கிற என் முதலாவது தொகுதி 1965 இல் வெளியாயிற்று. முப்பது ஆண்டுகள் கழித்து புதுக்கிய

இரண்டாம் பதிப்பு வெளியாயிற்று. நான் சமர்ப்பூமியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். என் சிறுகதைகள் அனைத்தையும் தேடிச் சேர்க்க முடியவில்லை. இருப்பினும், என் அனைத்துச் சிறுகதைகளும் அடங்கிய தொகுதி ஒன்றினை வெளியிட எஸ்.பொ சிரத்தை கொண்டார். தொடர்புகள் சீரில்லாத நிலையில் என் கதைகளிலே எவையெவை அவருக்குக் கிடைத்திருக்குமோ நான் அறியேன். தொகுக்கப்பட்ட அளவிலே திருப்தி அடைதல் என் ஊழாய் அமைகின்றது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் எஸ். பொ அவர் களுக்கு நிரந்தர இடமுண்டு. அவர் இதுவரை தனி மனிதனாக சாதித்தவை அதிகம். ஈழத்து முன்னணிச் சிறுகதை எழுத்தாளர்கள் பலர் அவரால் உருவாக்கப் பட்டவர்கள். பலர் அவருடைய எழுத்துக்களின் அருட்டு ணர்வால் எழுத்தாளர்களாகியுமிருக்கிறார்கள். 'எஸ்.பொ.' அவர்களுடைய தொடர்பும், அவர் அவ்வப்போது கூறிய உற்சாக மொழிகளும் என்னைச் சிறுகதை எழுத்தாள னாக்குவதற்குப் பெரிதும் உதவின என்பதைப் பெருமை யுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இன்று அவர் சர்வதேசிய அரங்கிலே தமிழ்க் கலாசாரக் குரலாகச் செயற் படுகின்றார். ஈழத்திலே நிகழ்ந்த இலக்கியப் பதிவு களையும் தடங்களையும் ஆவணப்படுத்துவதிலே அவர் காட்டும் அக்கறை அசாதாரணமானது. உலகளாவிய தமிழ்ப் படைப்பாளிகள் மத்தியிலே புரிந்துணர்வை ஏற்படுத்த அவர் செய்யும் பணிகள் ஈழமண்ணிற்குப் பெருமை சேர்க்கும். அப்பெருமையிலே என்னையும் இணைத்துக் கொண்டதற்கு என் நன்றிகள்.

யாழ்ப்பாணம்

கே. வி. நடராஜன்

முன்னீடு

'தலித்' இலக்கியம் பற்றி இந்நாளிலே உரத்துப் பேசப் படுகின்றது. தலித் படைப்பாளிகளுடைய இலக்கியப் பங்களிப்பு உரிய முறையிலே அங்கீகாரம் பெறுதல் வேண்டும் என்கிற எழுச்சியிலே எவ்வித தப்பும் இல்லை. ஒடுக்கப்பட்ட இனங்களின் விமுக்தி நாடிய எழுச்சிகள் அனைத்துமே நியாயமானவை என்கிற அறிவுத் தெளிவுடன் வாழ்கின்றேன். ஆனால், நான் என்றுமே ஜாதியின் பெயராலும், பிரதேசத்தின் பெயராலும் இலக்கியத் திருத்தவிசிலே ஓர் ஆசனம் யாசித்தது கிடையாது. சலுகைத் திட்டத்தின் கீழ் ஓர் அங்கீகாரம் என் தர்மத்தினதும் ஆற்றலினதும் நிராகரிப்பு என நம்புகின்றேன். படைப்பின் சுயாதீனம் என் உரிமை. அஃது ஆணவமாயினும் அதுவும் சேர்ந்ததே நான். இந்த என் நிலைப்பாட்டினை விளங்கிக் கொள்ளாது, உண்மையில் விளங்க மறுத்து, சாதி அபிமானத்தினைத் துறந்த துரோகியாக வாழ்கின்றேன் என்போரும் உளர். 'சுபமங்களா'விலே 'பார்ப்பனர்கள்' இறக்குமதி செய்த புதிய 'மெசையா' என்று கூடச் சாடினார்கள். இவை பற்றியெல்லாம் விஸ்தாரமாகப் பேசுவதற்கு 'வேலி'க்கான முன்னீடு தகுந்த அரங்கமா என்கிற தயக்கம் எனக்கு உண்டு. ஆனால், ஈழத்தமிழ் இலக்கியம் பற்றிய விசாரணை 'வேலி'க்கு அந்நியமாகாது என்பது வாஸ்தவம்.

'தலித்' என்பது, ஏனைய இஸங்களைப் போலவே தமிழில் இறக்குமதியாகிய ஒன்றுதான். Communism எவ்வாறு தமிழ் இல்லையோ, அவ்வாறுதான் 'தலித்' தமிழ் அல்ல. ஆனால்,

ஒடுக்கப்பட்ட மக்கள் தமது விமுக்திக்காக இச்சொற்களையோ, அன்றேல் இச்சொற்கள் குறித்து நிற்கும் கருத்துவங்களையோ ஏற்கலாகாது எனக் கட்சி பேசமாட்டேன். நான் தனித்தமிழ் உபாசகனுமல்லன்; எல்லாம் தமிழில் உண்டு என்று சாதிக்கும் அப்பாவி வெறியனுமல்லன். ஆனால், வடக்கே இருந்து இறக்குமதி யான கருத்துவத்துக்கு, அச்சான இலக்கியம் ஈழத்திலேதான் எழுதப்பட்டது என்றும், அதன் பிதாமகர் 'டானியல்'தான் என்றும், தமிழ் நாட்டின் புத்தி ஜீவித விமர்சகர் ஒருவர் ஒரு மாமாங்கத்துக்கு முன்னர் முன் வைத்த அஞ்ஞானம் மண்டிய கருதுகோள் ஒன்று புனர்விசாரணைக்கு உரியது. தஞ்சாவூரிலே முன்மொழியப்பட்ட இதனை, பிரதம அப்போஸ்தலரை இழந்து தவித்த ஈழத்து முற்போக்கு இலக்கியவாதிகள் - ஆரவாரமாக ஏற்றுக்கொண் டார்கள். இந்த அங்கீகாரத்தினால், இது வரலாற்று உண்மைபோல ஒப்புவிக்கப்படுதல் கொடுமை. ஞானத்தின் கற்பினை நாட்டுவதற்கு 'வேலி'க்கான முன்னீடு வாகான இடம்.

ஈழத்தின் ஜாதி முறைகளும், தமிழ் நாட்டின் ஜாதி முறைகளும் ஒன்றல்ல என்பதை தமிழ் நாட்டிலுள்ள புத்திஜீவித விமர்சகர்கள் அறியக் கடவர். அத்துடன், ஈழத்தமிழர்களுடைய ஜாதிய ஒடுக்குமுறைகள் யாழ்ப்பாணத்திற்கே உரிய தனித்துவக் கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்துள்ளன. யாழ்ப்பாணக் கலாசாரத்தினைத் தகர்த்து, தங்களுக்கான மனித உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் எழுபது ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள். அந்தப் போராட்டத்தின் வெவ்வேறு கட்டங்களிலேயும் உயிர்ப்புள்ள பங்கேற்றவர்கள் நளவர்கள். இந்த நளவர்கள் தமிழ் நாட்டிலே நாடார்கள் என அழைக்கப்படுகிறார்கள். இந்த நாடார்கள் தமிழ் நாட்டிலே தங்களைத் தலித்துகள் என்றோ, அன்றேல் அந்த ஜாதியைச் சேர்ந்த எழுத்தாளர்கள் தங்களை தலித் எழுத்தாளர்கள் என்றோ குறிசுட்டுக் கொள்ளுகிறார்கள்? நாடார்களின் இலக்கியம், பாக்கு

நீரிணையைத் தாண்டியவுடன் தலித் இலக்கியமாக மாறிவிடுமா? தவறான பிரமேயங்களை வைத்துக் கொண்டு, வழுவற்ற தத்துவ உண்மைகளைக் கண்டறிதல் சாத்தியமா? இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்காமல், ஒரு பொய்யை ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளிகளின் ஒருசாரார் ஒரு மாமாங்க காலமாக, ஈழமே தலித் இலக்கியத்தின் முன்னோடி என்கிற ஒரு வகைப் பெருமையிலே குளிர் காய்தல் மகா அநியாயமானது.

மேல் ஜாதிக்காரர்களின் கொடுமைகளுக்கு எதிராக (ஈழத்தில் பார்ப்பனியம் என்கிற மேலாதிக்கம் எப்பொழுதும் இருந்த தில்லை என்பதும்; எண்ணிக்கையினால் அவர்கள் தலித் அந்தஸ்துடன் துன்புறுகிறார்கள் என்பதே யதார்த்தம்) ஒடுக்கப் பட்ட தமிழர்கள் இலக்கியத்தைப் பிரக்ஞையுடன் ஓர் ஆயுதமாகப் பயன் படுத்தியுள்ளார்கள். இந்தப் பிரக்ஞை, காலத்தால், தமிழ் நாட்டுத் தலித் இலக்கியப் பிரக்ஞைக்கு முற்பட்டது என்பது உண்மை. ஆனால், ஈழத்து ஒடுக்கப்பட்ட மக்களுடைய சமூகப் பிரக்ஞை தலித் ஜாதியப் போர்க்குணம் பெற்றதில்லை. இடதுசாரி ஜாதி மான்களை ஜாதியப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கும் ஏற்பாட்டை யாழ்ப்பாணக் கலாசாரம் திணித்தது. இவற்றை ஆழமாக ஆய்ந்துணராது, காலத்தின் சமன்பாடுகளை வைத்து இலக்கிய வரலாறு சொல்லுதல் மகா அதாப்பியம்.

இன்னொரு சத்தியமும் விசாரணைக்கு உரியது. ஈழத்தில், மரவரி முறையினால், ஒடுக்கப்பட்டோரில் பெரும்பான்மையினரான 'மரமேறும்' ஜாதியாரே பொருள் வசதிகள் பெற்றனர். இவர்களே டானியலின் ஜாதியாரை அடிமை குடிமைகளாக அவமானப் படுத்தினார். எனவே, அடிப்படையில், டானியலுடைய தலித் பிரக்ஞை இவர்களுக்கு எதிராகவே கூர்மையடைந்திருக்க வேண்டும். அவர் எழுத்தில் இது வெளிப்படவே இல்லை. தன்னையும் தன் ஜாதியாரையும் அவமதித்தோரை ஆதரித்து எழுதியதை தலித் இலக்கியம் என வகைப்படுத்த முடியுமா? ஏன் தீண்டாமைக்கு

எதிராக வெகுஜனப் போராட்டம் நடத்திய சிறுபான்மைத் தமிழர்கள் ஜாதி வேளாளரின் தலைமைத்துவத்தைத் தத்துவரீதியாக வரவேற்கிறார்கள்? ஏன் டானியல் தமது ஜாதியாரின் இன்னல்களை மறந்து, தம்மையே குடிமையாக்கி அவமதித்த ஜாதியாருக்காகப் போர்க் குரல் எழுப்பி இலக்கியம் படைத்தார்? விடை காண்பதற்கு யாழ்ப்பாண கலாசாரத்தின் சிக்கல் தன்மைகளையும் இணைத்த விஞ்ஞானப் பகுப்பாய்வு தேவை. அப்பொழுதுதான் நேர்மையான வரலாறு எழுதப்படும். சம காலத்தின் வரலாறு திருகப்படும் பிசக்கப்பட்டும் எழுதப்படுதல் தவிர்க்க இயலாததாகும். உடனடியான ஆதாயங்களை நத்தி ஓடுதல் மனித சுபாவம். பதவி - புகழ் - இன்னபிற ஆதாயங்கள் வரலாற்றின் மசுவாதத்திற்குத் துணை நிற்கின்றன. இவற்றைப் புரிந்து கொண்டுதான் உண்மையின் தேடுதல் தொடருதல் வேண்டும். இவற்றுக்கு வசதி செய்தல் சமூக ஊழியமாகவும், இலக்கிய ஊழியமாகவும் உயரும்.

வரலாற்று மாணவர்கள், நிகழ்ச்சிகளின் சரியான ஆவணங்களை வைத்து, உண்மைகளைக் கண்டறிதல் வேண்டும். புத்திஜீவித செமியாக் குணங்களுக்காக உண்மைகள் பலி கடாவாகக் கூடாது. உண்மையான ஆவணங்கள் நாளைய சந்ததியினரைச் சென்றடையச் செய்தல் ஆக்கபூர்வமான தமிழ்ப் பணி. இந்தக் கருத்துகளை, அண்மையில் கனடா சென்றிருந்த பொழுது, இலக்கியச் சந்திப்புகள் பலவற்றிலும், உளப்பூர்வமாக முன் மொழிந்தேன். அத்துடன், ஈழத்தில் மேலாதிக்கம் செலுத்திய விமர்சன அப்போஸ்தலர்களுடைய அருட்பார்வை பெறாத படைப் பாளிகள் பலருடைய பங்களிப்பு அநியாயப் புறக்கணிப்புக்கு உட்படுத்தப்பட்ட கொடுமைகளையும் சான்றாதாரங்களுடன் சுட்டிக் காட்டினேன். எனவே, நேற்றை ஆகிவிட்ட, என் சமகாலப் படைப்புகளின் பரப்பினை ஆவணப்படுத்தும் அவசியத்தையும் வலியுறுத்தினேன். சிங்கள மொழியின் ஏகாதிபத்தியம் ஆவணக் காப்பகத்திலும் அநியாயமாகப் புகுந்து தமிழ் ஆவணங்களின்

அழிவைத் துரிதப்படுத்துவதையும் குறிப்பிட்டேன். இந்த ஆவணப் படுத்தும் முயற்சியிலே தமிழ்க் கனடியர் பலரும் ஆர்வம் காட்டியமை மகிழ்ச்சியாக இருந்தது.

சிறுபான்மைத் தமிழர்கள் எனக்கு உறவால் நெருக்க மானவர்கள். அவர்கள் பலரும் என்னை விருந்துக்கு அழைத் தார்கள். அந்த விருந்துகள் இலக்கியச் சந்திப்புகளாகவும் சல்லாபங்களாகவும் மாறின. சிறுபான்மைத் தமிழர் மகாசபை, ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழர்களுடைய அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதிலே நாற்பதுகளிலிருந்தே போராடியது. நீண்ட காலமாக அந்த மகா சபையின் செயலாளராய் நிறை பங்களிப்புச் செய்தவர் *இலங்கையர் செல்வரத்தினம்*. அவர் தமிழ்ப்பற்றாளர். கல்விமான். கனடாவிலும் சமூக - கல்வி - தமிழ்ச் சேவைகளிலே தம்மை ஈடுபடுத்தி வாழ்கின்றார். கனடா விஜயத்தின்போது, என்னை ரொறெண்டோ விமான நிலையத்தில் சந்தித்தார். என் கனடியத் தமிழ்ச் செலவுக்குத் துணை நின்றார்.அவருடைய முன்னிலையில் நடந்த விருந்து ஒன்றின்போது, ஈழத்தில் ஒடுக்கப்பட்ட தமிழர்களுடைய வாழ்க்கையின் யதார்த்த அநுபவங்களை வைத்து அற்புதமான சிறுகதைகள் எழுதிய கே.வி. நடராஜனின் முழுமையான தொகுதி ஒன்று வெளிவருதல் வேண்டும் என்று பலரும் சொன்னார்கள். இன்னொரு கல்வியாளரான *அலெக்ஸாண்டர்*, தமிழ்க் கலைகளின் முன்னெடுப்பினைத் தமது வாழ்க்கையாக்கிக் கொண்ட *திவ்வியராஜா* குடும்பத்தினர், இக்கால இலக்கிய வளர்ச்சியிலே புதிதுகள் தேடும் நான்காவது பரிமாணம் *க. நவம்* குடும்பத்தினர். என் மருமகன் *எம்.சி.எஸ். சந்திரபோஸ்*, மொன்றேல் நகரை மையமாகக் கொண்டு இலக்கியப் பணிபுரியும் *சிறிசுக்கந்தராஜா*, *மைக்கேல்* ஆகிய பலரும் நேற்றைய இலக்கியங்களை ஆவணப்படுத்தும் என் முயற்சிக்கு அக்கறையான ஆர்வங் காட்டினார்கள். இச்சந்திப்புகளை ஒருங்கிணைத்து வெற்றி சாதிக்க உதவிய என் தம்பி *சரத்சந்திரனையும்*, அவன் மகன் *சதாவையும்*

நன்றிப் பெருக்குடன் நினைவு கூருதல் தவிர்க்க ஒண்ணா. அந்தத் தமிழ்க் கனடியர்கள் காட்டிய ஆர்வத்தினாலேதான் 'வேலி' இத்தகைய ஓர் பொலிவான தொகுதியாக வெளிவருகின்றது.

'வேலி'யிலே இருபத்திரண்டு கதைகள் தொகுக்கப் பட்டுள்ளன. பல கதைகள் யாழ்ப்பாணக் கலாசாரத்தினை மிக நுட்பமாகத் தரிசிக்கின்றன. யாழ்ப்பாண மண்ணின் இதயத்தினைத் தேடுவதையே நமது எழுத்து ஊழியமாக கே.வி. வரித்துள்ளாரோ எனவும் தோன்றுகிறது. எந்தக் கதையிலும் கட்சிப் பிரசாரங்கள் நுழையாத ஒரு நேர்மையையும் நடுவு நிலைமையையும் கடைப் பிடிக்கின்றார். இந்த அழுங்குப் பிடியான நடுநிலைமைக் கொள்கை அவருடைய படைப்புகளின் இருட்டடிப்புக் காரணமாக அமைந்ததோ என ஐயுறுகின்றேன். இந்த அந்தகாரத்தைக் கிழித்து 'வேலி' உண்மை ஒளியை தமிழ்ச் சுவைஞர் மத்தியிலே நிலைநாட்டும் என நம்புகின்றேன். இந்தக் கதைஞரின் பலம் யாழ்ப்பாணத்தின் பாமரரும் பஞ்சைகளும் கையாளும் பேச்சுத் தமிழுக்கு உயிர்ப்புக் கொடுத்துள்ளமையாகும். வேறு எந்தப் படைப்பாளியும் இந்தத் தமிழை இவ்வளவு நேர்த்தியாக இலக்கியப் படைப்பிலே பதிவு செய்யவில்லை எனத் துணிந்து கூறலாம்.

இந்த முன்னீட்டினை இலக்கிய யோகி ஏ.ஜே. கனகரத்னாவின் வாக்கியத்துடன் முடித்தல் மகா பொருத்தம்: *அதிகம் அறியப்படாத, நிச்சயமாக அறியப்பட வேண்டிய சிறுகதை ஆசிரியரின் சிறுகதைத் தொகுதி இது.*

எஸ். பொ

1-23 MUNRO STREET
EASTWOOD 2122
AUSTRALIA.

யாழ்ப்பாணக் கலாசாரம்

யாழ்ப்பாணம் ஒரு தனி உலகம். அந்த மண்ணிற்கே உரித்தான தனித்துவக் கலாசாரப் போக்கும் அதற்குண்டு. உணர்ச்சிகளின் சொரூபங்களையும், எண்ணங்களின் முகங்களையும் வெளியே காட்டாது, ஏதோ மனோசிக்கலிலும் மன அவசரத்திலும் அவற்றைத் திரையிட்டு வாழும் பண்பு அக்கலாசாரத்திற்கு மட்டுமே உண்டு. அந்தத் திரை தான் தென்னோலை வேலிகள் - Cadjan curtain. இந்த வேலியால் - கறையான் பிடித்து உக்கிப்போன 'செத்தை'யாக இருந்தாலும் - தனது அம்மண வாழ்க்கையை மறைத்து விடலாமென்பதில் யாழ்ப்பாணத்திற்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. அந்த நம்பிக்கையும், அது எழுந்து நிற்கும் 'கதிகால்'களும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் பிரிக்க இயலாத அம்சங்களாகும். ஆமைக்கு ஓடு எப்படியோ அப்படித்தான் யாழ்ப்பாணத்திற்கு வேலி, வேலியே வேலிகள். இவ்வேலிகளும் பல வகைத்து. வேலிகள் கட்டி வாழும் மனோபாவத்தின் உருவகமாகத்தான் கிடுகு வேலி அமைந்துள்ளது. பழைமைக்கு இசைந் தொழுகுவதாகக் காட்டிக் கொள்ளுதல்; தடிப்பான சாதி ஆசாரத்தைப் பேணுதல்; 'பணச்சடங்கு மூன்று நாட்கள் நடைபெறும்' என்று அழைப்பிதழ் விடுதல்; 'மரக்கறி' மனோபாவத்திற் பிரீதியென நடித்தல்; உறவு முறைகளை இறுக்கி வைத்தல்; - எல்லாமே தாழ்வுச் சிக்கலில் அழுந்தும் ஒரு சமூகந் தன்னைப் பாதுகாப்பதற்கு ஏற்படுத்திய வேலிகளே. பணம் என்ற ஜடத்தையே உயிர்ப் பொருளாக்கி,

அதைத் தெய்வ பீடத்திலமர்த்தி, அதையே பூஜை செய்து கொண்டு, அதைப் பூஜை செய்யாதது போலக் காட்டிக் கொள்வதுகூட - அது பச்சையான மத்தியதர வகுப்பினைப் பிரதிபலிப்தாக இருந்தாலும் - அதுவும் யாழப்பாணக் கலாசாரத்தின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கவே உதவுகின்றது. உணர்ச்சிகளை மறைத்தும் அமுக்கியும், காப்புறுதியை உறுதிப்படுத்துஞ் சடங்குகளாகவே யாழ்ப்பாணக் கல்யாணங்கள் நிறைவேறுகின்றன. 'காணி பூமி - நகை நட்டு - சேனை சனம் - குலம் கோத்திரம்' - எல்லாமே அவர்களுக்கு 'இன்சூரன்ஸ் பொலிஸி'களே! அத்தகைய வாழ்க்கை முறைகளும், வேலிகளும். இந்த வேலிகளை எ.'.குலித்து, வீதிக்கு வரும் விவகாரங்கள் ஈழத்தின் சுவை மிகு வழக்குகளாகப் பிரபல்யமடைகின்றன. இவற்றைப் பிரபல்யப்பட்டு, பழியைச் சம்பந்தப்பட்ட தனி நபர்கள் மீது சுமத்தி, 'இவை விதி விலக்குகளே' என்று பறை சாற்றுவதும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் ஓரம்சமாகும். 'யாழ்ப்பாணம் இறுக்கமான - கட்டுப்பாடான ஒழுக்க நெறிகளுக்கு இசைந்தொழுகிக் கற்புத் தனத்தைக் காப்பாற்றுகின்றது' எனப் பிறரை ஏமாற்ற இஃது உதவுகின்றது. பிறரை ஏமாற்றும் அதே நேரத்தில், அவர்கள் தங்களையும் ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள். இந்தப் போக்கும் சேராமல் யாழ்ப்பாணக் கலாசாரம் பூரண மடைவதில்லை. இவையெல்லாம் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் பூச்சு வேலைகளே. சைவனொருவன் தன்னை அவ்வாறு காட்டிக்கொள்ள, நெற்றியிலே தாராளமாக விபூதிப் பூச்சை அப்பிக் கொள்வதைப் போல! சைவர்கள் புனைந்து கொள்ளும் வேடமே விபூதிப் பூச்சு, அந்த விபூதிப் பூச்சினால் சைவத்தின் உயிர் மூச்சினை உணர்த்த முடியாது.

(கே.வி. நடராஜனின் முதலாவது சிறுகதைத் தொகுதிக்கு 65 இல் எஸ்.பொ. எழுதிய 'முன்னீடு'விலிருந்து)

என்
பாட்டியும்
அம்மாவும்
வாழ்ந்து, என்னை
வளர்த்து
ஆளாக்கிய
அந்த யாழ்ப்பாணத்தில்
'சாவு ஒன்றே உம்மையும்
என்னையும் பிரிக்கும்'
என்கிற பிடிவாதத்துடன்
மண்ணின்
பரமார்த்த பக்தர்களாய்
மனித நேயம்
வளர்க்கும்
அந்த மனிதர்களுக்கே!

இது
படையல்

உள்ளுறை

□1 ஒன்றுக்குள் ஆயிரம் 17 □2 பிரம்ம ஞானி 40

□3 கனவான் 60 □4 சாம்பல் 64 □5 தேர் 81 □6 நரபலி 93

□7 அப்புவைத் தின்னிகள் 103 □8 கறை 115 □9 வீடிவு 127

□10 சுவீப் 150 □11 அன்றில் அன்றேல் 164 □12 வேலி 175

□13 ஊருக்காக 180 □14 இழவு 190

□15 யாழினிக்கு ஒரு கடிதம் 203 □16 கள்ளும் கதையும் 213

□17 வழிபிறக்குமா? 226 □18 புரட்சி ஓங்குக! 236

□19 ஒட்டாத உறவுகள் 254 □20 காலஞ் தாழ்த்திய ஞானங்கள் 272

□21 தந்தைக்கு உபதேசம் 287 □22 அவருக்கும் தெரியும் 300



1

ஒன்றுக்குவ் ஆயிரம்

"எடியே எளியவளே உன்னைக் கட்டினதாலை தான்ரி எனக்கு ஏற்பட்ட அவமானமெல்லாம்."

"மகாராசாவுக்கு இப்பதானாக்கும் அது தெரிஞ்சது."

"என்னடி சொன்னாய்?... இன்னுமொருக்கால் சொல்லடி பார்ப்பம்... உங்களைக் காட்டிலும் நாங்கள் ஒண்டும் குறைஞ்ச சாதியில்லையெடி!"

"அப்ப நாங்கள் தானாக்கும் குறைஞ்ச சாதி?"



"பின்னே!"

"எந்த வாகடததிலை படிச்சனி?"

"உந்த வாகடம் வங்கிஷம் இழுத்தியெண்டால் உடைப் பன் பல்லை. உடைப்பன் எண்டால் உடைப்பன்ரி! ஆ!"

"முந்தி ஏதோ மகாராசன் பரம்பரை என்று சொல்லு வியள்! இப்ப திடீரென்று அப்பிடிச் சொல்லிறதை விட்டிட் டியள். காலத்துக்கேற்ற உந்த நழுவிப் புத்தியாலை தானை உங்களுக்குந்தப் பட்டப்பேர் வந்தது."

"என்னடி சொன்னாய்?... என்னுமொருக்கால் சொல்லடி பார்ப்பம்?... எழும்பி வந்தனோ... மிரிக்கிற இடத்து மிரிதான் மிரிப்பன்."

பூலோகன் அராத்தத் தொடங்கி விட்டான். உவனுக்கு குடிச்சால் ஒரு மொசுமொசுப்பு. அறுதல் புழுக்கையன். குடிச்சால் குடிச்சுப் போட்டு வந்து உன்ரை பாட்டிலை கிடவன்ரா குத்தியா. மற்றவையை ஏன்ரா மல்லுக்கு இழுக்கிறாய்? அவளும் – பெடிச்சி பூரணம் – ஒரு நாளோ இரண்டு நாளோ உவன்ரை அதுக்குதியன் பேச்சுக் களையும், அடி உதைகளையும் தாங்கிக் கொண்டிருக்க முடியும்? தண்ணியும் மூன்று பிழைதான் பொறுக்கும். என்ன ஒண்டுக்கும் ஒரு அளவு பிரமாணம் வேண்டாமே? அவளுக்கும் பொறுத்தே பொறுத்து 'சீ நாயே' எண்டு சொல்லுற அளவுக்கு வந்திட்டுது. பின்னை, வராதே? பழகப் பழக பாலும் புளிக்கு மெண்டாப் போலை பூரணத் தின்ரை வாய் மூப்பான பேச்சுக்கு ஆர் காரணம்? உந்த நாத்தலன் தானே... ம்... மூப்பு முகாந்திரத்துக்கு ஆளில்லாததாலை பெடி பெட்டை அராத்தி விளையாடுதுகள். முருகா, முடிச்சு முழுசாக மூண்டு



மாதங்கூட ஆகவில்லை. அதுக்கிடையிலை வேப் பெண்ணையாகப் போச்சு.

நானும் இந்த உடையார் வளவுக்கை வந்து பங்கை இல்லையெண்டாலும் நாற்பத்தைஞ்சு அம்பது வருஷமாகப் போகுது. ஏன் நான் மட்டுமே அப்படி? கெட்டது கிழிஞ்ச தெல்லாத்துக்கும் இந்த உடையார் வளவு தானே இடங் குடுத்திருக்கிது. கள்ளுக் கொட்டில் மாதிரி ஒவ்வொரு கொட்டில் போட்டுக் கொண்டிருக்கிறதுக்கு நிலக் கூலியாக அஞ்சும் ரண்டுமாக ஒரு காலத்திலை குடுத்துக் கொண்டிருந்த காலம் மலையேறி, இப்ப பத்தும் பதினைஞ்சுமாக ஆனை குதிரை மட்டத்துக்குப் போய் விட்டது. எண்டாலும் கொட்டிலுகள் இண்டும் அப்பிடியே தான் கிடக்குதுகள். அப்பிடிக்கொத்த இந்த வளவுக்கை நானும் வந்து பழமும் திண்டு கொட்டையும் போட்டிட்டன். இந்தச் சவங்கள் மாதிரி ஒரு கறுமம் பிடிச்ச குடும்பத்தை நான் கண்டதுமில்லைக் கேட்டது மில்லை. சவங்கள், சவங்களை... ஆர் உப்புடிக் குருகுருப்பிலை ஓடிவரச் சொன்னது? உந்த மாதிரிக் கிடந்து இரவு பகலாக குத்துப்படச் சொன்னது? இல்லைத் தெரியாமத்தான் கேட்கிறன்?"

"இப்ப எழும்பி வந்ததெண்டால் கொல்லுவென்ரி தேவடியாள். எளியவளே, சரிக்குச் சரியாடி வாய் காட்டிறாய்? இண்டைக்கு ஒரேயடியா வாய் காட்டிறாய். இண்டைக்கு ஒரேயடியா வாய் மூத்துத்தான் போச்சுடி உனக்கு. கடவாயைக் கிளிப்பன்ரி."

"எனி உந்தக் கொல்லுவன் கிழிப்பன் எண்டிற பாஷையை வேறை ஆருக்கும் கிட்ட வைச்சுக்கொள்.



தண்ணியும் மூண்டு பிழை தான் பொறுக்குமெண்டு ஏதோ சொல்லுங்கள். இது வரவர மாமி கழுதை போலானாள் என்ற கதையாய்ப் போய்க் கொண்டிருக்கு. ஓ, எனக்கும் இந்த எடுபட்ட குமரிக்கு கொடிக்குப் பிறந்து செடிக்குத் தலை வைச்சுப் படுக்க வெளிக்கிட்ட எனக்கு வேணும். இதுகும் வேணும். இன்னமும் வேணும். பத்தாம் வகுப்புப் படிச்ச பாழ்பட்ட எனக்கு எங்கடை வீடு கட்ட வந்த மேசனோடை ஒடி வந்தன் பார். காதலாம் காதல். கண்கெட்ட எனக்கு காதலெண்டால் இப்பத் தான் சரியாத் தெரியுது..."

பூரணமும் இண்டைக்குத் துணிஞ்சு தான் நிக்கிறாள் பெடிச்சி. உதுதான் சரி. உவன்தர வழிக்கு. உப்பிடியும் குடுக்கத்தான் வேணும். எண்டாலும் குடிகாரன் வெறிகார னெட்டை வாய்க்கு வாய் காட்டாமல் எரப்பன் ஒஞ்சிச்சுப் பேசிறதுதான் நல்லது. இண்டைக்கு ஏட்டிக்குப் போட்டியாக வார்த்தையள் தடிச்சுக் கொண்டு போகுது. கடைசியிலை குரலெடுப்புத்தான் போலை கிடக்குது. என்ன காடாத்தெண்டாலும் செய்யட்டும். அவளும் தான் பெட்டை என்ன இழவைச் செய்யிறது? கட்டயிலை வைப்பான். அவள் பேசாமல் இருந்தாலும் அடிப்பான். பேசினாலும் அடிப்பான். எதுக்கெண்டுதான் அவளும் ஈடு குடுக்கிறது? அப்பிடி ஒரு வெறி உவனுக்கு. என்ன இடியேறு விழுந்த நாத்தலனாகக் கிடக்குது. ம்... எத்தினை நாளைக்கெண்டு தான் சின்னஞ் சிறிசுகள் சீரழிஞ்சு போகக் கூடாதெண்டு நினைச்சு நாலு வார்த்தையை நல்ல தனமாகச் சொல்லிக்கில்லி சமாதானப் படுத்தப் போனாலும் தீன் தின்னிற நாய்க்குக் கிட்ட ஆரும்



பிறத்தியார் போவிட்டால் அது அவக்கெனப் பாயிற மாதிரி யெல்லே பாயிறான் புழுக்கையன். அவள் பெடிச்சி பூரணத்தின்ரை பரிதாபத்துக்காகத்தான் பாதியும் அப்பிடிப் போய்த் தலையிடுறதும். ஒரு வேலிக்குள்ளை 'ஐயோ தாயாரையோ; கூவா குளங்கரையோ' என்று குரலெடுத்துக் குழறினால் என்ரை பேதலிச்ச நெஞ்சு பகீரெண்டுது. அந்தப் பாவத்தை நினைச்சால் தான்... ம்.... அந்தப் பாழ்படுவான். அவளுக்கு அடிக்கிற அடிவிலா எலும்புகள் விட்டுப் போகிற மாதிரியெல்லே குத்துவான்?

ம்... நானுந்தான் என்ரை குலங் கோத்திரத்தை விட்டுப் போட்டு – ஏன் அதைச் சொல்ல வெக்கப்பட வேணும்? என்ன வேசை ஆடினனா? அல்லது திருகிப் புதைச்சனா? எனக்கென்ன வெக்கம்? – ஒரு கள்ளுச் சீவிறவனோடை தான் ஓடி வந்தனான். மாணிக்கர். அதுதான் என்ரை இவற்றை பேர். இவர் செத்தும் சிவலோகம் போய்விட்டார் மனுஷன். உந்தப் பூலோகன் கதைக்கிற மாதிரி எண்டைக்காகிலும் கதைச்சிருக்குமே மனிஷன்? 'எணே இஞ்சரணை, இஞ்ச ஒருக்கா வாணை' எண்டு கூப்பிடும். ஒரு நாளும் இல்லாத திருநாளாக இருந்தால் ஒரு முடறு எல்லுப் போலை எங்கையாவது பாவிச்சிட்டு வந்தா ரெண்டால் 'இஞ்சேரும், இதைக் கேட்டீரோ பாறுவதி' எண்டுதான் கூப்பிடும். இந்த ஒரு வேலிக்குள்ளை இருக்கிற இளசுகள் முடிச்சு முழுசா மூண்டு மாதங்கூட ஆகயில்லை. அதுக்கிடையிலை கீரியும் பாம்பும் மாதிரி ஆகிவிட்டுதுகள். நரம்பு, எலும்பு இல்லாத நாக்கை அங்காலும் இங்காலும் சுழட்டிச் சுழட்டி நாக்குத் தெறித்தாப் போலை என்ன கேளாத கேள்வியெல்லாம் கேட்டுக் கொண்டிருக்குதுகள்.



"எடியே! கொப்பன் பென்னாம் பெரிய பணக்காரன்ரி. அவன், அந்தப்... என்னை ஒரு இளப்பாரமான மாப்பிள்ளை எண்டு நினைக்கிறான்ரி. வடுவா றாஸ்க்கல். ஆக்களை ஆரெண்டு தெரியவில்லை போல கிடக்கு அவனுக்கு. சல்லுச் சல்லாக வெட்டிக் கூறு போட்டு விடுவாங்களடி என்ரை ஆக்கள். ஆற்றை பரம்பரையெண்டு தெரியுமாடி. உனக்கும், கொப்பனுக்கும் உன்ரை ஆக்கள் மற்றவை மறிச்சவைக்கும் யாழ்ப்பாணத்தையே கெடிக் கலக்கிக் கொண்டிருந்த கறுத்தாற்றை பரம்பரையெடி நான்."

"அடடா, பின்னை ஏன் பேசுவான்? உன்ரை பரம்பரை ஊத்தையை வேறை சொல்ல ஆரம்பிச்சிட்டியே?... தட்டிக் கேட்க ஆளில்லை எண்டால் தம்பி சண்டப்பிரசண்டமாம் எண்டு ஏதோ சொல்லுங்கள். அந்தக் கணக்காகத் தான் உன்ரை ஊத்தை வாளிப் பரம்பரை, பரம்பரைப் புத்தி யெல்லாத்தையும் சொல்லிக் காட்டுகிறாய். உங்கடை கையளும், கத்தியளும் நீழிற அளவுக்கும், வெட்டிச் சரிக்கிற அளவுக்கும் மற்றவன்ரை எல்லாம் என்ன அடைவு கடைக்குப் போய்விட்டதாமே? வெள்ளியிட்ட காலுக்கு வெறுங்காலொண்டும் அடிமையில்லை. வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலை இருப்பானெண்டு நினைக்க வேணும். உன்ரை பரம்பரை கறுத்தாரை ஒரே தறியலா தறிச்சு விழுத்திய என்ரை சொந்தக்காரங்களையும் உனக்குத் தெரியத்தானே வேணும்?"

"எடியே, வல்லவன் பம்பரம் மணலிலும் ஆடுமடி."

"ஆடும், ஆடும். உனக்கு வாய் இல்லாட்டி இவள வத்துக்கு நாய்தான் இழுத்துக் கொண்டு போயிருக்கும்."



"பெரிய ரோசக்கண்டு தானே பின்னை. வலு கெதியா ரோசம் வந்திடுத்தெடி. ஆத்தையிலையும் அப்புவிலையும் வலுவாக உருகி வழியிது. கோத்தை கள்ளுக் குடிக்க வாறவங்களோடை கள்ளைக் குடுத்துப் போட்டு சல்லாபம் போடுற சங்கதி யெல்லாம் எனக்குத் தெரியாதெண்டு நினைச்சியோடி. பறைப் பச்சைத் தேவடியாளுகள்."

"உனக்கு நாக்கிலை புத்தெல்லே எடுக்கப் போகுது? வெறியெண்டால் உங்கினை பேசாமல் விழுந்து போய்க் கிடவன். உந்த மாதிரி இல்லாதது பொல்லாதது யெல்லாம் கதைச்சு உன்ரை நாக்குத்தான் அழுகிப் புழுத்துச் சாகப் போறாய். வீணாக என்ரை ஐயாவையும், அம்மாவையும் சந்திக்கிழுக்காதை. உனக்கும் அவைக்கும் எந்தக் குடுக்கல் வாங்கலும் கிடையாது. அதுகளைப் பற்றிக் கதைக்க உனக்கு எத்தினை முழ நாக்கு வேணும்? என்ரை ஆத்தை கள்ளுக்குடிக்க வாறவங்களோடை ஆடுறா சரி. ஏன் உன்ரை கோத்தையை மறந்திட்டியோ? உன்ரை கோத்தை வலுதிறம்தானை பின்னை. இல்லைத் தெரியாமத்தான் கேட்கிறேன்? உன்ரை கோத்தை கள்ளு வித்துக் கொண்டு தானும் போட்டுப் போட்டு தெந்தனாப் பாடி ஆடிற ஊத்தைச் சங்கதி யெல்லாம் உனக்குத் தெரியவில்லை. மற்றவையின்ரை பல்கலைக் குத்தி மணக்கிற அளவுக்கு வந்திட்டாய்."

"எடியே என்ரை ஐயா கொட்டில்லை ஆள் வைச்சு விக்கிறா ரெடி. உன்ரை கோத்தை யெல்லையெடி கொட்டில்லை விக்கிறா?"

"இப்ப காசு பணம் பிடிபட்டுப் போச்சு. ஆத்தை வித்து ஆடின தெல்லாம் மறைஞ்சு போச்சு. இப்ப தேடித் திரட்டிப்



போட்டியள். பின்னைத் தெருத் திண்ணைக்கு வராமல் அந்தப்புரத்துப் பெண்டுகளாயிற்றினம்."

"என்னடி சொன்னாய்?" தொம். தொம்...

"ஐயோ, என்ரை ஐயோ... என்ரை அம்மாவெணே..."

உங்கை பார், பாழ்படுவான், கட்டையிலை வைப்பான். அவள்ளை தலைமயிரை கையிலை சுத்திப் பிடிச்சுக் கொண்டு காலாலும், கையாலும் அடிக்கிறான். என்ன இடியேறாக் கிடக்குது. இதிலை பேசாமல் இருக்கவும் மனம் கேட்குதில்லை இந்தக் கிழட்டுத் தோறைக்கும். ஒருக்கா என்னெண்டு பாப்பம். பொறு, இது ஆற்றை குரல்...

"டே, பூலோகா...! நாங்கள் நித்திரை கொள்ளுற தில்லையோ? சும்மா ஏன்ரா அராத்தி அராத்தி அவளைப் போட்டு அடிச்சுக் கொல்லுறாய்? அயலட்டத்துச் சனம் இந்த இரண்டுங் கெட்ட நேரத்திலை என்னடா நினைக்கும்?"

"இது என்ரை குடும்ப விசயம். மற்றவை ஆரும் இதிலை தலையிடக் கூடாது. நான் என்ரை பெண்டிலை அடிப்பன். குத்துவன். வெட்டுவன். மற்றவன் எவனுக்கும் அதைக் கேக்கிறதுக்கு உரிமையில்லைத் தெரிஞ்சுதே?"

"என்னடா உன்ரை பாட்டுக்கு ஒரேயடியாத் துள்ளிக் கொண்டு போறாய்.."

"உனக்கென்னத்துக்கு உந்தத் தெருநாயோடை வீண்கதை. அது தனகி விளையாடிக் கொண்டிருக்குது. வந்து பேசாமல் உன்ரை பாட்டிலை படு."

"உனக்கென்ன எனக்கென்ன எண்டு ஒதுங்கிப் போற தாலை தான்ரி உவன் தரவளியின்ரை அக்கிரமம் கூடிக் கொண்டு போகுது."



இது நல்லதம்பியும் பெண்டிலும்தான். அவள் பெண்டில் பிடிச்சு இழுத்துக் கொண்டு போகவில்லை யெண்டால் உந்தப் பொறுக்கிப் புழுக்கையனுக்கு இரண்டு செப்பனாகக் குடுத்திருப்பான். நன்மைக்குக்கூடக் காலமில்லை. விலக்குப் பிடிச்சு விடப் போறதுகளோ டையுமல்லே அவன் வில்லங்கத்துக்கு வாறான்.

சீ, சீ... உடையார் வளவு இந்த இரண்டு சவங்களா லையும் மானங் கெட்டுப் போச்சுது. வேறை போக்கிட மில்லாத நாலு பத்துச் சாதியும் காகங்கள் கூடு கட்டி இருக்கிற மாதிரி இருந்து கொண்டு இருக்கிற இடத்திலை இந்த இரண்டாலையும் தான் பெரிய பரிசுகேடாப் போக விட்டது. அதுகும் இந்த இரண்டுங் கெட்ட நேரத்திலை உதுகள் ஆலோலம் பாடிக் கொண்டி ருந்தால் ஆருக்குத் தான் எரிச்சல் வராது? நல்லதம்பியும் பெண்டிலும் கூட உறங்கிவிட்டுதுகள் போலை கிடக்குது. எனக்குத்தான், கிழட்டுத் தோறைக்கு, நித்திரை வராமலுக்குக் கிடந்து உதுகளின்ரை வெள்ளிடியையும், வயித்துப் போக்கையும் பாத்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்க வேண்டிக் கிடக்குது... சவங்கள்.

பூலோகனுக்கும் வெறி முறிஞ்சு போச்சுது போலை கிடக்கு. பேச்சு மூச்சைக் காணவில்லை. அவன் உப்புடித் தான். அறுதலிமோன். அடக்கத்திலை போவிட்டான் எண்டு நினைச்சுக் கொண்டிருக்கையுக்கை பேந்தொருக்கால் ஆவேசமாகத் தொடங்குவான். அவள் பெட்டை பாவம் பூரணம். அவள்ரை விசும்பல்தான் விட்டு விட்டுக் கேக்குது. பாவம் நான் என்ன செய்ய? என்ரை வயிறும் பத்தி எரியுது தான்... ம்... அவரவர் விதைச்சதை அவரவர் தானே



அறுக்க வேணும்? வேறை ஆரும் எண்டால் தாய் தேப்ப னோடையாவது போய் அண்டி விடுங்கள். அவன் தகப்பன் இவளைக் கண்டாலே கண்ட துண்டமாக வெட்டிப் புதைக்கிறன் எண்டு நிக்கிறானாம். இரு தலைக் கொள்ளி எறும்பாக அவளும் பெடிச்சி நிண்ட இடமும் இல்லாமல் வந்த இடமும் இல்லாமல் பரிதவிச்சுக் கொண்டிருக்கிறாள்.

நான் இவரோடை – அதுதான் என்ரை இவர் மாணிக் கரோடை தான் – ஓடி வரயுக்கை உவள் பெடிச்சி பூரணத்தின்ரை வயசுதான் இருக்குமெண்டு நினைக்கிறன். பூரணத்தின்ரை வடிவுக்கும், சங்கைக்கும் நான் அவள்ரை பக்கத்திலை கூட நிக்க முடியாது. நானென்ன பச்சை அரிசிமாநிறம்தானே? பூரணம் நல்ல எலும்பிச்சம் பழ நிறம். கோல மாவை விரலிலை எடுத்து அளவளவாகத் தூவி இருக்கிற மாதிரி ஒரே அளவாக அங்கமெல்லாம் அம்மன் விக்கிரகக் கணக்காக வண்ணக் குஞ்சாட்டம் இருக்கிறாள்.

ஏன், உவன் உந்த நாத்தலன் பூலோகன் எண்டா போலை என்ன வாடல் வதங்கலே? சாடிக்கேத்த மூடி மாதிரி அவளுக்கேற்ற தோற்றம்தான். பத்தாம் வகுப்புப் படிச்ச பூரணமும் அவன்ரை வடிவிலைதானே மயங்கி ஓடி வந்தவளெண்டால் பார்க்க வேண்டியது தானே? என்ன வடிவிருந்து என்ன? வெறும் வடிவு வாழ்க்கையாயிடுமா? குடும்பம் வடிவாக நடந்தால் அதுதான் வடிவு எண்டுதான் சொல்லுவன். வடிவான மாம்பழத்துக்கை கிடந்த சூத்தையை அவளும் பெடிச்சி என்னெண்டுதான் கண்டு பிடிக்க முடியும்?

இவரோடை ஓடி வந்து வாழ்ந்தும் முடிச்சிட்டன்.



இண்டைக்கும் அவரை நளவனோ பள்ளனோ எண்டு கூட எனக்குத் தெரியாது. கள்ளுச் சீவுகிறவனெண்டால் பேந் தென்ன? அது நளவனாகக் கிடந்தாலென்ன? பள்ளனாகக் கிடந்தாலென்ன? இந்த இரண்டு சாதியும் கள்ளுச் சீவுகிற வங்கள்தானே? மற்ற வெள்ளாளன் வேத்தாளன்ரை கணிப்பிலை இதுகள் இரண்டு சாதியும் குறைஞ்ச சாதியள் தானே? கதை இப்பிடி இருக்கையுக்கை இந்தச் சவங்கள் பேந்தேன் ஒண்டுக்கை யொண்டு 'நாங்கள் தான் பெரிசு, இல்லை நாங்கள் தான் பெரிசு' எண்டு சம்மந்தமோ சாவாசமோ வைச்சுக் கொள்ளா மலுக்கு... ஆடுற கூத்தை நினைச்சாத்தான் எனக்கு புண்ணிலை புளி பட்டது மாதிரி 'சுர்' எண்டு எங்கையோ இருந்தெல்லாம் பத்திக் கொண்டு எரியுது.

ஆர் சேர்த்தாலும் சேர்க்காது விட்டாலும் சரி, இதுகள் தங்கடை மூப்பிலை காதலோ கீதலெண்டு கூடிக் கொண்டோடி வந்ததுகள் தங்களுடைய பாட்டிலை ஒதுங்கி ஒற்றுமையாய் இருக்கிறது தானே! இந்த உடையார் வளவு இப்பிடிக் கொத்த ஆள் அனுசார் அற்ற வைக்குத்தானே இடமும் குடுத்துக் கொண்டிருக்குது? நானும் ஒரு ஓடி வந்தவள்தான். வாழவில்லையோ, சந்தோஷமாக இருக்கவில்லையோ?

அவள் பெடிச்சியா அதுக்கு மாட்டன் என்ற சொல்லுறாள்? அவள் இருந்த இருப்புக்கும், நடப்புக்கும்... ம்... எடுபட்ட குமரி, இந்த மூத்திரச் சேங்கை கயிறென்று பிடிச்சுக் கொண்டோடி வந்து... அவள் எல்லாத்துக்கும் சம்மதிச்சுத்தானே வந்தவள்? தேப்பன் வைரமுத்தன் இன்னும் கறுவிக் கொண்டு தானாம் இருக்கிறான்.



அவன்ரை மனம் இப்பதைக்கு ஆறாது போலை தான் கிடக்கு. எண்டாலும் தாய் தங்கம்மா! பெத்தமனம் பித்து பிள்ளை மனம் கல்லுந்தானே? பெத்த வயிறில்லையா? புருஷன், மற்றப் பிள்ளையள் குட்டியளுக்குத் தெரியாமல் ஒட்டிப் பதுங்கி வந்து மகள் பூரணத்தைப் பார்த்து விட்டுத்தான் போறாள் பாவம். அவளும் மகளை நினைச்சு நினைச்சு அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக ஆறாத் துயரம்தான். ஆளும் அரைவாசியாய்ப் போய்விட்டாள் பாவம்.

பெட்டை பூரணம் கற்புக்கரசிதான். இந்த இழவு விழுவான்ரை உவளவு அடியையும் உதையையும் பொறுத்துக் கொண்டு அன்ன ஆகாரமில்லாமல் கிடந்தாலும் படலை தாண்டுவதும் கிடையாது. மற்ற வைக்குக் கிட்டக் காட்டிக் கொள்ளிறதும் கிடையாது. இந்தப் பொறுக்கிக்கு போட்டுக் கிடந்து எடுத்த வைரக் கல்லு மாதிரி அவள் வந்து வாச்சிருக்கிறாள். வேறை ஆருமெண்டால் தாய் தங்கம்மா கேட்ட மாதிரிக்கு "ஆரோ தூரத்துச் சொந்தக்காரர் வீட்டிலை உன்னைக் கொண்டு போய் விடுறன் பிள்ளை வா" என்று கேட்ட மாதிரிக்கு பேசாமல் போயிருக்குங்கள். அதுக்குப் பூரணம் சொன்ன விளக்கத்தை நினைச்சால்... "நான் என்ரை மூப்பிலை வந்திட்டன் அம்மா. எனக்கு இதுதான் சரியான தண்டனை. இப்படியே கிடந்து செத்துப் போறன்" என்றாளே. அதுகும் இந்தக்காலத்துப் பெடிச்சி எண்டால் அவள் கற்புக் கரசிதானே? அவள் இப்பிடித் திண்ட நாளும் தின்னாத நாளுமாகக் கிடக்க அந்தப் பொறுக்கி வீடு போய் நக்கிப் போட்டு வந்து அவங்கடை புத்திமதியளையும் கேட்டுக்



கொட்டு இஞ்சை வந்து அவளைப் போட்டுப் படாத பாடு படுத்திறான். புழுக்கையன்.

சும்மா சொல்லப்பிடாது. முடிச்சு ஒரு மாதமாக வலு ஒற்றுமையாய், தேனும் பாலும் மாதிரி அவ்வளவு அன்னிய உன்னியமாகத்தான் இருந்தவன் பெடியன். எப்ப அவன்ரை ஆக்களோடை சாடை மாடையாகப் போய்வரத் துடங்கினானோ அண்டே பிடிச்சது சனியன். இதுகள் இப்பிடிக் காடையும் புலுனியுமாகக் கிடந்து அடிபட்டு ஆறணியப் படுகிறதுக்குத் தூபம் போடுகிறதும் அவங்களாத்தான் இருக்குமெண்டு நான் நினைக்கிறன்.

'நீ வேணுமெண்டால் வந்து போடா. அவளை மாத்திரம் இந்தப் படலைக்குக் குறுக்கையும் கூட்டி வராதே,' என்கிறார்களாம். எப்பிடி இருக்கு ஞாயம்? இந்தப் புழுக்கைப் பயல் இதுக்கு மேலையும் அங்கை போய் நக்கிக் கொண்டு திரியுது. தூ....

"இந்த வளவுக்கை இருக்கிற ஒட்டுக் கேட்கிற சாதி யெண்டு நினைச்சியோடி? எல்லாரையும் சிரச்சேதம் செய்து போட்டுத்தான் போவன். என்னடி நித்திரை கொள்ளுறியே? எழும்படி. பெண்ணொண்டு எடுக்கப் போய் கண்ணொண்டு கெட்ட கதையாயிட்டுதெடி என்ரை கதை."

"ஏன் மற்றவையிலை தாவிறாய்? நீ வலு இரகசியமாகத் தானே பேசுகிறாய், அதுகள் உன்ரை உபதேசங்களை ஒட்டுக் கேட்கிறதுக்கு? கேட்டுக் கொண்டிருக்கிறதுகள் ஆரும் காறித் துப்புங்கள்தானே?"

பாத்தியே பாத்தியே நான் சொன்னன். அடக்கத்திலை போவிட்டான் எண்டு நினைச்சுக் கொண்டிருக்கையுக்கை ஆரிலையும் தொத்திப் பிடிச்சுக் கொண்டு வெளிக் கிட்டிடு



வான். நானும் கொண்டோடி என்னவோ நினைப்பிலை அவன்ரை காதிலை படும்படியாக காறித் துப்பிப் போட்டான். அந்தச் சத்தத்தைக் கேட்டுத்தான் தம்பி சண்டைப் பிரசண்டம் செய்யத் தொடங்கியிட்டான். எனி ஒரு பாட்டம் முடிச்சுத்தான் அடங்கிக் கிடப்பான்.

ஆட்டைக் கடிச்சு, மாட்டைக் கடிச்சு, கடைசியிலை மனிசரைக் கடிக்கத் துவங்கின நாய் மாதிரி அவன்ரை இடிலத்தை... பண்ணிப் போச்சு. உவருக்குச் சொண்டு பிடிச்சு உரஞ்ச இந்த உடையார் வளவுக்கை ஒரு கோமணங் கட்டின ஆம்பிளையும் இல்லையெண்டு நினைக் கிறாராக்கும். உவன் குடிகாரன் வெறிகாரனோடை வீண்வம்பு என்னத்துக் கெண்டெல்லோ விட்டிட்டிருக் கிறாங்கள். இல்லையெண்டால் தம்பிக்கு நல மெடுத்துப் போட்டு, செய்ய வேண்டிய வேலையெல்லாம் செய்து போட்டுத்தான் இருந்த இடமும் தெரியாமல் ஓட்டம் காட்டி இருப்பாங்கள்.

காலமை பாத்தால் குனிஞ்ச தலை நிமிராமல் வழி தெரு விலை வாறபோற மனிசரைக்கூட நிமிர்ந்து பாராமலுக்குப் போவான். என்ணெண்டு தலை நிமிர்ந்து பாக்கிறதெண்டு வெக்கப்படுகிறானோ என்னவோ? அது ஒரு புறம் கிடக்க, அப்பிடிச் சாரைப் பாம்பு கணக்காகப் போவான். இரவு ஒருத் தற்றை முகம் ஒருத்தருக்குத் தெரியாத மைமலுக்கை திரும்பி வருவான். அப்பதான் நாகபாம்பு மாதிரிச் சீறிக் கொண்டு வாறவன். பாழ்படுவான். அதிலை எரப்பன் வாயிலை பூசிப் போட்டானெண்டால் பின்னைப் பார்க்க வேணுமே அவற்றை மதமதப்பையும் விறுவிறுப்பையும்? புழுக்கைப் பயல். உந்தச் சின்னஞ் சிறு வயதிலை உப்புடிக்



குடிச்சு வெறிச்சு சீரழிஞ்சு போறானே. எடபாழ்படுவானே! என்ன கவலை ஏற்பட்டதுக்காகவடா உப்புடிக் குடிச்சு வெறிச்சு உன்னை அண்டி வந்தவளையும் போட்டு இறைச்சியாக்கிக் கொண்டிருக்கிறாய்? அப்பிடிக்கு என்ன வர்மம் பிடிச்சுக் கொண்டு நிண்டு ஆடுறாய் எண்டு கேக்கிறன்? இல்லைத் தெரியாமத் தான் கேக்கிறன்?

"என்னடி கோத்தை இரகசியமாக வந்து போறாளாம்? நல்லா மேடை தடிக்க கோழிக்கறியோடை கொண்டு வந்து தாறா வாக்கும். என்ன கள்ளக்கோழி பிடிப்படி?"

"நாங்களொண்டும் கள்ளக் கோழி பிடிக்கவில்லை. அது எங்கடை பரம்பரையிலையும் இல்லாத குணம்."

"அப்ப நாங்கள் பிடிக்கிறனாங்களோடி?"

"ஆரும் பிடிக்கிறவைக்குத் தெரியும்."

"கொம்மா வாறது போறது கொப்பனுக்குத் தெரியு மோடி? அவன் அறிஞ்சால் இக்கணம் கோத்தைக்கு மிளகாய் போட்டிடு வானேயெடி."

"....."

"என்னடி நான் கேட்ட கேள்விக்கு மறுமழி சொல்லாமல் அம்மைமிண்டி மாதிரி இருக்கிறாய்? கேட்டதுக்கு மறுமழி சொல்லடி."

"....."

"இப்ப எழும்பி வந்தனெண்டால் கொல்லுவன். பேசாமலி ருந்தால் எல்லாத்தையும் போத்து மூடிப் போடலா மெண்டு பாக்கிறியாக்கும். உதெல்லாம் – எது? உந்த மாய்மால மெல்லாம் – எனக்குத் தெரியுமெடி. அழகள்ளி, தொழு கள்ளி, அசாரக் கள்ளி, அமசடக்குக் கள்ளியளை எல்லாம் இந்தச் சின்ன வயதுக் கிடையிலை கண்டு கழிச்சுப் பழமும்



திண்டு கொட்டையும் போட்டனான் தெரிஞ்சுதே? ஆ! அதிலை வேலை இல்லைத் தங்கச்சி – எதிலை? – அதிலை வேலை இல்லையெண்டன் அதுக்கு வேறை ஆளைத்தான் பார்க்க வேணும்..."

"எனியும் வேறை ஆள் வேணுமோ எனக்கு? ஆளான ஆள் என்ரை பூலோக இராசா இருக்கையுக்கை வேறை ஆளையும் தேட மனம் வருமோ?'

"எடியே பூரணம், வெழுவை வாங்கிச் சாகாதையெடி. உனக்கும் காச்சுத்தான் போச்சு. உந்த நக்கல் பாஷையள் எனக்கு விளங்காதோடி? எனக்கு விடாதையெடி கறடி. நான் கேட்டதுக்கு மறுமழி சொல்லு. யூ நோ ஹூ ஐ ஆம்?... பிளடி றாஸ்க்கல்."

"உன்னை இஞ்சை ஆருக்கும் தெரியாது பின்னே, நீ பேசுற ஊத்தை இங்கிலீசுகளைக் கேட்டுக் கேட்டுப் புளிச்சுப் போனதுகளுக்கு இந்த ஒறிச்சனல் இங்கிலீசாலை உங்கடை ஒண்டும் உசந்து போகாது. கெட்ட கேட்டுக்கு ஒரு இங்கிலீசும் பேச வருகுதோ?"

"ஏன்ரி, என்ரை இங்கிலீஸ் உனக்குப் பிடிக்கவில்லை யோடி? ஆரும் கால்சட்டை போட்ட கள்ளற்றை இங்கிலீசு தானாக்கும் உனக்குப் பிடிக்கும். கால்சட்டை போட்ட கழுதை ஒருத்தனைப் பாரடி எனி. ஓமோம், நீயும் பத்தாம் வகுப்பெல்லே படிச்சனி!"

"பத்தாம் வகுப்புப் படிச்சன், பாழ்பட்ட உன்னோடை வந்து கவிண்டன்."

"என்னடி சொன்னாய்?"

"....."

இப்ப ஏன் முட்டைக் கண்ணீர் விழுத்தி அழுகிறா எண்டு



தெரியவில்லை. உந்தப் பம்பிடுசிங்கி பனையைப் பிடுங்கி... பெட்டைக்கு அப்ப குருகுருப்புத் தாங்காமல் அவரோடை வாணம் விட்டுக் கொண்டோடி வந்தவ. அவற்றை வெள்ளைத் தோலிலையும், நைலோன் சட்டையிலையும் மயங்கி விட்டாவாக்கும். இல்லாட்டிக்கு, எடி வேசைக் குமரி, நீ பத்தாம் வகுப்பெல்லே படிச்சனி? உந்தச் சாந்தேப்பை பிடிக்கிறவனோடை, அதுகும் உன்ரை வீடு கட்ட வந்தவனோடை கூடிக் கொண்டோடி வாறி யெடி! சரி, அதுதான் போகட்டும். ஒரு குணமானவன், நல்லவன் நறியவனோடை கூடிக் கொண்டு வந்தியெடி? உதுகள் சேறு கண்ட இடத்திலை மிரிச்சுத் தண்ணி கண்ட இடத்திலை கழுவிற காவாலி விடுகாலியோடை.... அது 'சூ' எண்டவுடனே கிளம்பி விட்டியெடி?... கொண்டோடி.

ஏன்? - அந்தச் சினிப்பயலும் நல்லாத்தானாம் மேசன் வேலை செய்வானாம். ஒரு நாளைக்கு ஐம்பதோ நூறோ எண்டுகூட உழைப்பானாம். அதுசரி, உந்தக் கட்டு வேலை என்ன நெடுகவா வாற தொழில்? ஒரு கிழமைக்கு வேலை யெண்டால், ஒன்பது நாளைக்கு சும்மாவும் நிக்க வேண்டி வரும். உவன் கட்டிக்குடுத்த வீடுகள்தானாம் உங்கினை கிடக்கிற பென்னாம் பெரிய வீடுக ளெல்லாம். இஞ்சை பார், அவை சகவாசம் செய்யிற கொட்டிலை? அது மேயாமல் கொள்ளாமல் அடைப்புத் திறப்பின்றிக் கிடக்கிற அலங் கோலத்தை. உந்தத் தொழில் துறவுகாறங்களுக்கு தரித்திரமும் விட்டுப் போகாதாம்.... ம்....

எண்டாலும் உவன் புழுக்கைப் பயல் கூடுவாரோடை கூடித் தான் வலுவாக கெட்டுப் போனான். அண்டடிச்சு அண்டு வாயிலை போடுற உவனுக்கு இருக்கிற மேட்டிமை



யான பேச்சையும் போக்கையும் நினைச்சால்தான்... 'முதலை இல்லாத குளத்துக்கு தவளை அதிகாரமாம்' எண்டு என்னமோ சொல்லுங்கள். அந்தக் கணக்காகத் தான் உவனும். தறுதலை அஞ்சு முண்டு நாளைக்குள்ளை அவள் கொண்டு வந்த காதான், கழுத்தான், மூக்கான் எல்லாத்தையும் அறுத்திடிச்சுப் போட்டு அதிலை நல்ல வாய்க்கிதமா நல்லாத் திண்டு குடிச்சு குசாலா வசுக் கோப்பும் பாத்துப் போட்டு... ம்... கடவுளும் கொஞ்சக் கொஞ்ச நாளைக் குத்தான் உவர் தரவளிக்குக் குடுத்துச் சோதிச்சும் பாக்கிறது. உவைக்கு இடையிலை அதுக்குதியன் வந்து தெய்வத்தையும் மதிக்காமல், மனிசரையும் மதிக்காமல் என்னை விட்டவர் ஆர்? – எண்ட ஆணவத்திலை திரிஞ்சால், எல்லாம் நாலு மூண்டு நாளையில் ஆட்டம் தான்.

ஏன்? – அவன் தகப்பன் செல்லன் இரண்டு மூண்டு கள்ளுக் கொட்டிலுகளும் வைச்சுக் கொண்டு வலு நல்லாத் தானாமே இருக்கிறானாம். பெரிய செட்டி வத்தகன் மாதிரி இரணைப் பட்டுச் சங்கிலியும், மோதிரங்களுமாக வலு எடுபிடியாக காரும் வைச்சுக் கொண்டு திரியிறானாம்.

ஏன்? – இவள் பெட்டை பூரணத்தின்ரை தேப்பன் வைரமுத்தன் எண்டாப் போலை என்ன சின்னன் பொன்னனான ஆளோ? அவன் இவையள் எல்லாருக்கும் ஒரு படி மேலாலை உள்ளவனாம். எண்டாலும் எடுபாடோ, படாரம்பமோ மருந்துக்கும் அவனெட்டைக் கிடையாதாம். தான் ஒரு பெரிய தனவந்தன் எண்டிற சங்கதியை வெளியாலை காட்டிக் கொள்ளாத மாதிரி இண்டைக்கு பிறங்காலுக்கு மேலை தானாம் வேட்டி துணி கட்டு



வானாம். ஒரு நலமுண்டுச் சால்வையைக்கூடத் தோளிலை போடாமல் போத்துக் கொண்டுதானாம் திரிவான். தானொடுங்கத் தன் குலமுயரும் என்ற போக்கானவன் போலை கிடக்கு.

ஏன்? – இவள் பெட்டை பூரணத்தின்ரை தாய் தான் செல்லாச்சி, ஒட்டிப் பதுங்கி மகளைப் பார்க்கிறதுக்கு இஞ்சை வாறவள் தானே? உரிச்சு வைச்சு சுத்தம் சுவம் தாயும் மகளும் ஒரே சாங்கமும் அச்சும்தான். இந்த வேசைக் குமரி பம்பிடுசிங்கி பனையைப் பிடுங்கிக்கு அதுகள் தேடித் திரட்டி வைச்சிருக்கிற தெல்லாத்தையும் அனுபவிக்கக் குடுத்து வைக்கவில்லை. மூத்த பெம்பிளைப் பிள்ளையள் மூண்டுக்கும் பெரிய பெரிய உத்தியோகத்தங்களைக் கட்டிக் குடுத்து கரை சேத்துப் போட்டானாம். இவள் பூரணம் பெடியனுக்கு அடுத்த கடைக் குட்டிப்பெட்டையாம். திருகோண நட்சத்திரத்திலை பிறந்ததுகள் ஊரை உலகத்தை ஒரு கோணமாக ஆளுங்களாம். இவள் வேறை ஒரு கோணத்திலை வந்து கிடந்து அல்லல்படுகிறாள் பெட்டை. இவளுக்குத்தானாமே அந்த வீட்டையும் இப்ப புதிசாகக் கட்டத் தொடங்கினவன் தேப்பன். இந்தக் கொண்டோடிக் குமரி அந்த வீடுகட்டப் போனவன்ரை தலப்பிலை பிடிச்சுக் கொண்டோடி வந்து கிடந்து சுடுபடுகிது.

"கொம்மாவட்டைக் கேட்கிறது தானையெடி? உனக்குத் தர வேண்டிய உன்ரை பங்கு சீதனத்தை. கொக்காவைக்குக் குடுத்த மாதிரி உன்ரை பங்கையும் தரச் சொல்லிக்கேள்."

"இது ஒரு புதுக் கதையாக்கிடக்கு. உன்ரை ஆக்கள்



சொல்லித் தந்தவையோ? நல்ல சதித்திட்டம்தான். சீதனம் கொண்டு வந்தால் என்னைச் சேர்க்கினமாமோ? உனக்கு வெட்கம் ரோசம் இல்லையே உப்பிடிக் கேட்கிறதுக்கு? பேடிகளுக்கும் தான் மீசை முளைச்சிடுது கரப்பத்தான் பூச்சிக்கு மீசை இருக்கிற மாதிரி. அண்டைக்கு என்ன சொல்லி என்னைக் கூட்டி வந்தனி? 'என்ரை ஆக்களோ உன்ரை ஆக்களோ ஆரெண்டாலும் சேர்த்தாலும் சரி, சேர்க்கா விட்டாலும் சரி, என்ரை உடம்பிலை ஒரு சொட்டு இரத்தம் இருக்கிற வரையிலை உன்னைக் கண் கலங்காமல் பார்ப்பன் பூரணம். உவையின்ரை காசு பணத்திலை ஒரு செப்புக்காசு கூட எனக்குத் தேவயில்லை,' அப்படி இப்படியெண்டு எத்தனை பசப்பு வார்த்தைகள் சொல்லிக் கூட்டி வந்தனி? இப்ப கேட்டதை அண்டைக்கே கேட்டிருந்தால் எல்லாவற்றிலும் வலு முழிப்பாக இருந்திருப்பன்."

"அதெல்லாம் அப்போதையில் ஞாயமடி. இது இப்போதைய ஞாயம் தெரிஞ்சுதே! கொப்பன் என்ன இல்லாதவன் செல்லாதவனே? கொக்காளவைக்குக் குடுத்த மாதிரி உன்ரை சீதனப் பங்கையும் போய் வாங்கிக் கொண்டு வா. தெரிஞ்சுதே!"

"போதைகள் நேர காலத்துக்கேற்ற மாதிரி வேலை செய்யும் வித்தியாசப் படுமெண்டு எனக்கும் இப்பத்தான் தெரியுது. உன்ரை ஞாயப்படி, அன்றையது காமப் போதை. அது இப்ப தீர்ந்திட்டுது. இப்போதைய போதை, மதுப் போதையும், சீதனப் போதையும், சீ! நீயும் ஒரு மனுஷனா?"

ம்... பண்ணிப் போச்சு. சீதனமல்லே கேக்கிறான் புழுக்கையன். 'வல்லாளத்துரையே என்ரை வடிவான



மாப்பிளையே...' எண்டொரு ஒப்பாரி சொல்லதான் மனம் வருகுது. 'கிளியை வளர்த்து பூனைக்கு இரையாக்கி விட்டமே' என்று ஒராறு கண்ணீர் விட்டு ஒப்பாரிவைச்சுக் கொண்டிருக்கிறாள். அவள்தாய், இந்தச் சிணி, பங்கு வீதமாக சீதனத்தையல்லே வாங்கி வரச் சொல்லி நிக்குது. வெக்கம் கெட்ட தூமை தூ.... இந்தக் காலத்துப் பெடி பெட்டையின்ரை ஓட்டமும் பாட்டமும் உப்புடியல்லே கிடக்கு. மோகம் முப்பது நாள் ஆசை அறுபது நாளெண்டு அறியாமலே சொல்லி வைச்சான் அந்தக் காலத்தவன். பெடியளின்ரை விறைப்புத் தீர்ந்தவுடனேதான் சீதனத்தைக் கொண்டு வரச் சொல்லி முறைக்குதுகள். ஒரு பெண்ணை வைச்சுக் காப்பாற்றி ஒரு வயிறு சோறும், மானத்தை மறைக்க ஒரு துணியும் குடுத்துக் காப்பாற்றி கண் கலங்காமல் பார்க்கத் தெரியாததுகளுக்கெல்லாம் ஒரு பெம்பிளையும் வேண்டிக் கிடக்கோ? சிணியள் தூ...

ஓ, உந்த ஓடுகாலிக் குமரிகளுக்கும் உதுகும் வேணும், இன்னமும் வேணும்தான். உவையின்ரை வண்டவாளத்தை நல்லாத் தெரியாமல் சும்மா மேனி மினுக்கைக் கண்டு ஆழ்ந்தள விட்டுப் பாராமல் தான் சாக மருந்து குடிக்கிறன், கணக்கிலை ஓடி வாறவைக்கு உது காணாது தான்.

மிருக சாதியிலை யானை ரொம்ப உயர்ந்த குணமுள்ள தாம். ஒரு பெண்யானை எல்லா ஆண்யானையோடையும் போகத்துக்குப் போகாதாம். தன்னைக் தூக்கி விடக் கூடிய கொம்பன் யானையோடை தான் அது உடன்படுமாம். இந்தக் காலத்துப் பெடியள் அலியன் யானைகள் மாதிரி அமர் தீர்ந்தவுடனே பெண்யானையை அப்படியே விட்டிட்டுப் போகப் பாக்குதுகள்.



என்ரை இவர், அது கொம்பன் யானைதான். உப்புடி ஒரு நாளாவது கொப்பன் கோத்தையட்டைப் போய் சீதனத்தை - சீதன பாதனத்தை வாங்கிக் கொண்டு வாடி எண்டு சொல்லி இருக்குமே? அண்டைக்கிருந்துகள் தங்கடை கைகாலை நம்பி தங்களுக்கெண்டு ஒரு பெண்ணையும் தங்கடை பாட்டிலை எடுத்து வைச்சுக் கொண்டு சீவிச்சுதுகள். இதுகள் சிணியள், 'ஆற்றையும் நெய்யே உன் பெண்டாட்டி கையே' எண்டு ஆற்றையும் தேட்டத் திலையல்லோ குசாலடிக்கப் பார்க்குதுகள். சீதனக்காசை வேண்டியல்லோ காரும் சயிக்கிளும் ஒடப்பாக்குதுகள். பார்க்கிறதென்ன? இப்ப யாழ்ப்பாணத்திலை படிச்ச வனிலை இருந்து படியாதவன் வரை அப்பிடித்தானை செய்யிறாங்கள். அதுகும் இந்தச் சிணியன் பூலோகன், அவற்றை குருகுருப் பெல்லாம் தீர்ந்த பிறகு, சீதனத்தை வாங்கிக் கொண்டாடி எண்டு அவளைப் போட்டு திருகி எடுக்கிறான். சீ, தூமைச் சீலையெடுக்கிற கட்டாடிக்குக் கூட உந்தப் புத்தி வராது.

பாவம், அவள் பெடிச்சி பூரணம்! இந்த எளியவனை நம்பி வந்ததாலை நிண்ட இடமும் இல்லாமல், வந்த இடமு மில்லாமல் கடற் கரைத் தாளங்காயாக அங்கோ இங்கோ என்று கிடந்து ஆத்தலையிறாள்.

"என்னடி நான் சொன்னது காதிலை விழுந்துதோ? உன்ரை கொக்காளவைக்குக் குடுத்த மாதிரி நீயும் போய் உன்ரை சீதனத்தையும் வாங்கிக் கொண்டு வா, இல்லை யெண்டால் இஞ்சை என்னோடை இருக்கவும் கூடாது. என்ரை முகத்திலை முழிக்கவும் கூடாது. தெரிஞ்சுதோ?"

"போக்கணம் கெட்டவன் இராசாவிலும் பெரியவன்



என்று ஏதோ சொல்லுங்கள். நீ அந்த ரகத்தைச் சேர்ந்தனிதான். என்ரை அக்காவைக்கு பேசிச் செய்த மாப்பிள்ளைகளின் பெறு மதி தெரியுமோ? அதுகளின்ரை கால்தூசுக்குக் கூட பெறுமதி இல்லாத உனக்குமொரு சீதனமோ? உன்னோடை எனியுமொரு வாழ்க்கையோ எனக்கு? என்னை நீ விட்டு வாங்கிச் சீவிக்கக்கூட தயங்க மாட்டாய். சீ வெட்கம் கெட்டவனே! இந்த உயிர் எனக்கொரு மயிருக்குச் சமானம். ஒரு முழக்கயிறு சொன்னது கேட்கும், நான் மானத்தோடு போய்ச்சேர..."

எட பாழ்படுவானே! அவளை உந்த முடிவுக்காடா கடைசியிலை கொண்டு வந்து விட்டிருக்கிறாய்? உன்ரை தலையிலை இடியேறு தான்ரா விழப்போகுது.

நான் ஒருத்தனுக்கு சீலை உரிஞ்சு முந்தானை விரிச்ச குலத்திரியாக இருந்தால், நான் அள்ளிப் போடுற இந்த ஒரு பிடி மண்ணோடை நீ பரிநாசமாய்ப் போவாய், போ.



2

பிரம்ம மூகூர்த்தம்



வயிரவ கோவிலடி வாசலில் பஸ் ஒன்று தங்கிப் போகும் அசுரத்தொனி ஊருக்குள் எதிரொலிக்கிறது.

யாரோ எவரோ என்ற அசுவாரசியத்துடன் ஊர் திரும்பிப் படுத்துக் கொட்டாவி விடுகின்றது. உழைக்கும் மக்கள் நித்திரா தேவியை இறுக அணைத்து இன்பம் அனுபவிக்கும் அந்த வேளையில் யார் வந்தா லென்ன?



ஊர் அரைத் தூக்கத்திற் சுகிக்கிறது.

பஸ்ஸை விட்டிறங்கிய வித்துவான் கந்தசாமி வெகு சிரமத்தினூடே தன் கைக்கடிகாரத்தைப் பார்க்கின்றார். மணி பன்னிரண்டே முக்கால் என்பதை, நெருப்புக் குச்சி வெளிச் சத்தில் நீச்சலிடித்த கடிகார முட்கள் தெரிவிக்கின்றன.

சாதாரணமாக அவர் கையிலிருந்த கடிகாரம் அவருக்கே தெரியவில்லை என்பது ஆச்சரியந்தான்! உள்ளுணர்வுப் 'பெண்டுல'த்திற்கு அது இருப்பது தெரியும். ஆனால் வெளியே இருள்...

கொடிய இருளின் கோரத்தாண்டவம் எங்கும் குறை வில்லாமல் அரசோச்சுகிறது. அதன் அடக்குமுறைச் சட்டத்திற்கு அடிபணிந்து விட்டதுபோல் கரிக் கும்பமாகக் காட்சியளிக்கிறது வடக்கம்பிராய்க் கிராமம்.

காரிருளின் கோரப்பிடியிற் கருகித் தெரிந்த ஊரை ஒருமுறை திரும்பிப் பார்க்கிறார். அவருடைய அகத்தையும் புறத்தையும் அந்தகாரமான இருள் சொந்தம் கொண்டாடியதால் எங்கு செல்வோம் என்ற மனப்பிரமை அவருக்கு. ஒளியுண்ட விழிகளை உறுத்தும் இருளுடன் ஐக்கியப்படுத்துவதற்காக இமைகளை அப்படி மளமள வென்று வெட்டிப்பிரித்து நிலைமையைச் சரிசெய்ய முயலுகின்றார்.

அவருடைய நெஞ்சில் நிரம்பி வழியும் வியாகூல இருளுக்கும் தன் விழிகளால் வெட்டிப் பார்த்து வழி திறக்க நினைக்கிற அந்த வெளியிருளுக்கும் வித்தியாசம் இல்லை.

கலங்கிச் சுருங்கிய 'நஷனல்' உடுப்பை இலேசாக



உதறித்தட்டிவிடுகிறார். சிலும்பிச் சின்னாபின்னப் பட்டிருந்த தலைமயிர்க் கூட்டத்தை ஒரு நிரைப்படுத்த விரும்பியவராய் வலக்கை விரல்கள் ஐந்தையும் அதற்குள் விட்டுக் கோதிக் கொள்கிறார்.

கையில் ஏதோ ஒன்று. எதுவாக இருப்பினும், கனக்கும் பொருள் என்பது கைமாற்றிக்கொண்டு செல்வதிலிருந்து தெரிகிறது. காலின் செருப்புக் குதிகளை முத்தமிடு மோசை நிசியின் அமைதியினால் தூரத்தில் கேட்கிறது. அது வித்துவான் ஊருக்குள் இறங்கிவிட்டார் என்பதைக் கட்டியங் கூறிச் சொல்வதாயமைகிறது.

பழக்கப்பட்ட தெரு என்ற மமதையில் பாதையைப் பார்க்காமலே நடக்க முயற்சிக்கின்றார். இடைக் காலத்தில் எத்தனை எத்தனையோ குண்டு குழிகளைத் தன்வசம் சேர்த்துக்கொண்ட அத்தெரு அவரையொரு அசல் குடிகாரனாக்கிக் கொண்டே நீண்டு செல்கிறது!

அதனாலென்ன? அதையொன்றும் அவர்மனம் பொருட் படுத்தவில்லை. கனகம்! அவருடைய மனைவி. அவருக்குப் பாலிய வயது முதற்கொண்டே நன்றாகத் தெரிந்தவள் தானே! அவளே அவரை இடறித் தூக்கி எறிந்து விட்டிருக்கும் போது...

குண்டு குழிகளில் அவர் கால்கள் இடறுப்படுவதால் உடல் குலுங்கத்தான் செய்கிறது. ஆனால், அவர் மனம் இரைமீட்கும் அந்த மொட்டைக் கடிதத்து விவகாரத் திலேயே நிலைத்து இருக்கின்றது.

அதிலோர் வார்த்தை. நெஞ்சில் உளிகொண்டு செதுக்கியது போல் அங்கு நிலைப்பட்டுவிட்டது. இன்னமும் அவ்விடத்தில் உதிரம் பொசிந்து கொண்டே



யிருக்கிறது. 'அதற்கு உன் அம்மாக்காரியும் உடந்தையா யிருக்கிறாள்' என்பதுதான் அது.

இனந்தெரியாத யாரோ ஒரு யமனால் எழுதப்பட்ட அக்கடிதத்தில் தாயைப் பற்றி இழுத்துவிட்டிருப்பது விடுபடாத வெறும் புதிராகவே பட்டது.

'பெற்றதாய் பிள்ளைக்கு இப்படியும் செய்வாளா? எந்தத் தாய்தான் இந்தக் கொடூரமான ஈனத் துரோகத்திற்கு உடந்தையாக இருக்கமுடியும்? அப்படிப்பட்டவளுடைய சொந்த வாழ்க்கை...? ஐயோ அம்மா!'

அசைமீட்ட ஆட்டிற்குத் திடீரென்று இரைப்படுவான் வியாதி கண்ட மாதிரியாகிறது.

தாயைப் பற்றிய நினைவைத் தொடர்ந்து நினைக் காமல் இடைக்கொள்ளையாக அதைச் சாகடித்து விட்ட அவர், மனதைத் திருப்பி மனைவிமேல் மேயக் கட்டுகிறார்.

பயிரும் ஆடும் அவருடையது. கயிற்றை வேறு தாராள மாக இளக்கிக் கட்டிவிடுகிறார். எப்படி மேய்ந்தால் என்ன? அம்மானுடைய ஆட்டைத்திவசம் முடிந்த அடுத்தநாள் என்பது அவருக்கு நன்கு ஞாபகமிருக்கின்றது. அதைத் தொடர்ந்து அவருடைய வாழ்க்கையின் கதையை உள்ளூர் இருட்டில் யாரோ ஒளிந்திருந்து பகடி பண்ணிப் பேசுவது போன்ற ஒரு சலனம் மனத்திற் பிரமை ஊட்டுகிறது.

உண்மை. ஊருக்குத் தெரியாமல், இப்படியொரு மொட்டைக் கடிதம் வந்திருக்க நியாயமில்லை. அதிலும் அவரை மாப்பிள்ளையாக அடைய விரும்பி ஏமாந்தவர் களுக்கு. இதைவிட வேறு சந்தர்ப்பம் எப்போது கிடைக்க முடியும்?



அடுத்த நாள்.

ஆட்டைத்திவசத்திற்குச் சமைத்த சட்டி பானை களைத் துப்புரவாக்கி வைத்துவிட்ட சுற்றத்தார் வித்துவானைச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள்.

அவர்களுக்கென்ன? அடுத்த விருந்தையும் நாட் குறித்து வைத்து விட்டால் வயிற்றைச் சற்று ஆசுவாசமாக இளக்கி விட்டுக் கொண்டு வரலாம் என்ற நினைப்பு.

கலியாணப் பேச்சு வெற்றிலைச் 'சமா' வுடன் ஆரம்பமா கிறது. பழஞ்சோற்றுப் புளிச்சல் எதிரெடுப்பிற்குத் தன்னை ஈடு கொடுத்துச் சமாளிக்க முடியாத பொக்கை வாய்க் கிழவரொருவர் பேச்சைத் தொடக்கி வைக்கின்றார்.

'ஏன்ரி பிள்ளை விசாலம்? இந்தப் பொட்டை கனகத்தின் சங்கதியைத்தான் சொல்லுறன். தாய் தகப்பனில்லாத பிள்ளையை நெடுக வீட்டிலை வைச்சுக் கொண்டு... பொடியனும் வந்து நிக்குது. இப்ப கதைச்சாத்தானே நல்லது' என்ற பெரியவர், எல்லுப்போல தேத்தண்ணி குடித்தால் தேவையில்லை என்ற பாணியில், அந்தப் பெரிய ஏவறையைத் தொண்டைக்குள் இருந்து வெளியே தள்ளினார்.

'அதுக்கு நான் என்னண்ணை செய்ய?... நானுந்தான் நாண்டுகொண்டு நிக்கிறன். அவர் ஒமெண்டு சொல்லா மலுக்கு...' என்று இழுத்தாள் வித்துவானின் தாய் விசாலம்.

எல்லோரும் கதைக்குப் பேசி ஆடும் நாடகம் தான் என்பது வித்துவானுக்குத் தெரியும். என்றாலும், அவருடைய மனச்சாட்சியே அவரைக் குத்திக் காட்டிய போது கனகத்தைக் கைப்பிடிப்பதற்குச் சம்மதம் தெரிவித்து விட்டார். அதைத் தொடர்ந்து தேநீர் விருந்



தொன்று சமிபாட்டிற்கு எல்லோர் வயிற்றிலும் இன்பமாகச் செல்கிறது.

அந்த லீவு முடிந்து போவதற்குள்ளாகவே வித்து வானுக்கும் கனகத்திற்கும் திருமணத்தை முடித்து வைத்து விட்டார்கள். வயது மூப்பிளமையில் இருவருக்கும் எவ்வளவோ உண்டு. பத்தாண்டுகளை முதலில் உருட்டித் தள்ளிவிட்ட வித்துவானுக்கு, முப்பது வயதுக்காரி ஒத்து வரமாட்டாளா?

திருமணம் வெகு சிறப்பாக நடக்காவிட்டாலும் மட்டுக்கு மட்டாக வெகு கச்சிதமாக நடந்தேறியது. ஆனால் ஒரு சங்கதி: அது ஒரு துக்குறி மாதிரி ஆகிவிட்டது. எல்லோருடைய வயிறுகளும் பகீரென்று பற்றி எரியத்தான் செய்தன. தவணைக் கணக்கைக் கூடக் கலியாண உற்சாகத்தில் கனகம் மறந்து போய் விட்டாளா?

கனகம் அன்றைக்கென்றே, தாலி கழுத்தில் ஏறிய உடனேயே தன்னைச் சுற்றிக் கரிவட்டம் போட்டுக் காவல் செய்து கொண்ட சங்கதியிருக்கிறதே...

மூக்கின் கொழுந்தில் யாரோ ஓங்கிக் குத்தியது போலிருந்தது, மேற்படி சங்கதியைக் கேட்ட வித்து வானுக்கு. தீட்சை கேட்ட அவருக்குத் தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்ட அயர்வு தட்டிற்று வாழ்க்கையில். வெட்கம் வேறு அவரைப் பிடுங்கித் தின்றதால் 'லீவு முடிந்து போய் விட்டது' என்று சொல்லி அடுத்த நாளே கிளம்பிப் போய்விட்டார்.

நாற்பது வயதை எவ்வளவு நாணயத்துடன் கழித்த மனிதன்! ஊருக்குள் இருப்பதுகூடத் தெரியாது. அவருடைய பிரம்மசரியத்தில் இதுவரையில் ஒரு



தவறேனும் ஏற்பட்டிருக்குமா?

கலகெதரையின் குளிர்காற்றில் கனகத்தின் நினைவு அடிக்கடி தலைகாட்டத்தான் செய்தது. இடைய்யில் ஒருதரம் போய் வரவேண்டுமென்ற ஆசையுந்தான். என்றாலும் எங்கே ஒழிகிறது? இலக்கியச் சொற்பொழிவு என்று சதா ஏதாவது ஒன்று இருந்து கொண்டேயிருக்கும். கடைசியில் ஒரேயடியாக பள்ளிக்கூட லீவு விட்ட பின்பு போய் விடுவோம் என்று தீர்மானித்திருந்தவரை, திடுதிப்பென்று வந்த மொட்டைக் கடிதம் கட்டித் தூக்கி வந்து ஊருக்குள் எறிந்து விட்ட தென்றால்...

வெட்கக்கேடான சங்கதி. அவருடைய அறிவுக்கும் பெருமைக்கும் இப்படி ஒரு இழுக்கைக் கனகம் உண்டாக்கி விட்டாள்.

அவரால் அதை நம்பவே முடியவில்லை. என்றாலும் மனம் குழம்பிப் போய்விட்டது. சோகச் சாயல் அவர் முகத்தில் தானாகவே வந்து கவியத் தொடங்கி விட்டது.

வித்துவான் என்பதால் சந்தேகம் விட்டு விலகியிருந்து விடுமா? அன்பு அதிகமாகச் செலுத்தப்பட்ட இடத்தில் சும்மா ஒரு கீறு விழுந்தாலும் போதும், சந்தேகம் தானாகவே செழித்து வளரும்.

அவருடைய ஆண்மைக்குச் சவால்விட்ட அந்த மொட்டைக் கடிதத்தை மறுபடியும் ஒருமுறை பைக்குள் கை விட்டு நெருடிப் பார்க்கிறார்.

அது விரிபுடையனாகச் சரசரக்கிறது.

'கட்டிய மனைவி கள்ளப் புருஷன் கனகசபையுடன் சோரம் போகிறாள்' என்றால் எட்டிநின்று கேட்டுவிட்டுப் போகக்கூடிய சமாச்சாரமா?



'வெட்டிக் கொலை செய்ய வேண்டியது தான்!

'இல்லையேல், நானாவது செத்தொழிய வேண்டியது.'

பல நினைவுகள் குதியாட்டமிட வித்துவான் கால்களை எட்டிப் போட்டு நடக்கிறார்.

'அப்படிச் செய்யவில்லையென்றால், காலமெல்லாம் சொள்ளைக் கதைகள் பேசி எள்ளி நகையாடுமே ஊரும் உலகமும். தலைநிமிர்ந்து நடக்கத்தான் முடியுமோ ஊருக்குள்' என்று திரும்பவும் தன்னைத்தானே கேட்டுக் கொண்டே வித்துவானின் நடையிலே மீண்டும் வேகம்.

இருட்டை எதிர்த்துப் பிரித்துக் கொண்டு நடக்கும் வித்துவானின் முன்னே சற்றுத் தொலைவில் சென்று கொண்டிருக்கிறதே ஓர் உருவம், அது...?

குரல், குரல்வளைக்குட் சாம்பியது. அவருடைய திடப் படுத்தப்பட்ட நெஞ்சுகூட சற்றுநேரம் வெலவெலத்துப் போய் விட்டது. வித்துவான் திகைத்து நின்று நோட்ட மிட்டார். பேய், பிசாசைக் கண்டாற்கூட ஏற்படமாட்டாத திகில் ஒரு கணப் பின்னத்தில் அவரை உலுக்குகின்றது. மனித உருவமென்று நிதானித்த பின்னர் செருப்பைக் கழற்றிக் கைகளில் எடுத்துக் கொள்ளுகிறார். தூரத்தில் செல்லும் அந்த உருவத்தைத் தொடர்ந்து செல்லும் முயற்சியது.

கடுகதி வேகத்தில் நடக்கும் அந்த உருவம் அடிக்கொரு தரம் பின்னும் முன்னுமாக இருட்டைத் துளாவிப் பார்த்துக் கொண்டே நடக்கின்றது.

மொட்டைக் கடிதம், சரித்திர தஸ்தாவேஜாக விரிகிறது... பிரம்மச்சரியத்தின் இந்திரியப் புலனடக்கம் அவரை எள்ளி நகையாடுகின்றது. ஒழுக்க சீலம்



சம்மட்டியாக அவருடைய மண்டையை ஓங்கி அறைந்து பிளக்கின்றது. அந்த மண்டைப் பிளவில் முன்னால் நடக்கும் உருவம் கனகசபையாக மிடுக்கு நடைபோடு கிறது... அவருடைய சேதனச் செயலையும் மீறி, அவருடைய உடல் அதன் பாரத்தை இறக்கி, அந்த உருவத்தின் பின் இறகாகப் பறக்கின்றது... அவரும் சமீபமாக வந்து விடுகிறார்.

வேலிப் பொட்டுக்கூடாக முதுகை வளைத்து உள்வளவுக் குள் தன்னை இழுத்துக் கொண்ட கனகசபை வித்துவானின் வீட்டிற்குள் புகுந்து விடுகிறான்!

இருவரையும் தொலைத்துத் தலைமுழுகி விடுவ தென்ற வீறாப்புடன் தொடர்ந்து வந்த வித்துவான், ஏன் அப்படி வேலிப் பொட்டடியில் கல்லாய்ச் சமைந்து போயிருக்கிறார்?

வேலியைப் பிரித்துச் சென்ற பிணத்திற்கு இளநீர் வெட்டி வைத்து அழும் காட்சி...

பொட்டிற்குள் வித்துவானின் உடல் இலகுவாகப் புகுந்து முன்னேறுகிறது. கதவு மூடாமற் சார்த்தப்பட்டிருக்கிறது. வீட்டிற்குரியவன் போன்று கனகசபை உள்ளே நுழை கின்றான். கதவு உள்ளே சார்த்தப்படுஞ் சப்தம் கேட்கின்றது.

வித்துவானின் உள்ளம் ஒரு கணம் குழம்பிய குளமா கின்றது. மறுகணம் தாமரை இலை நீராகின்றது. அடுத்த கணம் தாமரை இலை நீர் குளத்து நீருடன் கலந்து கலங்கு கின்றது. கலங்கிய நீர்த்துளி ஒன்று தாமரை இலையிலேறி, நித்திய ஜாலம் காட்டுகின்றது.

கதவை வெளிப்புறமாகப் பூட்டினார்.



அன்றொரு நாள் வித்துவானுக்கும் கனகத்திற்கும் விவாகம் முடித்து வைத்த சமூகம் அங்கு கூடிநிற்கிறது. அவர்களுடைய உள்ளங்களில் துவேஷம் குடி கொண்டிருக்கின்றது. ஆனால், வித்துவான் மிக அமைதி யாகச் சில வார்த்தைகளில் விஷயத்தை விளக்கி, வீட்டைத் திறந்து காட்டுகிறார்.

கனகமும், கனகசபையும் வெலவெலத்து, நடுநடுங்கி விழிகளை நிலத்திற் புதைத்து நிற்கின்றார்கள்.

கூட்டத்தில் நின்ற கிழவர்களிற் சிலர் "தூ! மானங் கெட்ட சவங்கள்" என்று துப்பல் மூலம் ஆத்திரத்தைக் காட்டுகிறார்கள்.

வித்துவான் பிரம்மஞானியின் பரிபக்குவ நிலையுடன், வார்த்தைகள் தளம்பாமல் மிகவும் நிதானமாகச் சொன்னார். "உங்களுக்கு விருப்பமெண்டால், ஊரறிய வாழ்கிறது தானே? ஏன் ஒளிப்பு மறைப்பு? நான் வருகின்றேன்."

ஊரைத் திரும்பிப் பார்க்காமல் வித்துவான் நடக்கத் தொடங்குகிறார்.

அந்த துன்பப்பட்ட கௌதம முனிவரே தன் மனைவி அகலிகையைக் கல்லாகச் சமைத்தார். அகலிகை, ஸ்ரீ ராமனின் கால் வண்ணம் படும் வரையிற் சிலையாகத் தவமிருந்தாள்.

ஆனால், கனகத்தின் மேல் தனக்கிருந்த உரிமையை சமூகத்தின் முன்பாக உதறிவிட்டு, அவளுக்கும் புதுவாழ்வு அளித்து ஊரைவிட்டுத் தூரத்தூர நடந்து கொண்டிருக்கும் வித்துவான்...?



3

கனவான்



யாழ்ப்பாணம் 'கிராண்ட் பஜார்' வீதியிலுள்ள சுப்பையா 'சாறி எம்போறியத்தின்' முன் பாக, அரசரத்தினம் ஓட்டி வந்த 'பீனா கார்' 'சடின் பிரேக்'குடன் நிறுத்தப்பட்டது.

திடீரென்று இப்படி நிகழ்ந்தால் யார்தான் திகில டைய மாட்டார்கள்? ஜனப் போக்குவரத்து நிறைந்த அத்தெரு ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றுவிட்டது.

'என்னவோ ஏதோ' என்ற திக்பிரமைகொண்ட சனங்களின் பார்வை அரசரத்தினத்தின் காரை மொய்க்கின்றன. தற்செயலாக ஏற்படும் அந்தரம் ஆபத்துக்குப் போடவேண்டிய 'புல்பிரேக்கை' சர்வ சாதாரணமான சும்மா வேளையிலும் பிடிப்பதாக இருந்தால் என்னதான் நெஞ்சுர முள்ளவர்களாக இருந்தபோதிலும், இருதயத்தின் துடிப்பு ஒரு நிமிஷ நேரம் செயலற்று நின்றுவிடுவது தவிர்க்க முடியாத இயற்கைதானே!

'பிரேக் ரெஸ்ற்' பண்ணிப் பார்ப்பதற்கு அரசரத்தினம் என்ன பெரிய மெக்கானிக்கா? பிரேக் பிடித்ததனால் சக்கரங்கள்தெருவில் அழுந்தி இழுபட்டு அலறிய சப்தம்... 'நல்லவேளை' யாரையும் அடித்துவிடவில்லை என்ற தெம்பு ஏற்பட்ட திருப்தியுடன் பிரக்ஞை பெற்ற பாதசாரிகள் மறு படியும் தங்கள் வழியே விரைகிறார்கள்.

திடீர் 'பிரேக்' போட்டு நிறுத்தி இறங்குவதிலும் ஒரு தனிச் 'சுதி' தான் போலும்! சும்மாவா? சில இளவட்டங்கள் மனம் விட்டுப் பேசிக் கொள்கிறார்களே, 'நல்ல ஸ்ரையிலான நிற்பாட்டமென்று, இரண்டொரு கிழட்டுக் கட்டைகள் மாத்திரம்,' 'சதிரம் புல்லரிச்சுப் போச்சு, அவன் பிடிச்ச பிரேக்கில பத்தியெரிவாங்கள் செத்துப் போறது உப்புடித்தானே' – என்று திட்டிக் கொண்டார்கள்.

என்ன இருந்தாலும் 'ஸ்ரியறிங்' என்ற லகானைப் பிடித்து இப்படிச் சரித்து வெட்டி, நிறுத்துவ'தில் தனக்கு நிகர் வேறு யாருமில்லை என்பதை வெளிக்காட்டிக் கொள்வதற்கு இதுவா வழி? எத்தனை பேருடைய ஏக்கத்துக்குப் பாத்திரமாக வேண்டி இருக்கிறது!

ஒரு தரம் முகத்தைத் தாழ்த்தி நிலத்தை முத்தமிட்டு



இன்னமும் ஜம் பண்ணுவதை நிறுத்தவில்லை, கார். இத்தனை களேபரத்துக்குக் காரணமாயிருந்த அந்தக் கார் புத்தம் புதிது என்பதைப் புறம்பாகச் சொல்ல வேண்டுமா என்ன? 'சோக்கான' சொகுசு நிறைந்த அந்த வாகனத்தை இலேசாக ஒரு தரம் பார்த்தால், சாதாரண பிரகிருதிகள் ஜன்மத்தத்துக்கும் சவாரி செய்ய முடியாது என்ற, சங்கதி புலப்படும். பார்த்தவர்கள் தங்கள் கண்களை அவ்வளவு சுலபத்தில் அகற்றிவிட மாட்டார்கள். அதைவிட்டு, யாழ்ப்பாணத்துக்கும் அது புதிது; அவ்வளவுதான்!

சில்லறை வியாபாரி அபுசாலிக் காக்கா கார் வந்த வரத்திலும், நிற்பாட்டப்பட்ட விதத்திலும் தன் கடையை இடித்துத் தள்ளிவிடுமோ என்ற பயத்தினால் கள்ளிப் பெட்டி ஆசனத்திலிருந்து துள்ளி விழுந்து பதறியவர் இப்போதுதான் எழுந்து நின்று எட்டிப் பார்க்கிறார். கார் கடைக்கு இடைஞ் சலாக நிறுத்தப் பட்டிருப்பதாகத் தெரியவே, ஆத்திரம் பொங்கியெழச் சூடாக 'உங்க வாப்பாட' என்று ஏதோ சொல்ல வந்தவர் காரிலிருந்து இறங்கிய 'கறுவாக் காட்டு நாகரிக ஜோடியைப் பார்த்த மாத்திரத்தில் உதடு வரை வந்த வார்த்தைகளைத் தொண்டைக்குள் அமுக்கி விழுங்கிக் கொண்டார்.

ஏதும் நடக்காதது போல் வெகு அலட்சியமாகக் காரை விட்டிறங்கிய அரசரத்தினமும், அந்த அழகியும் அங்கு யாரையும் பொருட்படுத்தாது ஏதோ தங்களுக்குள் பேசிச் சிரிக்கிறார்கள். அவர்களை இன்றைய சினிமா நட்சத்திரங்களின் நிலைக்கு உயர்த்திவிட்ட அந்தக்காரின் கதவுக்கண்ணாடிகளை உயர்த்தி 'லொக்' பண்ணிவிட்டு, சாவியைக் கையிலெடுத்துக் கொண்ட அரசரத்தினம் சாவிச்



'செயினை' வெகு ஸ்ரையிலாக ஆள்காட்டி விரலில் அப்படியும் இப்படியும் சுற்றிச் சுற்றி சிறிது நேரம் சேலைக் கடைகளை நோட்டமிட்டார். பின்பு சிகரெட் ஒன்றை எடுத்து உதடுகளில் பொருத்தினார். அரசரத்தினத்துடன் ஓட்டிநின்று பேசும் அந்த அழகியுடன் அவர் அளவளாவும் போது, வாயில் செருகிய சிகரெட் சிவதாண்டவம் புரிகிறது. உடலோடு ஒட்டி விட்டாற் போன்றதொரு அநுபந்த அவயவம் மாதிரி வாயில் பொருத்தியிருந்த சிகரெட், 'லைற்றரி' லிருந்து குதித்தெழுந்த சுடர்க்கொழுந்தை அணைத்து முத்தமிட்டது.

ஒரு தம். ஆ...! மூக்குத் துவாரங்கள் புகைபோக்கி யாகச் செயல்படுகின்றன.

அரசரத்தினம் இழுத்து வெளியே ஊதிவிட்ட புகைப் படலம் நேர் எதிரே நின்ற அவள் நிலவு முகத்தில் கவிந்து... வெண்பஞ்சு மேகமோ என மிதந்து தவழ்கின்றது. அவளும் அந்தப் புகையின் சுகந்தத்தை அனுபவிப்பவள் போல் மூக்கை இன்னும் மலர விட்டுக்கொண்டே மிக அருகில் நெருக்கமாக நின்றாள்.

ஆறடி உயரத்திற்கேற்ற 'சூட்' அவரை ஒரு யூறப்பியனோ என்றுகூட நினைக்கத் தோன்றும். ஏறக்குறைய நிறமும் அப்படித்தான். கையில் வெள்ளிப் பூண்போட்ட "வாக்கிங் ஸ்ரிக்". அவருடை விறைப்பான நடைக்கு நிச்சயம் அது வேண்டியதுதான். அளவோடு கத்தரித்து விடப்பட்டிருந்து 'சமர் குறோப்' சிவந்து பரந்து கிடந்த முகத்திகேற்ற முழுமீசை, எல்லாமாகத் தனிக் கவர்ச்சி ஊட்டின. இத்தனை லட்சணங்களும் ஒருங்கே அமையப் பெற்ற அரசரத்தினம் நடந்து போகும்போது பார்க்க வேண்டுமே! உண்மையில் சுழன்று விட மாட்டார்களா சேலைகட்டியவர்கள்?



மொத்தத்தில் 'அசல் ஆம்பிளை'.

நாற்பது வயதாகி விட்டதென்று சொன்னால் நாக்கு அழுகிப் போய்விடும். இன்றைக்கும் பார்த்தால் கூட இளமை பொங்கிப் பூரித்து நிற்கும் உடற்கட்டில் விரல் வைத்து ஊன்றிப் பார்த்தால் ஒரு சொட்டு இரத்தமில்லாத பகுதி யென்று ஒதுக்கிவிடக்கூடிய எதுவுமில்லை. இளமட்டங் களைக் காட்டிலும் இன்னமும் அவனிடம் உற்சாகம் பன்மடங்கு அதிகரித்து நிற்கிறது.

அவள் மாத்திரம் என்ன நாகரிகத்திற் சோடையா? 'கொழும்பு செவன்' மோஸ்தர் உடுப்பிற்குள் குமுறி நிற்கும் அவயவங்கள், கொடிவாக்கில் துவளும் அவள் இடை, அதனைக் குறிப்பாகப் பார்த்தால் தாவிக் கைபோட்டு அணைத்து நடக்கத் தான் யாருக்கும் தோன்றும். அந்தக் குங்குலிய மேனியாளின் 'பானா' கழுத்துச் சட்டைக்குள்ளே பாதி வெளியே பிதுங்கி பார்த்தவர்களைத் தன் பால் ஈர்த்துக் கொள்வதற்கு இதைவிட அவளிடத்தில் எத்தனையோ பிற அம்சங்கள் உள என்பதை ஏனோ அவள் அறிய மறந்து விட்டாள். கதை பேசும் அபிநய விழிகளும் கவர்ச்சிமிக்க ஏனைய அங்கங்களிலும் செய்து கொண்ட 'இமிற்றேஷன்' வேலைப்பாடுகளும் சேர்ந்த அவள் எடுப்பான தோற்றம், ஒரு இருபத்தெட்டை நிர்ணயிக்க துருதுருவென்று நடந்தாள்.

அரசரத்தினம் மாத்திரம் அவளுக்குச் சளைத்தவரா என்ன?... 'வாக்கிங் ஸ்ரிக்' அவருடைய வீச்சு நடையில் 'டிக்... டிக்...' என் ரூபக தாளத்தில் ஜதி போடுகின்றது. அந்த உன்னதமான நடையில் சொக்கிப் போய்விட்டவர்கள் அவரை ஓர் 'ஆமி கொமாண்டர்' என்று கூட அவ்விடத்தில் பேசிக் கொண்டார்கள்.



இணைந்து சென்ற அவர்களிருவரும் 'சுரையா கபே'க்குள் பிரவேசித்தார்கள். முதலாளி அகமும் முகமும் குளிர எழுந்து நின்று வரவேற்கிறார். "வாருங்கள் சேர்..." என்று கொண்டே மேசைக்கடியில் பொருத்தப்பட்டிருந்த 'எலக்ரிக் பெல் சுவிச்'சை அழுத்துகிறார். பெல் அலறிப் புடைக்கிறது. அதைத் தொடர்ந்து ஆறு ஏழு 'சப்ளையர்'கள் ஆளுக்கொரு பக்கமாக ஓடிவந்து முதலாளியின் மேசையை மொய்த்துக் கொள்கிறார்கள்.

கபேக்குள் ஒரு சில நிமிஷம் பூரண நிசப்தம் குடி கொள்கின்றது. சினிமாப்படம் ஆரம்பமாவதற்கு அறிகுறி யாகக் கடைசி பெல் ஒலிக்கும்போது தியேட்டர் 'கப்சிப்' என்று ஆகி விடுவது போன்ற அமைதி. தின்று குடித்துக் கொண்டிருந்தவர்கள் சகலத்தையும் மறந்து, நிறுத்திவிட்டு அரசரத்தினம் ஜோடியையே இமைக்கா விழிகளால் விழுங்கு கிறார்கள்.

பார்க்கட்டுமே! இவர்கள் எப்போதுமே தங்களை மற்றவர் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்காகத் தானே இவ்வளவு தடல்புடல்களையும் செய்கிறார்கள்! அதைப் பற்றியெல்லாம் பொருட்படுத்திக் கொண்டிருப்பதற்கு அரசரத்தினமும் அவளும் என்ன சாதாரண பிரகிருதிகளா?

"வாருங்கோ ஐயா... லேடீஸ் றூமுக்கு" என்ற பணியாள், அவர்களை வழிநடத்திச் சென்றான்.

"இரண்டு ஓவல்" இரத்தினச் சுருக்கமாகச் சொல்லி முடித்தார் அரசரத்தினம்.

"இரண்டோவல்" - சப்ளையரின் தொண்டை கிழிந்து, ஓடர் சன்னமாகப் புறப்பட்டது. தொடர்ந்து தேவாரம் பாடுவதற் காக நிறுத்திய ஒப்பாரி மறுபடியும் ஒலிப்பது போல் கபேக்குள்,



பேணி, கிளாஸ், தட்டுமுட்டுச் சாமாமன்களின் பேரரவம் சூழ்ந்து கொண்டது.

'பில்' பணத்தைக் கொடுக்கும்போது அரசரத்தினமும் முதலாளியும் ஆங்கிலத்தில் ஏதோ பேசிக் கொள்கிறார்கள். "அதுக்கென்ன சேர், ஆனால் ஒரு அரை மணித்தியாலம் சுணங்கும்... ஆயிரம் போதுமா சேர்...?" என்றார் முதலாளி.

"யேஸ் யேஸ், தற் இஸ் இனவ்... ஆனால் கொஞ்சம் கெதி பண்ணித்தர வேண்டும். நாங்கள் உதிலையொருக்கால் பக்கத்துக் கடைவரைக்கும் போய்விட்டு வருகிறோம்" என்று கூறிவிட்டு கபேயுள்ளிலிருந்து வெளியே வீதிக்கு வந்தார்கள்.

வீதி நெடுகச் சேலைக்கடைகள்.

அரசரத்தினமும் அவளும், ஒவ்வொரு கடையின் முகப்பைத் தாண்டும் போதும் "வாருங்கோ சேர்... வாருங்கோ அம்மா" என்று வந்தனோபசாரம் கூறினார்கள் அங்குள்ள சிப்பந்திகள்.

ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கி ஒரு ரூபாய் அரை ரூபாய்க்குப் பேரம் பேசி மலிவு பார்த்து நாக்கு வளைத்துக் கொள்வதற்கு அவர்களென்ன நாட்டுப்புறப் பேர்வழிகளா?

சுரையா கபேக்கு ஐந்தாறு கடைகள் தாண்டி அரசரத்தினத்தின் கார் நிற்பதற்கு எதிர்க் கடையான சுப்பையா சாறி எம்போறியத்தில் எவரையும் கவர்ந்திழுக்கும் முறையில், பலவித புடைவைகளையும் வெகு நேர்த்தியாகக் காட்சிக்கு வைத்திருந்தார்கள். மணவறை வைத்த மாதிரி அலங்காரமா யிருந்த அந்தக் கடைக்குள்ளே ஓரளவு நல்ல கூட்டம்.

சுப்பையா சாறி எம்போறியம் அரசரத்தினம் ஜோடியின் கண்களைக் குத்துகிறது. கொலு மாப்பிள்ளையாக இருந்த



முதலாளி சுப்பையா, அவர்களை வரவேற்க அப்போதிருந்தே எழுந்து நின்றுவிட்டார்.

"வாருங்கோ ஐயா, வாருங்கோ அம்மா."

சிப்பந்திகள் கட்டியம் கூற அதைத் தொடர்ந்து முதலாளியே எதிர்வந்து நின்று "வாருங்கோ சேர். இப்படி உள்ளே வாருங்கோ..." என்று கூறி வழி விலக்கிக் கொண்டு நடந்தார். 'மளமள' வென்று தன்னுடைய கஜானா மேசைக்கு எதிர்த்தாற் போல் உள்ள கதிரைகளைத் தட்டித் துடைத்து நிரைப்படுத்திப் போட்டார். சிகரெட் டின்னையும் தீப் பெட்டியையும் எடுத்து மேசை மீது வைத்த முதலாளி ஒரேயடியாக பரபரத்தார்.

"நோ, தாங்ஸ்" என்ற அரசரத்தினம் 'நான் உந்த சிகரெட் பற்றுவதில்லை' என்று சொல்லாமல் சொல்வதுபோல் தன்னுடைய உயர்த்தியான சிகரெட்டொன்றை எடுத்து மேசையில் தட்டிவிட்டு வாயில் வைத்துக் கொண்டார்.

சுப்பையா முதலாளியின் முகத்தில் ஏனோ அசடு வழிந்தது. அதைச் சமாளிக்க எண்ணியவராக 'கூல்' பண்ணப்பட்ட கொழும்புச் சோடாவைக் கிளாஸ்களில் ஊற்றிக் கொண்டே சிரிக்க முயன்றார். சினங்கொண்ட சோடா அவர் முகத்திற்கு நேராகச் சீறிற்று.

"நியூ மெற்றீரியல் ஏதாவது வந்திருக்கா?" என்ற அரசரத்தினம், இருந்த இருப்பில் கழுத்தைச் சுழற்றி கடையைத் துளைத்தார்.

"ஓ யெஸ், நிறைய..." என்று சொல்லிக் கொண்ட முதலாளி சுப்பையாவே ஓடிச் சென்று அங்குள்ள 'மெற்றீரியல்ஸ்' முழுவதையும் எடுத்து மேசைமீது பரப்பினார்.

"இது கேஸ்மல் சேர். இதோ இதைப் பாத்தீங்களா...



லதாப் பப்ளின் - இதுதான் இப்ப பாஷன். ஏதோ உங்களுக்குத் தெரியாதது மாதிரி நான் சொல்லுறனை பாருங்கோ... இது லேஸ் கொட்டன்... அது இங்கிலீஷ் பப்ளின். அதோ அதைப் பாத்தீங்களா சேர், அம்மா நிறத்துக்கு நல்ல எடுப்பா இருக்கும். டிஸ்யூ மணிப்புரி... என்ன அவளவாப் பிடிக்க வில்லையெண்டு சொல்லுறியளா? இது நைலான்... நல்ல மாச்சா இருக்கும்... மணியம் அந்தச் சீலையை எடு... இது மணிப்புரி... இதோ பாத்தீங்களா இதை. பியோர் காஷ்மீர் சேர்... அது மைசூர் ஜோஜெட்...

"சோமு. அந்த ஷீட்டிங் குளோத்துகளையும், ரெர்லின் ஷேட்டுகளையும் எடு..."

சுப்பையாவின் வாய் ஓயாமல் பேச, கைகள் இயந்திர கதியில் செயல்படுகின்றன. அவருக்கு வெகு உற்சாகம். 'பிஸ்நெஸ்' பிழையில்லாமல் இருக்குமென்ற நம்பிக்கை. அதனால் இறக்குமதிக் கட்டுப்பாட்டிற்கு முன்னமே பதுக்கிவைத்திருந்த பழைய இருப்பெல்லாம் வெளியே வந்து மேசைமீது குவிந்து கிடக்கின்றன.

"அப்ப இதிலை ஒரு ஐந்து யார் போதுமெண்டு சொல்லுறி யளா அம்மா... ஜோஜெட் அம்மாவுக்குப் பிடிக்கவில்லைப் போல கிடக்குச் சேர். நீங்கள் போடச் சொல்லுறியள். சரி அப்ப அதிலையுமொரு அஞ்சு கிழி சோமு. நொன்னயன் சேட்டுகளிலை வேறை சேட்டுகளும் இருக்குசேர். ஓ! நீங்க சொல்லுறபடி ரெர்லினைக் காட்டிலும் நல்லாயில்லைத்தான்."

துணிகள் முதலாளியின் நேரடிப் பார்வையிலேயெ 'பற பற' என்று கிழிக்கப்படுகின்றன. தட புடலான வியாபாரம். முதலாளியின் உற்சாகம் கரைபுரள்கிறது.

"எங்கே சேர். உங்களுக்குத் தெரியாத விஷயமே?



இறக்குமதி இல்லாமலுக்குப் போனதுப் பிறகு எல்லாமே சரியான நெருப்பு விலை சேர். இன்னும் ரொப்புக்குப் போகும் போலை கிடக்கு. உண்மையில் உங்களுக்கென்றபடியால் உந்த விலை போடுறன் சேர். ஏனெண்டால் சில நல்ல கஸ்ரமேஸை நாங்கள் பிடிச்சு வைச்சிருக்க வேணும் சேர். அது ச்ரி அடுத்தமுறை யு. என். பி க்கு ஒரு சான்ஸ் அடிக்குமா சேர்?" என்று கேட்டுவிட்டு அரசரத்தினத்தின் முகத்தை ஆவலோடு பார்த்தார்.

"ஓ யெஸ் சுவராக. அதிலை இன்னும் வேறு உங்களுக்குச் சந்தேகமா? கொழும்பு முனிசிப்பல் எலெக்ஷன் அதற்கொரு முன்னோடியல்லவா?" என்றார் அரசரத்தினம்.

"நம்ம பொன்னம்பலத்தாரும் 'கூ' கேசோடை ஒரு பிரட்டுப் பிரட்டிப் போடுவார் போலை கிடக்கு. இப்ப இருக்கிற நிலையிலை அந்தாள் கொழும்பிலை கேட்டாலும் சுவர் சான்ஸ் என்றும் கதைக்கினம். என்ன இருந்தாலும் மனுஷன் கெட்டிக்காரன்தான். சும்மாவா சேர். சகடயோக மல்லவா! சாகும் வரைக்கும் வெள்ளி திசைதான்" என்று நிறுத்தினார் முதலாளி சுப்பையா.

"ஓ யெஸ். அவருடைய திறமையை எங்கையும் மதிக்கிறார்கள். அது தானே ஏதோ ரமில்லில சொல்லுவாங்களே. ஏதோ எனக்கு நல்லா ஞாபகத்துக்கு வருகுதில்லை... கற்றாருக்குச் சிறப்போ என்னவோ என்று... உங்களுக்கும் தெரியாதா" என்றார் அரசரத்தினம் இலேசாகச் சிரித்துக் கொண்டே.

"எங்கே சேர், இந்தத் தொழிலுக்குவந்தாலே அதுகளை யெல்லாம் அடியோடை மறந்திடவேணுமெண்டு அப்பர் அப்பவே சொல்லித் தந்திட்டார். அதிலையிருந்து உதுக



ளெல்லாம் என்ரை மூளையுக்கே நிக்கமாட்டனென்குது. நானும் உங்களைப் போலத்தான் சேர்... டேய் சோமு, அந்த மிச்சப் பாட்டைப்படி ஓ! கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்றா சொன்னனி... அது தானே பார்த்தன்; எனக்கும் இப்பத்தான் ஞாபகம் வருகிறது" என்ற முதலாளி 'பிஸ்நெஸ்' க்கு விரைந்தார்.

"என்னும் என்ன சேர் போடுவம்?... அடடே, பில் தொகையைப் பற்றி யோசிக்கிறியளாக்கும் அவளவொண்டும் பெரிய தொகை ஆகிவிடவில்லை. என்ன சோமு, ஐயாவிலை ஒரு ஆயிரம் வரையிலை ஆகியிருக்குமா?... என்ன சொன்னாய்?... சரியா மட்டமா அவளவுதானெண்டு சொல்லுறியா? அதுக் கென்ன சேர், குறைஞ்சாக்கிறைஞ்சால் அதைப்பற்றி ஒண்டும் யோசிக்காதையுங்க சேர், வீட்டை வந்து எடுத்தால் போச்சுது!" என்றார் சுப்பையா.

அரசரத்தினம் துரையின் அந்தஸ்துக்கு அது ஒன்றும் அவ்வளவு பெரிய தொகையில்லை என்ற நினைப்பில் முதலாளி சுப்பையா வெகு அலட்சியமாகச் சொன்னார் அத்தொகையை.

"தற்றிஸ் இனவ்... பிறகொருநேரம் பார்த்துக் கொள்ளலாம்" என்றார் அரசரத்தினம் ஆசனத்தை விட்டு எழுந்து கொண்டே.

"சோடாக் குடிக்காமல் போகவா சேர்? பிளீஸ் மாடம்."

"ஓ! தாங்ஸ்" என்றவாறு இருவருமாக முதலாளியிடத்திலிருந்து சோடாவை வாங்கிப் பருகுகிறார்கள்.

"சோமு பார்சலைத் தூக்கிக் கொண்டுபோய் ஐயா வின்ரை காரிலை வை" என்றார் சுப்பையா.

பேஸைக் கையிலெடுத்துத் திறந்து பார்த்துக்



கொண்டே அரசரத்தினம் "மணி கொஞ்சம் குறையிது போலைக் கிடக்கு" என்று இழுத்துக் கொண்டே தொடர்ந்து "பெடியனை ஒருக்கா உதிலை சுரையா கபே வரைக்கும் என்னுடன் அனுப்பிவிடுங்க. அங்கே எடுத்துக் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

"அதுக்கென்ன சேர், மனுசரைப் பார்த்தாலே தெரியாதா? காசா பெரிசு? அடிக்கடி வந்து போங்க சேர்" என்று சிரித்தார் சுப்பையா.

நல்லவொரு கஸ்ரமரை வாலாயப் படுத்திவிட்ட எக்களிப்பு அவர் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

"சோமு, பார்சலைக் காரில் வைத்துவிட்டு ஐயாவுடன் போய் விட்டு வா!" என்றார் சுப்பையா.

"றைற். அப்ப வரலாமா? சேரியோ!" என்று கொண்டே நடந்தார்கள் அரசரத்தினமும் அந்த அழகியும்.

"ஹி... ஹி... சேரியோ ஹி... ஹி..." - சுப்பையா வழியனுப்பி வைத்தார்.

சுரையா கபேக்குள்...

"ஹலோ!... என்ன இன்னும் சேரவில்லையா?... ரூ லேற். ஓ! மை கோட். நௌ இஸ் வண்ணொக் குளொக்... வேறு என்கேஜ் மென்ற் இருக்கு. அந்தத் தவுசனையும் இவரிடத்தில் கொடுத்து விடுங்கள்" என்றார் அரசரத்தினம்.

"மன்னிச்சிடுங்கோ சேர், இன்னுமொரு அஞ்சு நிமிஷத்திலே கொடுத்து விடுகிறேன்" என்றார் சுரையா முதலாளி.

"சரி சோமு வாங்கிக் கொள்வாய்தானே?" என்றார் அரசரத்தினம் சோமுவைப் பார்த்து சாவதானமாக.

"ஓம் ஐயா!" - சோமு பவ்வியமாகக் குழைந்து



சொன்னான்.

பரீனாக் காரின் உறுமலின் சப்தம் கேட்டு எட்டிப் பார்த்த முதலாளி சுப்பையா கையைத் தூக்கி டட்டா காட்டினார். கார் பறந்தது. அரசரத்தினமும் அழகியும் மறைந்து விட்டார்கள்.

"என்ன சோமு, என்ன ஆச்சு?' - முதலாளி பதிலளித்தார்.

"சுரையா கபேயில் ஓடர் பண்ணியிருக்கிறார். ஒரு அஞ்சு நிமிஷம் பொறுத்து வரச் சொல்லியிருக்கிறார் சுரையா கபே முதலாளி" என்றார் சோமு.

"ஜென்ரில்மென், ஜென்ரில்மென்தான்! எவ்வளவு பெருந்தன்மையான மனிதன்! உப்புடிக் கொத்தவங்களோ டையல்லோ சாவாசம் வைக்க வேணும்! புள்ளிக்காரப் பேர்வழி... மனுஷன் சரி, அந்த மனுசி சரி, விலை தலை ஏதாவது கேட்டுதுகளா? ஒரு யார் காரிக்கன் துணி வாங்க வந்து கழுத்தை அறுப்பாங்களே சில தரித்திரம் பிடிச்ச ஈச்சப்பியள். கறிக்கடை விலைகேட்டு நாக்கிலை ஊறுகிற துப்பலைக் கூட வழிச் செடுத்துக் கொண்டு போயிடுவாங்கள். இடியற்ஸ்... இந்தா பார்! வந்தது போனதே தெரியேல்லை... ஆனால் ஆயிரம் ரூபாய்க்கு பிஸ்நெஸ்; அலுப்பில்லாத வியாபாரம்" - சுப்பையா முதலாளி சந்தோஷத்தில் முழங்கித் தள்ளினார்.

ஐந்து நிமிஷம் ஆகிய பின்பு, சுரையா கபேக்குச் சென்ற சோமு, அரசரத்தினத்துக்குக் கட்டிக்கொடுத்த துணிப் பார்சலளவில் ஒரு பார்சலை தோளில் வைத்துச் சுமந்து கொண்டு வந்து முதலாளி சுப்பையாவின் மேசையில் இறக்கி வைத்தான்.

"என்னடா இது சோமு...?" என்று குரலைச் சற்று உயர்த்திக் கேட்டார் முதலாளி சுப்பையா.



"அந்தத் துரை சொல்லிப் போட்டுப் போன ஆயிரமுங்க" என்றான் சோமு அழாத குறையாக.

எல்லோர் முகத்திலும் விளக்கெண்ணை வடிந்தது.

"அவர் சொல்லிப் போட்டுப் போன ஆயிரமாடா...?" முதலாளி சுப்பையாவின் அகலத் திறந்த வாய்மூட மறந்து விட்டதேன்? இழுப்பு வலியோ?

பார்சல் கட்டுகள் அவசர அவசரமாகக் கத்திரிக்கோல் விட்டு, வெட்டப்படுகின்றன. பொரிந்து இன்னமும் சூடு அகலாத வடைகளின் சுகந்தமணம் கடையெல்லாம் வியாபித்துக் கமழ்ந்தது.

முதலாளி சுப்பையாவும், சிப்பந்திகளும் அரசரத்தினத்தின் ஆயிரம் வடைகளையும் மோப்பம் பிடிக்கிறார்களா?


வடையைச் சுற்றி சக்கர வியூகம் போட்டபடி சிப்பந்திகள் வாயடைத்துப் போய் நின்றார்கள்.

அலங்க மலங்க நின்ற சுப்பையா பிரக்ஞைபெற்று, "அவன் தேத்தண்ணிக்குச் சொல்லிப்போட்டுப் போக வில்லையாடா?" என்றார் தாழ்ந்த குரலில்.



4

சாம்பல்



சாம்பலை நீக்கிக் கரியைப் பல்லில் போட்டுத் தீட்டிக் கொண்டு கிணற்றடிக்கு வந்தான் வேலும்மயிலும். மூன்று மாதங்களுக்கு முன்னர் லீவில் வந்தபொழுது நடந்த சம்பவங்கள் இன்னமும் மனதில் குதியாட்டம் போட்டுக் கொண்டிருந்தன. ஒரு வார லீவில் ஊருக்கே வந்தது பூமணிக் காகத்தான் என்பது அவனுடைய அடிமனத்தின்

உள்ளுணர்வு. ஆறு வருடங்களாக அவனுடைய உள்ளத்தில் விதை வெடித்து, முளைகொண்டு விகசித்துவிட்ட இச்சையல்லவா அது?

கிணற்றுக்கட்டில் ஏறி, கொல்லைப்புறத் தோட்டத்தில் கண்களைத் துளைத்துப் பூமணியின் உருவத்தை ஒரு தடவை பார்த்துவிட வேண்டுமென்ற நினைவுச் சுழல் அவன் மனத்தை அலைக்கழித்தது.

கொல்லைப்புற வேலிக்கு அப்பால் ஒரு மரவள்ளித் தோட்டம். ஓர் ஆண்டுக்கு முன்னர் அத்தோட்டத்தைக் குத்தகை எடுத்துக் கொண்டு அங்கு குடியேறினான் முருகன். அவனுடைய மகள் பூமணி நல்ல அழகி. முதன் முதலாக, அவள் துலாக்கொடியில் கை வைத்து தண்ணீர் இறைக்கும் பொழுதுதான் பார்த்தான். சேலையை வேட்டியைப் போலக் கட்டிக்கொண்டு, மேல் பகுதியை மறைப்பதற்குச் சட்டை போட்டிருந்தாள். அந்தச் சாதிப் பெண்கள் கல்யாணமானதற்குப் பிற்பாடுதான் தாவணி போட்டுக் கொள்வார்கள். துலாக்கொடியுடன் மல்லுக் கட்டிக் கொண்டு, ராட்டினம் ஆடும் பாணியில் வளைந்து நிமிர்ந்து வேலை செய்யும் பொழுது அவளுடைய கவர்ச்சியே கவர்ச்சி. அவள் வனப்பில் அவன் மனம் பறி கொடுத்தான். தன் மனத்தின் மானசீகக் கோடியிலே, அவளுடைய உருவத்தை வரித்துக் கொண்டான். அவளுக்கு ஈடு சோடான அழகினை எந்தப் பொருள் களிலும் காண இயலாது என்ற நினைவு, அவன் கண்களில் சிலந்திக் கூடு விரிக்க ஆரம்பித்தது. இளமைப் பருவத்தின் குருத்துக் கனவுகள் தழைத்தோங்கும் வயது. அவள் பாய்ச்சிய நீரை உண்டு வளர்ந்த மரவள்ளித்



தோட்டத்தைப் பார்க்கிலும், அவன் உள்ளத்தில் அவளைப் பற்றிய ஆசைகள் 'விசுக் விசுக்' கென்று வளர்ந்து கொண்டிருந்தன. அவளுடன் எப்படியாவது பேசிவிட வேண்டுமென்று நினைப்பான். ஆனால், அவள் எட்டாத தூரத்தில் கண்ஜாடையால் மனதை இதமூட்டித் தவிக்க வைக்கும் தாரகையாகவே யிருந்தாள். 'எப்படியும் அவளைத்தான் கல்யாணம் கட்டி வாழ்வது; ஒரு பட்சக் காதலாக இருந்தாலும், முதற் காதல் தெய்வீகமானது; என்றெல்லாம் நினைத்தவன் பரீட்சையிற் சித்தி யடைந்தான். உத்தியோகத்திற்குச் சென்ற பொழுது, உலகையும் அதன் நெளிவு சுழிவுகளையும் முறையாகக் கற்றான். தன்னையும் பூமணியையும் பிரித்து வைப்பது வெறும் ஓலை வேலியல்ல; ஜாதி, அந்தஸ்து, கௌரவம் என்ற கள்ளிப்பற்றைகளும், முள் வேலியும் என்ற ஞானம் பிறக்கத் தொடங்கியது. இருப்பினும், அவனால் பூமணியையும் அவள் உருவத்தையும் மறக்க இயலவில்லை. நெஞ்சின் மையத்தில் அழியாச் சுவடாக அது பதிந்து விட்டது.

அவளைப் பற்றிய நினைவுகள் உள்ளத்தில் குமைந்து புகைக்க, ஒரு தடவை லீவுக்கு வந்திருந்தான். விண்மீனைப் பார்த்துக் கவிதை புனையும் கவிஞரின் வேட்கையா? அல்லது கடல்மீனை வலைவீசிப் பிடிக்கும் செம்படவனின் ஆசையா? கிணற்றுக்கட்டில் ஏறிக் கொல்லைப்புறம் பார்த்தான்.

அப்பொழுதும் பூமணி கிணற்றடியில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தாள். குமரி வனப்புக் குலையின் எழில் காட்டிப் போர்த்திருக்கும் சட்டைக்கு மேலே,



தாவணி இடம் பெற்றிருந்தது. தாவணியின் ஒயில் அவளுடைய கவர்ச்சியை இன்னும் அதிகப்படுத்தியது.

அவளுக்குச் சின்னத்தம்பி என்ற ஒருவனை மணம் முடித்து வைத்திருந்தார்கள் என்ற சமாச்சாரம் பின்னர் தான் தெரிந்தது.

கொல்லை வேலியில் ஒரு பொட்டும் அடைப்பும் இருந்தன. கன்னி, வேலி தாண்டுவதில்லை. ஆனால் தாலியைக் கழுத்தில் சுருக்கிக் கொண்டால், வேலி என்ற காவல் கிடையாது. அவனுடைய தாய்க்கு அவள்மீது தனிப்பிரியம். அவள் வீட்டிற்கு வருவது அம்மாவுக்கு வெளி வேலைகளில் ஒத்தாசை செய்வதற்கே. தேங்காய் உரிப்பது, விறகு உடைப்பது, இடிப்பது ஆகிய கடின வேலைகளில் கெட்டிக்காரி. துலாக்கொடி பிடித்து பாத்தியில் நீர் பாய்ச்சி உரம் பெற்ற கைகள் அல்லவா? தூற்றல் மழையிலேயே 'அஸ்மா'வில் அவதிப்படும் அம்மாவுக்கு அவள் துணை இன்றியமையாததாகி விட்டது. 'கூட மாட' வேலை செய்வதற்கு அம்மா அவளுக்குப் பல சலுகைகள் செய்வாள். அவள் எந்தக் கடின வேலையில் ஈடுபட்டிருந்தாலும்கூட களைப்பையோ சோர்வையோ காணமுடியாது. எப்பொழுதும், சிரித்த முகம். வேலும்மயிலுவுடனும் சிரித்துப் பேசுவாள். அவன் உத்தியோகம் பார்க்கும் பட்டினத்தில் வெங்காயச் சருகுச் சேலைகளுடனும் கடைச் சரக்குகளின் தளுக்குகளுடனும், மினுக்குகளுடனும் பவனிவரும் எத்தனையோ 'மேக் அப்' அழகிகளைப் பார்த்திருக்கிறான். ஆனால், பூமணியைக் கிட்டப் பார்த்த பொழுது அவை வெறும் போலிகளே என்ற எண்ணம் மிகவும் உறுதிப்பட்டது.



இடையும் மார்பும் அச்சில் வார்க்கப்பட்ட சிலையாகக் கனகச்சிதமாகத் தோன்றின. 'பூமணி' வானத்துத் தாரகையல்ல, முற்றுத்துக்கே வந்துவிட்ட ரோஜாவாகப் பட்டது. பூச்சட்டியில் மலரும் ரோஜாவைப் பாதுகாத்து வெகுவாகப் புகழ்கின்றோம். ஆனால், அதிலும் பார்க்க அழகான ரோஜாக்கள் காட்டில் மலர்ந்து வெளியுலகிற்குத் தெரியாமல் இருக்கின்றன. காட்டில் விளைந்து, தன்வீட்டு முற்றத்திற்கு வந்துவிட்ட ஓர் அபூர்வ ரோஜாவாகவே பூமணி அவனுக்குத் தோன்றினாள். அந்த ரோஜாவைத் தொட்டால், அதன் மென்னிதழ்களின் ஸ்பரிசத்தை நுகரலாமா அல்லது முள்தான் உறுத்துமா என்பதுதான் கேள்வி. துணிச்சல் பிறக்கவில்லை. தனது உள்ளத்து ஆசை உலர்ந்த விறகுக்கட்டையாகவே அவனுக்குப் பட்டது.

ஒருநாள், அம்மா குசினி வேலையில் ஈடுபட்டிருந்தாள். முற்றத்தில் வெயில் கொளுத்தியது. அவன் அறையில் யன்னலின் ஓரத்தில் நிழலுக்கு ஒதுங்கிக் குந்தி, தேங்காய் மட்டையைக் கொடுவாக் கத்தியினால் உரித்துக் கொண்டிருந்தாள் பூமணி. வியர்வைக்காகத் தாவணி விலக்கப்பட்டிருந்தது. யன்னலால் எட்டிப் பார்த்தவனின் பார்வை கவர்ச்சிகளின் திரட்டாக இருந்த மார்பின் மீது, பலாப் பாலில் சிக்கிவிட்ட ஈயின் நிலையில் நிலைத்தது. ஓரக் கண்ணால் அவனைக் கவனித்து விட்டாள். அவனுடைய கண்களில் கொழுந்து விட்டெரிந்த ஆசையின் உள்ளடக்கத்தை அறியாத குழந்தையல்ல. அவள். தாவணியைச் சரி செய்து கொண்டு, இதழ்க்கோடியில் அரும்பி நெளிந்த முறுவலை மென்று விழுங்கினாள்.



கெட்டிக்காரி. இச்செயலுக்கு என்ன அர்த்தம்? முகம் சுருங்கவில்லை; விரியவில்லை. ஒப்புகின்றாள் என்று அர்த்தமா? அல்லது மறுப்புக் கூறுகின்றாள் என்று அர்த்தமா? ஒன்றையும் நிச்சயமாகத் தீர்மானிக்க இயலாவிட்டாலும்கூட "பூனைக்கு யார் மணி கட்டுவது" என்ற கேள்வியில் விவகாரம் இழுபடுவதாகவே அவனுக்குப்பட்டது.

அந்தச் சம்பவத்திற்கு அடுத்தநாளும், அவள் வந்தாள். பேசுவதற்கு ஏதாவது துடக்கு மனப்பான்மை காட்டுவாள் என்று நினைத்தான். பழைய அவளேதான். சிரிக்கச் சிரிக்கப் பேசினாள். சதா சிரித்த முகம்தானா? என்றைக்காவது சினத்தில், கவலையில் சுருங்காதா?

உலர்ந்து விறகான ஆசையில், நம்பிக்கை யென்ற ஒரு தீப்பொறி விழுந்தது.

அடுத்த லீவுக்கு வந்திருந்த பொழுது, பூமணியை அவன் சந்திக்கவேயில்லை. நீண்ட காலத்தின் பின்னர் வந்த லீவாதலினால் அவளைப் பார்க்கவே அவன் கண்கள் துருதுருத்தன. பொட்டைப் பார்ப்பதும், கிணற்றுக் கட்டில் ஏறிக் கிணற்றடியைப் பார்ப்பதுமாக இருந்தான். "இங்கு வந்து போன பொடிச்சி எங்கே?" என்று தாயைக் கேட்க நாக்கு உன்னியது. ஆனால் கேட்பதன் விளைவு என்னவாகுமோ என்று, அவள் எங்கே போனாள் என்ற மர்மத்தை அறியாமலே சென்று விட்டான்.

அதற்குப் பின்னர் அவளைச் சற்று மறந்து விட்டதாகவே பட்டது. அது அதிக காலம் நீடிக்கவில்லை. மறு விடுமுறைக்கு வந்தபொழுது அவள் அவன் வீட்டிற்கு



வந்தாள். இப்பொழுது அதிக நேரம் தங்கமாட்டாள். "டக்" கென்று வீட்டிற்கு ஓடுவாள். பின்னர் எப்படி விரைவாக ஓடுவாளோ அப்படியே விரைவாகத் திரும்பிவிடுவாள். அவள் ஏதோ குட்டிபோட்ட பூனையைப் போன்று தன்னைச் சுற்றித் திரிவதாகவே அவனுக்குப் பட்டது.

ஒரு சமயம் அம்மாவின் பார்வையிலிருந்து விலகி, அவனது அறையின் யன்னலோரம் நின்று கொண்டிருந்தாள். அவள் கண்களில் கெஞ்சுதலும், ஏதோ பேச விரும்பும் ஆவலும் மண்டியிருப்பதை அவனால் அவதானிக்க முடிந்தது.

"என்ன வேணும் பூமணி?"

"ஒண்டுமில்லை..."

"சொல்லன்"

"..."

"உதென்ன பூமணி, புது நாணயமாயிருக்கு. சொல்லன்."

"ஒரு காரியம் செய்யிற தெண்டால், ஓம் எண்டு சொல்லுங்க... அப்பதான் சொல்லுவன்."

"உனக்கு எதுவும் மறுக்கமாட்டன்."

"குறை நினைச்சுக் கொள்ளாதையுங்க, எனக்கு ஒரு இருபது ரூபாய் கைமாத்து வேணும். நெடுக நெடுக அம்மாட்டைக் கேக்க வெக்கமாயிருக்கு. போன கோசு அம்மாவுக்கு என்னாலை நல்ல சிலவு. இப்ப லீவிலை வந்திருக்கிற உங்களிட்டைப் பணம் இருக்குமெண்டுதான் கேக்கிறன். அடுத்த பயணம் வரேக்க கட்டாயம் தருவன்."

மறு வார்த்தைகூட வேலும்மயிலும் பேசவில்லை. பல ஆண்டுகளாக நெஞ்சில் நிலைத்தவளுக்கு இது ஒரு பெரிய உதவியா? ஆண்கள், பெண்களைத் தங்கள்



பலவீனங்களுக்கு உடந்தையாக்க, அவர்களைக் கடனாளிகளாக்கு வதும் ஒரு தந்திரந்தான். ஆனால், அவன் உண்மையிலேயே, அவளுடைய அவசர தேவைக்கு உதவவே எண்ணினான்.

"பணத்தைத் திருப்பித்தரத் தெண்டிக்காதே. கிடைக்கும் பொழுது, வசதி ஏற்படும் பொழுது, எப்பவாவது திருப்பித்தா" என்றான். அன்றைக்கே அவன் பயணமானான்.

கடைசியாக மூன்று மாதங்களுக்கு முன்னர் ஊருக்கு வந்திருந்தான். அப்பொழுது நடந்த சம்பவம்தான் அவன் உள்ளத்தில் கங்குகக்கும் தீயை மூட்டியது என்று சொல்ல வேண்டும்.

தன் மகன் மெலிந்த கோலம் காட்டுகிறான் என்று கவலைப்பட்ட தாய், அன்று வெள்ளிக் கிழமையாதலால் மதிய அர்ச்சனை செய்விக்கக் கோயிலுக்குப் போய் விட்டாள். சென்று வெகு நேரமாகிறது. இதற்கிடையில் பூமணி வந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற எண்ணத்தில் வேலும் மயிலும் சாம்பிக் கொண்டிருந்தான். வெகு நேரம் இந்த நினைவில் அலைக்கழித்து முடித்த பின்னர், எதிர்பார்த்ததைப் போல அவளும் வந்து சேர்ந்தாள். அவளே பேச்சைத் தொடங்கினாள்.

"இந்தப் பயணம் காசைத் திருப்பித்தர முடியவில்லை..."

"அதுக்கென்ன பூமணி. நான் உன்னை இப்ப கேட்டனானே? உந்த விசர்க்கதைதான் எனக்குப் பிடிக்காது. அது கிடக்கச் சின்னத்தம்பியின்ர பாடு எப்பிடி?"

"தெரியாதே? ஆண்டவன் கொண்டந்து என்ர



தலையிலை கட்டியடிச்சிருக்கு. அம்பேசேத்து உழைப் பெண்டால் ஒரு ரூவாய்க் குடி. உதுதான் சீவிமாச்சு. உங்கடை கொம்மான்ர உதவியுமில்லாட்டி. நான் குளம் குட்டையிலை விழுந்துதான் உயிரை மாய்க்க வேணும். ஒரு புள்ளை. ஒரு வருசமாச்சு. அந்தப் புள்ளைப் பொறுவுக்குப் பட்ட கடனே இன்னும் அடைக்கல்லை."

"பொடியனோ, பொடிச்சியோ? ஏன் இங்க கொண்டாற தில்லை?"

"பொடிச்சிதான். அந்தச் சனியனுக்கு மூளையிலே அப்பன்ர குணம். இங்க கொண்டந்தால் வேலை வெட்டி செய்யவும் விடமாட்டாள்."

"சத்தியமாய்ச் சொல்லுறன் பூமணி, உன்னைப் புள்ளைப் பொத்தவளெண்டு ஒருத்தரும் சொல்லாயினம். உன்ரை வடிவும் ஒரு வடிவுதான். அம்மாகூடச் சொல்லும், கிளியை வளர்த்துப் பூனை கையில் குடுத்த மாதிரி யெண்டு."

"என்ர அப்பு இப்பிடியொரு புரியனைக் கொண்டந்து என்ர கழுத்திலை கட்டிவைப்பாரெண்டு நான் கனவிலும் நினைக்கவில்லை" என்று சொல்லி முந்தானையை எடுத்து மூக்கைச் சீறினாள். அதனை விலக்கிய பொழுது, அவள் வனப்புக் குலையாமல், அன்றிருந்தது போலவே தோன்றியது.

அவளைப் பார்த்தான். அவளுடைய அங்கம் ஒவ்வொன்றின் அழகினையும் கட்புலனால் நுகர்ந்துவிடும் வேகம். இவ்வளவு காலமும் தன் கண்ணில் தட்டுப்படாத வனப்புகள் அவள் மேனியில் படர்ந்திருப்பதாகப் பிரமை. வட்ட முகம். முகத்தைப் பேர் பாதியாக வெட்டிவிடும் நீள்



கண்கள். அவற்றிக்கு இமைக்கோடுகள் வரை கரையிட்டிருக்கும் புருவங்கள். அதன் இணைப்பில் எழுந்த கூரிய மூக்கு. நெளிந்த கடலலைகளின் அழகு காட்டும் கேசம். செவிப் பிரதேசத்தில் தூக்கனாங்குருவிக் கூடு தொங்குவதைப் போல சிலிம்பி மயிர். இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு, ஒரு குழந்தைக்குப் பாலூட்டியும் இன்னமும் குமரிக்கட்டுக் குலையாது புடைத்து நிற்கும் மார்புகள். கொடிவாக்கின் கயிற்றுடல்...

"பூமணி" --- அவன் பேச்சில் புலால் வேட்கை கொண்ட வேங்கையின் நெடி.

"....." – ஆழ்கடல்

"சரியா?"

"என்ன சரி?" --- எக்கச்சக்கமான கேள்வி. மனத்தைக் கலக்கியது.

"என்னில் எப்ப எண்டாலும் கோவிப்பியா?"

சம்மதமா? அல்லது சிந்தனையா? --- தலை கவிழ்ந்து நிற்கிறாள்.

"சொல்லன்."

"கோவிக்கமாட்டன்."

அப்பொழுது "தம்பி" என்று அழைத்துக் கொண்டு அம்மா வந்தாள்.

அவன் ஏமாற்றத்தின் எதிரொலியாக விட்ட நெடு மூச்சு அவள் உடலில் பட்டிருக்க வேண்டும்.

அந்த மௌனத்தில், உள்ளத்தின் இச்சை நெருப்பு, தீ நாக்குகளை மேலெழுப்பி... அவள் விலகி நகர்ந்தாள்.

"அம்மாவே? உங்களைத்தான் தேடி இப்ப வந்தனான்." என்று அம்மாவை எதிர் கொண்டழைத்தாள்.



"ஆர், பூமணியே? என்னடி புள்ளை தேள்வை....?"

"இண்டைக்குக் கூப்பன் எடுக்க வேணும். ஒரு ரெண்டு ரூவாய் வாங்கிக் கொண்டு போகலாமெண்டு..."

"உதுக்குத் தானே வந்தினி? அது தாறன். அது கிடக்க அண்டைக்கு என்னடி வீட்டிலே சண்டை? ரெண்டு மூண்டு நாளா உன்ர தலைக் கறுப்பையும் காணேல்லை. சின்னத் தம்பியின்ரை சிலமனையும் உங்காலை காணேயல்லை.

"வேதாளம் முருங்கை மரமத்திலேதானே ஏறும்? போன கோசு அடைவு வைச்சு அட்டியலை, எங்களுக்குத் தெரியாமல் வித்துச்சுட்டுத் திண்டிட்டுது. அப்பு அதைக் கேட்டதுக்குத் தான் சண்டை. எனக்கு மனுஷனோடை சீ எண்டு போச்சுது."

"என்னமோ உன்ர தலைவிதி உப்பிடியாய்ப் போச்சுது."

அன்று பின்னேரம் கிணற்றடிக்குக் குளிக்கச் சென்ற வேலும்மயிலும் எட்டிப்பார்த்தான். பூமணி கிணற்றடியில் 'உடுத்தாடை' கட்டிக் குளித்துக் கொண்டிருந்தாள். அவன் நின்று தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை அவளும் கவனித்து விட்டாள். அவள் மேலில் அழுக்குத் தேய்க்கும் வாக்கில். அடிக்கொரு தடவை அவனைத் திரும்பிப் பார்த்தாள். வெற்றிலைக் காவியினாலும் தன்னுடைய வெண்மையைச் சோரம் போக்காத பற்களை அடிக்கொரு தடவை காட்டினாள். அன்று இருவரது குளிப்பும் முடிய ஒருமணி நேர மென்றாலும் ஆகியிருக்கும்.

அவனுக்கு நெஞ்சுத் துணிச்சல் குறைவு. எப்படி எல்லாமோ திட்டங்களை மனத்தில் உருட்டினாலும், ஒன்று கூட உருப்படியாக அமையவில்லை. அதற்கிடையில் லீவு



முடிந்தது. பட்டினம் போகவேண்டியிருந்தது. 'நான் ஏமாற்ற வில்லை; உங்கள் மனப் போக்குத் தெரியும்' என்றே அவள் தன் பார்வையில் செய்தி விடுத்ததாக அவனுக்குப் பட்டது.

அன்று போனவன். மூன்று மாதங்களுக்குப் பின்னர், இன்றுதான் ஒருவார லீவில் வந்திருக்கிறான்.

ஆறுஆண்டுகளாக உருவாகிய இச்சை மூன்று மாதங்களுக்கு முன்னர் தீப்பிளம்பாகி அதன் காங்கையில் உருகும் நெஞ்சு...

ஆசை பொங்கும் உள்ளத்துடன் கிணற்றுக் கட்டில் ஏறி, போன தடவை அவள் சிரித்துச் சிரித்துக் குளித்துக் கொண்டிருந்த கிணற்றடியைப் பார்த்தான். அங்கு, 'ஈ, காகம்' கூடக் கிடையாது. வெறிச் சோடிக் கிடந்தது. அவள் வாழும் குடிசைக்குத் தன் பார்வையைத் திருப்பினாள்.

குடிசைக்கு பின்னால் 'திடு திப்' பென்று எழுந்திருக்கும் பந்தல்.

"எதற்கு?"

அந்தப் பந்தலுக்குள் சா வீட்டின் பயங்கரம் நிழலாடு வதை ஒரே கணத்தில் அவதானித்தான்.

'என்ன நடந்திருக்கும்... ஒருவேளை வேதாளம் முருங்கை மரத்தில் ஏற, விரக்தி கொண்ட பூமணி, தன் உயிரை ஏன் பூமிக்கும் அடுத்த வீட்டுச் சபல எண்ணங் களுக்கும் பாரமாக வைத்திருக்க வேண்டுமென்ற நினை வில் உயிரை மாய்க்க... பொலிடோல் என்னும் சக்தி மிக்க நஞ்சு இப்பகுதியில் மலிவாகக் கிடைக்கின்றது...'

முந்தாநாள்கூட யாரோ ஒரு இளம்பெண் பொலிடோல்



அருந்தி உயிரை மாய்த்துக் கொண்டதாகச் செய்தி வந்திருந்தது. தலைப்பை வாசித்தவன். செய்தியை வாசிக்க வில்லை.

'ஒருக்கால் இந்தப் பூமணிதான்...'

நெருப்பின் மீது நீரைக் கொட்டும்போது மேலெளும்பும் ஆவியைப் போன்று எழும் எண்ணங்களின் குமைச்சல்.

அவசரமவசரமாக முகத்தைக் கழுவிக்கொண்டு வீட்டுக்கு வந்தான்.

"அம்மா. பூமணியின்ர வீட்டை என்னணை?"

"சொல்ல மறந்துட்டன் தம்பி. அவன் சின்னத்தம்பி செத்துப் போனான். நேத்துத்தான் சவம் எடுத்துக் காடாத்துச் செய்தினம். எளியதுகளெண்டாலும் நல்ல சனம். ஒருக்கா முகத்தைக் காட்டீட்டு வாவன்."

இறகு முளைத்துப் பறந்த கற்பனைகள், பூமணியை நோக்கி இறங்கினவா? சாவீட்டிற்குப் புறப்பட்டான்.

படலையைத் தாண்டும் பொழுது, வாசலுக்குக் கிட்ட இருந்த கொட்டிலில் கட்டப்பட்டிருந்த பசு தொழுவத்தில் நிரம்பி வழியும் வைக்கோலைத் தின்னாது, பக்கத்தில் சிந்தப்பட்டிருந்த வைக்கோற் துண்டுகளின் சுணைப்பில் கிடந்து, உள்ளிருந்து வாய்க்குள் இழுத்துக் கொள்ளும் உணவு உருண்டைகளை அசை போட்டுக் கொண் டிருந்தது. உள்ளுணர்வுக் கக்கல்களில் - தீனுருண்டைக் குமட்டலில் - மனம் மாடாகக் கூடுவிட்டுக் கூடு பாய... மனம் அசைபோட, கால்கள் சாவீட்டை அடைந்தன.

கால்கள் நடப்பட்டு தடிகளை அப்படியும் இப்படியும் எறிந்து நிழலுக்காக ஓலை பரப்பப்பட்ட கூரை. கூரையை மறைத்து வெள்ளை கட்டப்பட்டிருக்கிறது. பந்தலின்



மையத்தில் இரண்டு வாங்குகள் இணைத்துப் போடப் பட்டிருக்கின்றன; அதில் பிரேதம் வளர்த்தப்பட்டிருந்த கோலம். வாங்குகளின் இரு ஓரங்களிலும் அடிக்கப் பட்டிருந்த சட்டப் பிளவுகளில், சந்தனக் குச்சிகளின் குறள்கள் – மருந்துப்பகுதி எரிந்துவிட, வெறுங்குச்சிகள் மொட்டையாக நிற்கின்றன. அத்தர், கற்பூரம், சாம்பிராணி ஆகியவை கலந்த ஒருவகை நெடி அப்பிராந்தியத்தை முற்றுகையிட்டிருப்பதாக ஒரு மனப் பிரமை. பந்தலின் அருகுகளில் ஜதாகத் தூக்கப்பட்டிருந்த குருத்துத். தென்னோலைத் தோரணங்கள், கயர் ஊறிக் காவி நிறம் பற்றி வாடிக்கிடக்கின்றன. பந்தலின் ஒரு காலாக இருக்கிறது, ஒரு முள் முருங்கை மரம். அதைப் பார்த்த மாத்திரத்திலேயே, அது பூமணியின் பொன்னுருக்கன்று நடப்பட்ட கன்னிக் கால் என்பதைச் சொல்லிவிடலாம். அது என்னவோ மதமதப்பில் சடைத்து வளர்ந்துதானிருந்தது. அதன் பக்கத்தில், முருகன் யோசனையில் அமுங்கிய வனாக, ஒரு சிறுமியை மடியில் தூக்கி வைத்திருக் கின்றான். அச்சிறுமி பூமணியின் சாயல். என்ன யோசனை, உலகத்து இச்சா சக்திகளுடன் இரண்டறக் கூடிக் குலவிக் கிளைத்துக் கவர் விடும் ஆசாபாச இயக்கங்களுடன் சங்கமமாகித் தேங்கிச் சக்தியாக, அச்சக்திக் கூடாக வாழ்க்கை என்ற தேரைப் பலவந்தமாக இழுத்து வர, தேரின் அச்சாணி முறிந்து விட, ஓடி, ஆடி வாழ்வதாக மேடையில் இயந்திரப் பொறி இயக்கம் காட்டி அதையே அநித்தியமற்ற அமரத்துவமென்று வாழ்ந்து, இறுதியில் நித்தியமான சாம்பல் மேடு. சாம்பல் மேட்டில் பாத்திகள் கீறி, நவதானியங்களைத் தூவி, இளநீர், பால், தயிர், நெய்,



முக்கனிகள், பன்னீர் என்பன ஊற்றி, சிறுகுச்சிகளை நாவிதன் செய்த செப்படி வித்தையில் கலப்பையாகப் பாவனை செய்து உழுது, அலை கடலில் கரைத்து விடுவார்கள். எல்லாம் சூனியம்; சூனியமே நித்தியம். சாம்பல் கரைக்கப்பட்ட கடலைப் போன்றே விரிந்திருக்கும் சிந்தனைக் கடலில் முருகன் கிளிஞ்சல்கள் பொறுக்கு கிறானா? அல்லது மரவள்ளித் தோட்டத்தில் எத்தனை கிழங்குகள் பணமாகி, தன் மடியில் தவழும் பிஞ்சின் வாழ்க்கையை ஈடேற்றும் என்ற சிந்தனையா? நிலத்தைக் கொத்தும் குடியானவனால் தன் நெஞ்சில் தத்துவப் பயிர்களை நாட்ட முடியுமா?

பந்தலுக்குள் பனையோலைப் பாய்கள் விரிக்கப் பட்டிருந்தன. அதில் நாலைந்து கிழவிகள் வளைத்துவரக் குந்தி, கிசு முசு என்ற பேச்சுடன் வெற்றிலைச் 'சமா' வைத்துக் கொண்டிருந்தார்கள்.

'பூமணி எங்கே?

அவளை மட்டும் காணவில்லை. இவற்றில் பார்வை மேய, கைகளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு, முகத்தில் சோக ரேகைகளின் கோடுகள் பற்றிப்படர, அமைதியின் உருவாய், வேலும்மயிலும் பந்தலுக்குள் நுழைந்தான்.

அவனை முதலில் கண்ட ஒரு கிழவி, கூட்டத்திலிருந்து எழுந்து,

"உனக்குத் தோளும் துடிக்க வில்லை -- என்ர ராசாவே நீ ஒரு துக்குறியும் காணலையோ...?"

என்று ஒப்பாரி இழுத்துக்கொண்டே அவனை நோக்கி விரைந்தாள். மற்றக் கிழங்களும் தொடர்ந்தார்கள்.



மாரடித்து ஒப்பாரிக் குரலெழுப்பி விரைந்த கிழவிகள் வேலும்மயிலுவை சக்கர வியூகமாக வளைத்து அமர்ந்து கொண்டு, கைகளை இணைத்துச் சங்கிலிக் கோர்வையின் சாயலில் ஐக்கியமாகி, தாங்கள் ஒப்பாரியில் அடைந் துள்ள தோர்ச்சியைப் பறை சாற்றினார்கள்.

அந்தப் பிலாக்கணம் ஓய்ந்ததும் குறுக்குக் கட்டின் தலைப்பினை எடுத்து, மூக்கைச் சிந்தி, கண்ணீர் வராத கண்களையும் ஒப்பனைக்குத் துடைத்துக் கொண்டு எழுந்தார்கள்.

அப்பொழுது ஒருபெண் தலைவிரி கோலமாகத் தலையில் மண்ணை வாரிப்போட்டபடி அவன் காலடியில் வந்து விழுந்தாள். துண்டிக்கப்பட்டவுடன் துடிக்கும் பல்லியின் வாலைப் போன்று துடிக்கின்றாள். உலகம் முழுவதும், சூனியமாக, அந்தச் சூனிய வெடிப்புப் பாளங்களுள் ஒன்றில் அமுங்கிக் கொண்டிருப்பதான குரல், அவனுடைய கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, சோகத்தின் நிலைக்களனாகிவிட்ட குரலில் தாலி இழந்து தலைவிரி கோலமாக,

"அந்தரிச்சு நிக்கிறேனே – அயலூர்த்துரையே
புருஷனைத் தின்டுவிட்ட பெரும் பாவியானேனே
அப்பனைத் தின்ட அநாதைக்குத் தாயானேன்
சங்கிலி ராசாவே நேசம் மறக்காதே...
நம்பினேன் என் துரையே"

என்ற ஒப்பாரி அவன் நெஞ்சைத் துளைத்தது. அவளு டைய கண்ணீர் அவன் பாதங்களைக் கழுவுகின்றது.

நெருப்பின் காங்கை எங்கே? உள்ளத் தவிப்பு எங்கே? அறுந்த வீணையில் ஒலிக்கப்படும் அவலக் குரலா?



கண்ணீரா? இதயத்தைப் பிழிந்து நீர் கக்கி, கங்குகள் உமிழும் நெருப்பை அவித்து, அதன் வெப்பத்தினைத் தணிக்கின்றதா? ஓராண்டல்ல; இரண்டாண்டல்ல; ஆறு நீண்ட நெடும் ஆண்டுகளாக நெஞ்சில் எழுந்த தீ நாக்குகள் செத்துச் சவமாகி, சூனிய உலகின் சூனியமாகி விட, எஞ்சியிருக்கும் சாம்பல்மேடு நெஞ்சை அழுத்து கின்றதா? சாம்பல் எங்கே? கடலிலா? உள்ளமா? கடலா? உள்ளக் கடலில் என்ன கிடக்கும்? சபல நினைவுகளின் கழிவுப் பொருளான சாம்பலின் சுவடே தெரியாது கழுவும் நீராக, அவளுடைய மென் பஞ்சு மார்பில் அணைப்புக்காக ஏங்கித் தவித்த நேரங்கள் உண்டு... இன்று அந்த ஜடப்பொருள் உருண்டை காலடியில் சுருண்டு கிடக்கும் பொழுது...? எங்கே இச்சை? தணியாத புலால் வேட்கை எங்கே? குப்பை மேட்டின் அழுக்கில் வாடிக் கிடக்கும் ரோஜாவினை முகர்ந்தனுபவிக்க இயலாது என்ற அருவருப்பா? ஆயிரம் விரிபுடையன்கள் நெஞ்சில் கொக்கி இட்டு நிற்கின்றன.

பிலாக்கணம் ஓயவில்லை; ஒப்பாரி மடியவில்லை.

பூமணியின் பிடியை விலக்கிக் கொண்டு, சவம் வளர்த்தப்பட்டிருந்த வாங்கை நோக்கிச் சென்றான் வேலும்மயிலும்.

"தம்பிக்கு ஒரு கதிரை கொண்டு வந்து போடுங்க" என்று வரவேற்றான் முருகேசன்.

மருந்துப் பகுதி எரிந்துவிட, எஞ்சி நிற்கும் ஊதுபத்திக் குறள்களும் தன்னை வரவேற்பதாக அவனுக்குப் படுகின்றது.





5

தேர்

இன்று முத்துமாரி அம்மன் கோவில் தேர்.

தேரின் போது இவ்வாறு ஒரு போதுமே மழை பயமுறுத்தியது கிடையாது. காலையிலிருந்தே கனத்த கருமுகிலின் அடைப் பிற்குள் சிறைப்பட்டிருந்த சூரியனின் முகத்தைக் கூடப் பார்க்க முடியவில்லை பொழு தைப் பார்த்து நேரத்தைக் கணிக்கும் ஊருக்கு திட்டவட்ட மாக எதுவும் சொல்ல முடிய வில்லை.



ஒரு குறிப்பின் – அனுமானத்தில் – கிட்டத்தட்ட நேரம் எட்டு ஒன்பது மணி இருக்கும் என்ற ஊகம்.

"மழை வரப்போகுது கந்தசாமி. வாய் முட்டிக்கு காரோலை வைச்சுக் கட்டு" பனையிலிருந்த கந்தசாமிக்கு ஐயாத்துரை அண்ணர் குரல் கொடுக்கிறார். பின்னேரக் கள்ளிற்குள் தண்ணீர் போய் 'சப்' என்று ஆகிவிடப் போகின்றதே என்ற கவலை அவருக்கு.

"வருஷா வருஷம் இப்பிடித்தானண்ணை. தேருக்கும் தீர்த்தத்திலண்டைக்கும் அந்தநேரம் பார்த்து மப்பும் மந்தாரமுமாக வந்துவிடும். எல்லாம் அம்மாளாத்தை யின்ரை புதுமை" என்றான் கந்தசாமி.

"நீ தேருக்கு வரவில்லையோ கந்தசாமி?" ஐயாத்துரை அண்ணர் கந்தசாமியைக் கேட்கிறார்.

"என்ன கோயிலும் குளமும்? இஞ்சை இருந்து கொண்டு நினைச்சால் அம்மாளாத்தை அருள் புரிய மாட்டாளோ? அல்ல வெண்டால்..."

"நாங்கள் வரவில்லை எண்டதுக்காக தேர் இழுபடாமல் நிண்டுவிடப் போகுதோ?" சலித்துக் கொண்டு பதிலளிக் கிறான் கந்தசாமி.

"குளத்தோடை கோவிச்சுக் கொண்டு குண்டி கழுவாமல் விட்டவன் கதையாக பேசுகிறாய் கந்தசாமி. அறியாத மூடர்களின் செயலுக்காகத் தெய்வத்தை வெறுப்பதா? இண்டைக்குக் கட்டாயம் மழை வரும் கந்தசாமி, தேரும் இழுபடப் போவதில்லை. இருந்து பார் இந்தக் குடிகார ஐயாத்துரை எங்கை சொன்னானெண்டு"

இருண்டு குமுண்டு இடிமுழக்கத்துடன் குளிர்காற்றும் கலந்து வரவே மழை முறையாகக் கொட்டப்



போவதாகவே பட்டது கந்தசாமிக்கும், இந்தப் பயம் தந்த அவசரத்தில் மிகுதித் தொழிலைச் செய்ய விரைகிறான் கந்தசாமி.

நெஞ்சின் நினைப்பில் ஐயாத்துரை அண்ணரும், மழையும் தேரும், தேர்வரும் வீதியும் மாறி மாறிப் புரள்கின்றன.

"இன்று மழை வரவேண்டும் என்ற நேர்த்தியுடன் அதுவும் வானம் கிழித்து வையகமெல்லாம் மூழ்கி விடத்தக்க மழை வேண்டுமென்ற ஓர் உள் அந்தரங்க நினைப்பை ஐயாத்துரை அண்ணரின் பேச்சினூடே கண்டான் கந்தசாமி.

'தேரும் இழுபடப்போவதில்லை என்றாரே! தேர் வரும் வீதியை நினைத்தே அவ்வாறு சொல்லியிருக்க வேண்டும். துந்துமியின் சிந்துதலே போதும் சேறாவதற்கு இந்த மண். பின்பு சொல்லவா வேண்டும்?'

'கந்தசாமி கட்டாயம் கோயிலடிக்கு வா. வரும்போது சரவணன், சங்கரன், சண்முகம், சின்னவன் மற்றச் சகாக்களையுங் கூட்டிக் கொண்டு வா என்றும் சொன்னாரே...'

ஓ! இந்த ஐயாத்துரை அண்ணன்ரை அறிவும், அன்பும், அருளும் ஏன் மற்ற வெள்ளாளருக்கு வருவதில்லை? கள்ளின் மகிமையென்று சொல்லுவதா? சேச்சே! அப்படி யென்றால் முத்து மாரி அம்மன் கோவிலில் நின்று முகாந்திரம் செய்யும் தம்பர், வில்வநாதர், தில்லையார், மயிலர் இன்னும் பேர்களும் குடிகாரர்கள்தானே? ஈரமில்லாத இந்தக் கல்நெஞ்சர்கள் சாதியைப் பற்றிப் பேசி இழிந்துரைத்து போனமுறை ஆலயப் பிரவேசம் செய்யப்



போனபோது கோவில் கதவை இழுத்துப் பூட்டியவர் களாயிற்றே! அன்றிலிருந்து இந்த முத்துமாரி ஆத்தையும் கம்பிக் கிறாதிக்குள் சிறைப்பட்டவளாயிற்றே! ஐயாத் துரை அண்ணர் மட்டும் குறுக்கே வந்திருக்கா விட்டால்....?

என்ன இருந்தாலும் இந்த மனிதனின் அன்பிற்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டிக் கிடக்கு. நம்மை அரவணைத்துச் செல்லாதவர்களின் கோயிலுக்குச் செல்வ தில்லை யென்று ஒதுங்கி இருந்தாலும் இந்த ஐயாத்துரை அண்ணர் சொல்கிறார், 'குளத்துடன் கோபமென்றால் குண்டி கழுவாமலா இருந்து விடுவது?' தெய்வத்தின் முன்னே நீவேறு நான் வேறல்ல. தெய்வத்தின் அருகே சென்று வழிபட கத்தியும், பொல்லும் மற்றும் ஆயுதமும் எதற்கு? அதற்கு அன்பு என்ற ஒன்று போதும். இந்தத் தில்லையனும், தம்பனும் மற்றும் சாதிவெறியர்களும் ஒரு நாள் திருந்தி வழிக்குவரத்தான் போகிறார்கள். ஆனால் நீங்கள் ஒதுங்கிவிடக் கூடாது. தொடர்ந்து போராட வேண்டும். கந்தசாமி கம்பி வேலி போட்டிருந்தாலும் கோயிலுக்கு நாங்கள் போயே ஆகவேண்டும் கந்தசாமி என்று தன்னையும் எங்களுடன் ஒருவனாக்கிக் கொண்ட ஐயாத்துரை அண்ணனின் அன்புக்குக் கட்டுப்பட்டே ஆகவேண்டிக் கிடக்கு.

"அப்ப நீங்கள் போங்கண்ணை பின்னாலை வாறம்..."

"கட்டாயம் வந்துவிடு கந்தசாமி. காரியம் தானாகவே கைகூடி வருகின்றது" என்று வழிக்குவழி சொல்லிச் சென்ற ஐயாத்துரை அண்ணரின் நினைவுகளுடன் தொழிலை முடிக்கிறான் கந்தசாமி.

காரியம் தானாகவே கைகூடி வருகிறதென்றாரே!



அதென்ன? மூளையின் இரத்தநாளங்கள் புடைத்த சிந்தனை. விடைதான் கிடைக்கவில்லை.

ஞானிகளும் தீர்க்கதரிசிகளும் வரப்போவதை முற் கூட்டியே சொல்லிவிடுவதில் வல்லவர்களாம். ஐயாத்துரை அண்ணர் ஞானியா? தீர்க்கதரிசியா?

"குடிகாரப் பயல், பள்ளன், நளவனுக்காகப் பரிந்து பேசிக் கொண்டு திரிபவன்" என்று அண்ணருடைய ஆட்கள் அவருக்கு நேர் நின்று பேசாத பேச்சுகள் இவை.

'என்னண்ணை இப்படியெல்லே சொல்லிப் பேசுகினம்', என்றால் 'முதுகெலும்பில்லாதவங்கள்!' குலைக்கிற நாயும் கடிக்கிறதோ கந்தசாமி? ஆயிரம் சொல்லட்டும். அதை விடு கந்தசாமி' என்பார்.

உண்மைதான். அண்ணர் குலைப்பதில்லை. கடித்தே போடுவார். ஆனால் இப்போதெல்லாம் அண்ணர் அறிவுக்கே முதலிடம் கொடுக்கின்றார்.

கந்தசாமியின் நினைப்பு கோயில் வரையும் தேர் வடமாக நீண்டு கொண்டு வந்தது. தேரும் இழுக்கத் தொடங்கி தெற்கு வீதிக்கு வந்து விட்டது. வானமும் பொருமிக் கொண்டே இருக்கிறது. தூறலும் விழத் தொடங்கி விட்டது. தெய்வம் புதுமை செய்யப் போவ தில்லை என்று கண்ட வெள்ளாள பக்தர்கள் தேரை இழுத்துச் செல்ல வெகுவாக அவசரப்படுகிறார்கள்.

தேர் மேற்கு வீதிக்கு வந்த போது, முத்துமாரி அம்மன் கோவில் தேரின்போது இவ்வாறு ஒருபோதுமே மழை பெய்தது கிடையாது என்று சொல்லும் அளவுக்கு மழை புதுமை செய்து காட்டியது.

மழையா அது? அம்மனின் அகோரத் தாண்டவம்;



உலகம் முடிவாகும் ஊழிக்கூத்து! மழையும், புயலும் இணைந்து போர்க்கோலம் பூண்டுநின்றன. இடியும், மின்னலும் எதையும் கேட்காமலும், பார்க்காமலும் 'ஊழி' செய்கின்றன. இயற்கையின் பலமுனைத் தாக்குதல்களால் திக்குத்திசை தெரியாது பக்தர்கள் தட்டுத்தடுமாறி சேற்றில் புதையுண்ட கால்களைத் தூக்கி வைத்தோட முடியாத பெரும்சிரமத்தினூடே விழுந்து எழுந்தும் சென்று கோயிலையும் மடத்தையும் அடைத்துக் கொண்டு நின்று நடுங்குகிறார்கள்.

தேரும் அதன் கெம்பீரத் தோற்றமும், தோரணங்களும் எல்லாம் அலுக்குலைந்து போய்ப் பார்ப்பதற்குப் பெரும் பட கொன்று கடலில் மூழ்கும் காட்சி. நிலத்தில் புதைந்து சரிந்த நிலையில் நின்றிருந்த அந்தப் பெரிய பழைய கட்டுத்தேர், 'பிரண்டு விடுவேன் பிரளப் போகிறேன்,' என்று பயமுறுத்திக் கொண்டு நின்றது. தேரை இழுத்துக் கிளப்பும் முயற்சி தொடர்ந்த தென்றாலும் வடக்கயிற்றுடன் உருவுப்பட்டு விழுந்தவர்களே இன்னும் எழுந்திருக்க வில்லை. மேலும் சற்றுத் தாமதித்தாலும் சரிந்து கொண்டிருக்கும் தேர் நிச்சயம் பிரண்டு விடுமென்பது திண்ணம்.

'என்ன செய்யலாம்?' கோயில் நிர்வாகிகள் நனைந்து குறாவி குளிரில் நடுங்கியபடி கூடிநின்று ஆலோசிக் கின்றார்கள்.

ஐயாத்துரை இல்லாமல் தேர் இனி அசையாது. ஆனால், ஐயாத்துரை என்ன சொல்வான் என்பது இவர்களுக்கும் தெரியும்.

இக்கட்டான நிலை. பள் நளங்களைக் கொண்டு தேரை



இழுப்பிக்கவா?

'ஆபத்துக்குப் பாவமில்லை! துடக்கில்லை.' அர்ச்சகரோ ஆரோ ஆலோசனையில் கலந்து கொண்ட ஒருவர் அவசரப் படுத்துகிறார்.

கோயில் நிர்வாகம் வேண்டா வெறுப்பாக ஐயாத்துரை அண்ணரைத் தேடுகிறது.

ஐயாத்துரை அண்ணருக்கும் அவர் சாதி பெண் பக்தை களுக்கும் இடையில் பெரும் வாய்ப்போரொன்று நடந்து கொண்டு இருக்கிறது.

"புதுமையான அம்மாளாச்சியா இருந்தால் வாற மேலைக் கிடையிலை கொள்ளை கோதாரி எல்லாம் வந்து உந்தப் பள் நளங்களை யெல்லாம் அள்ளிக் கொண்டு போய்விட வேணும்" என்றாள் ஈரச் சரிகைச் சேலையையும், தங்கப் பவுன் நகைகளையும் சுமந்து நின்ற ஒரு நடுத்தர வயதுப்பெண்.

"உந்த அறுவார் போனவருஷம் கோயிலுக்கை உள்ளட்ட தாலைதான் குற்றம் பொறுக்காத அம்மாளத் தை இந்த மாதிரி மழையாகவும், புயலாகவும் சீறிப்பாயுறா" என்றாள் தில்லையரின் இரண்டாம் தாரம்.

"கறுத்த தலையும் வெள்ளைத் தலையாப் போச்சு. காலாதி காலத்திலை முத்துமாரி ஆத்தையின்ரை தினத்தில் இப்படி யொரு அழிவுமழை பெய்ததில்லை. இதெல்லாம் சாதி கெட்ட சாதியள் கோயில் குளத்துக்கை உள்ளிட வெளிக்கிட்ட தாலையும். வெள்ளாளன் வேத்தாளன் அவங்கடை வீடு வழிய போய் கள்ளு மண்டிக்குக் குந்திக் கொண்டிருக்கிறதாலையும் குற்றம் பொறுக்காத அம்மாளாத்தை பெய்யாப் பெரு மழையாகக்



கொட்டித் தீர்க்கிறா. உவை எல்லாரையும் குறுக் காலை அள்ளிக்கொண்டு போகத்தான், அவ இந்தக் கூத்து ஆடத் துவங்கியிருக்கிறா" என்று திட்டித் தீர்க்கிறாள் வேறொரு வயோதிப்பெண்.

"ஓமணை ஓமணை, பூவில்லாமல் மாலைகோத்து, புரியன் இல்லாமல் பிள்ளைப் பெறுகிறவள் எல்லாம் கோயிலுக்கை நின்டால் அம்மாளாத்தை பொறுப்பாளே! அதுதான் மழை பிரளயமாகக் கொட்டுது. பள்ளன் நளவனை ஏன் இழுக்கிறியள்? போன வரியம் நடந்ததுக்கு இந்த வருஷம் பொடி விளக்கணம் வைச்சுக் கதைக்கிறியள், கள்ளப் பரத்தையள்." ஐயாத்துரை அண்ணரின் பேச்சில் தில்லை யற்றை மனைவி உட்பட பலர் தலை குனிந்து கொண்டார்கள். மேலும் வாய் காட்டினால் கேளாத கேள்வி யெல்லாம் கேட்டு நாற வைத்துவிடுவான் ஐயாத்துரை என்பது அவர்களுக்குத் தெரியும்.

"என்ன ஐயாத்துரை விரதகாரச் சனம் நடுங்கியெல்லே சாகப் போகுதுகள். ஏதாவதொரு வழிசெய்யாமலுக்கு இப்படியே நிண்டால் தேரும் பிரளப்போகுது" என்று ஐயாத் துரை அண்ணரின் தோளில் கையை வைத்தார் கோயில் முதலாளி குமரகுரு.

"செய்யிறதுக்கு என்ன இருக்கு. தேரைப் புதைந்த இடத்திலிருந்து கிளப்பி எடுத்து முகப்புக்குக் கொண்டு போக வேணும் எண்டால் அதுக்குத் திடகாத்திரமான ஆட்கள் வேணும். கழுத்துச் சங்கிலியும், கை வாச்சும், பட்டுவேட்டி யோடையும் மினுக்கிக் கொண்டு நிக்கிற உங்கடை உத்தியோககார ஆட்களால் அது முடியாது. அவை நொந்த வேலை செய்து பழக்கமில்லாதவை"



என்றார் ஐயாத்துரை அண்ணர் நையாண்டியாக.

"அதுக்காக...?" கோயில் முதலாளி குமரகுரு கேட்கிறார்.

"அதுக்கு அங்கை நிக்கிறாங்கள் பாருங்கோ மரங்களுக்குக் கீழே நனைந்தபடி... கந்தசாமியும், சங்கரனும், சண்முகமும், சின்னவியும் மற்றவர்களும்... அவர்கள் வந்தால்தான் தேர் இனி இழுபடும்" ஐயாத்துரை அண்ணர் சொன்னார்.

"என்ன விசர்க்கதை பேசுகிறாய் ஐயாத்துரை? உனக்கென்ன மூளைகீளை கெட்டுப் போச்சோ? போன வரியம் உவங்கள் கோயிலுக்கை உள்ளட வந்ததாலை தான் இந்த வரியம் இந்தக் கேடெல்லாம் வந்திருக்கு. அப்பிடியிருக்க உவங்களைக் கொண்டு தேரை இழுப்பீக்கிறதோ?"

"எனக்கு மூளை சரியாகத்தான் இருக்கு குமரகுருவர். அவங்கள் தேரினைத் தொட்டால் தீட்டு வந்துவிடும் என்றால் நீங்களே இழுத்துக் கொண்டு போங்கோவன். நானா மறிக்கிறன்?" ஐயாத்துரை அண்ணர் சொல்கிறார்.

"ஆபத்துக்குத் தோஷமில்லை. அவங்களைக் கொண்டு முதலில் தேரைக் கிளப்பி எடுப்பிப்பம். தேர் பிரளப் போகுது" ஐயாத்துரை அண்ணரையும், கோயில் முதலாளியையும் சூழ்ந்து கொண்டவர்கள் அவசரக் குதர்க்க நியாயங்களில் ஈடுபடுகிறார்கள்.

"ஆபத்துக்காலத்தில் அவங்களின் உதவிவேணும். அதுக்குப் பிறகு...?" ஐயாத்துரை அண்ணரின் உரத்த கேள்வியில் கனல் பறக்கின்றது. மேற்கொண்டு பேச்சு வராமல் வாய் அடைத்துப் போய் நிற்கின்றார்கள் எல்லோரும்.



"ஆபத்துக்காலத்தில் அண்ணனும், தம்பியும் முறை கொண்டாடி அலுவல் பார்பிச்சுப் போட்டு உங்கடை ஆபத்துத் தீர்த்தவுடனே அவங்களை கூடாத சாதி என்கிறியள். இப்பவும் ஆபத்துக்கு தீட்டுமில்லையெண்டா தேரைத் தொடவிடப் போகிறியள்?' அண்ணர் பேசிப் பேசிப் பலமாக்ச் சிரிக்கின்றார்.

'பிரளப் போகின்றேன்; பிடியுங்கள் என்னை' என்று கணங் கணமாக சரிந்து பயமுறுத்துவது போல் தேர் சரிந்து கொண்டே போகிறது.

அம்மாவின் தேர் பிரண்டால்...?

நினைக்கவே பயங்கரமான அந்த நினைப்பை வாய்விட்டுச் சொல்லவே முடியாமல் தவிக்கிறார்கள். 'ஊரே அழிந்து விடப் போகின்றதே' என்று பயந்த நிலையிலும் தொடர்ந்து தங்கள் சாதி ஆசாரத்தைப் பேணவிரும்புபவர்கள் அரை குறையாக ஐயாத்துரை அண்ணரின் நெருக்குவாரத்திற்கு உடன்படுகின்றார்கள்.

"சரி ஐயாத்துரை நீ நினைக்கிற மாதிரியே செய்" கோயில் முதலாளி குமரகுருவும் மற்றவர்களும் தங்கள் இயலாமையை அரைகுறை மனத்துடன் ஏற்றுக்கொண்டு, ஐயாத்துரை அண்ணரின் விருபத்திற்குக் கடைசியில் இணங்க வேண்டியே வந்துவிட்டது.

அதோ கந்தசாமியும் சரவணனும், சங்கரனும் சண்முகனும் மற்றுமுள்ள பெண், ஆண், சிறுவர்கள் உட்பட சரிந்து நிற்கும் தேரை நிமிர்த்தி இழுக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருக்கின்றார்கள்.

மழை கொட்டுகின்றது, புயல் சீறுகின்றது. இடி முழக்கம் நெஞ்சைப் பிளக்கின்றது. வாள் வீச்சு மின்னல்



கண்களை குத்திக் கிழிக்கின்றது. இந்த இயற்கையின் சீற்றத்தையே எதிர்த்து நிற்கின்றார்கள் அந்த மனிதர்கள்.

ஓ, என்னே மனிதர்கள்!

கந்தசாமியும், ஐயாத்துரை அண்ணரும் தேரின் பீடத்தின் அம்மனின் அருகே நின்று தேர் மேலும் சரிந்து விடாதபடி முண்டு குடுத்துக் கட்டுகிறார்கள். கீழே புதையுண்ட சில்லை மேலே கிளப்பும் முயற்சியில் மற்றோர் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

இதோ தேர் இழுபடப் போகின்றது. ஐயாத்துரை அண்ணரும், கந்தசாமியும், மற்றுமுள்ளோரும் தேர் வடத்தைப் பிடித்து நிற்கின்றார்கள். ஒதுக்கி நின்ற குமர குருவரையும், தம்பர், தில்லையரையும் ஐயாத்துரை அழைக்கின்றார்.

"அரோகரா! அம்மாளாத்தைக்கு அரோகரா! அரோகரா அரோகரா..."

அந்தப் பெரிய கட்டுத்தேர் ஒருதரம் முறிந்து கொட்டுப் படப் போவதுபோல் 'நெறுக்கிட்டு' உருளத் தொடங்கு கின்றது.

"அரோகரா! அம்மளாச்சிக்கு அரோகரா!" இடிமுழக்கத் துக்கு சவால்விடும் அந்த மனிதர்களின் அரோகராக் கோஷம் வானை எட்டுகின்றது. எல்லோர் முகங்களிலும் ஏற்பட்டிருந்த கலவரமும் பீதியும் அகன்று ஒருவரை யொருவர் வெறுத்துக் கறுவிக் கொண்டிருந்த துடக்கு மனப்பான்மை அகன்று கிடந்த அந்த வேளையில் அந்த முகங்களில் பிரகாசித்த ஒளிப்பிளம்பில் ஓர் உண்மை யைக் கண்ட ஐயாத்துரை அண்ணர் சொல்கிறார்...


"இந்தத் தேரை என்ன; எந்தத் தேரையும் நாங்கள்



இழுத்துச் சென்று இலக்கை அடைய வேண்டுமென்றால், கந்தசாமியாக்களின் சகோதரக் கைகோப்பும் சேர்ந்திருந்தால்தான் இந்த நாட்டில் எங்களாலை தேரோட்ட முடியும்!"

'அண்ணர் சொன்னதில் எந்தப் பெரிய அர்த்தம் புதைந்து கிடக்கிறதென்பதை எல்லாரும் உணர்ந்து கொண்டிருப்பார்களா?' என்று கந்தசாமி நினைத்தான்.





6

நரபலி

நடு நிசி...

நட்சத்திரங்களற்ற மேக இருள். கரு மேக இருளைக் குத்திக் கிழிக்கும் மின்னலுடன் வானத்தை உதைத்த இடி முழக்கம் பயங்கரமாகக் குடலைக் கலக்கிற்று. மயிர் நனையாத் துந்துமி, புயலின் வருகைக்கான ஒத்திகை.

தெரு ஓரம் இருமருங்கும் கரடி களாக நிற்கும் மந்துச் செடி களினுள்ளும், அங்கொன்றும்



இங்கொன்றுமாக அலியன் யானைகள் நிற்பது போன்ற ஈச்சம் பற்றைகளினுள்ளுமிருந்து புறப்பட்ட பலதரப்பட்ட பூச்சி புழுக்களின் ஒலிகள் அந்தக் கொடிய இரவின் பயங்கரத்தை இன்னும் பன்மடங்காகக் காண்பித்தன.

வடமராட்சிப் பிரதேசத்துக் கிராமங்களுக்கு வாழ் வளிக்கும் கற்பகதருவான பனை விருட்சங்கள் தனித் துவமாக, தன்னிச்சையாய், தலைவிரிகோலமாக எங்கும் பரந்து சிதறி நின்றன. பாழ்பட்ட இந்தப் பாதி இரவில் அவையெல்லாம் பயங்கரப் பூதங்களாக உருமாறித் திகழ்ந்தன. அவற்றில் சில வானமண்டலத்தில் அவ்வப் போது நிகழும் பருவ மாற்றங்களையெல்லாம் பூமிக்குக் கொண்டுவரும் · ஏக விநியோகஸ்தர்களாக வெகு உயரத்தில் சஞ்சரிக்கும் மேகக் கூட்டங்களுடன் மெல்லக் கதைத்துப் பேசி உறவு முறை பூண்டு நிற்கின்றன.

இருளைப் பிதுக்கும் வடலிக் காட்டிற்குள் ஆணும் பெண்ணுமாக இரு ஆந்தைகள் அலறின. அதைத் தொடர்ந்து சுடலைக்குருவி ஒன்றின் சோகக் கூக்குரல். தூரத்தில் எங்கோ அவலத் தொனியில் ஊளையிடு கின்றது நாய் ஒன்று.

வடகிழக்கிலிருந்து வீசிய கொடிய குளிர்காற்று உலகத்து ஜீவராசிகளிடத்தெல்லாம் ஏகோபித்த வெறுப்பைச் சம்பாதித்திருக்கும். அதன் உறக்கமும் விழிப்பும் உடுப்பிட்டிக் கிராமத்திலா தங்கியிருக்கிறது? நிச்சயமாக உடுப்பிட்டிக் கிராமம் எப்போதோ உறங்கி விட்டது.

ஆனால், ஒருவன் மட்டும் அந்த இரண்டுங்கெட்ட அகால வேளையில் நிராதவராக நீண்டு கிடந்த அந்த



மக்கித் தெருவில் நிலைகொள்ளாது பரிதவிக்கும் தன் உடலை வெகு சிரமத்தினூடே அழுத்திப்பிடித்த வண்ணம் உடுப்பிட்டிக் கிராமத்தை நோக்கி அதி வேகமாக நடந்து கொண்டு இருந்தான்.

அவன் அரையிலுள்ள வேட்டியை ஏற்கெனவே மடித்து, முழங்கால் சிரட்டைக்குமேல் சுண்டி கட்டி இருந்தான். உடலில் தரித்திருந்த அரைக்கைச் சட்டை எப்போதோ தெப்பமாக நனைந்து உடலோடு உடலாக ஒட்டி உரித்தெடுக்கும் நிலையிலிருந்தது. கழுத்தைச் சுற்றிய சிவப்பு, பச்சைக் குறிகளமைந்த 'மவ்ளர்' சற்று வெத வெதப்பாக முன்பு இருந்த போதிலும், இப்போது வியர்வை உட்புகுந்து கொண்டதால் மயிர் கொட்டிப்புழு ஊர்ந்த இடமாகச் சுணைத்துச் சொறியத் தூண்டியது. வெளிறிப் போயிருந்த முகத்தில் வியர்வைத் துளிகள் அதீதமாகத் தோன்றி, அவன் கண்களிலும் வாயிலும் அலாதியாகப் புகுந்து கரித்தன. எரிந்த கண்களை அழுத்தித் துடைக்கும்போது ஏதோ ஒன்று சுழன்று வந்து 'கிண்...' என்று ரீங்காரத்துடன் செவிகளை அடைத்து விட்டது போன்ற உணர்வு தோன்றுகிறது. அத்தோடு காய்ந்த உதடுகளை நுனி நாக்கால் உணாவி நனைக்க முயன்றான். பயத்தால் நடுங்கிய அவன் தேகம் அடிக்கடி சிலிர்த்துப் புல்லரித்தது. கால்களின் குறிக்கோள் தறி கெட்டுத் தடம் புரண்ட போதிலும் கனவேகமாக எட்டி அடிவைத்துக் கொண்டு நடந்தான்.

கால்களை எட்டிப் போட்டு நடந்த போதிலும் வழி என்னவோ மாளாது நீண்டு கொண்டே சென்றது. அந்தத் தொலையாத தூரத்தை நினைத்த பரமநாதனுக்கு



அழுகை அழுகையாக வருகின்றது. என்ன செய்வது? 'ஐயோ' என்று அவன் அவலக்குரல் இட்டால் அது ஊர்மனைக்கு எட்ட ஆறு மாதங்கள் செல்லும்.

வரண்டு உமிழ்நீர் சுரப்பி ஒத்துழைக்க மறுத்து, அண்ணத்தில் ஒட்டிக் கொண்ட நடுநாக்கை ஈரளிக்கச் செய்து புரட்டிக் கொடுப்பதற்கே பெரும்பாடாயிற்று. உலர்ந்த தொண்டை வற்றிக் காய்ந்து விட்டதால் ஊமைத் தன்மை அடைந்து பரிதவித்தது.

'கடவுளே முருகா.'

பரமநாதனின் நெஞ்சில் சுழியோடி முதன் முதலாகத் தேடிப்பிடித்த அச் சொற்களை, வாய் திரும்பத் திரும்ப இரண்டு மூன்று தடவைகள் புடம்போட்டு உச்சரித்துக் கொண்டது.

மருதடியைச் சமீபிக்கும் பரமநாதனின் நெஞ்சுள் பயம் எலியாக அரித்தது. அதுதான் உயிரோ? அது அவன் உடலை விட்டுப் புறப்படத் துடிக்கின்றது போலும்!

பல காலம் மறந்திருந்த தெய்வ நம்பிக்கை பரம நாதனின் நெஞ்சில் மறுபடியும் இப்போது விதையூன்றி விகசித்தது. அது அவனைப் பொறுத்தவரையில் நித்தியமா, அநித்தியமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மருதடி வந்து விட்டது. அவ்விடத்தைக் கடப்பதா, அல்லது வந்த வழியே திரும்பி ஓடிவிடுவதா... என்பதை நிர்ணயிக்கு முன்பே.

அவன் முன்னே நின்ற அந்த உருவம்...?

'முனி!'

இத்தனை நேரமாக எதற்காகப் பயந்தேனோ அது



அவன் எதிரே பிரத்தியட்சமாகக் காட்சியளித்தது. பரம நாதனின் மண்டை சுக்குநூறாக வெடித்துச் சிதறியது போன்ற நிலை. நினைப்பதற்கு மறந்துவிட்ட நெஞ்சு உயிரை எங்கோ ஒளித்து விட்டது போலும்! செயலற்று, ஆனால் வேருன்றிவிட்ட கால்களை, அவ்விடத்திலிருந்து பெயர்க்கவே முடியவில்லை. பிதுங்கி வெளியே புறப் பட்டிருந்த விழிகளை இழுத்தணைத்து மூடுவதற்கு மறந்தன இமைகள்.

கத்தி வீச்சு மின்னல், முனியைச் சுட்டிக் காட்டிற்று. ஜடாமுடிகள் நிலத்தில் சரிந்து புரள கறுத்துத் தடித்த பெரிய ஆகிருதியாக முனி நின்றது.

'ஐயோ!'

நினைக்கும் சொற்கள் நெஞ்சில் கருவுற்றவுடனேயே நிறைவு பெற்றுப் பிரசவமாகாது மரித்துக் கொண்டிருந்தன. 'ஆ' வென்று திறந்து கிடந்த அவன் வாயில் சீறி வந்த காற்று 'கோ' என்று குழறிக்கொண்டு புகுந்து வெளிப் பட்டது.

"அப்பனே முருகா, நீ மயிலேறி வர வேண்டும்!" – வெகு நேரத்தின் பின்பு பரமநாதன் குழறிக்கொண்டே சிரமேல் கரம் குவித்துக் கும்பிட்டான்.

மறந்து போயிருந்த திருப்புகழில் இரண்டொரு வரிகளைத் திக்கித் திணறிக் கொண்டே பாடினான். இதிலிருந்து காப்பாற்றினால் ஆவணிக்கு அறுநூற்று நாற்பத்தெட்டு வேல்கள் குத்தி அரிகண்டக் காவடி எடுப்பதாக நேர்த்தி வைத்துக் கொண்டான்.

என்ன ஆச்சரியம்! தெய்வ அனுக்கிரகம் பலித்ததைப் போல முனி விலகி வழிவிட்டது.



அதற்கு மேலும் பரமநாதன் அங்கு நிற்பானா? பிடரியைத் தொடும் அவன் குதிக்கால்கள்தான் அதற்குச் சாட்சி சொல்ல முடியும்.

ஓட்டமா அது? அசுர வேகம்! வீட்டை நோக்கிப் பரமநாதன் காற்றாய்ப் பறந்தான்.

முனி மாத்திரம் விட்டதா அவனை? அதுவும் விடாமல் அவனைத் துரத்திற்று.

'கலீர் கலீர்' என்ற சலங்கை நாதத்துடன் சுழன்று ஓடிச் சென்றது மருதடி முனி. அந்தச் சலங்கை நாதம் பாய்ந்து ஓடும் பரமநாதனின் மிக அருகிலேயே கேட்டது.

அதிவேகமாக ஓடிய பரமநாதன் சவாரிமாடு மூசுவது போல இரைந்தான்.

"குய்! குய் ! குய்!"முச்சந்தித் திருப்பத்தில் மூன்று முறை 'ஆதாளி' போட்டு கூக்குரல் வைத்தது முனி.

பாவம், பரமநாதன். பகலென்றால் இப்படி ஓட முற்பட்டிருப்பானா? என்ன செய்வது? எக்கச்சக்கமான இரவு நடுச்சாம வேளையாய்ப் போய்விட்டது.

இல்லையென்றால்...?

என்ன செய்வது? இந்த அகால வேளையில் கூட அவனுடன் இரண்டொருவர் கூடிவந்திருந்தால் மருதடி முனியின் சூலத்தைப் பிடுங்கி மக்கிக் கிடங்கிற் குள்ளல்லவா 'முசுப் பாத்தி' யாகப் போட்டு விட்டுப் போயிருப்பான்!

பகலென்றால் அதன்மேல் சிறுநீரே கழிந்திருப்பானே! அப்படி எத்தனையோ இடங்களில் செய்திருக்கிறான். 'நாய் சிறுநீர் தெளிக்கும் சூலங்களுக்கும் கற்களுக்கும் பாலாபி



ஷேகம் ஒரு கேடா? ' என்றெல்லாம் 'பகிடி'கள் விடுபவனா யிற்றே.

நாலைந்து நாஸ்திகப் புத்தகங்களை அரை குறை யாகப் படித்ததன் விளைவுதான் இதெல்லாம். இளம் வயதில் இயற்கையாக ஏற்படும் ஏதோ ஒருவகைப் புரட்சி எண்ணங்களுக்கு அடிமையாகி இப்படி இரண்டு மூன்று புத்தகங்களைப் படித்து மூளையைச் சுருக்கிக் கொண்ட தால் எற்பட்ட கிறுக்குப் புத்தி இது.

பகலென்றால் பரமநாதன் கதைத்து வெழுத்து வாங்கி விடுவான். பகலெல்லாம் பேய் பிசாசில் நம்பிக்கை இல்லைத் தான். ஆனால், ஏனோ இரவு வந்ததும் மெல்ல மெல்ல விஸ்வரூபமெடுத்து ஒரே பயப் பிராந்தி ஆகி விடுகிறதே!

மருதடி முனிக்கு விளக்கு வைக்கும் பரமநாதனின் மச்சான் முருகுப்பிள்ளைக்கும் பரமநாதனுக்கும் பார்த்த நேரமெல்லாம் வீட்டில் வாதப் பிரதிவாதங்கள் பேய் பிசாசைப் பற்றி மிக மும்முரமாக நடைபெறுவது வழக்கம். பாவம்! முருகுப் பிள்ளையர் பரமநாதனுடன் பகலில் பேசி வெல்ல முடியாமல் தோற்றுப் போய்த்தான் விடுவார். ஆனால். இரவு வந்தால் இரண்டொரு 'பேய்க்கதை'களைச் சொல்லிப் போர்வைச் சீலைக்குள் முகம்கால்கள் தெரியாமல் மூடிப் போர்த்துக் கொண்டு சுருண்டு அவனைப் படுக்கச் செய்து விடுவார்.

நேற்று மத்தியானங்கூட மச்சான்காரனுடன் இதே சர்ச்சை செய்து கொண்டிருக்கும் போதுதானே பரம நாதனின் சிநேகிதர்களில் ஒருவன் வந்து சொன்னான். "நாளைக்கு அச்சு வேலிப் பிள்ளையார் கோயில்லை அசல்



சூத்தாம், நீ வரயில்லையே பரமு? நாங்களப்பிடி வேலை யாலை வந்து சூத்தடியிலை நிப்பம். நீயும் வந்தியெண்டால் எல்லாருமாய் பாத்துட்டுச் சேந்து வரலாம்" என்று.

அடுத்தநாள் அவர்கள் சொல்லை நம்பிவந்த பரம நாதனுக்கு சூத்துக் கொட்டகையடியில் பெருத்த ஏமாற்றம்! அவன் நண்பர்களில் ஒருவன்கூட வரவில்லை. சூத்தும் அவ்வளவாகச் சோபிக்கவில்லை. மழையும் வருவதற்குரிய அறிகுறிகள் தென்படவே வருவது வரட்டும் என்று புறப்பட்டு விட்டான். ஆனால் உள்ளுக்குள் பயம்தான்.

இருளுக்கும் தனிமைக்குமூடே முனியும் தோன்றி அவனைத் துரத்தி வருவதாக இருந்தால், பாவம்! பரம நாதன் என்ன செய்வான்?

வருஷந் தவறாமல் ஆடு, கோழிகளை வெட்டிப் பலியாகக் கொடுத்தும் அடங்காத மருதடி முனி ஆண்டுக் கொருமுறை ஓர் ஆளையாவது அடித்துச் சரிக்கட்டி இரத்தத்தைக் குடித்து வருவதாக அபார நம்பிக்கை அப்பக்கத்துச் சனங்களுக்குண்டு. அதன் நிமித்தம் வீடுதோறும் ஆடு கோழிகளை வளர்த்து வருகிறார்கள். எதை வளர்த்தென்ன? யாராவது ஓர் ஆளையேனும் நரபலி யாயும் முனியப்பர் எடுத்தே தீர்ப்பார் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை அவர்களுக்குண்டு.

நாய்கள் ஏகோபித்துக் குரைத்துத் துரத்தின. ஊர் விழித்துக்கொண்டு விட்டது. அது அவர்களுக்குப் புரிந்து விட்டது. கர்ண கடூரமாகப் குரைக்கும் நாய்களின் ஊளை யின் மத்தியில் 'கல கல' என்று ஒலித்த சலங்கையின் நாதந்தான் அதற்குக் காரணம்.



'முனியப்பர் இன்று ஆற்றையோ முடறை முறித்துச் சரிக் கட்டப் போறார். இந்த வருசத்துக்கு இன்னும் ஆரையும் பலி எடுக்கயில்லை. இண்டைக்கு அது நடந்து விடும்' என்றெல் லாம் தீர்மானித்து விட்டார்கள்.

பரமநாதனின் வீடு திமிலோகப் பட்டது. பேர்த்தியாரும், தாயும் படுத்திருந்த பாயில் இருவருக்குமிடையே 'தொபீ ரென்று' முகங்குப்புற விழுந்தான், பரமநாதன். என்னவோ ஏதோவென்று துடித்துப் பதைத்தெழுந்த அவர்களுக்கும் விஷயம் புரிந்துவிட்டது போலும்!

வாயை அலசிக் கொப்பளித்துக் கொண்ட பேர்த்தியார் இறப்புக்குள் கைவிட்டுக் கடுதாசிச் சரையை எடுத்து விரித்து 'அப்பனே முருகா என்ரை பிள்ளைக்கு ஒண்டும் வராமல் காப்பாத்து' என்று நினைத்துக் கதிர்காமத்து விபூதியை விரல்களில் எடுத்து அவன் நெற்றியில் பூசி மெழுகினாள்.

"காய் மணம், பூ மணம்; எச்சில் பேய்கள் எங்கையெண்டு காத்து நிக்கும்! குறுக்காலை போவான் ஏம சாமத்திலை போகாதை வராதையெண்டால் கேக்கிறானே!" என்று வாய் விட்டுத் திட்டிக் கொண்ட கிழவி முனியப்பருக்கு வாறமுறை கோழிச் சேவலொன்று நேர்ந்து விடுவதாக வேண்டிக் கொண்டாள்.

முனியின் அகோரம் அடங்கவில்லை. ஆளை அடித்துப் பலி எடுத்தாலொழிய அவ்விடத்தை விட்டு அகலுவது இல்லை என்ற வீறாப்புடன் பரமநாதன் வீட்டு வேலியைப் பிய்த்து விடுவது போல் வேலியில் உரசி ஆதாளிக் கூக் குரல் போட்டது.

முனியப்பரின் மூர்க்கத்தனமான உரசுதலால் லொறி



செல்வதற்காகக் கட்டிவைக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய தட்டி, தன் பாட்டில் சரிந்து 'படா' ரென்று விழுந்தது. தட்டி விழுந்த சப்தத்தையடுத்து பரமநாதனின் மச்சான் முருகுப் பிள்ளையின் முனகல் கேட்டது.

பாலூற்றியவனையே பதம் பார்த்து விட்டார் முனியப்பர்? யாரும் வெளியே வந்து 'என்ன' என்று பார்க்கத் துணிய வில்லை. அவ்வளவு பயம்!

லொறித் தட்டிக்குள் அகப்பட்டு நசுங்கிய முனியப்பர் மூச்சுத் திணறிக் கொண்டே கத்தினார்:

"டே பரமு! தட்டியைத் தூக்கிவிடடா... தட்டியைத் தூக்கி விடடா..."

முனியப்பரின் ஆதாளி யொன்றும் தொடர்ந்து கேட்க வில்லை. கிழவி வைத்துக் கொண்ட நேர்த்தியால் அவர் விலகிச் சென்று விட்டார் போலும்!

குரல் பழக்கப்பட்டதுபோல் படவே விளக்கை எடுத்துக் கொண்டு வீட்டிலுள்ள அத்தனை பேருமாக ஆனால் பரம நாதனைத் தவிர துணிவை வரவழைத்துக் கொண்டவர் களாக எட்டி அடிவைத்துச் சென்று தட்டியை மிதத்திப் பார்த்தார்கள்.

ஆ! அங்கே நசிந்து கொண்டு கிடந்த முனியப்பர்...

இந்த ஆண்டில் முனி முருகுப்பிள்ளையைத்தான் நரபலி வாங்கிய தென்ற உண்மை விடிந்த பொழுதுதான் வெளிச்ச மாயிற்று.



7



அம்புவைத் தின்னிகள்

சிற்றம்பலத்தாரைப் பற்றி, 'கலை பேச்சு'வரும் போதெல் லாம் 'எச்சில் கையால் கூடக் காகம்கலைக்காத கஞ்சன்' என்று ஊரவர்கள் பேசுவது வழக்கம்.

எச்சில் கையால் காகம் துரத்தாத மனிதன் என்றால் எப்படிப்பட்ட குணவிசேடமான மனிதன் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதானே? ஆனால் இதை இப்படியே சிற்றம்பலத் தாரின் காதில் படும்படியாக ஆரும் கதைத்து,





அதை அவர் சந்தேகத் திற்கிடமின்றி கேட்க நேர்ந்தாலும்கூட, அதற்காக சினப்போ சீற்றமோ இன்றி அதற்கு அவர் அளிக்கும் பதிலும் விளக்கமும் மிகச் சுவாரஸ்யமாகவும் சற்று சிந்திக்க வேண்டியதுமாகவே இருக்கும்.

அதாகப்பட்டது, எச்சில்கையால் காகத்தையோ வேறெதையோ துரத்துவதால் ஒன்று சோற்றுப் பருக்கைகள் நிலத்தில் சிந்திப் போகின்றன. அது அன்னத்துக்கு நாம் அளிக்கும் மதிப்பாகாது. இரண்டாவது, ஒன்றையோ ஒருவரையோ எச்சில் கையால் துரத்துவதென்பது நாம் அவர்களுக்கு அளிக்கும் பெருத்த அவமரியாதையாகும். அடுத்தது இந்த அன்னப் பருக்கைக்காகத்தானே நாம் இவ்வளவு பாடும் பறப்பும் படுகிறோம்? அதை வந்தவர் போனவர் நின்டவர் கண்டவர்க்கெல்லாம் 'கிள்ளி'க் கொடுத்து தருமம் செய்ய அப்படி என்ன மிதமிஞ்சியா கிடக்கின்றது? என்பதுதான் அவர் தரும் விளக்கங்களாகும்.

சிற்றம்பலத்தாரைப் பற்றி இன்னொன்றும் சொல்வார்கள். இரவோ பகலோ எவ்வேளை என்றாலும் சாப்பிடும் நேரங்களில் படலையைப் பூட்டிக்கொண்ட பின்பே சாப்பிட உட்காரும் சுபாவமுடைய 'மனிதன்' என்பதுதான் அந்த இன்னொன்றாகும்.

இதற்கும் சிற்றம்பலத்தார் சளைக்காமல் பதில் சொல்வார். "சாப்பிடும்போது திடீரென்று ஆரும் வந்து விட்டால் நாய் அவெக்கெனப் பாய்ந்து கடித்து துளைத்து விடுமல்லே? இதனாலேதான் அப்படி செய்வது" என்றும் சொல்வார்.



எது எப்படி இருப்பினும், ஆர் எதை வேண்டுமானாலும் எலும்பில்லாத நாக்கால் பேசிப் பறைந்தாலும், அதை யெல்லாம் ஒரேயடியாகப் பொய்ப்பிப்பதைப் போலிருந்தது சிற்றம்பலத்தாரின் இப்போதைய செய்கை.

எச்சில் கையால்கூட காகம் துரத்தாத கறுமி என்று பெயரெடுத்த அதே சிற்றம்பலத்தார்தான், இன்று காகங்களுக்கு உணவளித்து அவை உண்டபின்புதான் தான் உண்ண வேண்டுமென்ற விரதம் பூண்டு - அதற்காக வெகு ஆசாரசீலராய் உடலெங்கும் மந்திரித்து அள்ளிப் பூசிய திருநீற்றுக் குறிகளுடன் வரிக்குதிரை மேனியராய் முன் வந்திருக்கிறார் என்றால் எப்படிச் சொல்லமுடியும் எச்சில் கையால் காகம் துரத்தாத கஞ்சன் என்று?

குருத்துத்தன்மை மாறாத தலைவாழையிலைத் துண் டொன்றில் படைத்த உணவுகள் ஒவ்வொன்றையும் சேர்த்துக் குழைத்தெடுத்து வலக்கையில் ஏந்திய வண்ணம், மறுகையில் செம்பும் தண்ணீருமாகத் தனது பெருத்த உடலை இழுத்துப்பறித்துக் கொண்டு வெளியே முற்றத்திற்கு வந்தார் சிற்றம்பலத்தார்.

மனைவி பாறுபதிப்பிள்ளையும் அவர் அடியொற்றி பின்னே மெல்ல நடந்துவந்தாள். அவளும் அப்பனைத் தின்னிதான்! அவளுடைய தகப்பனுக்காவும், அதாவது சிற்றம்பலத்தாரின் மாமனாருக்காகவும், சிற்றம்பலத்தாரே ஒரே படையலாகப் படைத்து எடுத்துக்கொண்டே காகங் களுக்கு வைக்கப் புறப்பட்டிருந்தார்.

"கா... கா... கா..."

சிற்றம்பலத்தார் எப்போதிருந்து காகமாக மாறினார்? பகிர்ந்துண்ணும் குணம்படைத்த காகச்சாதிக்கு



சிற்றம்பலத்தார் குரல் கொடுப்பது ஒரு தனி அழகுதான்.

"கா... கா... கா..."

ஒரு காகம் மற்றொரு காகத்தை அழைக்கும் அதே குரலில் அதே முறையில் கத்தினார். கரைந்தார்; கத்திக் கத்திக் கரைந்தார்.

அவருடைய இந்த இனமாற்று வித்தைக் கத்தலால் உண்மைக் காகங்கள் என்னவோ வரத்தான் செய்தன. ஆனால் வந்த காகங்கள் ஓர் இடமொன்று குந்தி இருக்காது அங்கு மிங்குமாக பறந்து பறந்து அவருக்கு 'பகிடி' விட்டுக் கொண்டு திரிந்தன.

"இந்தச் சனிக் காகங்களுக்கு வந்த கெப்பரைப் பார். ஊத்தை தின்னிற சவங்களுக்கு இப்படி தலைவாழை இலையில் கொண்டு வந்துவச்சால் எழுப்பம் வராதே, பின்னை?" சிற்றம்பலத்தார் பரிகாசம் கலந்த எரிச்சலுடன் காகங்களைத் திட்டினார்.

மனைவி பாறுபதிப்பிள்ளையின் சொற்படி சோற்றி லையை வைத்துவிட்டு தண்ணீர் தெளித்தவுடன் எட்டத்தில் வந்தார் சிற்றம்பலத்தார்.

"கா... கா... கா..." என்று பாறுபதிப்பிள்ளை காகமாக மாறிக் கத்தினாள். காகங்கள் வந்தன. சோற்றிலைக்கு அண்மையிலேயே வந்துவிட்டன. எடச்சண்டாளனே! எங்கிருந்துதான் அந்த நேரம்பார்த்து சிற்றம்பலத் தாருக்கு அந்த இடியோசைத் தும்மல் வந்ததோ? அவரு டைய அந்த வெடித்தும்மலால் வந்த காகங்கள் சிதறிப் பறந்து சென்று அடுத்த வளவிலுள்ள முருங்கை மரத்தில் இருந்து கத்திக் கத்தி கூப்பாடு போட்டன.

வயிற்றுப்பசியையும் மறந்து வாய்விட்டே சிரித்து



விட்டாள் பாறுபதிப்பிள்ளை. ஆனால் அடுத்த வினாடியே கணவனின் முகத்தை பார்த்த மாத்திரத்தில் மேலும் வெடித்து வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

சிற்றம்பலத்தார் தும்மி, அதன் அழுத்தத்தால் பூகம்பம் ஏற்பட்ட மலையாக அவர் உடல் கிடு நடுங்கி, மூக்கைச் சீறி அவர் நிமிர்ந்த போது பசி கண்ணில் மின்னல் பாய்ச்சியது. காதினுள் 'கிண்...' என்று விண் பூட்டி விட்டது மாதிரி இரைந்தது.

காலையிலிருந்து பச்சைத்தண்ணீர்கூட செல்லாத வயிறு மதியத்துக்கு மேலும் பொறெண்டால் பொறுக்குமா? நேற்றிரவு 'திண்ட' இரண்டு குழல் அரிசிப்பிட்டும் – அவற்றைச் சில்லுச் சில்லாக்கினால் பண்ணிரண்டு பிட்டு கட்டிகள் – ஐந்து இதரை வாழைப்பழங்களும் இன்னுமா வயிற்றில் இருக்கும்? உப்புத் தண்ணீர் குளிப்பும், இந்த உப்பள ஊற்றின் சுவாசிப்பும் சேர்ந்து பசியை இந்த அந்தளவென்றில்லாமல் குடலை 'கார் கார்' என்று காந்தி எடுத்தது.

ஆடியமாவாசை விரதம் காகத்துக்குச் சோறு வைத்து அவைகள் உண்டபின்தான் இலையில் குந்திச் சாப்பிட வேணு மென்ற விதிமுறையாம். வந்த காகங்களையும் சண்டாளன் மாதிரி வந்த சனித்தும்மல் சன்னச் சிதறலாக்கி விட்டது.

என்ன செய்யலாம்?

கரடியாக குடலைப் பிறாண்டிய பசி அகோரத்திலும் சிற்றம்பலத்தார் என்னென்னவோ உள்ளார நினைத்தார். ஈற்றில் ஒன்று மட்டும் அவர் நினைவில் தட்டுப்படவே அதுதான் சங்கதியாக இருக்கும் என்ற தீர்மானத்திற்கே



வந்தார்.

அதாகப்பட்டது இன்றைய விரதத்திற்கு இத்தனை அபசகுனங்களும் தடைகளும் நிகழ்வதற்கு எங்கோ எதிலையோ ஆசூசங்கம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதே அது.

மனைவி பாறுபதிப்பிள்ளைக்கு தீட்டு வருவது நின்றும் ரொம்ப காலமாயிற்று. அப்படி உள்ள காலத்திலேயே இப்படியான விரத நாட்களில் ஒதுங்கி எங்கோ ஒரு மூலையில் இருந்து விடுவாளே! அப்படியென்றால்.... ஆரும் பெடி பெட்டைகள் சாப்பாட்டை எச்சில் படுத்திப் போட்டதுகளோ?

எப்படி நினைத்தாலும் ஒரே குழப்பமாகவே இருந்தது சிற்றம்பலத்தாருக்கு. தான் ஏதாவது இன்றைய விரதத்திற்கு களங்கம் விளைவித்து விட்டதாகவும் அவருக்குத் தட்டுப்பட வில்லை. அப்படி இருந்தும் இன்று விரதம் மேற்கொள்ள ஆரம்பித்த நேரத்திலிருந்து தன்னுடைய நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் பற்றி சிந்தித்துப் பார்த்தார் சிற்றம்பலத்தார்.

காலையில் ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாத வெள்ளாப்புடன் எழுந்து கீரிமலைக்குச் சென்றதும் அங்கு கடற்கரையில் கடை பரப்பியிருந்த பண்டார ஐயரிடத்தில் மோதிர விரலில் மோதிரத்துடன் தெர்ப்பை அணிவித்து பிறிதொரு தெர்ப்பையும் எள்ளுமாக கடலில் இறங்கி வாயுறு தண்ணீர்வரை சென்று நின்று சூரியனை நமஸ்கரித்தபின் எள்ளையும் தெர்ப்பைத் தும்பையும் கடலில் போட்டுவிட்டு மும்முறை மூழ்கி எழுந்தபோது உப்புத் தண்ணீர் பட்டகண்கள் பற்றி எரிந்தன. எப்போதோ



செத்துவிட்ட தகப்பனுக்காக இப்போதும் அழுவதான பாவனையில் கண்களை கசக்கியபடி மெல்ல மெல்லகரை வந்து சேர்ந்ததும், சிறிது நேரம்வரை ஐயர் சொன்ன படியெல்லாம் பயபக்தியுடன் தோப்புக்கரணங்களும் தலையில் குட்டுகளும் போட்டு முடித்தார்.

தெருவின் இரு பக்கத்திலும் சிறிது தூரம்வரை கூன் குருடுகளும் சொத்தி முடங்களுமான பிச்சைக்காரர்களின் கூக்குரலும் புழுவாக நெளியும் அந்தக் காட்சிகளும் அவருக்கு அருவருப்பையே தந்தது. பரிதாபத்திற்குரிய ஜீவன்களின் அழுகுரல் கூட இவரின் நெஞ்சை நெகிழ்வித்து விடவில்லை.

கொடுப்பவன் இருப்பதால்தான் எடுப்பவன் இருக்கிறான் என்பதே அவருடைய சித்தாந்தம். இந்த இடைச்செருகல் காட்சிகளுக்கும் நினைவுகளுக்கும் இடையே சிற்றம்பலத் தாருக்கு மனைவி பாறுபதிப்பிள்ளை சொன்ன ஒரு விசயம் மின் வெட்டலகா ஞாபகத்துக்கு வந்தது. 'என்னத்தை மறந்தாலும் காத்தோட்டியங்காயை வாங்கிவர மறந்திடா தையுங்கோ. பேந்து இஞ்சினை வாங்கேலாது. சாத்திர முறைக்கு அதுகும் பொரிச்சு படைக்கவேணும். அதோடை கடலை கச்சான்கொட்டையும் வாங்கிவந்திடுங்கோ' என்பதே பாறுபதிப்பிள்ளை வழிக்குவழி சொல்லிவிட்ட விசளம். ஞாபகங்கள் உரியவேளையில் வந்ததில் பெரிய ஆறுதலடைந்ததுடன் எப்போதடா இலையிலபோய் குந்து வோம் என்று வந்த சிற்றம்பலத்தாருக்கு சமையல் அரை குறையாக அடுப்பிலும் நெருப்பிலுமாக்கிடக்கிறதென்ற செய்தியால் மனைவி பாறுபதிப்பிள்ளைஅந்த வீட்டையுமே நெருப்பு வைத்து கொழுத்தி விடத்தக்க ஆத்திரமே



வந்தது. வந்த ஆத்திரத்தை செயற்படுத்தாமல் வார்த்தை களிலே அதைக் காண்பித்தார்.

"ஏன்ரி என்னடி செய்தனீங்கள் இவ்வளவு நேரமும்? " என்று பாய்ந்தார்.

"எல்லாம் செய்யிறமாதிரித்தான் செய்தம். கூட்டி மெழுகி கழுவித் துடைச்சு எண்டெல்லாம் செய்யவேண்டிக் கிடந்தது. நாங்களென்ன மிசுனுகளே?.. இல்லாட்டி அடுப்புத்தான் மிசின் அடுப்போ? நாங்கள் உங்களைக் கண்டு பயப்படுகிற மாதிரி அடுப்பு நெருப்புமல்லோ பயப்பட வேணும்?"

"எடியே மிசின் இந்தாடி உன்ரை காத்தோட்டியங்காயும் மற்றதுகளும்" என்றவாறு அவைகளை விறந்தையில் விட்டெறிந்தார்.

"சரி சரி கைகால்களை கழுவிக் கொண்டு வாங்கோ. அதுக்கிடையிலை காத்தோட்டியங்காயும் பொரிஞ்சிடும்" என்றாள் பாறுபதிப்பிள்ளை.

எல்லாம் சரி ஒரு குறையும் வைக்கவில்லை என்ற மனதிருப்தியுடன் படைத்த இலைகளின் முன்பு நின்று, குத்து விளக்குச் சுடரில் கற்பூரம் கொழுத்திவைத்து கைகளை கூப்பி சிரமேல் வைத்து கண்களை மூடி நின்று தேவாரம் பாடினார். பசி வந்தால் பத்தும் பறந்துவிடும் என்பார்கள். மனம் உருகி பக்தி சொட்டக் கசிந்துருகிப் பாடமுடியவில்லை அவரால். பகாசுரப் பசி அவரை படாத பாடு படுத்தியதால் பாடல் படிப்புகளை வரிசைக் கிரமமாகச் சொல்லாமல் வெகுவாகச் சுருக்கிக் கொண்டார்.

ஆகவே.... விரதம் அனுஷ்டிக்க ஆரம்பித்த



நேரத்திலிருந்து இந்த நிமிஷம் வரை தான் ஏதும் விரதத்திற்கு குந்தகம் உண்டு பண்ணக்கூடிய காரியங்கள் செய்திருப்பதற்கான தடயங்கள் எதுவுமே அவர் நினைவில் தட்டுப்படவில்லை.

காகத்துக்கு வைத்த சோற்றை கோழிகள் தின்னப் போவதைக் கண்டு ஆத்திரத்துடன் கணவனும் மனைவியுமாக அவைகளைத் துரத்திக் கொண்டோடினார்கள்.

"காய்... காய்... கோதாரியிலை போனதுகளுக்கு ஒரு கொள்ளையும் வருகிறது இல்லையே..." திட்டிக் கொண்டே அவைகளைத் துரத்தினாள் பாறுபதிப்பிள்ளை.

சிற்றம்பலத்தார் காகத்துக்கு வைத்த சோற்றிலையை தூக்கி உயர கூரையில் வைக்கப்போன போதுதான் அது கண்ணில் பட்டது.

"போச்சு விரதமெல்லாம் போச்சு .... இந்தச் சனியன் தலைமயிர் இதுக்குள்ளே கிடக்கையுக்கை காகம் எப்படித் தின்ன வரும்?" சிற்றம்பலத்தார் நெருப்பை மிதித்தவர் மாதிரி துள்ளிக் குதித்தார்.

"ஆ! எந்தப் பெரிய நீட்டான தலைமயிர், எடச்சனியனே" என்று அருவருப்புடன் மனைவி பாறுபதிப்பிள்ளையை அவர் பார்த்தார். கலக்கமும், அருவருப்பும் தென்பட்ட அவரது முகம் மெல்ல மெல்ல மாறிக் கறுத்து விகாரமாகி கண்களில் நெருப்பு எரிந்தது.

பாறுபதிப்பிள்ளை ஐந்தும்கெட்டு அறிவும் கெட்ட நிலையில் நடுங்கியபடி அவர் கையிலிருந்த சோற்றிலையை இடிபாடுகளுடன் கூடிய பாண் கிணற்றை எட்டிப் பார்ப்பது போலப் பார்த்தாள்.

"ஐயையோ ஆண்டவனே முருகா உனக்குப் பொறுதி...



இந்த அநியாய அபசகுனச் சோதனை ஏன் அப்பனே! பத்தி யெரிஞ்ச் குருட்டுக் கண்ணிலே படாமல்போவிட்டுதே" என்றபடியே அவள் தன் கண்களைப் பொத்தி அறைந்து கொண்டே கண்ணீர் பெருக்கியவாறு புலம்பலானாள்.

"வேறை எங்கையுமிருந்து வரயில்லை இது. உன்ரை தலைமயிர்தானடி. முதலிலே அதை எடு சனியனே..." சிற்றம்பலத்தார் சீனவெடியாக வெடித்துத் தள்ளினார்.

சில வருஷங்களுக்கு முன்புகூட சிற்றம்பலத்தார் ஆசையுடன் அள்ளிமோந்து என்னென்னவோ எல்லாம் சொல்லிவர்ணித்த அவளுடைய அழகபாரம் இன்று கண் கொள்ளாக் காட்சியாகவே இருக்கின்றது.

"பாறு உன்ரை தலைமயிர் உவ்வளவு கொள்ளை யாகவும் நீட்டாகவும் இருக்கிற நிலைதான் எனக்கு சுகமான நித்திரை வாறத்துக்குக் காரணம் கண்டியோ. ஏன் எண்டு கேட்கிறியா? முதுகுக்குள்ளை பரவிவைத்துக் கொண்டு படுத்திருக்கையுக்கை அடடா என்ன சுகம்? உன் தலைமயிர் தோகையின் பஞ்சணைமெத்தையில் எந்தப் பிச்சுப்பிடுங்கலும் இல்லாமல் காலமெல்லாம் கண் முழிக்காமலே உறங்கிக் கிடக்க வேணும் போலை தோணுது" என்பார்.

அதற்கு பாறு சொல்வாள்: "இது இருக்கிற இடத்திலே இருக்கிற மாதிரி இருந்தாத்தான் இதைக் கார்குழ லென்றும் படுக்கையின் சுகம் தரும் பஞ்சணைமெத்தை என்றும் வாய்க்கு வந்த படியெல்லாம் புகழுவியள். இது தலையை விட்டு உதிர்ந்து நிலத்திலையோ, சாப்பாட்டுக் குள்ளையோ கிடந்து தென்றால்..."

"சனியன், இப்ப ஏன் அந்த, அபசகுனக் கதையெல்லாம்



கதைக்கிறாய்?" என்றவாறு அவளை அணைத்து.....

இமைவெட்டி கண்திறக்கும் கால இடைவெளியின் பின்னத்தில் மின்னலென ஒருகால் நூற்றாண்டின் இரவு களில் தாபம் நிறைந்த காமவேட்கையுடன் கொதிமூச்சு வெளியேறி வார்த்தைகள் தடுமாற கணவனாகிய சிற்றம்பலத்தார் கூறியவைகள் பாறுபதிப்பிள்ளையின் நெஞ்சில் தெப்பங்கட்டி மிதந்து போயின.

அதையெல்லாம் இப்போது விளையாட்டுக்குத்தன்னும் அவருக்கு நினைவுபடுத்த முடியுமா? வேறு வினையே வேண்டாம். அவர் இப்போது நிற்கும் திரிபுரம் எரிக்கும் நிலையில் அவள் மயிரையே எட்டிப்பிடித்து அதற்கு மண்ணெண்ணை ஊற்றி கொழுத்தி விடமாட்டாரா என்ன?

"இப்ப என்னடி செய்யச் சொல்லுகிறாய்...?" பசிக் களை-யில் கடைசியில் சிற்றம்பலத்தாரின் குரல் பலவீனமாகி பரிதாபமாக வெளிவந்தது.

பழைய நினைவுகள் சிலவற்றில் மனம் லயித்து நின்ற பாறுபதிப்பிள்ளை கணவனின் இக்கேள்வியின் குரல் கேட்டுத் திடுக்குற்று அவரைப் பார்த்தாள்.

கணவன் கையில் ஏந்தி வைத்திருந்த சோற்றிலையை வாங்கிக் கொண்டு போய் வீட்டுக் கூரையில் வைத்து தண்ணீர் தெளித்து கும்பிட்டு விட்டு காகங்களைக் கூப்பிட்டாள்.

"முருகா வேணுமெண்டு செய்த காரியமல்ல, எதுவோ தெரியாமல் நடந்து விட்ட பிழையை மன்னிச்சுக் கொள்ளப்பா" என்று மனமுருக வாய்விட்டு முருகனை வேண்டிக்கொண்டாள். பின்னர், கணவனைப் பார்த்து, "காகங்கள் சாப்பிட்டால் நாங்களும் சாப்பிடுவம்" என்றாள்.



பாறுபதிப்பிள்ளையின் மனமுருகிய வேண்டுகோள் வீண் போகவில்லையோ?

எப்போதுமே எச்சில் கையால் கூடக் காகங்களை – தங்களை – துரத்தி அவமானப்படுத்தாத சிற்றம்பலத் தாரை இப்போது அவமானப்படுத்திக் கொண்டு நிறையக் காகங்கள் இலைச் சோற்றை சுற்றியிருந்து சாப்பிட்டன.



8

கலை



'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலே முன் தோன்றிய மூத்த குடியினர்' வதியும் தமிழ்ப் பகுதியில் தான் இது நடந்தது.

வேத நூல்களை விழுங்கி வைத்திருக்கும் வித்தகராம் பொன்னம்பலவாணர் இல்லத் தில் நடந்த இந்தச் சங்கதிக்கு நான்தான் முக்கியமான சாட்சி. வழக்குப் போலிஸ் வழக்கு. என்னுடைய பொல்லாத கால மில்லாமல் வேறு எப்படி இதைச் சொல்ல முடியும்?



நானே விலைக்கு வாங்கிப் போட்டுக் கொண்ட விஷயம். என் வீட்டுச் சோற்றைச் சாப்பிட்டு விட்டுச் சும்மா கிடக்கமாட்டாமல், பிறர் வீட்டுக் காரியங்களில் தலை யிட்டுப் பொல்லாப்பைச் சம்பாதிக்க வேண்டியிருக்கிறது.

ஒருவன் நல்லவன் என்ற பெயரெடுக்க வேண்டுமானால் கட்டுப்பட்டு வாழ்ந்து கட்டைக்குப்போன பின்புதான் சாத்தியம். சில சமயம் அதுகூட சந்தேகம்தான். ஆனால், கெட்டவனென்று கேட்பதற்கு ஒரே ஒரு நிமிஷம் மாத்திரம் போதும்.

இன்று என்னுடைய நிலையும் இதுதான்.

எதுவோ நானுண்டு, என் வேலையுண்டு என்று இருந்திருந்தால் இன்று இந்த நாலுபத்துப் பேருடைய பொல்லாப்பைச்கூடச் சம்பாதித்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்திருக்காது. என்னுடைய கொழுப்புச் செய்த வேலைக்கு இது வேண்டும்.

சாட்சிக் கூண்டிலும் ஏறியாச்சு.

கடவுள் சாட்சியாக நான் சொல்வதெல்லாம் உண்மை. கண்ணால் கண்ட உண்மை. கடுகளவு பொய்கூடக் கலந்திருக்கவில்லை.

கோட்டார் அவர்களே!

என் வீடும் பொன்னம்பலவாணர் வீடும் ஒரே வேலியைக் கொண்ட வளவு. அந்த ஒரு வேலி இடையில் முளைத்து மறைத்துக் கொண்டிருக்கவில்லையானால் பூர்வீகத்தில் சித்தாத்தை, பெரியாத்தை பிள்ளைகளின் வழித் தோன்றல் என்றுகூடச் சொல்லலாம். ஆனால், அப்படி யொன்றும் அவர்கள் எனது சொந்தக்காரர்கள் அல்ல.



இந்த வேலி இடைக்காலத்தில் ஏற்பட்டதே.

இப்போதுகூட என் வீட்டிலிருந்தபடியே பொன்னம்பல வாணருடைய வீட்டு முற்றத்தில் எது விஷயம் நடந்தாலும் திறந்த வெளி அரங்கில் பார்ப்பது போல் பார்த்துக் கொள்ளலாம். நாங்கள் ஏதாவது இரகசியம் பேச வேண்டுமானால் 'பகலென்றால் பார்த்துப் பேசு, இரவென்றால் அதுகூடப் பேசாதே' என்பதற்கொப்ப நாங்கள் இருந்து வருகிறோம். அப்படி அவசிய அவசர இரகசியம் பேச வேண்டியிருந்தால் ஒருவருடைய காதை மற்றவர் கடிப்பது போல்தான் கதைத்து முடிப்போம்.

நாங்களிருவரும் ஆசிரியர்கள். காலையில் ஒருவரில் முகம் கழுவிக்கொண்டு புறப்பட்டால் மாலையில்தான் மறுபடியும் வளவிற்குள் காலடி வைப்போம். அதுவரை எங்கள் வீட்டுக் கதவு பூட்டப்பட்டே கிடக்கும்.

பொன்னம்பலவாணர் குடும்பத்தில் வாணர் அவர்கள் உட்பட மொத்தம் ஏழு அங்கத்தவர்கள். ஐந்து ஆண் பிள்ளைகளும், அரியதோர் பெண் பிள்ளையும் உளர். எல்லோரையும் எங்களுக்கு நன்கு தெரியும்.

பொடியன்கள் எல்லோரும் நல்ல வாலிபர்கள். சிறந்த தொழிலாளிகள். ஒருவன் மட்டும் படித்துப் பட்டம் பெற்றிருக்கிறான். இன்னும் வேலை கிடைக்கவில்லைப் போலிருக்கிறது. அவன் கூட்டத் தோட்டத்திலிறங்கித் தொழில் செய்து கொண்டுதானிருக்கிறான். ஐவருமே அருமைத் தங்கையின் பொருட்டுத் தவமிருக்கிறார்கள். இன்னும் மணம் முடிக்கவில்லை. அந்த மனுஷனுக்கு என்ன குறை? மகாராஜன் மாதிரி இருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். இன்னும் இளமை குன்றாத தேகநிலை.



பெண்ணும் பெரிய பெண்ணாகி ஏழெட்டு வருஷங்களா கின்றன. இன்னும் ஓர் ஏற்பாடும் செய்யவில்லை. ஏனோ தெரியாது. ஆனால் மாப்பிள்ளைப் பஞ்சமென்றும் சொல்வ தற்கில்லை. ஊருக்குள் ஏராளமாக இருக்கிறார்கள்.

அதிலும் அவளைக் கட்டுவதென்றால் ஒற்றைக் காலில் நிற்பார்கள். ஐவருக்கோர் அரிய சகோதரி. அழகென்றால் கொள்ளை. பெண் இங்கிருப்பதால் நீங்களே பார்த்துக் கொள்ளலாம். காணி பூமி, பொருள் பண்டங்கள் சேனை சேனையாகக் குவிக்து கிடக்கின்றன. பெண்ணும் சீனியர் வரை படித்திருக்கின்றாள். இன்றைய கலியாணச் சந்தைக்கு வேண்டிய தகுதி அவளுக்கிருக்கிறது. ஆனாலும் இன்னும் திருமணம் நடக்கவில்லை.

சிங்கப்பூரில் எவனோ ஒரு முறைமாப்பிள்ளைப் பொடியன் இருக்கிறானாம். அதற்காக 'ஐயர் வரும் வரைக்கும் அமாவாசை பொறுத்திருக்குமா'? அருகிலி ருக்கும் பண்டாரத்தையாவது பிடித்துப் பக்குவமாகக் குறித்த நேர காலத்தில் விஷயத்தை முடித்துக் கொள்வது சாலச் சிறந்ததல்லவா? இது ஏன்தான் அவர்களுக்குத் தெரியமாட்டேன் என்கிறதோ?

பொன்னம்பலவாணர் ஊரிலிருக்கும் மாப்பிள்ளைகளை உதறித் தள்ளி விட்டு, எங்கோ, சிங்கப்பூரிலிருக்கும் மாப்பிள்ளைக்காக இப்படிக் காத்திருக்கிறார்.

பையன்கள் ஐவரையும் இதோ உங்கள் கண் எதிரி லேயே பார்க்கிறீர்கள். மாண்டுபோன பாண்டவர் மீண்டும் உயிர் பெற்று வந்திருப்பதுபோல்... திரும்பவும் இவர்களைப் பற்றி ஏன் சொல்ல வருகிறேனென்றால் இவர்களுக்கும் இந்த இடத்தில் ஒரு முக்கியத்துவமுண்டு.



ஒருநாள் இரண்டு ஊதாரி இளவட்டங்கள் வேலியால் எட்டிப் பார்த்து என்னவோ அந்தப் பெண்ணை வீண் வம்பிற்கு இழுத்தார்களாம். விடுகாலிப் பொடியங்களுக்கு விபரம் தெரியாது போலிருக்கின்றது. அன்று பின்னேரம் அவர்களிருவரும் ஒட்டகப்புலத்திற்குப் புக்கைகட்டப் புறப்பட்டு விட்டார்களென்றால் பார்த்துக் கொள்ளுங் களேன். இவர்களின் தங்கை யென்றால் ஊரில் ஆரென்று கேட்கக்கூடியவர்களும் இருக்கிறார்களா?

ஆனால், அப்படிப்பட்ட 'பஞ்சபாண்டவர்' வீட்டிலேதான் இன்று இப்படிப்பட்ட விபரீதமான இழிவுச் செயல் நிகழ்ந் திருக்கிறது.

எப்படித்தான் அது நடந்திருக்கக் கூடும்? இன்னும் என் மூளையை உடைத்துக் கொள்ளுகிறேன். ஆனாலும் புரியவேயில்லை. காவலும் கட்டுப்பாடுமோ சொல்லி முடியாது. ஆள் மாறி .ஆள்மாறி ஆரும் ஒரு ஆள் வீட்டிலிருந்து கொண்டேயிருப்பார்கள். இனி, சுயமான கட்டுப்பாடுடைய கௌரவமான் பெண். இப்படி மூன்றோ நாலு மாதங்கள் வீட்டுக்குத் தூரம் வரவில்லையென்றால்... யார் நம்புவார்கள்?

அன்று அந்த மயக்க நிலையிலிருந்த அவளைப் பரிசோ தனை செய்த டாக்டர் விஷயத்தைச் சொன்னதும் என்னைத் தூக்கிவாரிப் போட்டதுமல்லாமல் உண்மையில் திகிலடைந்தும் விட்டேன்.

"ஏனப்படிப் பயப்பட்டீர்?" இந்தக் கட்டத்தில் வழக்கறிஞர் குறுக்கிட்டுக் கிண்டலாகக் கேட்டார்.

நானும் ஆண்பிள்ளைதான். அதிலும் கல்யாணமாகிய வாலிபன். ஆமாம்! வருகிற ஆடியுடன் எனக்கு முப்பது



வயது முடியப் போகிறது. அருகிலுள்ள ஒரே வளவு வீட்டுக்காரன். அதிலும் அந்தப் பெண் நாளிலும் பொழுதிலும் நாங்களிருக்கும் சமயங்களில் வந்து என் மனைவியுடன் சிரித்துப் பேசி விட்டுச் செல்பவள். இப்படியெல்லாம் வந்து திரிந்த பெண் விபரீதமாக ஏதாவது பதில் சொல்லிவிட்டால்..? எப்படிப் பயப்படாமலிருக்க முடியும்? இதை நான் சொல்லித் தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டு மென்பதில்லை".

மறுபடியும் வழக்கறிஞர் குறுக்கிட்டார். கோபப்படுபவர் போல் கண்களில் கனல் தெறிக்க என்னை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டார். பிறகு... "ஆசிரியர் வெறும் பள்ளிக்கூட ஆசிரியர் மட்டுமல்ல, அவரொரு கதாசிரியருமாவார். தயவு செய்து ஆசிரியரவர்கள் கதை சொல்லாமல் கண்டதை மாத்திரம் சொன்னால் போதும்" என்றார் ஒருவிதக் கிண்டலுடன்.

நான் தொடர்ந்து கூறினேன்:

அந்தப் பெண்மீது – அதுதான் பொன்மலரினிடத்தில் – என் மனைவிக்கு எப்போதுமே விருப்பம். ஆனால், அதை எனக்குப் பயத்தினால் அவ்வளவாக வெளிக்காட்டிக் கொள்வதில்லை என் மனைவி. ஒரு நாளைக்கு ஒரு முறையேனும் அவளும் சரி, இவளும் சரி ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசாவிட்டால் பத்தியப்பட்டுக் கொள்ள மாட்டார்களாம். அதை நானும் கண்டிப்பதில்லை. பெண்கள்தானே, பேசாமல் விட்டுவிட்டேன்.

என் பெற்றோர்க்குப் பின்பு இரு குடும்பங்களும் ஓரளவு கசப்பு நீங்கி வழிதெருவில் ஒருவரையொருவர் கண்டால் பேசிப்பறைந்து கொள்வோம். ஆனால் வீடுகளுக்கு



மாத்திரம் பொன்மலரைத் தவிர மற்றவர்கள் வருவது மில்லை; நாங்கள் போவதுமில்லை. இப்போதிருக்கும் பகையெல்லாம் எங்களுக்கு அவர்கள் வீட்டுடனும், அவர்களுக்கு எங்கள் வீட்டுடனும்தான்.

திடீரென்று ஒரு கிழமையாகப் பொன்மலர் எங்கள் வீட்டுப் பக்கமே வரவில்லை. அது ஏனோ தெரியாது. அவள் வீட்டில் கூட அவள் நடமாட்டமோ சந்தடியோ ஒன்றுமே தெரிய வில்லை. வெளி முற்றத்திற்கே ஆளைக் காணக் கிடைக்க வில்லை. என் மனைவிக்குப் பெரும்பாடாகி விட்டது. பின்னேரங்களிலும், சனி, ஞாயிறுகளிலும் பொழுதே போக வில்லையாம்.

'அல்லது ஏதாவது சுகமில்லையோ, பாவம்! பெண் துணையில்லாத சின்னன். என்ன பாடுபடுகின்றதோ' என்றெல்லாம் அங்கலாய்த்துக் கொண்டே 'எதுக்கும் ஒருக்கால் போய்ப் பார்த்தால் என்னெண்டு பார்க்கிறேன்' என்றாள்.

'சரி. போய் வா' என்றேன். போன வேகத்துடன் என் மனைவி திரும்பி வந்தாள்.

'என்ன சங்கதி?' என்று கேட்டேன்.

அதற்கு அவள், 'அவளங்கில்லை' என்று வெட்டொன்று துண்டு இரண்டாகப் பதில் சொல்லி விட்டார்கள் என்றாள்.

'பொன்மலர் அங்கில்லையா? ஆச்சரியமாயிருக்குதே! சரி. இனிமேல் அந்தப் பக்கமே போகாதே!' என்றேன்.

அன்றிரவு என் மனைவி நல்ல உறக்கத்திலாழ்ந்து கொண்டிருந்தாள். அநேகமாக அயலட்டத்து ஜனங்கள் 'அடக்கத்திற்கு'ப் போய் விட்டார்கள். நான் மாத்திரம் ஏதோ ஒரு புத்தகத்தை வைத்துப் படித்துக்



கொண்டிருந்தேன். அதில் தீவிர கவனம் செலுத்திக் கொண்டிருந்ததால் மணியைக்கூட அப்போது கவனிக்க வில்லை. ஆனால், பன்னிரண்டுக்கு மேலிருக்கும் என்பது மாத்திரம் நினைவிருக்கிறது."

இதற்கிடையில் வழக்கறிஞர் குறுக்கிட்டு, "அப்போது நீர் வாசிக்கவில்லை, படித்துக் கொண்டிருந்தீர். அப்படித் தானே!" என்றார்.

ஆமாம். படிப்பதற்கும் வாசிப்பதற்கும் வெவ்வேறு அர்த்தங்கள்.

வழக்கறிஞர் இருந்து விட்டார். கோர்ட்டில் கூடியிருந்தவர்கள் சிரித்தார்கள். எதுவோ நான் பெரிய ஹாஸ்யத்தைச் சொல்லிவிட்டதாக அவர்கள் நினைப்புப் போலும். நீதிபதி அமைதிகோரி மேசை மீது தட்டினார். நான் தொடர்ந்தேன்:

அப்போது பொன்னம்பலவாணர் வீட்டில் பொன்மலரின் அழுகுரல் உச்சஸ்தாயியில் அவலமாகக் கேட்டது.

'ஐயோ! என்னைக் கொல்லுறாங்கோ. ஐயோ என்ரை அம்மா...

தொடர்ந்து 'தொம்! தொம்!' என்று பனம் பழம் விழுவது போலச் சப்தம்... ஆண் குரல்கள் 'ஆருக்கடி? ஆருக்கடி? உள்ளத்தைச் சொல்லாவிட்டால் உயிரை எடுத்துப் போடுவம்!' என்ற கர்ஜனைகள்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்தச் சப்தத்தில் என் மனைவி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து நின்றாள். அயலட்டையும் விழித்துக் கொண்டிருக்கும்.

என் மனைவி என்ன சங்கதி என்று கேட்பது போல் என்னைப் பார்த்துக் கொண்டே உடல் வெடவெடக்க



விழிகளைப் பிதுக்கியபடி விதறிக் கொண்டிருந்தாள்.

'அவங்கள் ஆரோ பேயோட்டுறாங்கள் போலை கிடக்கு. பேசாமல் போய்ப் படுத்துக்கொள்' என்றேன்.

அழுகுரலும் அடியும் ஓயவேயில்லை.

என் மனைவி என் பக்கத்தில் நின்று இன்னும் படபடத்துக் கொண்டே நின்றாள்.

'என்னென்றுதான் பார்ப்போமே' என்று அவளும் நானுமாக வேலியால் எட்டிப் பார்த்தோம். வெளியே இருள் கம்மிக் கொண்டிருந்ததால் ஒன்றுமே தெரியவில்லை. எல்லாம் நடு வீட்டுக்குள் நடந்திருக்க வேண்டும்.

'ஒருக்கால் போய்ப் பார்த்துவிட்டு வாங்கோ...' என்று பரிதாபமாகக் கேட்டாள் என் மனைவி.

'மறுபடியும் அந்த வீட்டிற்கா? அறிவுகெட்டதனமாகப் பேசாதே!' என்றேன் அதட்டலாக.

அவள் விடவில்லை.

'ஆபத்திற்குப் பாவமில்லை' என்று சொன்னாள்.

ஆனால் பொன்மலரின் கூக்குரல் மேலும் மேலும் பன்மடங்காகி என் நெஞ்சிலும் அடி வயிற்றிலுங் கூட எதுவோ செய்வது போலிருந்தது. 'டோச் லைட்'டை எடுத்துக் கொண்டு வேலிப் பொட்டுக்குள்ளால் புகுந்து விட்டேன்.

வழக்கறிஞர் இடைமறித்தார். "அகால வேளையில் அடுத்தவர் வீட்டிற்குள் புகுந்தது பெரும் குற்றமல்லவா? அதற்கு நீர் என்ன சொல்லுகின்றீர்?"

"ஆம்! குற்றம்தான். ஒப்புக் கொள்ளுகின்றேன். மனம் கேட்கவில்லை. ஒரு வேலிக்குள் நடக்கும் அடியையும் அழுகுரலையும் கேட்டு மனம் வெதும்பிப் போனேன்."

நீதிபதி தொடரும்படி சைகை செய்தார்.



"அப்போது நான் அங்கு போனபோது அவர்கள் என்னைக் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கமாட்டார் களல்லவா? ஆத்திரத்துடன் சற்று வெலவெலத்துப் போய் விட்டார்கள்.

பொன்மலர் தூணோடு கட்டி வைக்கப்பட்டிருந்தாள். அவள் வாயிலும் மூக்கிலுமிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. அநேகமாக நான் அங்கு போன சமயம் அவள் மூர்ச்சையாகி விட்டிருக்க வேண்டும். கண்களைத் திறக்காமலே கழுத்து பக்கவாட்டில் சரிந்து தொங்கிற்று. இறந்து விட்டாளோ என்று கூட நினைக்க வேண்டி இருந்தது.

ஐவருமே அருமைத் தங்கையை அடித்து நொருக்கிக் கொண்டிருந்தார்கள். பொன்னம்பலவாணர், வீட்டு விறாந் தையில் நிலை குலைந்தவர் போல் படுத்திருக்கக் கண்டேன்.

ஆத்திரத்தில் நின்ற ஐவரும் என் நெஞ்சில் பிடித்துத் தள்ளினார்கள். நான் வீட்டுப் படிகளிலிருந்து 'குடைக் கடித்து' நிலத்தில் வீழ்ந்து விட்டேன். அப்போது கல்லுக் குத்திய காயம் தான் இதோ, என் பிடரியிலிருக்கும் வடு. ஆனாலும் எனக்கு வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "ஏன்ரா இந்த நேரத்தில் அந்தப் பெண்ணைப் போட்டடிக்கிறீர்கள்?.... உங்களுடன் கூடிப்பிறந்த குற்றத்திற்கா?" என்று கேட்டுவிட்டேன். உடனே அவர்கள் ஏககாலத்தில், "உன்னை ஆரடா இஞ்சை கூப்பிட்டது. போடா வெளியில்" என்று சொல்லிக் கொண்டே என்னை நெருங்கினார்கள்.

எனக்கு ஆத்திரம் அளவுக்கு மிஞ்சி விட்டது. ஆனால்



அந்த ஆத்திரம் அவர்களை ஒன்றும் செய்துவிடாது. அந்த நிலையில்கூட என் நிதானத்தை நானிழக்கவில்லை. நான் ஒரு தரம் கை நீட்டினால் போதும், என்னைத் தட்டி நீட்டி விட்டிருப்பார்கள். ஆகையால் வேகமாக வெளியேறி போலிஸ் ஸ்டேஷனை நோக்கி நடந்தேன்.

போலிஸார் என் வாக்கு மூலத்தைப் பதிவு செய்தவுடன் என்னையும் அதே ஜீப்பில் ஏற்றிக் கொண்டார்கள். பொன்னம்பலவாணர் வீட்டிற்குள் போலிஸ் படையுடன் மறு படியும் நான் புகுந்தேன்.

பொன்மலர் அறிவு நினைவற்று இரத்தக் கறைகளுடன் அப்படியே கிடந்தாள். எல்லோரையும் அள்ளிப் போட்டுக் கொண்டு போலிஸார் விரைந்தனர்.

என் சாட்சியத்தை முடித்து விட்டு நான் சாட்சிக் கூண்டி லிருந்து இறங்கினேன்.

அமைதி குடிகொண்டிருந்த கோடு, மூச்சு விடுவது போல் மறுபடியும் இப்போதுதான் மெல்ல ஆசுவாசப்பட்டுக் கொண்டது.

தொலுக்குமுதலி, "பொன்மலர்... பொன்மலர்..." என்று உரத்து இருமுறை குரல் கொடுக்கிறார். பெண் சேவகர் பின்தொடரப் பொன்மலர் கூண்டில் ஏறினாள்.

"உன் வயிற்றிலிருக்கும் குழந்தை ஆருடையது?"

நீதிபதி பொன்மலரைப் பார்த்துக் கேட்டார்.

அவள் குனிந்ததலை நிமிரவில்லை. ஆனால் கண்களி லிருந்து வடிந்த கண்ணீர் சாட்சிக் கூண்டிற்குள் சிறைப் பட்டுக் கொண்டிருந்ததைக் கோட்டில் கூடியிருந்த எல்லோருமே கண்டார்கள்.



"பயப்படாதே. ஆராக இருந்தாலும் சொல்..." என்றார் நீதிபதி, மறுபடியும்.

அவள் "ஒ" என்று கோடே அதிரும்படியாகப் பயங்கர மாகக் குரலெழுப்பிக் கத்தினாள்.

நீதிபதி நிலைமையை அவளுக்கு இன்னும் சிறிது விளக்கிச் சொன்னார். நீண்ட நேர விம்மலுக்குப் பின் அவள் சொன்னாள்:


"அப்புவைக் கேளுங்கள்..."

பொன்னம்பலவாணரின் தலை குனிந்து இறங்கிவிட்டது. கோட்டில் கூடியிருந்த ஜனங்களின் பார்வை அவர் மீது மட்டுமே...



9

விழவு



நித்திரை வரமாட்டேனெங்கிது; கால் கையளையெல்லாம் அங்கினைக்கங் கனை எறிஞ்சு மல்லாக்குப் பறிய ஆமையைப் பிரட்டினது போலை கிடந்து உளத்தினாலும், சர்வாங்கியமெல்லாம் விட்டுப் போறது மாதிரி உளையுது. ஓ, எனி எனக்கென்ன நித்திரை? அறுவது செண்டாலே வீட்டுக்கு நாய் வேண்டாமெண்டு சொல்லுவினம். இப்ப எனக்குத்தான் தொண்ணூறைத் தாண்டிப் போட்டுதே! பேந்தென்ன?....



மழை வாறதுக்கும் உப்புடி உழையிறது. மழையும் வரும் போலைத் தான் கிடக்கு. ஆகாயத்திலை வெள்ளி ஒண்டும் பூக்கையில்லை. கைவிரலுகளையும் கால் விரலுகளையும் மொழிக் கிடுத்தினால் ஒரெப்பன் சுகமாக் கிடக்குமெண்டு நெட்டி சவட்டிப் பாக்கிறன். சவம் ஒண்டும் முறியிதில்லை... இரவிலை உப்புடி மொழிக்கிடுத்தினால் குடி நட்டம் வருமெண்டும் சொல்லுறவை.

உப்பிடி முழங்காலுகளை வயிற்றுக்கிள்ளை முண்டு குடுத்து குறவணவன் புழுப் போலை குறண்டிக் கொண்டு கிடந்தால் இல்லுப்போலை சுவாத்தியமாக கிடக்கு. கொஞ்சத்துத்தான் அதுவும் உப்புடிக் கிடக்கலாம். பின்னே ஒரேயடியா நெடுக அப்பிடிக் கிடந்தால் பேந்து எனக்கு நாரிப் பிடிப்பும் வாறது...

ஆ.... ஹ்ர்... ஆய்... இந்தச் சவம் கொட்டாவி வீமன் நாய் ஊளையிடுறமாதிரி சும்மா சும்மா குழறிக் கொண்டு வருகிறது இழவு... இது நித்திரைக் கொட்டாவி இல்லை; பின்னைப் பசிக் கொட்டாவியே? என்ன சவத்தை, இடி விழுந்த வயிறாக் கிடக்கு; ரண்டு மரவள்ளிக்கிழங்கை நல்லாக் கனிஞ்ச நெருப்புத் தணலுக்கை தாட்டெடுத்து, பச்சை மிளகாய் வெங்காயத் தோடை, ரண்டு கட்டி உப்புக் கல்லும் சேத்து விழுங்கினது. அதுக்கிடையிலை சமிச்சுப் போச்சே? சே, வயித்துக்கை அப்பிடித் தெரியல்லே; சமியாப்பாட்டுக் குணமாக இடிமுழக்கம் போலை வயிறு கடாம்புடா மெண்டு கத்துது. ஊத்தை வயிறு; என்ன இழவைப் போட்டாலும் ஒத்துக் கொள்ளுது. சவத்தை விடியற்புறம் ஆமணக்கம் பத்தையுக்கை கொண்டேக் கொட்டுறதுதானே.... அது வயித்துக்கை கிடக்கேக்கை

என்னவாத் தூக்கியொண்டு அதைக் கொழுப்பெண்டு நினைக்கிறம்... பேந்து வெளியாலை வந்தாப் போலை தானே திரும்பிப்பாராம ஓடியாறம். எல்லாத்திலையும் நாங்கள் உப்புடித்தான்... சும்மா சொல்லப் பிடாது, நல்ல செம்பாட்டுக் கிழங்குகள். தோலெல்லாம் வெடிச்சு மாந்தி நல்லா மலந்தாப் போலை வாய்க்கைபோட மாவா உலுந்து போச்சுது. என்ரை பொக்கை வாய்க்கு அது பொது பொ தெண்டு அப்பிடியும் இப்பிடியும் ரண்டுதரம் அதக்கிப் போட்டு விழுங்கேக்கை நல்ல உரிசை. பல்லில்லாட்டி என்ன?

இப்ப கிழங்கும் கடையுமாத்தான் கிடக்கு. நல்ல மலிவு. மனுஷன் செத்தும் சிவலோகம் போவிட்டான் பாவி. ஆர்? என்ரை இவர்தான்! அந்தாளின்ரை கெண்டைக்கால் பருப்பத்திலை ரண்டு கிழங்குகளும்....

இல்லுப் போலை சுடுதண்ணி குடிச்சால் இந்த இழவு விழுந்த எதிரெடுப்பைக் கட்டுப்படுத்திப் போடலாம்; சவம், புளிச்சுப் புளிச்சுக் கொண்டல்லே மேலுக்கு வருகிது...

உந்த நெருப்புப் பெட்டியை உங்கினையிக்கை வைச்சன் சுத்துப் பத்தவைச்சுப் போட்டு... ஓ, ஓ, மறந்திட்டன்; மறதி ஒண்டுதான் வயசு போவிட்டது எண்டதைக் காட்டுது. பனிக்கு இளவாளிச்சுப் போடு மெண்டெல்லே மார்புக் கச்சையுக்கே உடம்புச் சூட்டுக்கா போட்டு வைச்சனான். இப்ப எழும்பிக் குந்தேக்கைதான் கிலுங்கிச் சத்தம் கேட்டுது...

"எடியே ராசாத்தி, மழை பொடுபொடுக்குமாப் போலை கிடக்கு... வெளியாலை துணிமணி கிடந்தால் எடுத்துப் போட்டிட்டுப் படுங்கோவன்ரி."



உந்தப் பாழ்படுவார் படுக்கைக்குப் போனால் சவங்கள் மாதிரித்தான்! மாவிலிவாணன் கூட வரியத்திலை ஒருக்கால் திரும்பியாவது படுப்பான்; இதுகள் கோதாரியளை இண்டோடிண்டு இடிச்சு இடிச்சு எழுப்பினாலும் எழும்பாதுகள்...

உதார் வீமண்ணாவே? எங்கெத்தெயாலை வாறாய்... உனக்கும் குருகுருப்புக் கொண்டல்லே சுத்துது. சப்பிச் சப்பிப் போட்டு பெம்பிளையில்லாட்டிக் கிடக்கமாட்டியே? அடி நாய் சென்மமே! என்னத்தைத் திண்டிட்டு வந்தனி? ஒரேயடியா நாறித் துலைக்குது.

நான் சொன்னன், உவளுகள் என்னும் எழும்பேல்லைத் தானை. ஆடுகளும் அடிச்சுப் பிரண்டு கத்துதுகள். சரியான பிரளயமாத்தான் மழை கொட்டப் போகுது. ஈசல் பூச்சியளும் கிலுமுலெண்டு பறக்குது. எங்கை இந்த இடிவிழுந்த பானமடியை இஞ்சினையிக்கை வைச்சன்... தேத்தண்ணிக் குடுவை மூடாட்டிக்கு இந்தக் கெட்டாரக் கெட்ட சவங்கள் அதுக் கிள்ளை விழுந்து அவியப் போகுதுகள்...

எங்கடை தீவாளியையும், காத்தியை விளக்கீட்டையும் அண்டித்தான் இந்த ஊருக்கு புதுநாணயமா மழை வாறது. பிள்ளையா கதையுக்கைதான் ஒரு பாட்டம் முறையாப் பிடிச்சுக் கொள்ளும். அதுவும் கனத்தநாளும் அதுவுமாத் தான் துவங்கியிருக்கு. இண்டைக்குப் பறுவம் வந்து எத்தினை நாள்?... வெள்ளியோடை வெள்ளி எட்டு, சனி ஒன்பது, ஓ, ஓ, சரியான அட்டமி நவமிக்கைதான்! ஒரு கரை கண்டுதான் விடும். நாலைஞ்சு விறகுத் தூளைப் பொறுக்கி வைக்க வேணும். அடைமழைக்குச் சுடு



தண்ணியாவது வைச்சுக் கிச்சுக் குடிக்க உதவும். தீவாளி நாளையிலை உந்த மழை உப்புடி அடிதண்டல் படு தண்டலாக வாறதும் ஒண்டுக்கு நல்லதுதான். உண்ணாணை, இல்லை யெண்டால் உந்தப் பிரளுவாங்கள் குடிச்சுப் போட்டு நிண்டு தெருவழியிலை பெண்பிரசு வெளிக்கிட முடியாமலுக்கல்லே உரிஞ்சு போட்டு நிண்டு ஆடுவாங்கள்.

என்ரை இவரும் உப்புடிக் கொத்த நல்லநாள் பெரு நாளிலை இல்லுப்போலை பாவிக்கிறவர்தான். குடிச்சாலும் நல்ல மரசாதி... அன்னபரிபூரணம் வயித்திலை சனிக்க முந்தித்தானாக்கும்... ஓ, ஓ! மனுஷன் அப்ப கொஞ்சம் கண் விண் தெரியாமத்தான் போடுறது. சும்மா அநியாயம் சொல்லப்பிடாது. அப்பவும் அந்தாள் பிழை விடுறதில்லை. அதிலை ஒரு தீவாளிக்குத்தானாக்கும். அதை எனக்கு இப்ப நினைச்சாலும் சிரிப்புச் சிரிப்பா அடக்க முடியாமல் வருகுது. என்ன, முழுகவந்த மனுஷன் அரப்புத் தண்ணியைச் சரக்குத் தண்ணியெண்டு குடிக்கிறதோ! அண்டைக்கு மனுசனுக்கு வேட்டியோடை வயித்தாலையும் போட்டுது சவம்! அண்டு மண்டைக்குப் பிறகு மனிசன் வலு அளவோடைதான் செய்யும்... நான் சொன்னன், புங்கை நல்ல பாட்டமாகத்தான் மழை புடிச்சிருக்கு.

தண்ணி நல்லா மலமலவெண்டு கொதிச்சுப் பொங்குது. நான் என்னவோ நினைப்பிலை இருந்திட்டன்.. எங்கை இந்த தேத்தண்ணி இசத்துகளை இஞ்சினையுக்கை வச்சன்... எனக்கும் பதகளிப்பிலை. பங்கை பக்கத்திலை அடுப்பு முகட்டிலை கிடக்குமாப்போலை கிடக்கு... எட அநியாயத்தை. அது முழுக்க நுள்ளான் குவிஞ்சு போய்க் கிடக்கு. பத்தியெரிவான்ரையள எங்கையிருந்து வந்து



குவியிதுகளோ? தேங்காய்க் கையிலையும் கவிட்டு விட்டன். அதுக்கையும் செம்மிக் கொண்டு தான் இருக்குதுகள். அடுப்புக்கை கொட்டக்கொட்ட பொரிவான் ரையள் எங்கையிருந்து வந்து குவியுதுகளோ... நுள்ளா னோடை திண்டாக் குடிச்சால் கண் வெளிக்குமெண்டு முன்னைக்காலத்திலை பூட்டாத்தை சொயத்துக்குச் சொல்லுவா.... ஏன் என்ரை கண்ணுக்கு இப்ப என்ன வந்திட்டுது? எனக்கு ராவிலை சரியான பாம்புக்கண்; பகல்லேதான் சாடையான புகைச்சல். அப்ப ஒருக்கால், அம்பதிலையோ அம்பத்தஞ்சிலையோ எண்டு தான் நினைக்கிறன்... எனக்கு நல்லா நினைவுக்கு வருவ தில்லை... ஓ, ஓ, அப்பிடித்தான், துப்புரவா ஒருக்காப் பார்வை தெரியாமலுக்கு மறைச்சுப் போட்டுது. பேந்து இப்ப தொண்ணூறிலை நல்லாத் திறந்து போட்டுது. அது அப்பிடித்தானாம். இடையிலை ஒருக்கால் வெள்ளெழுத்து வந்து பிறகு தானா அது வெளிச்சுப் போமாம். நான் என்னத்தைச் சொல்ல? எனக்கு எத்தினையோ வயதுக் கிளையவள் தானே ஆச்சிப் பிள்ளை; பாவம், இண்டைக்கு அது இருந்து தடவுது. அதெல்லாம் பார்வைச் சீத்துவக் கேட்டிலைதான் உப்புடி வாறது...

என்ரை வலது என்ன இருக்கு? எல்லாம் அந்தப் பெருமா னின்ரை புண்ணியத்தாலை தான் நான் உப்புடி இருக்கிறன். போன மாதம் கடசிச் சனிக்கிழமை ஒரு எள்ளெண்ணைப் பொட்டணி எரிச்சிருக்க வேணும். எல்லாம் அவருக்குத் தெரியாததே? காசுக்குருசு செம்பாலடிச்ச வெள்ளைச் சல்லியுமில்லாமக் கிடக்கையிக்கை.... அப்பனே, பெருமாளே! வாற மேலைக்கு மடிப்பிச்சை எடுத்



தெண்டாலும் எள்ளெண்ணைப் பொட்டணி எரிப்பன்...

உதென்ன நல்லாரு மணிச்சத்தம் போலை கிடக்கு... குளிருக்கு வலு கணகணப்பாக் கேக்குது. அப்பனே முருகா ஏன்தான் என்னும் இந்தக் கட்டையை வைச்சுக் கொண்டு இருக்கிறியோ? ஒரேயடியாக் கொண்டு போவெண்டு எப்ப கூடக் சொல்லுறன். எதுவோ நான் செய்த ஊழ்வினை என்னும் கிடந்து அழுந்தச் சொல்லி விட்டிருக்கிறாய்.... அதுக்கு நீ என்ன செய்வே?

சாதிசனமுமில்லை; கொடிகோத்திரமுமில்லை எல்லாம் ஒருதனை நம்பி ஓடியாந்ததாலை முழுக்கப் பத்தி எரிஞ்சு போச்சு... பிள்ளை குட்டி ஏன் இல்லை.... உனக்குத் தெரியாதே? மூண்டு பிஞ்சுகளைத் தந்திட்டு அதிலை ரண்டைத் தட்டிக் கொண்டு போட்டாய்... மற்றது ஒண்டு.. ம்... அது என்னைக் கவனிக்காட்டிலும் எங்கை யெண்டாலும் நல்லா இருக்க வேணும், என் தங்கவேலே. அதுக்குக் குடுத்த நாய்க் குட்டியளுக்கும், தாலிப் பிச்சைக்கும் ஒரு குறையும் வராமல் காப்பாத்திப்போடு... நான்தான் ஆற்றையும் கோடிக்கை யாவது அண்டி இருந்திட்டுப் போடுவன். அது என்னை விட்டெறிஞ்சு போட்டுது எண்டுறதுக்காக நான் என்ரை வயித் தெரிச்சலைக் கொட்டி சாபக்கேடு போட்டால் நல்லாயி ருக்குமே?... அதுகள் எங்கையெண்டாலும் நல்லா இருக்கட்டும். அதுதான் நான் உன்னைக் கையெடுக்கிற புண்ணியத்துக் காக நீ இதைச் செய்து போடு.

தேத்தண்ணிக்கு சீனி போதாது போலை கிடக்கு. கிடந்ததைத் தட்டிக் கொட்டி பேணியை வழிச்சுத் துடைச்சுத் தானே போட்டனான். நான் முழிச்சுக்



கொண்டிருக்கிறனெண்டாப் போலை தீவானுமே கடையைத் திறந்து வைச்சுக்கொண்டிருப்பான்?... அநியாயப்படுவான்ரை கடையிலை எல்லாம் சரியான ஒறுப்பு; கட்டன் கிடன் எண்டால் முகங்கோணாமலுக்கு விட்டுத் தாறவன். அதாலைதான் பாக்கிறன். அறுவானிட்டை ஒரு அஞ்சியாம் கடன் வாங்கினால், கொஞ்ச நேரத்தாலை போய்ப் பார்த்தால் அது பத்துச் சதமாகக் குட்டி போட்டிருக்கும். அவன் ஒரு மட்டெண்டாலும், அதிலை விப்பனைக்கு நிக்கிற குறுக்காலை போன குஞ்சுகள் நெறுவையை வலுவாக் குறைச்சுப் போடுங்கள்...

இஞ்சாலையும் தூவனம் அடிக்குது. குளிருக்குச் சுடு தண்ணி சதிரத்துக்கு நல்லாய்க் கிடக்கு. அந்த மேச்சல் காரப் பத்தியெரிவான் கோவியனட்டைச் சொன்னனான். மூலைக்கை கிடுகுகளை முறிக்காதையடா எண்டு. அறுவான் சவங்காவி கேட்டானே?... பின்னை எனக்கு என்னம் பெண்டெல்லாம் பத்திக்கொண்டு வருது. இஞ்சை பாரன், ஏதோ வடிவாக் கிடக்குமெண்டு சொல்லி மேஞ்சான். இப்ப கொட்டில் புண்டமேகம்போலை அல்லோ ஊத்துப்படுது... ஒண்டுக்கு நேரே கஞ்சிச் சட்டியை வைச்சாச்சு. மற்றதுகளுக்கு என்னத்தை வைக்கிறது?... வாசல் சாக்கையும் இழுத்து விட்டாச்சுது... உதார் வீமண்ணாவே? – சவத்தை, நான் திரத்தி நீ எங்கை போறது? நீ திரத்தி நான் எங்கை போறது? உதிலை சாக்கிலை படன்.

ஒரு மணி இறயில் இப்பதான் வருகிது போலை கிடக்கு. இடியேறு விழுவான்ரை இஞ்சின் கோண்டாவிலைப் பேத்துக் கொண்டு வாறது போலை சத்தம். இதிலை



வரயிக்கை என்னையுமொருக்கா மற்றப் பாட்டுக்கு தூக்கிப் பிரட்டி மல்லாத்திப் போட்டுத்தான் போகும், சவம்.

எங்கை இந்த உரலும் உலக்கையும்?... இந்தச் சவத்துப் பாக்குப் பிளகுகளை இல்லுப் போலை நசுக்கிப் போட்டுப் போட்டால்தான் நல்லது. சுண்ணாம்பும் கலடு பத்திப் போச்சுது...

இந்த உரல் இடிச் சத்தத்தோடை செல்லன் எழும்பி யிடுவான். அவன் அப்பிடித்தானே சொல்லுறவன். ஒரு வேளை இண்டைக்கு இந்த மழையுக்கை இது அவனுக்கு கேக்குதோ என்னவோ? இஞ்சை இந்த ஒரு வேலியிக்கை கிடக்கிற சவங்கள் என்னும் எழும்பேல்லை யெண்டால்... சும்மா சொல்லப் பிடாது. அவர் போனாப் போலை, ஆர்? - இவள் பெட்டை ராசாத்திதான். அங்கினையிக்கை திண்டு கிடக்கிறனோ, தின்னாமக் கிடக்கிறனோ எண்டு அரைக்கண் வலக்கண் பாத்துக் கேக்கிறது பொடிச்சி! என்ரை இவருக்கு ராசாத்தி தூரத்துப் பேத்தி முறைதான். இவற்றை கூடின இரத்த உருத்துகளைக் காட்டிலும் இவள் பொடிச்சிக்கு என்னிலை ஒரு பச்சந்தான்.

பின்னை அதுகள், சவம், ஏன் நாயெண்டு திரும்பிப் பாக்காதுகளே. சரி, பாக்கத்தான் வேண்டாம்; ஆறுதலுக்கு ஒரு சொல்லாவது கேக்க வேண்டாமே?...

அதுகளைத்தான் ஏன் குறை சொல்ல வேணும்?... என்ரை வயித்துக்காலை வந்த இரத்தக் கட்டியே ஏனெண்டு கேக்கையில்லையாம், மற்றதுகளைப் பத்தி ஏன் குறை கதைக்க வேணும்?

இந்தக் கால் கோதாரியள்தான் கடியன் நாயள் பிடிச்சுப் புடுங்கிறது போலை வெடுவெடெண்டு உழையுதுகள் சவம்.



அதுக்கு உப்பி டிரண்டு காலுகளையும் நீட்டிப் பின்னிப் போட்டுக் கொண்டிருக்க எப்பன் சுகமாக் கிடக்கு... பின்னை எவளவு நேரமெண்டு கையளாலை உருவுறது?... பேந்து சவம் கையளை என்னத்தாலை உருவி விடுறது?...

கை விளக்குக்கையும் எண்ணை இல்லைப் போலை கிடக்கு. அது பங்கை கண்ணைத் தூக்குது. சவம். நூந்தாலும் நூரட்டும். நீட்டின காலை இனி முடக்கிற தெண்டால் ஆராலை ஏலும்? சாந்து கொண்டிருக்கிற கொட்டில் கப்பு முதுகு முள்ளந்தண்டை நெருடுது... அந்தப் பாழிக்கறுப்புப் பழஞ் சீலையைத் திரட்டி முதுக்கை வைச்சால் சார்மனைக் கட்டில் போலை ஒரெப்பன் நல்லாக் கிடக்கும்.

இந்தச் சீலை, அவர் இருக்கையிக்கைதான் எடுத்தது. கெட்டாலும் செட்டி, கிழிஞ்சாலும் பட்டெண்டது போலை, கிழிஞ்சும் போச்சுது, இண்டைக்கும் சீலையெண்டால் சீலை தான். இடுப்புக்கு நல்ல பொலிவான சீலை; பின்னை ராசாத்தியின்ரை பெட்டையள் கட்டுற மாதிரி -- அவளுகள் என்ன? -- இப்ப அதுதானாமே மோடி. வெறும் அலவல் துணியள். உண்ணாணை உதுகள் கட்டிக் கொண்டு போகயிக்கை பாக்கவேணும். பின்னை அந்த விண்ணாணச் சீலையே. தூ...! மானங் கெட்ட சவங்கள். உப்புடித் துடை தெரிய ஏன்தான் மானத்தை மறைக்க வேணுமோ தெரியேல்லை... என்னட்டைக் கிடக்கிற மற்ற மாங்காய்க் கரைச் சீலையும் அவர் இருக்கையிக்கை ஒரு தீவாளிக்கு வாங்கினதுதான். அந்தப் போக்காளன் போனாப் போலை நானெங்கை புதிசாக் கட்டினன்? இப்ப எனக்கு உடுபிடவைக்கும் பஞ்சமாப் போச்சுது. இப்ப



எல்லாமா ரண்டோ, மூண்டு சீலையள்தான் கிடக்கு. எல்லாம் அந்த வல்லாளன் இருக்கையிக்கை வாங்கினது கள்தான். அதுகளையும் உந்தக் கட்டுப் பெட்டியிக்கை கட்டி வைச்சன். என்ன பாட்டிலை கிடக்கோ என்னவோ? பூச்சிக் கட்டியளும் சமைஞ்சு போயிருக்கும். நாளைக்குக் கையோடை அதுகளை என்ன பாட்டிலை கிடக்குதெண்டு பாக்கவும் வேணும்.

பெருமாள் கோயில்லை ராமசாமிப் பண்டாரம் இரும்பிலை அடிக்குது. ரண்டு மணியே அடிச்சது?.. அவனும் மனுசன் அந்தந்த நேரத்துக்கு முழிச்சு என்னமாய் அந்த மணியை அடிச்சுப் போடுறான்?... எல்லாம் அந்தப் பெருமாளின்ரை புதுமைதான்....

நேத்து அதிலைதானை கூட்டம் போட்டவங்கள்... சாதி யொழிப்புக் கூட்டமோ, என்னம்போரு சங்காரக் கூட்ட மெண்டு சொன்னாங்கள். நானும் எப்பனுக்கு அதிலை நிண்டு கேட்டனான். நல்ல சனம். இவற்றை ஆக்கள்தான் கனக்க நிண்டவை. நல்லாத்தான் பேசினவங்கள். நடந்து காட்டுறது தான் பிழையாக்கிடக்கு. அதிலை ஒரு பெட்டைப் பொடிச்சியும் பேசினவள். எங்கை ஏலுமெண்டால் என்னைப் போலை வந்து இந்தச் சாதியெளுக்கை ஒரு கலியாணம் கட்டெட்டும் பாப்பம்? இவங்களும் என்னும் தேத்தண்ணிக் கடையளுக்கை போறதுக்கும், கோயிலுக்கை போறதுக்குந்தானே புரச்சியோ கோதாரி செய்து கொண்டிருக்கிறார்கள். உண்ணாணைத் தெரியாமக் கேக்கிறன். இவங்களுக்குத்தான் தெய்வம், சுவாமியிலை நம்பிக்கையில்லையெண்டும் சொல்லுறாங் கள்; பேந்தேன் கோயிலுக்கை விடச் சொல்லி நிக்கிறாங்கள்?



எனக்கு அது இப்ப எண்டதுபோலை நினைப்பாக் கிடக்கு. அப்ப எனக்கென்ன ஒரு பதினைஞ்சு பதினாறு வயதுதானிருக்கும். நான் அப்ப என்ன வடிவான பெட்டை... நல்லா வாந்து வடிஞ்சு என்ன வட்டுறுப்பா வத்தகப் பழத்து உள் பக்க நிறம் போலை இருந்தனான். அதுதானை வழி தெருவாலை போறவங்கடை கண்கடை பட்டுவிடப் போற தெண்டுதானே அப்பு அவளவு உயரத்திலை வேலி அடைச்சு வைச்சிருந்தவர். என்ரை தெறிச்சுப் போன புத்தி குறுக்காலை கொண்டு வந்திடுத்து. ம்... அது அந்தந்த வயசிலை அந்தந்த அதுக் குதியன் குணந்தான் செய்யும்!

அப்ப இந்த மனிசன் கறுத்தார் அங்கை கள்ளுச்சீவ வந்தவர். பண்டத்தரிப்பிலை எங்கடை குலமென்ன, கோத்திரமென்ன? நான்தான் குலத்தைக் கெடுத்த கோடாலிக் காம்பாப் போட்டன். எங்கடை கோடியிக் கையும் அப்ப இந்தாள் நாலைஞ்சு பனைச் சீவினது. அப்பு பனைக்கு மேலாலையும் வேலி அடைக்க முடியுமே!... நான் என்னை இல்லுப்போலை மறைச்சுக் கொள்ளயில்லையாம். பாவம். அதுக்கு அப்பு என்ன செய்யும்?

அதுக்காக நான் ஒண்டும் கவலைப்படேல்லை. ஏனெண்டா கறுத்தாரை இன்னான் எண்டு தெரிஞ்சாப் போலை தானே நான் அவரோடை ஓடியந்தனான்.

அப்ப என்ன இந்த மனிசன் இறுங்காட்டந்தானே? பனை ஏறி ஏறியாக்கும் நல்லா நாலு அஞ்சு பேர் தட்டாம முட்டாம ஏறிப் படுக்கக் கூடிய அகண்ட நெஞ்சு. இப்ப நான் சாந்து கொண்டிருக்கின்ற பாலைக் கப்புகளைப் போலை கை கால்களும்... ஆள் கறுப்புத்தான். கறுப்பெண்டாலும், அது ஒரு தனிக் கறுப்பு. அது அவருக்கு நல்ல வடிவு.



கறுப்பெண்டால் என்ன? அவற்றை முகலெச்சணத்துக்கு கோடி பொன்தான் குடுக்க வேணும். முகங் கிட்டினற்றை சாங்கம். சுறுண்டு சுறுண்டு கிடக்கிற ஒரு கொள்ளை தலைமயிர். உன்னாணை அதை ஒருக்கா இழுத்து விட்டுட்டுப் பார்க்க வேணும். பின்னை, அதுகுமொரு வடிவுதான். கொழுக்கி ஓட்டு வீடுமாதிரி ஊருப்பட்ட வளைவுகள்...

இப்பதானை அதுக்கு காதலோ கீதலெண்டு என்னம் போ சொல்லுகினம். அப்ப நாங்கள் உந்தக் கதையைக் கேட்டு மறியம். நான் இவரோடை தொடுப்பா இருந்ததைக் கண்டுட்டுத் தானே அப்பு கொடுவாக் கத்தியைத் தூக்கியொண்டு ஓடி வந்தவர் வெட்டிறதுக்கு. அண்டைக்கு நல்ல காலம். ஆச்சி குறுக்கை வந்து விழுந்து கிடந்து கும்பிடாட்டிக்கு என்ரை தலையேக் கொய்துதான் போடுவார்... அடுத்த நாள் ஒரு வெள்ளிக்கிழமையாக்கும். ஓ அப்பிடித்தான். வீட்டிலை சொல்லாமக் கொள்ளாமலுக்கு இவரோடை இவற்றை ஊருக்குக் கிளம்பியிட்டன். தேடிப் பாத்தவையாம். சங்கதி இப்பிடியெண்டாப் போலை பேசாமப் பறையாம விட்டிட்னமாம். அப்பு சும்மா லேசுப் பட்டவரில்லை. இவற்றை ஆக்களும் ஒரு மாதிரியான வெட்டுக் கொத்துக் காறங்களெண்டாப் போலைதான் அந்தாளும் பேசாமல் விட்டிடுத்துப்போலை.

நானும் இப்ப பூட்டாத்தையாப் போட்டன். இவளவு காலத்துக்குப் பிறகு இப்பதான் எனக்குக் கண் கலங்குது. அவர் இருக்கையிக்கை கண்கலங்காமத்தான் பாத்தவர். இப்ப நடுத்தெருவிலை நாதியத்து நிக்கிறன். அவர் உசரோடை இருக்கையிக்கை சொயத்துக்குச்



சொல்லுகிறவர் தானே? அவருக்கு அப்பவே தெரியும். மருமோன்ரை குணமும், மோளின்ரை குணத்தைப் பற்றியும். அதாலை தான் அந்தாள் அப்பவே 'அம்மிணி, நான் இருக்கையிக்கை நீ கண்ணை மூடியிட வேணும். இல்லையெண்டா நீ அந்தரிச்சுப் போடுவா' யெண்டு. அதுபோலை தானை நடந்திட்டுது.

இப்ப எழுவத்தினாலு வரியம். நான் பிறந்த இடத்தை மிரிச்சு. ம்.... எவ்வளவு காலமாப் போச்சுது. இந்த மூச்சு நிக்கிறதுக்கிடையிலை ஒருக்கா அந்த இடத்துக்குப் போய் அந்த மண்ணிலை மிரிச்சுப் போட்டு அந்தத் தண்ணியிலையும் ஒரு முடறு குடிச்சிட்டு வந்திடவேணு மெண்டு நினைக்கிறன். அப்புவும் ஆச்சியும் எப்பவோ போயிருப்பினம். தம்பியும், அக்காவும்தானே. அதுகள் எங்கை இருக்குதுகளோ? இல்லை யெண்டால் அதுகளுந் தான்...! நான் பாவம் செய்தனான்? கிடந்து அழுந்திறன் எண்டாப் போலை... அதுகளின்ரை பிள்ளை குட்டியள் - அதுகளுக்கு என்னை என்னெண்டு தெரி யும்? இப்ப நினைச்சுக் கொண்டிருக்கையுக்கை 'ஓ' வெண்டு பிலத்தாக் கத்த வேணும் போலை கிடக்கு.

வாயுக்கை போட்ட வெத்திலையும் கரைஞ்சு போச்சு. சதிரம் கொடுகிற மாதிரிக் கிடக்கு. உந்தச் சுங்கான் கல்லுச் சவத்தை உவடத்தைதான் வைச்சுனான். நல்ல வேளையாச் சுவர்க் குந்தலை கிடந்திட்டுது இல்லை யெண்டாக் கைவிளக்கும் நூந்தமாதிரிக்கு கன இடத்திலை தடவி இருக்க வேணும்!

சச்சுப் பொயிலை தலைக்கு வைக்கிற சாக்குச் சுறுட்டுக்கை கிடக்கு. பூவரசம் தடியிலை கிடக்கிற தணல்



அசுப் பழம்போலை கிடக்கு. கல்லுக்கை ஒரு துண்டை முறிச்சுகொள்ளக் கூடியதா வைக்கலாம்... அடிச் சல்லிதானே முதல்லே இல்லுப் போலை கருகப் பாக்கும். நெருப்புப் பிடிச்சிடுத்தெண்டால் கணகணெண்டு சீக்கிறேட்டு எரியுமாப் போலை எரியும்.

விடிஞ்சுவாற தீவாளியோடை பதினெட்டுத் தீவாளி ஆகப் போகுது அவர் போய். அவமாச் சாகக் கூடா தெண்டுறதுக்காகத்தான் என்னும் உடம்பிலை உசிரை வைச்சுக் கொண்டிருக்கிறன். இல்லையெண்டால் ஓடுற இந்த றயிலுக்கை – படலையைத் துறந்த உடனயே தலையே அதுக்கிள்ளை குடுத்து சீவனை மாச்சுக் கொண்டிருப்பன். என்னத்துக்கு அப்பிடிச் சாகவேணும்? என்னவோ பிறந்திட்டன். அவன் எழுதி வைச்சிருக்கிற அவளவத்தையும் பட்டழுந்தாமல் இடையிலை செத்தால் பேந்தும் இந்தப் பிறவி தான் கிடைச்சாலும் கிடைக்கும் எண்டு பாக்கிறன்....

அன்னபரிபூரணத்தைப் படிப்பிச்சன்... இல்லை, அவர்தான் படிப்பிச்சவர். அதை நான் இல்லையெண்டு ஏன் சொல்லப் போறன்? படிச்சு ஒரு வாத்தியாரும் ஆயிட்டாள். அங்கை றெயினிங்கிலையோ? கோதாரியிலை இருக்கை யிக்கை தானே அவன் ஒருத்தனைக் கொழுவிப் போட்டாள். படிப்பு முடிஞ்ச அடுத்த வரியமாக்கும்... அதையும் இவர் பிடிச்சு ஒரு மாதிரி ஒப்பேத்திப் போட்டார். அப்ப அவன் சொன்னான் பாவி, 'மாமிக்கும், அம்மானுக்கும் மாதத்திலை நூறு ரூவாக் குடுப்ப' னெண்டு. எளிய பறையன், இப்ப நூறு வெள்ளைச் சல்லியும் தாறானில்லை, அவன்தான் பிறத்தியான்; இரத்த உருத்திலை வராதவன்.



இவளுக்குத் துடிக்கேல்லையாம். அவனை ஏன் குறை சொல்ல வேணும்?

ஒருத்தர் செய்தது தானே ஊழியுள்ளவரையும் நெஞ்சிலை அழியாமக் கிடக்கும். அவர் பாத்த பார்வைச் சீத்துவத்திலை தானே அப்ப ஆச்சி அப்புவின்ரை பாசத்தையும் மறைச்சுப் போட்டுது. அவர் சொன்னது சாத்திரம் சொன்னது மாதிரிப் பலிச்சிட்டுது. அம்மிணி இந்தச் சாதி உன்னை நான் இப்ப கண்ணை மூடினாற் போலை ஏனெண்டும் கேளாது. உன்ரை ஆக்களையும் உனக்குத் தெரியாது. எல்லாப் பாவத்தையும் செய்திட்டு நான் உன்னை நடுச் சந்தியிலை நிப்பாட்டிட்டுப் போறன். கையிலை மடியிலை ஏதாவது கிடந்தாத்தான் கடசி காலத்திலை உன்னை ஒரு அயலவனாவது எடுத்துத் தாப்பான். அதிலை இந்த ஒரு துண்டுக்காணியே ஒருத் தருக்கும் இப்ப கையளிச்சுப் போடாதை. தாய் பிள்ளை யெண்டாலும் வாயும் வயிறும் வேறைதான் எண்டார். இதை அவர் கடசியாக் கண்ணை மூடையிக்கை என்ரை காதுக்கை தீட்சை மந்திரம் போலை ஓதிப் போட்டு என்னை ஒருக்காப் பார்த்தார். ரண்டு கண்ணாலையும் பொலபொலண்டு கண்ணீர் ஊத்துப் பட்டுது. உடனே கழுத்துக் கொழுந்து மடிஞ்சு போச்சுது.

அவர் செத்துத் தெய்வமாப் போட்டார்; சொன்னது தேவ வாக்காப் போச்சுது.

அந்தப் போக்காளன்ரை சொல்லைத் தட்டினதாலை எனக்கு வந்த கேடு. என்ரைமோள் அன்னபரிபூரணத் தின்ரை பேருக்கே அந்த வளவை நான் எழுதிப் போட்டன். அதை எழுதிவிக்கிற வரைக்கும் அவனும் அவளும்



என்னவா மாய் மாலம் போட்டு மருட்டி, அது இது வாய்க்கிதமான தெல்லாம் வாங்கித் தந்தவை. நான் ஏன் அதை வஞ்சகமா நினைச்சன் வேசை. அந்தக் காணியெத் தானே கடசியாக ஆரோ பத்தாயிரம் குடுத்து வாங்கிக் கடை கட்டியிருக்கிறாங்கள். நானும் பாத்தன், பின்னிட்ட இந்தக் காலத்திலை எங்கையாவது நிண்டாப் போலை அடிச்சுக் கொண்டு விழுந்து செத்துப் போனாலும், எண்டு... பேந்தாருக்கு? அவள் ஒருத்தி தானே? நான் வஞ்ச மில்லாமல் செய்தன்; அதுகள் வஞ்சகமா நடந்திட்டுதுகள்.

அதுதான் இண்டைக்குப் பிழைச்சுப் போச்சுது. இல்லை யெண்டால் இவையள் என்னையும் எப்பன் நத்திக் கொண்டு நிப்பினம். எல்லாம் நான் கொண்டோடி செய்த வேலைக்கு இதுவும் வேணும்; என்னமும் வேணும்.

இவற்றை ஆக்களும், மருமோன்ரை ஆக்களும் கதைக் கிறதைப் பாத்தால் அப்பிடித் தெரியேல்லை. ஏதோ நான் தங்களை விடக் குறைஞ்ச சாதியெண்டது போலை யெல்லே கதைக்கினமாம். அதுதானாம் நான் இவர் 'சூ' எண்ட உடனே இவருக்குப் பின்னாலை வந்திட்டனாம். எப்பிடிக் கிடக்கு ஞாயம்? உவையள் உப்புடிக் கதைக்கிற துக்கும் நான் ஆளாப் போட்டன். நானும் ஒரு தோறைதான். வலியக் கொண்டு போய்க் குடுக்கிற சாமானுக்கு மதிப்புக் குறைவுதானே? அந்தப் பொருளைத் தேடித் திரிஞ்சு வாங்கினாயெல்லோ அதின்ரை அருமை பெருமை இந்தச் சாதிக்கு விளங்கும்? எனக்கு முன்னாலை ஆரும் உதைப் பற்றிக் கதைச்சால் அடவியன் விளக்குமாத்தாலைதான் சாம்பிப் போட்டு விடுவன். கெட்ட சாதி. ஆரைப் பாத்து உப்புடிக் கதைக்குதுகள்? எங்கடை வீட்டுக் காரியங்



களை எத்தனைக்கு அப்பாலை நிண்டு உதுகள் செய்யிறதுகள்... பின்னை எனக்கு எங்கையெல்லாமோ இருந்து பத்திக் கொண்டு வருகிது.

எனக்கு இப்பதான் ஒண்டு நல்லாத் தெரியுது. இவற்றை ஆக்களும் இப்ப அங்கினையிக்கை படிச்சுக் கிடிச்சு உத்தியோகம், பணம், பண்டம் எல்லாம் வந்திட்டுதுதான். என்னத்தைப் படிச்சாலும் என்ன? சவச்சாதி - என்னைப் பாத்து உப்புடிக் கேக்கவோ? இல்லை எனக்கு முன்னாலை சொல்லையில்லைத் தான் – ஆருக்கு முன்னாலை யெண்டாலும்? எத்தினை முள நாக்காலை உப்புடி உதுகள் கதைக்கத் துணியுங்கள்?

அவை இப்ப பெரிய சாதியள் ஆயிட்டினம். அவை படிச் சவையும், பணக்காறரும் ஒரு தட்டா நிண்டு கொண்டு மற்ற இல்லாது சொல்லாதுகளை தங்களிலை குறைஞ்ச சாதி யெண்டெல்லே சொல்லுகினம். சாதிக்குள்ளை சாதி யுண்டாக்கிற சண்டாளச் சாதி.

இல்லையெண்டால் உவன் செல்லத்துரையன். மோன் பெரிய படிப்புக்காறனெண்டு சொல்லி தங்கச்சியின்ரை மோளுக்குக் கட்டிக் குடுக்காமல், என்னுமொருடத்திலை அம்பதினாயிரம் வாங்கிக் கொண்டு செய்து குடுப்பானே? அவன் முடிச்சும் ரண்டு பிள்ளை தலைமுறையாப் போனான். அது பொடிச்சி என்னும் மூலையுக்கை கிடந்து பெருமூச்சு விடுகுது. சரி, உன்ரை மோனைத்தான் நீ கட்டி வைக்க யில்லை. வேறை ஒருத்தனையாது பிடிச்சுக் கட்டிவை யாதையெனடா பாவி....! உன்ரை பிள்ளை ஒண்டு; அவள்ரை பிள்ளை ஒண்டோ?...

உங்கை நேத்துப்போட்ட கூட்டத்திலை பேசினாங்கள்.



படிப்பும், பணமும் வந்திட்டால் சாதி யொழிஞ்சு போடு மெண்டு. இஞ்சை யென்னடாவெண்டால் முந்துறவன் முந்துறவன் பெரிய சாதியாகிறான்.

நான் நினைக்கிறன் உப்பிடித்தான். உப்புடியான மேட்டி மையள் வரயிக்கை அடக்கிறதுக்கு ஒரு ஆளில்லை யெண்டால் அதுக்குத்தான் என்ன மதிப்பு? உலகத்திலை அது நெடுக இருக்கும் போலைதான் கிடக்கு.

என்னைப் பாத்து உதுகள் உப்புடிச் சொல்லையுக்கை வேறை ஆரை விடப்போகுதுகள்?... அவர் இருக்கை யுக்கை உந்த மாதிரி ஆரும் கதைச்சின மெண்டால் பல்லைத் தட்டிக் கையிலை குடுத்திருக்கும் சீமான்.

ஒருக்காலும் நான் அவரையோ சரி, இதுகளையோ சரி அப்பிடி நினைக்கயில்லை. ஆனா இதுகள் இப்பிடி யெல்லாம் நினைக்க வைச்சிட்டுதுகள். எனக்கு அதிலை ஒண்டும் குறைஞ்சு போடயில்லை. இதுகள் பேசுறது பறையிறதைப் பாத்தாத்தான் எனக்கு என்னமோ மாதிரிக் கிடக்கு.

எனக்கினியென்ன? நூறுநாள் போட்டுது. என்னுமொரு ஆறுநாள் கிடக்கு.

என்னம்போ நினைப்பிலை சுங்கான் கல்லும் நூத்து போச்சுது. அதுக்கை பொயிலையும் இல்லைப் போலை கிடக்கு. என்னும் ஒரு நுள்ளு வைச்சால் விடியேக்கை பாவட்டைக்குப் போகேக்கையும் உதவும்...

அவர் இருக்கையுக்கை வெட்டுச் சுறுட்டுத்தான் வாங்கி யந்து தாறவர். இப்ப இதை அவன் பெடியன் செல்லன், அங்கினையிக்கைதான் வாங்கிச் சுத்திற பொயிலையிலை அந்த அடிச் சோணையைத் தாறவன். அது எங்கை



உப்புடித் தான்....

விடியற்புற கொழும்பு றயில் வருமாப் போலை கிடக்கு. ராமசாமியும் கம்பியிலை அடிக்கிறான். மணி அஞ்சோ, ஆறோ... மூண்டு நாலு. அஞ்சு, ஆறு... நிலமும் நல்லாப் பலார் பத்தி விடிஞ்சு போச்சுது. இண்டைக்கு உது கொஞ்சம் சுணங்கித்தான் வருகிது. உதிலைதானாக்கும் அன்னபரிபூரணமும் பெடியளும் வருவினம் எண்டு உவள் ராசாத்திதான் சொன்னவள்... இதென்ன மழையும் விட்டு வெட்டாப்பாக் கிடக்கு... இண்டைக்கு சாடையா எறிக்கும் போலை கிடக்கு...

எங்கை உந்தக் கைத்தடியை இஞ்சினேக்கை வைச்சன்.. மனங்கேக்குதில்லை. ஒருக்கா எட்டிப் பாத்தால் என்ன? அதுகளைக் கண்டும் கனகாலமாப் போச்சு.... இருந்துட்டுக் கண்ணை மூடினாலும்....

அது போட்டுக் கொண்டு போற ஆதாளியிலை எனக் கெங்கை தெரியப்போகுது? சில நேரத்திலை இவடத்தை வரயுக்கை வலு ஆறுதலா வாறது. இண்டைக்கெண்டு பாழ்படுவான்ரை இதிலை வரயுக்கை சீறிக் கொண்டு போகுது... சுணங்கியெல்லே வந்தது. அதாலைதான்.

ஆரோ எல்லாம் கனசனம் எட்டிப் பாத்துக் கொண்டு போகுதுகள். அவளேன் என்னைப் பாக்கப் போறாள்? அந்தப் பிள்ளையெள்ளை முகத்தையெண்டாலும் ஒருக்காப் பாக்கலா மெண்டால்... அதுகளுக்கு விருப்ப மில்லாமலே இருக்கும்?... அந்தச்சிடுமூஞ்சையன்... அவன் தான் அந்தப் பெரிய சாதிக்காறன் பக்கத்திலை இருப்பான்... அவள்தான் என்ன செய்வாள்? அவனுக்கும், அவன்ரை ஆக்களுக்கும் இப்ப தானே நான் இழப்பமான



சாதியாப் போனன், ம்....

என்ன மோனை ராசாத்தி கேட்டனீ?... ஏன் குளிருக்கை நிக்கிறயெண்டே... முழுக்க நனைஞ்ச எனக்கு குளிரென்ன கூதல்ல மோனை... சும்மா இதிலை வந்தாப் போலை மனங் கேக்கயில்லை.... தீவாளிக்கு இண்டைக்கு முழுகை யில்லை யெண்டே கேட்டனி... எனக்கு இனி என்ன குளிப்பும் முழுக்கும்? தலையெல்லாம் ஒரே பிசானாக் கிடக்கு, இராத்திரியெல்லாம் மொசுமொசெண்டு அதுதான் கடிக்குது போலை கிடக்குப் பிள்ளை. பின்னை இல்லுப் போலை அரப்புத் தண்ணியைத் தாவன். இந்தப் பீடையெக் கழுவித் துடைச்சுக் கொண்டு பெருமாளெட்டைப் போவம்!...

சதிரம் நல்லாக் கொடுகுதெடி பிள்ளை... எங்கை உன்ரை இவரைக் காணேயில்லை?... பெடியள் எல்லாம் முழிகியிட்டுதுகளே?... அப்ப புதிசு கிதிசு ஒண்டையும் கட்டக் காணேயில்லை?... ஒரு வரியம் போல ஒரு காரிக்கன் துண்டாவது அதுகளுக்கு வாங்கிக் குடுக்கக் கூடாதே!...

எடியெடியே, நல்லநாள் பெருநாள்ளே ஏன்ரி கண்ணைக் கயக்கிறா? அவனுந்தான் என்ன செய்யிறது? ... எல்லாம் நஞ்சானும், புஞ்சானுமா... உதென்ன இறச்சியே?... அவன்தான் சரி. பிள்ளை குட்டியள் திண்டு கெட்டாவது கிலியடங்க வேணும். அதிலை மாத்திரம் அவன் ஒஞ்சிக்க மாட்டான்...

ஓமோம்! அவனும் மாடா உழைக்கிற தேகமெல்லே? அதுவும் நல்ல நாள் பெருநாள்ளைதானே? ஒரெப்பனைப் பாவிக்கட்டன்.

தலையாலை ஒரு சுமை பாரம் இறங்கினாற் போலை



கிடக்கடிமோனை. நல்லாச் சம்பு மாதிரி வந்திட்டுது தலை... எங்கை மூத்தவள் லெச்சுமி? அடுப்படியுக் கையே?... அவளும் விடிஞ்சாப் பொழுது இருட்டிற வரைக்கும் நெருப்புக்கைதான். குமரான குமர் என்னவா வெம்பி வெளியிறப் போச்சு!

உதிலை செல்லனே வாறது? அவனைக் கேக்கத்தான் வேணும். எடை, ஆச்சி எண்டுறது ஒருபுறமிருக்கட்டும் நான் தந்து`வைச்சதிலை உங்கை எவளவு கிடக்கு? அதிலை கிடந்தா இஞ்சை கொண்டா... ஏன்ரா முழுசிறா? ஏதாவது எடுத்துக்கிடுத்துப் போட்டியே?... சரி, சரி, கிடக்கிறதைக் கொண்டா, என்ரை சாவறுதிக் கெண்டுதான் தந்தனான், அது சாகேக்கை பாக்கலாம். என்னடா என்ரை சவத்தை இழுத்துக் கொண்டே எரிக்க கன காசே வேணும்?...

நூறு தானே கிடக்கு?... இந்தா, இதைக் கொண்டு போய் பிள்ளையளுக்கு துணிமணியை வாங்கியாடா. நல்லநாள் பெருநாள்ளே அதுகள்தான் கட்டிக் கொண்டு நிக்க வேணும்.. என்னடா சொன்னா...? பங்கை அவளை! எனக்கு விசரெண்டே சொல்லுறாயடி ராசாத்தி... ஓமடி, எல்லாரும் சொல்லிப் போட்டினம், நீ ஒருத்தி தான் குறையாக் கிடந்தது... எட்டி மிரிச்சுப் போய் வாங்கியொண்டு ஓடியா...?

உதென்ன? ஆச்சிக்கு மட்டும் சீலை வாங்கி வைச் சிட்டாள்.... எனக்கு வேண்டாமெடி நான் கோடி கட்டினது கொப்பாவோடை போவிட்டுது. அவர் எடுத்துத் தந்த மாங்காய்க் கரைச் சீலை அப்பிடியே கிடக்கு... அதைத்தான் கட்டிக் கொண்டு அப்பன் பெருமாளட்டைப் போகப்போறன்....

இந்தா இதை நீ கட்டு. நான் பாக்கிறன்!... எடியே சரசு.

ஒரெப்பன் திருனூறு கொண்டோடி மோனை.... எங்கை உவன் போனானை போனான் காணேல்லை....

நல்ல கதைதான்; பெடிபெட்டைக்கில்லாமல் எனக் கெல்லே சீலை எடுத்து வைச்சிருக்கினம்... இதுகளுக்குத் துடிக்கிற அளவுகூட என்ரை வயித்திலை பிறந்த அவளுக்குத் துடிக்கையில்லை.

இப்ப சாப்பிடேல்லை ராசாத்தி. நான் பெருமாளிட்டைப் போட்டு வாறன்.





10

சுவீப்

தந்தியைப் பரபரப்புடன் உடைத்துப் பார்த்த புறக்ரர் பாலசிங்கத்தார் திகைத்துப் போய் வெகுநேரம் வரை அப்படி யே நின்று விட்டார்.

அதிலிருந்த வாசகம்....

"பாலனுக்கு ஓர் இலட்சத்து அறுபதினாயிரம் ரூபா 'காலி ஜிம்கானா சுவீப்' விழுந்திருக் கிறது" என்பது. அதாவது புறக்ரர் பாலசிங்கத்தார் வீட்டு வேலைக்காரப் பையன் பால னுக்கு அடித்து விட்டது 'காலி ஜிம்கானா சுவீப்'.

எக்கச் சக்கமான ரொக்கம். ரூபா ஒன்று இரண்டா? ஒரு இலட்சத்து அறுபதினாயிரத்துச் சொச்சமல்லவா?

அதிர்ஷ்டக்காரப் பயல்தான்!

ஆனால் பாலன், இந்தச் சந்தோஷி அதிர்ச்சியைத் தாங்குவானோ, என்னவோ? பத்து ரூபாய்த் தொகையின் நாமத்தைத் தவிர வேறு தொகையின் உச்சரிப்பையே கேட்டிருக்காத பாலன்... என்ன ஆவானோ!

அதனால்தான் பாலசிங்கத்தார் இன்னும் விஷயத்தைச் சொல்லவில்லைப் போலும். எப்படி அந்தச் சின்ன இதயம் இந்தப் பெரிய சந்தோஷத்தைத் தாங்க முடியும் என்று நினைத்திருப்பார்.

அவரைப் பொறுத்த வரையில் இது ஓர் அற்ப விஷயம்.

அவரென்ன அவ்வளவு சாதாரண பிரகிருதியா, இந்த அதிர்ச்சி தாழமாட்டாமல் 'ஆ!' என்று வாயைப் பிளந்தபடி உயிரை விடுவதற்கு? அது பாலனைப் போன்ற பரம தரித்திரங்களுக்கு நிகழ்ந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

என்றாலும் அவருக்கும் சிறு அதிர்ச்சி ஏற்படாமலில்லை. அதிலிருந்து அவர் விடுபட வெகு நேரம் பிடித்தது. விரித்த தந்திக் கடுதாசியை இன்னமும் அவர் முகத்திற்கு நேராகவே கைகள் பிடித்த வண்ணமிருந்தன. சிரித்தபடி சலனமற்று இருந்த அந்தக் கடுதாசியில் அவர் வாயிலிருந்து சுரந்து வடிந்த உமிழ்நீர் சிந்தி அவரை விழிப்படையச் செய்தது. திடீரென்று அவரை அறியாமலே அப்படி நிகழ்ந்து விட்ட அக்கௌரவக் குறைவான செயலை நினைத்த போது வெளியுலகத்து உணர்வு வெட்கத்தை உண்டாக்கவே அருகில் யாரும் நிற்கிறார்களோ என்றொரு நோட்டம் விட்டார்.



நல்ல வேளையாக யாரும் அங்கில்லை. அந்த அளவில் மனத்திற்குப் பெரிய நிம்மதி. அவசரமாக வாயில் எஞ்சியிருந்த வீணத்தையும் 'மடக்' கென்று விழுங்கிக் கொண்டார்.

தந்தியை வெகு நிதானத்துடன் மடித்துக் கொண்டிருந்த அவருக்குத் திடீரென்று ஓர் ஐயுறவு. 'அப்படித் தானா' என்பதை உறுதிப்படுத்துவதற்காக, மறுபடியும் அத்தந்திக் கடுதாசியை அவசரமாக மடிப்பைக் குலைத்துப் படிக்கலானார்.

சந்தேகமேயில்லை. அப்படித்தான்.

ஓர் இலட்சத்து அறுபதினாயிரமும் சொச்சமும். பாலனுக்குத்தான் விழுந்திருக்கிறது!

'லக்கி போய்' என்று நினைத்த பாலசிங்கத்தாருக்குத் திடீரென்று தகப்பன் சொன்ன கதையொன்று ஞாபத்திற்கு வந்தது.

"புங்கங்குளத்து வைரவ கோவிலடியில் ஒரு நாளும் ஏமசாமத்திலை மாடுகளை அவிழ்த்துக் கட்டாதை; அதிலை ஒரு பொல்லாத வயிரவர் இருக்கு. சாமம் ஆகும் போது 'இந்தாபிடி, இந்தாபிடி' என்றொரு குரல் கெதியாக நெருங்கி வரும். ஆச்சிப்பிள்ளையின்ரை கிட்டிணன் வண்டில் மாட்டை விட்டிட்டு ஓடிப்போய் பயத்தில் செத்தது உப்பிடித்தானே!" என்று கிடுகு வியாபாரியாயிருந்த பால சிங்கத்தாரின் தகப்பனாருக்குச் சொல்லியிருந்தார் களாம். அந்தக் காலத்தில் 'விறைச்சவன்' என்று பெயர் எடுத்த அவர் எதற்கும் பயப்படாத மனிதன்.

ஒரு நாள், அவர் தனித்துப் போய்விட்டார். மாடு களுக்கும் நல்ல களை. இரவு நடுச்சாமவேளை.



கும்மென்ற இருட்டு. 'வாறது வரட்டும்; கொஞ்ச நேரம் இதிலை தங்கி விட்டுப் போவம்' என்று நினைத்து மாடுகளை ஆறக் கட்டிவிட்டு வண்டிலுக்குள் சரிந்தாற் போல அயர்ந்து போய்விட்டார். இருளைப் பதுக்கிவைத்த உயர்ந்த மரச் சோலையிலிருந்து அந்தச சப்தம் வலு வேகமாக வந்ததாம். மாடுகள் வெருண்டடித்துத் துள்ளின. 'இந்தாபிடி, இந்தாபிடி' என்ற குரல் வண்டில் தட்டிக்கு வெகு சமீபமாகக் கேட்கவே, எதற்கும் துணிந்த பாலசிங்கத் தாரின் தகப்பனார் 'எங்கே, இஞ்சை கொண்டா' என்று கரங்களை நீட்டினாராம். அவ்வளவு தான். அந்த நீட்டிய கரங்களிலே... என்னத்தைச் சொல்லுவது? 'உன்னாணை, நம்மினா நம்புங்கோ, நம்பாட்டிப் போங்கோ' என்று அவர் சொல்லும் போது பார்க்க வேண்டுமே! 'பென்னம் பெரிய' சருவக் குடமொன்று 'பொத்' தென்று கைகளில் வைக்கப் பட்டதாம். ஆச்சரியம் தாங்கமாட்டாமல் அதற்குள் பார்த்த போது, பொன்னும், வெள்ளியும் இன்னும், விலை மதிக்க முடியாத ஏராளமான வேறு பல் பொருட்களும் கண்ணைப் பறித்தனவாம்!

தகப்பனார் சொன்ன கதையை நினைத்துப் பார்த்த பால சிங்கத்தாருக்கு ஓர் உண்மை புலப்பட்டது. அது 'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்தோ, வேலியைப் பிடுங்கிப் போட்டோ கொடுக்கும்' என்பது. இந்த நினைவினால் ஆனந்த பாஷ்பம் பொங்கச் சிரித்தார்.

அச்சிரிப்பில் முதுமை கோடு கட்டி நின்ற அவர் முகச் சுருக்கங்கள் இன்னும் பன்மடங்காகி, மடிப்புக்களைக் கூட்டி விட, அதற்குள் சிரிப்பின் தூவல் ஒளித்து விளையாடிற்று.



'என்ன இன்பகரமான நாளிது! எப்பவுமே இப்படி இருக்கப் படாதா? இன்று காலமை என்னை ஆரெழுப்பினது... ஓ... மோம்! மறந்து போய்விட்டேன். அவன்தான் பாலன்! கோப்பிக் கிளாசோடையெல்லே வந்து நிண்டு என்னை எழுப்பினவன்... எனிமேல் எப்பவுமே அவனைக் கொண்டு தான் என்னை எழுப்பு விக்க வேணும். நல்ல முழுவியளம்!' என்று நினைத்துக் கொண்டவர், இடுப்புச் சாரத்திற்குள் சுருட்டிச் செருகி வைத்திருந்த தீப்பெட்டியை எடுத்தார். ஆள்காட்டி விரலும், நடுவிரலும் சேர்ந்து சாக்காட்டு நிலையில் திருகி நசுக்கிக் கொண்டிருந்த புகையிலைச் சுருட்டின் நசிந்த பகுதியை விரல்களால் நீவி, பிரிந்திருந்த குழந்தையைப் பேரவாவுடன் தடவிக் கொடுக்கும் தாயின் பரிவு காட்டினார். அது கூட அவருக்குப் பத்தியப்பட வில்லை. ஆகவே அச்சுருட்டை வாயில் வைத்து அலாதியாக அடிதலைமாறிச் சூப்பினார். தொடர்ந்து, திருஷ்டித்துப்பல் புலி உறுமலுடன் வெளி வந்தது. கிணற்றைக் கலக்கி இறைத்துச் சாம்பிராணிப் புகை காட்டிய மனத்திருப்தி.

சுருட்டை வாயில் பொருத்திப் பற்றவைத்தார். சுகானு பவம் காட்டும் புகை அவர் நரம்புகளுக்குப் புத்துணர்ச்சி அளித்திருக்க வேண்டும். ஆலவிருட்சமாகக் காட்சி தந்த அப்புகைக் கும்பல் கைதேர்ந்த சைத்திரி கனின் கலைப் பார்வைக்கே அகப்படாத அற்புதக் காட்சி. அதை இரசித்து அனுபவித்த பாவனையுடன், இன்னொரு 'தம்'மை உறிஞ்சி இழுத்து இளவட்டக் காலத்து நினைப்பொன்றின் உந்துதலினால் புகை வட்டங்களை இலையுதிர் காலத்துச் சருகெனப் பறக்க விட்டார்.



முற்றத்துப் பந்தர் மல்லிகையின் சுகந்த வாசம் அவருடைய மனைவியின் மங்கைப் பருவத்து நினைப்பைத் தூண்டிற்று. இப்போதும் ஒருக்கால் சந்தோஷமாய் இருக்க லாந்தான்; ஆனால் அதற்குத்தான் பிள்ளை குட்டிகளும், வேலைக்காரனும் சனியனாகக் குறுக்கே நிற்கிறார்களே! அதனால் அவருக்கு வேறெதுவும் செய்யத் தோன்ற வில்லை. இந்தப் பெரிய சந்தோஷத்தை எப்படி அனுபவிப்ப தென்பதே அவருக்கு இப்போதுள்ள பெரும் பிரச்சனையாகி விட்டது.

என்ன செய்வது?

மனம் குரங்காக அலைக்கழிய 'போய்' என்று ஓங்கிக் குரல் கொடுத்தார்.

'போய்!'

குரல் அறுந்து துண்டிக்கப்பட்ட வேகத்துடன் துப்பாக்கிச் சன்னமாகப் புறப்பட்டு சமையல் அறையி லிருந்த பாலனின் காதைக் கிழித்தது.

"ஐயா!"

அலறிப் புடைத்துக் கொண்டு அரவம் கேட்ட குழி முயலாகப் புறப்பட்டான் பாலன்.

வழக்கத்தில் கனல் தெறிக்கும் அந்தக் கண்களில் இன்று புதுமையாக ஊற்றெடுத்து நிற்கும் கருணையின் மகிமைதான் என்னவோ? 'ஏதோ பிழை கண்டுபிடித்து அதற்குத் தண்டனை தரும் பொருட்டுத்தான் தன்னைக் கூவி அழைத்தாரோ என்ற ஐயப்பாட்டில் பதகளித்துக் கொண்டு நின்ற பாலனுக்கு பாலசிங்க ஐயாவின் புதுமையான தாயன்புப் பாசத்துடன் கூடிய பார்வை ஒருவகைத் தெம்பைக் கொடுத்தது.



"யூ ஆர் வெறி லக்கி பாலா... ஓ! மை புவர் போய்" – அன்பில் தோய்ந்த ஆங்கில வார்த்தைகள் துண்டம் துண்டமாக அவர் தொண்டைக்குள்ளிருந்து அறுந்து விழுந்தன. அதன் அர்த்தம் படிப்பறிவற்ற பாலனின் சிறிய மூளைக்குள் புகுந்து விளங்கி இருக்க நியாயமில்லை. பாஷை விளங்காமையினால் ஏற்பட்ட பயத்தின் சாயல் முகத்திற் தோன்றி வியர்வைத் துளிகளைத் தோற்றுவித்தன.

"போய். உனக்கு எத்தனை அக்காமார்?" என்று கேட்டார்.

"எட்டுப் பேர் ஐயா" என்று சொல்லி நிறுத்தினான் பாலன்.

"எட்டுப் பேரா!" என்று ஆச்சரியம் மேலிடக் கேட்ட பாலசிங்கத்தார் தனக்குள்ளாக, 'ஒருவன் கெட்டுப் போறதுக்கு ஒரு பெட்டையே போதுமே!' என்று நினைத்துக் கொண்டவர், இதழ்க்கோடிவரை வந்த சிரிப்பை இழுத்து மறைத்து விழுங்கிக் கொண்டார். கடைசியாக முகத்தைச் சுழித்தபாணியில், அந்த எட்டுப் பெட்டைக் குட்டிகளில் ஏதோ ஒருவகை அருவருப்பு மேலிட்டிருக்க வேண்டும்.

"சரி, சரி. அந்தப் போத்தலையும் கிளாசையும் கொண்டு வா" என்று பணித்தார்.

வெள்ளைப் போத்தலும் கிளாசுமாக வீட்டு அறையி லிருந்து மீண்ட பாலனை, வைத்து விட்டுப் போகும்படி சைகை காட்டினார்.

போத்தலும் கிளாசும் பரஸ்பரம் மோதிக் கொள்ளும் ஒலி.

எதற்கும் சுழற்றிப் பேசும் எலும்பற்ற நாக்கின் அழுக்குத்



தன்மை கழுவப்பட்டு 'விர் விர்' எனக் கொடுப்புப் புகுதியெல்லாம் கூட விறைப்புப் புரையோடுகிறது. இன்னும் இரண்டு 'டிராம்' உட்சென்றுவிட்டால் கேர்ன்னைக்குப் பஞ்சமேது?

'ஈசிச்செயரி'ல் கைகளை எறிந்து படுத்திருந்தவர், கால்களையும் தூக்கி எதிரேயிருந்த 'ரீபோயில்' பரப்பிப் போட்டுக் கொண்டார். ஒரேயடியாகக் கால்கள் கிழிந்து விடாத வண்ணம் சாரம் பாதுகாத்தது. தேகம் வான் பறவையின் சுகானுபவம் காட்டிற்று. திவ்விய புருஷர் பாலசிங்கத்தார் தன்னை மறந்த நிலையில் பேசுகிறார்.

"மை... லக்கி போய்..."

வேலைகளை முடித்துவிட்டு வீட்டிற்குள் எதுவோ வேலையாக வந்த பாலன், பாலசிங்கத்தாரின் பிதற்றலைக் கேட்டு ஓடி வருமளவுக்குக் காது நல்ல கூர்மை.

"ஐயா, கூப்பிட்டீங்களா?' – விசுவாசமுள்ள அந்த வேலைக்காரப் பையன், அவர் எதிரே வந்து நின்றான்.

"ஆரடா, அது! பாலனா? பாலா, உனக்குச் சுவீப் விழுந்திருக்கடா. யூ ஆர் லக்கி போய்... வண் லாக் அன் சிக்ஸ்ரி பைவ் தவுசன் ஒட்..." என்றவர் சாய்மனைக் கதிரையின் பக்க வாட்டில் செத்த சவமாகத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார். கண்கள் மூடிக்கிடந்தன.

பாவம் பாலன். தலையைச் சொறிந்து கொண்டே நின்றான். அந்தப் பால் வடியும் முகத்தில், அவன் சிரித்த அசட்டுச் சிரிப்பு அணைந்து கொண்டிருக்கும் விளக்கின் சாயல் காட்டிற்று.

ஒன்றும் புரியாத நிலையில் இன்னமும் அங்கேயே நின்று கொண்டிருந்த பாலனின் பார்வை ஐயாவின் வாயில்



ஊர்ந்து திரியும் இலையானிலேயே நிலைத்திருந்தது. கைகளைத் தூக்கி அவ்விலையானைத் துரத்துவதற்குத் திராணி அற்ற நிலையில் கிடந்த பாலசிங்கத்தார், வலிப்புக் காட்டிச் சுழித்து அதை ஓட்ட நினைத்தார் போலும்! அந்த அருவருக்கக் கூடிய செய்கையை – அது பாலனுக்கு விளையாட்டு – அதை மிகவும் விரும்பி ரசித்து அனுபவித்துக் கொண்டிருந்த பாலன் வெகு நேரத்தின் பின்பு அவ்விடத்தை விட்டு அகன்றான்.

செத்த நிலையில் கிடந்த பாலசிங்கத்தார், உண்மையில் செத்துத்தான் போய் விட்டாரா? செத்த சவத்திலொன்றாக வேட்டித் துணிபோன இடமே தெரியாமல் கிடக்கும் அந்த மனிதரிடத்தில் என்ன சொல்ல வேண்டியிருக்கிறது என்று நினைத்திருப்பான் போலும்.

புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட புறக்ரர் பாலசிங்கத்தாருக்கு வாழ்க்கையில் என்ன குறை? அவர் தொட்டம் தொட்டமாக வளவுகள் வாங்கிக் கட்டி விட்டிருக்கும் ஆறேழு மெத்தை வீடுகள் சொல்லுமே அதற்குச் சாட்சி!

சொந்த ஊரிலும் நகரத்திலும் பல வீடுகளுண்டு. பிள்ளைகளின் எண்ணிக்கை அவ்வளவாக ஒன்றும் அளவு கடந்து போய்விடவில்லை. அதெல்லாம் குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்தான் நடந்திருக்கிறது. ஆணும் பெண்ணுமாக ஆக மொத்தம் மூன்று. 'பறுகின கோழிப் பேடாக' இன்னமும் இளமை வனப்புக் காட்டும் குமரித்தன்மை அழியாது பொங்கிப் புடைத்து நிற்கும் கொங்கைகளையுடைய அழகிய மனைவி. அல்சேஷன் நாய்கள் இரண்டு. ஆக இவர்கள் எல்லோருக்கும் பொதுவில் பாலன்தான் அந்த வீட்டு வேலைக்காரன்.



என்ன இருந்துமென்ன? பாலசிங்கத்தாரின் ஆசையின் மீசை நரைத்து விடவில்லை. ஆசைக்குத்தான் ஒரு போதும் மீசை நரைப்பதில்லையே! பாலசிங்கத்தாரின் தொழில் முறையால் வரும் வருவாய், பளையிலுள்ள தென்னந் தோட்ட வருவாய், கொழும்பிலுள்ள கம்பெனி யொன்றின் பங்கு லாபம், யாழ்ப்பாணத்திலுள்ள வீடுகளின் வாடகையோடு, பால் மாடுகளும், ஊர்க் காணிகளும் தரும் பலன் வேறாக உண்டு.

இருந்தும் அதிர்ஷ்ட லாபத் துண்டுகளிலும், அரசாங்கம் நடத்தும் சுவீப் ரிக்கற்களிலும்கூட அவருக்கு ஆசை. 'சனியன் ஒருக்கால் எண்டாலும் விழாதாமே!' என்று பத்திரி கைகளில் நம்பர் வரும்போது பாலசிங்கத்தார் கொதித் தெழுவதைப் பார்க்க வேண்டுமே!

எத்தனை தடவைகள் தான் வாங்கித் தோற்பது? விட்டு விடவும் மனம் வருவதில்லை. ரிக்கற்றுக்கள் வரும் தவணைகளில் நம்பிக்கை என்ற பயிர் நன்றாகச் செழித்து மதர்த்து நெஞ்சில் துளிர்விடும். 'இந்தத் தரம் கட்டாயம் அடிக்கும்' என்றுதான் வாங்குவார். ஆனால் இவ்வளவு காலமும் அதிர்ஷ்டம் படுபட்சியாகி அவரைக் காலை வாரிக் கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும் காலி ஜிம்கானா சுவிப்பில் அவர் கவனத்தை வெகு வாகச் செலுத்தினார்.

முதலில் தெய்வங்களின் பெயரில் கற்பூரம் கொளுத்து வதாக நேர்த்தி வைத்து எடுத்துப் பார்த்தார். அந்த வரிசையில் கடைசியாக இடம் பெற்ற முற்றவெளி முனியப்பரும், யாழ்ப்பாணக் கோட்டைக்குள் ஒளித்துக் கொண்டு விட்டதா கவே பட்டது அவருக்கு.



அடுத்து வந்த ரிக்கற்றுக்களைத் தம்மிடமுள்ள அல்சேஷன் நாய்களின் பெயரில் எடுத்தார். என்ன துரதிர்ஷ்டம் பிடித்த நாய்கள்! அந்த நாய் ஒன்றுக்கு எஜமான் ஆத்திரத்துடன் எட்டி உதைத்துக் கொண்டார்.

'எனி ஆற்றை பேருக்கு எடுப்பது?'

அடுத்த 'ரிக்கற்' றைக் கையில் வைத்திருந்த ஏஜென்ட் பாலசிங்கத்தாரை அவசரப்படுத்தினான்.

'பாலனின் பெயருக்கா? சை! நாய்களிலும் கடை கெட்ட அவனுக்கா அதிர்ஷ்டமிருக்கப் போகிறது?'

'ஒருக்கால் விழுந்து விட்டால்....?' மனதில் சபலம். நினைவுகள் சமநிலைப்படுவதற்கு வெகு நேரம் போராட வேண்டியிருந்தது.

'சரி, ஒரு தரம் 'ற்றை' பண்ணிப் பார்ப்போம்' என்று நினைத்தவருக்கு ஒரு சிறு நம்பிக்கைப் பொறி. தோல்வி என்றால் அவனுக்குக் கொடுக்கும் பத்து ரூபாய்ச் சம்பளத்தில் பிடித்துக் கொண்டு கொடுக்கலாம். விழுந்தால்... அதற்கு மறு மொழியை அவர் அப்போது தயார் படுத்தவில்லை.

ரிக்கற்றை எடுத்த பின்னும் அவருடைய தீர்க்க லோசனையின்படி மூர்க்கத்தனமாக விழாதென்றே முடிவு கட்டினார். அதனால் அந்தச் சங்கதியை முற்றாக மறக்க முயற்சி செய்து கொண்டிருக்கும் போது – மூன்று மாதங்கள் ஆகிவிட்டன – இன்று காலையில் அந்தத் தந்தி வந்தது...

பாலசிங்கத்தார் வெறி முறிந்தெழுந்துதான் விஷயத்தை விளக்கிச் சொல்லப் போகின்றார் போலும்!

அன்று சாயங்காலம் நாலு மணிக்கு 'கலை'யை



முற்றாக அகற்றிவிட்ட பாலசிங்கத்தார், வெகு நிதானமாக எழுந்தார். குடலுள் புகைந்து எரிந்த நெருப்பை அணைக்க இரண்டு கிளாஸ் தண்ணீரை 'மடக் மடக்' கென்று குடித்தார். அபரிமிதமாக நாறிய வாய் நாற்றத்தைப் போக்கடிக்க நினைத்த அவருக்கு ஒரு வாய் வெற்றிலை போட்டுக் கொண்டால் தேவையில்லையென்று படுகிறது.

தலை சற்று அமுக்கமாக இருந்த போதிலும், உடல் மட்டும் மிகவும் இலேசாக. காற்றில் பறந்து செல்லும் கடுதாசிப் பட்டமாக சுகானுபவம் காட்டுகிறது. வெற்றிலை போட்ட உற்சாகம். உள்ளம் ரப்பர் பந்தாக எ:றிக் குதிக்கின்றது. மனதில் என்ன நினைத்துக் கொண்டாரோ தெரியாது. பாலனுக்குக் குரல் கொடுத்தார்.

"பாலன், 'டீ' கூப்பிடுது" கிணற்றடிப் பக்கத்திற்குப் பாலனை நோக்கி 'மெசேச்'சை 'பாஸ்' பண்ணினாள் பால சிங்கத்தாரின் மகள்.

"ஐயா!" என்றபடி தலையைச் சொறிந்தான். எதிரில் நின்ற பாலன்.

"ஆர், பாலனோ?... ஏன்ரா, உங்கை என்ன படமடா நல்லதாய் ஓடுது?" என்று கேட்டார் பாலசிங்கத்தார்.

பாலன், பாலசிங்கத்தாரிடம் வேலைக்காரனாகச் சீல் குத்திக் கொண்டு வந்து மூன்று வருஷங்களாகின்றன. அவனுடைய பதின்மூன்று வயதே, தன் வீட்டுச் சோற்றுப் பருக்கையைத் தின்றால்தான் ஆனது என்றுகூட நினைத்திருப்பார் பாலசிங்கத்தார். இந்த மூன்று வருஷ காலத்திலும் இப்படியொரு கேள்வியை அவனைப் பார்த்துக் கேட்டறியாத அவரைச் சற்றுச் சந்தேகத்துடன், ஆனால் ஆச்சரியம் தேங்கிய விழிகளால் ஒரு முறை பார்த்துக் கொண்டான்.



பாலசிங்கத்தார் திடுதிடுப்பென்று இப்படிக் கேட்டதால் பாலன் ஆச்சரியப்படாமல் இருக்க முடியுமா? சந்தேகத்தையும், சந்தோஷத்தையும் அவன் முகம் சரிசமமாகப் பங்கிட்டுக் காட்டியது.

"வெலிங்டனிலே இரத்தக் கண்ணீர், மனோகராவிலே மாய உலகம். வின்ஸரிலே நல்ல தீர்ப்பு, இராணியிலே பணக்காரன் ஆசை... எல்லாப் படமும் ஓடுது ஐயா" என்று விறுவிறென்று ஒப்புவித்தான் பாலன்.

"அம்மாவைக் கேட்டாயாடா, படத்துக்குப் போகப் போற னெண்டு?" என்று கேட்டார் பாலசிங்கத்தார்.

மூன்று மாதத்திற்கு முந்தி ஒருநாள் கேட்ட ஞாபகம்! பாலன் இப்போது அதை ஞாபகப்படுத்திக் கொண்டான். சிவாஜிகணேசன் நடித்த நல்ல படமென்று பாலசிங்கத்தாரின் மக்கள் பார்த்து வந்து சொன்னால் ஏற்பட்ட ஆசை. ஆனால் அவன் பார்க்கவில்லை. படம் போய் பதினைந்து நாட்களாகி விட்டன. பாலனின் 'கேஸ்' இப்போது தான் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தத் தடவை வெற்றி நிச்சயம்தான். பிரக்கிராசியார் பிரதிவாதிக்காக ஏற்பட்டு வாதாடுவதென்றால்...

குழைந்து நிற்கும் பாலனை என்றுமில்லாதபடி வெகு குளிர்மையோடு பார்த்தார் பாலசிங்கத்தார். பின்பு 'பேர்ஸை' எடுத்து அதற்குள் அடுக்கி வைத்திருந்த காசுத் தாள்களில் அளைத்து விளையாடி ஒரு ஐந்து ரூபாய் நோட்டை உருவி வெளியே எடுத்தார். பாலன் அதையே இமைக்காமல் பார்த்தபடி நின்றான்.

"இந்தாடா, பார்த்துவிட்டுச் சீக்கிரம் ஓடி வா" என்று கொண்டே ஐந்து ரூபாய் நோட்டை அவன் கையில் கொடுத்தார்.



ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம் பாலனுக்கு. காசைக் கையில் வாங்கிக் கொண்டவன் நாக்குழற "அஞ்சு ரூபா..." என்று ஏதோ சொல்ல முனைந்தான்.

அதை இடை மறித்து, "உனக்கிண்டைக்குச் சுவீப் விழுந்திருக்கெண்டு நினைத்துக் கொள். மிச்சத்தில் உனக்கொரு சாரமும் உதிலை வாங்கிக் கொள். சரி, சரி போட்டுச் சீக்கிரமா ஓடி வாடா" என்று துரிதப்படுத்தினார், புறக்ரர்.

ஒருகணம் ஒன்றும் புரியவில்லை மறுகணம் மயக்கம். ஏன் அப்படி? பாலன் எல்லா நினைவுகளையும் சமநிலைப் படுத்தி, கரவாக நினைக்காமல், சந்தோஷத்திற்கு முதலிடம் கொடுத்தான்.

இதோ –

அரைக் கை பெனியனும், சிவப்புக் கோடுகள் போட்ட 'பைஜாமா' சாரமுமாக, புறப்பட்டுப் போகும் பாலனின் பின்னே...


அவன் பின்னே 'ரைகரு' ம் 'பப்பி' யும் ஓடி வருகின்றன.

பாலனின் கடுகதி நடை தடைப்பட்டது. அவைகளைத் தடவிக் கொடுத்த பாலனின் உற்சாகம் கரைபுரண்டுவர, "டோய் 'ரைகர்', 'பப்பி'... வாறியளா படத்துக்கு?... எனக் கிண்டைக்குச் சுவீப் விழுந்திருக்கடா..." என்றான் வெகு ஆதங்கமாக.

உண்மைதான். கிடைத்த ஒரு சிறிய அளவிலும் பகிர்ந்துண்டு வாழ நினைக்கும் அந்தச் சிறியவனுக்கு இந்த ஐந்து ரூபாவை விடவா இனியும் சுவீப் விழப் போகின்றது?



11



அன்றில் அன்றேல்

வழக்கத்திற்கு மாறாக, அன்று நேரத்துடன் 'கொண் வென்'டை நோக்கி வந்து கொண்டிருந்தாள் மகேஸ்வரி. திகில் மூட்டமிட்ட முகம். இனந் தெரியாத பதற்றம் உந்தும் வேகத்தில் ஒரு வீச்சு நடை. பனி போர்த்திய சீதளப் போர்வை யை ஊடறுத்து விழும் இளங் கதிரில், அவள் நடக்கும் அழகு உள்ளக் கிளர்ச்சியை ஏற் படுத்த வல்லது. வெள்ளை வெளேரென்ற கள்ளிப்பால்



நிறத்தில் தூய்மை சிந்தும் 'யூனிபோம்'. அதன் விளிம்பு தசைப் பிரதேங்களை மறைத்து, முழங்கால் ஜோடியுடன் இரகசியம் பேசுகின்றது. கணுக்காலுக்கு மேல், ஒரு பிடி பிரதேசத்தை மறைக்கும் கால் 'மேஸ்'. வெள்ளை நிற 'வெஜிஸ்' ஜோடி. குத்திச் சொருகி இழுத்து இரத்தஞ் சிந்தும் 'கிறிஸ்' கத்தியின் சாயலில் அவள் நெஞ்சை நேர்பாதியாகப் பிளந்து காட்டும் சிவப்பு 'டை'. சூரிய காந்தி வட்டில், ஊர்ந்தேறும் கருநாகம் போன்ற பின்னல், பச்சைக் குழந்தையை ஏந்தும் வாக்கில், ஒரு கட்டுப் புத்தகங்களை அணைத்திருக்கிறாள். அவளுடைய குருத்துக் கரங்களுக்கு அவை தூக்க முடியாத சுமையாகவே தோன்றுகின்றன. இதனால், அவள் அடிக்கொரு தடவை புத்தகங்களை இடைச் சரிவில் வைத்துச் சிரமந் தணித்துக் கொள்ளுகிறாள்.

கூப்பிடு தூரத்தில் 'கொண்வென்ட்' தவமியற்றுகின்றது. ஆனால், அதற்கிடையில் வீதி பிளந்து தன்னை விழுங்குவதான பயப்பிரமை அவளைக் கப்பிக் கொள்ளு கின்றது. இரவு முழுவதும் படுக்கையை நெருஞ்சிக் காடாக மாற்றிய அந்தப் பயங்கரக் கனவு பலித்து விட்டதா?

வீதியோரமாக இருக்கும் பரமானந்தத்தின் வீட்டில் பறைமேளம் கேட்கிறது. அமங்கலத்தை மறைக்க முடியாது. பரிதாபமாகத் தொங்கும் தென்னங் குருத்துத் தோரணங்கள். 'கேற்'றின் இரு மருங்கும் காய்க் குலைகளை நீட்டி நிற்கும் வாழைமரங்கள்... உள்ளே, விறாந்தைக்கு வெளியே, பரவிக்கிடந்த ஏராளமான கதிரைகளில் சுடலை ஞானத்திற் சிரசுகளைத் தொங்க



விட்ட ஆண்கள் கூட்டம். உள்ளே இருந்து வரும் பெண்களின் ஒப்பாரி அலறல், சாவீட்டுக் கோலத்தை நிறைவு படுத்துகின்றது.

பெண்ணின் லஜ்ஜை கழன்ற அவதி மகேஸ்வரிக்கு. ஒதுக்குப் புறமான இடத்தில், மா மரத்தின் கீழ் பல்லக்குப் பாடைக்கு ஜோடனை வேலைகள் நடைபெறுகின்றன.

'அப்படியும் நடந்திருக்குமா? கனவுகள் அப்படியே பலிப்பதுண்டா?' இக்கேள்விகள் உள்ளத்தைக் குடைகின்றன. 'பலித்திருக்க முடியாது; பலித்திருக்கக் கூடாது' என்ற எண்ணங்களை வளர்த்து, வீதியில் வேரூன்றிவிட்ட கால்களைப் பெயர்த்தெடுத்து நடக்கத் தொடங்குகின்றாள். அவளுடைய தாய் அடிக்கடி சொல்லும் வார்த்தைகள் மனத்திரையில் ஊர்ந்து ஆறுதலளிக்கின்றன.

'அப்பிடி இல்லைப் பிள்ளை. கனவிலே ஒரு காரியம் ஒர் ஆளுக்கு நடந்தால், அது அந்த ஆளுக்குப் பலிக்காது. அந்த அயலட்டையிலைதான் ஆருக்கேன் பலிக்கும்... ஓர் ஆளுக்குத் துக்குறியாக ஏதாவது கனவு கண்டா, சீக்கிரம் அந்த ஆளுக்கு சந்தோஷமான காரியம் ஒண்டு நடக்கும்.' வெற்றிலையிற் பழுத்த அம்மாவின் உதடுகள் அவளுடைய செவிகளுக்குள் ஒதுகின்றன. இந்த வார்த்தைகள் ஒலித்து, மடிந்து, மீண்டும் பூதாகரமாக ஒலிக்கின்றன.

ஏகாந்தப் பொழில், பால் சிந்தும் நிலவிற் குளித்து மகிழ்கின்றது. மல்லிகைப் பந்தல். அதன் பூக்கள் சொரிந்து இயற்கையிற் சமைந்த மெத்தை. நறுமணமும், சீதளமும் உடலிலே இதம் ஊட்டுகின்றன. மகேஸ்வரியைப்



பரமானந்தன் அள்ளி அணைத்து... அந்த அணைப்பிலே தான் எத்தனை கோடி இன்பம்? இன்பத்திற்கு உடல் கொடுத்து, செயல் இழந்து, விழிமூடிக் கிடக்க, 'ஐயோ' என்ற பயங்கர அலறல் அவள் மூச்சைத் திணறடிக்கின்றது. கன்னங்கரிய உருவம். அந்த உருவம் வயிரவராகவோ, நரசிம்மராகவோ இருக்கலாம். பரமானந்தனைக் குத்திப் பிளந்து நெஞ்சிற் கசிந்தோடும் இரத்தத்தைப் பச்சை யாகவே ருசி பார்க்கின்றது. அவளைக் கண்ட அந்த உருவம் இரத்தம் வழிந்தோடும் உதடுகளைக் குரூர கோணத்திற் குவித்துப் பயங்கரமாகச் சிரிக்கிறது - அந்தச் சிரிப்பே அவளுடைய உயிரை உறிஞ்சுகின்றது. இதயக்குலை பிடுங்கப்பட்ட வேதனையுடன் 'ஐயா, அம்மா' என்று அலறிக் கொண்டே பக்கத்திற் படுத்திருந்த தாயைக் கட்டிப் பிடித்துக் கொள்ளுகின்றாள். கண் விழித்த தாய்,'சீ மூதேசி... ஏதோ எச்சில் பேயின்ரை சேட்டை. 'தூ... தூ... தூ...' என்று துப்பிவிட்டு மகளின் நெற்றியையும் நாக்கால் எச்சிற்படுத்திப் படுக்க வைக்கிறாள். பின்னர் குலைந்த தூக்கத்தை அவள் தொடருகிறாள். ஆனால், மகேஸ்வரிக்குப் படுக்கை சிதை யின் தீப்படுக்கையாக மாறி விட்டது. அந்தப் பயங்கரக் கனவையுந் தோற்கடிக்கும் ஆயிரம் பயங்கர நினைவுகள். அந்தப் பயங்கர நினைவுகளை உருட்டிப் பொழுது புலர, வேறு நினைவுகளற்றவளாக 'கொண்வென்'டிற்குப் புறப்பட்டு விட்டாள்.

பின்னால் இரைத்த காரின் 'ஹோண்' சப்தம் மகேஸ்வரிக்குச் சுய பிரக்ஞையை ஊட்டுகின்றது.



திரும்பிப் பார்ப்பதற்குள்ளாகவே கார் முகப்பு அவள் கவுணில் உராய்ந்து நிற்கிறது. அதனை ஒட்டி வந்த 'ஜாங்கி' மைனர் கண்களைச் சிமிட்டி உதட்டை நாக்கால் நனைத்தபடி, அவளைப் பார்த்துச் சிரிக்கிறான். அவனுடைய செய்கை அவளுக்கு அருவருப்பை ஊட்டியதுடன், வேதனையையும் வெப்பிசாரத்தையும் பெருக்குகின்றது. இந்தப் பதகழிப்பிற் சிதறிய புத்தகங்களைக் கூடப் பொறுக்கி எடுக்காது, ஒதுங்கி நிற்கின்றாள். பணச் செருக்கின் தினவைப் பறைசாற்றிக் கார் செல்லுகின்றது.

புத்தகத்தைப் பொறுக்கி எடுக்கும்பொழுது, மீண்டும் பரமானந்தத்தைப் பற்றிய நினைவுகளே பற்றிக் கொள்ளுகின்றன. அவன் அவள் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அந்த மாடி ஜன்னலை விழிகள் மேய்கின்றன. அது வெறிச் சோடிக் கிடக்கின்றது. நேற்றுப் பின்னேரம் கூட, அந்த ஒரு கற்றைச் சுருள் மயிர் நெற்றியை முத்தமிட, பற்பசை விளம்பரத்திற்கு ஏற்ற அந்தப் பற்களைக் காட்டி... அந்த அபூர்வச் சிரிப்பு இதயத்தை அளைந்து குழைத்தெடுக்கும் சிரிப்பு... 'வீட்டில் ஆரோ செத்துக் கிடக்கும்பொழுது, அங்கை அவர் நிக்க முடியுமே? அது வடிவா இருக்குமே?' என்று நினைக்கின்றாள்.

பரமானந்தம் வீட்டிற்குச் சனங்கள் வந்த வண்ணமிருக்கிறார்கள். அவர்களிற் சிலர் தன்னையே உற்று நோக்கி, தன்னைப் பற்றியே பேசுவதான ஒரு பிரமை ஏற்படுகின்றது. கால்களுக்கு வேகத்தைக் கூட்டி, 'கொண்வென்'டை நோக்கி விரைகிறாள்.

'கொண்வென்'டில் மகேஸ்வரிக்கு ஏமாற்றமே காத்திருக்கிறது. சிவமணி வருவாள் என்று எதிர்பார்த்த



வளுடைய எண்ணம் ஈடேறவில்லை. சிவமணி, பரமானந்தத்தின் பக்கத்து வீட்டிற் குடியிருப்பவள். அவளிடங் கேட்டால், பரமானந்தத்தின் வீட்டில் நடைபெற்ற சம்பவத்தை அறியலாம் எனத் துடித்தாள்.

மணி அடிக்கிறது... ஜெபம் முடிகிறது... வகுப்புகள் ஆரம்ப மாகின்றன. படிப்பிலே மனதை ஏற்றி வைக்க மகேஸ்வரியால் முடியவேயில்லை. இனந்தெரியாத சோகத் தொனியொன்று அவள் நெஞ்சைக் கசக்கிப் பிழிகின்றது. அடுத்தடுத்து வந்த இரு ஆசிரியைகளும் "என்ன மகேஸ்வரி ஒரு மாதிரியாய் இருக்கிறீர்? சுகமில்லையோ?" என்று கேட்கச் செய்தார்கள். அக்கேள்வி, அனுதாபத்திற் பிறந்தாலும், சோகத்தை வளர்க்கவே உதவுகின்றது. 'சரியான தலையிடி" என்று சொல்லி வகுப்பை விட்டு வெளியேறி, அத்தி மரத்தின்கீழ் போடப்பட்டிருக்கும் 'சிமென்ட்' வாங்கில் அமர்கின்றாள்.

அந்த மரத்தின் கிளையில் அணிலொன்று தத்தித் தத்தித் திரிகின்றது. அது சோகத்துடன் தன் இணையைத் தேடித் திரிவதான நினைவொன்று ஊருகின்றது. நேற்று இதே மரத் தடியில், காகக் கிளையொன்று ஓர் அணிலைக் குத்திக் கிழித்ததை, அவள் நேரிற் பார்த்தாள். அந்த அணில் ஆண் அணிலாக இருந்திருக்க வேண்டும். இப்பொழுது இக்கிளையிலே பரிதவித்துத் திரியும் அணில், அதன் மனைவியாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் இயல்பாக ஏற்படுகின்றது. அவள், தன்னை அந்தப் பெண் அணிலின் நிலையில் உருவகப் படுத்துகின்றாள். காரண விட்டத்திற்குள் அடங்காது, சோகம் கட்டுப்படாது எழுகின்றது. நெஞ்சுக்குள் அடைத்திருக்கும் எதையோ



அழுது தீர்த்துவிட வேண்டுமென்ற உணர்வு. பரமானந் தத்தைப் பற்றி மனம் மேய... வாய்க்குள்ளும் கண்ணீர் புகுந்து உப்புக் கரிக்கத் தொடங்கிய பின்னர்தான், தன் மனப் பூங்காரம் தீருமட்டும்தான் அழுது விட்டதான எண்ணம் எழுகின்றது. 'கண்ணீரை யாராவது பார்த்து விட்டால்...' என்ற அவசர எண்ணத்துடன், நெஞ்சுச் சட்டைக்குள் சொருகி வைத்திருந்த கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைக்கின்றாள்.

அந்தக் கைக்குட்டையின் ஒரு மூலையில் இருந்த 'பி' என்ற ஆங்கில எழுத்து அவளுடைய கண்களை உறுத்து கின்றன. அது பரமானந்தன் அவளுக்குக் காதற் பரிசு களாக அளித்தவற்றுள் ஒன்று. அந்த எழுத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அவளுடைய எண்ணங்கள் நீள்கின்றன.

சில மாதங்களுக்கு முன்னர்தான் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு பரமானந்தன் ஊருக்குத் திரும்பினான். உள்ளூர்ப் பட்டதாரிகளுக்கே வேலை கிடைக்காமல் இருக்கும்பொழுது தனக்கு யார் வேலை தரப்போகிறார்க ளென்று அவன் விசாரப் படவில்லை. உத்தியோகம் பார்த்துத்தான் வாழ்நாளை உருட்ட வேண்டுமென்ற அவதியுமில்லை. வசதியுள்ள குடும்பம். பெயருக்குப் பின்னால் ஏதாவது ஒரு பட்டத்தை மாட்ட வேண்டுமென்ற கௌரவ தேவையை நிறைவேற்றி விட்டான். அந்த மாடி ஜன்னலூடாக 'கொண்வென்'டிற்குப் போய் வரும் பெண்களைப் பார்ப்பது, அவனுடைய நித்திய பொழுது போக்காக அமைந்தது. அந்தப் பொழுது போக்கில்



அவனுக்குக் கிடைத்த முத்துத்தான், மகேஸ்வரியின் காதல். அந்தக் காதல், பார்த்துச் சிரிப்பதில் தொடங்கி வீதியில் சந்தித்துப் பேசுவதில் வளர்ந்து, பரிசுகளை....

கிளையிலே தவித்த அணில் 'தொப்'பென்று நிலத்தில் விழுந்தது. அதை ஒரு காகக் கூட்டம் துரத்துகின்றது. இப்படித்தான் நேற்று அந்த அணில் தன்னுடைய மரணத்தை ஏற்றுக் கொண்டது. 'இந்த அணில் அன்றிலா? தன் இணையைப் பிரிந்து வாழக்கூடாது என்ற எண்ணத்தின் எழுச்சியா? இது தற்கொலைப் பிரயத்தனமா? – எதற்கும் தன்னையும் பரமானந்தத்தையும் இணைத்துப் பார்க்கும் ஒரு பித்தநிலை.

இப்படி எவ்வளவு நேரந்தான் உருண்டோடியிருக்குமோ, மகேஸ்வரி அறியாள். மதிய போசனத்திற்கான இடை வேளை மணி கிணு கிணுக்க, வகுப்புகளில் அடை பட்டுக் கிடந்த மாணவிகள் வெளியேறினார்கள். அந்தக் கலகலப்பு அவளை நிஜ உலகிற்கு வரவழைக்கிறது.

'பின்னேரப் பாடசாலைக்கு வரத்தேவையில்லை; மனமும் சரியில்லை. அவள் சிவமணியைப் பார்த்துவிட்டு வீட்டை போவம்' என்ற எண்ணத்துடன், தன் வகுப்பை நோக்கி நடக்கிறாள்.

புயல் வீசி அழிவுபட்ட மருத நிலக்காட்சியை பரமானந் தத்தின் வீடு நினைவூட்டுகின்றது. 'கேற்'றை ஓட்டினாற் போலப் படர்ந்திருக்கும் மல்லிகைப் பந்தலிலும் சவக் களை. விறாந்தையை ஒட்டினாற்போல குடைவிரித் திருக்கும் நந்தியா வட்டைச் செடிகளிலும் மரணச் சாயல் படிந்திருக்கிறது. களையிழந்துகிடந்த அக்காட்சிகளைப்



பார்த்த அவளுக்கு, உடனேயே பரமானந்தனைக் காண வேண்டுமென்ற வெறி ஏற்படுகிறது. சவம் எடுத்து விட்டார்கள்; அவரும் சவத்தோடை சுடலைக்குத்தான் போயிருப்பார்' என்ற நினைவு அந்த வெறியை அடக்குகின்றது.

வீட்டுக்குள்ளிருந்து ஒரு பெண்ணின் தனித்த அழுகுரல் கேட்கின்றது. சோகம் முழுவதையும் தொண்டையில் ஏற்றிக் கட்டிக் கனத்த குரல். அந்த அழுகுரல் தன் எண்ணம் எதையோ எப்படியோ பிரதிபலிப்பதான நினைவு. இன்று முழுவதுமே மனம் இப்படித்தறிகெட்டோடுகின்றது. இனியும் அதனை அதன் பாட்டிற்கு விட்டால் பைத்தியமே பிடித்துவிடும் என்கிற நிலை. எதையும் சிவமணியிடம் கேட்டுவிடுந்துடிப்பில், அவள் வீட்டிற்கு நடக்கிறாள்.

சிவமணி, ஓர் 'ஈசிச்சேரி'ற் படுத்துப் பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருக்கிறாள். மகேஸ்வரி யைக் கண்டதும், "வாருமப்பா மகேஸ். நல்ல வெய்யிலும்..." என வரவேற்றாள்.

"நீர் இண்டைக்குப் பள்ளிக்கு வரேல்லையப்பா, அதுதான் பாத்திட்டுப் போகலாமெண்டு வந்தனானப்பா..."

"ஓ அதுவா?... பக்கத்து வீட்டிலை ஒரு செத்தவீடு. ஒரே மதில் பாரும். அதுதான் அம்மா மறிச்சுப் போட்டா..."

"அப்ப, சொந்தக்காரர்களாக்கும்..."

"சொந்தமாயிருப்பினாம், இந்தச் சுந்தரி மனம் வைச்சிருந்தால்.." என்று நாட்டிய அபிநயத்துடன் கைகளை அசைத்துச் சொன்னாள்.

"என்னப்பா, எனக்கு ஒண்டும் விளங்கேல்லை..."

"உந்தப் பக்கத்து வீட்டுக்காரர், கொஞ்சக்



காலத்துக்கு முந்தித்தான், உந்த வளவை வாங்கிக் கொண்டு குடியேறினவை. பரமானந்தன் எண்டு ஒருத்தரப்பா; ஒருக்கா அவர் என்னை 'லவ்' பண்ணப் பாத்தவர். நான் இடம் குடுக்கேல்லை. அவரொரு வருத்தக்காறன் எண்டு உங்குனேக்கை சொல்லிச் சினம்... அதுதான் தட்டிக் கழிச்சுப் போட்டன். இதுதான் சொன்னனான், நான் மனம் வச்சால் சொந்தமாயிருக்கு மெண்டு..." - சிவமணி இதைச் சொல்லி இலேசான குரலில் 'களுக்' கெனச் சிரித்தாள்.

"அது சரி, ஆர் செத்தது?"

"ம்... அது வலு 'சாட் நியூஸ்' மகேஸ். அந்தப் பரமானந்தம் தான் செத்துப் போயிட்டார். நேற்றுப் பின்னேரம்கூட நல்லா இருந்தவராம். திடீரென்று அரை மணித்தியாலத்துக்குள்ளை ஆள் குளோஸ்..." என்று சொல்லித் தலையை நிமிர்த்திய சிவமணி,ஒரு கணம் திகைத்து விடுகிறாள். அடுத்த வீட்டிற்கும் கேட்கக்கூடிய விசும்பலுடன், கண்ணீர் மழை பொழிகிறாள் மகேஸ்.

"என்ன மகேஸ், குழந்தைப்பிள்ளை மாதிரி... ஆரேன் கண்டாச் சிரிக்கப்போகினம்...' என்று ஏதோ ஆறுதல் சொல்ல விழைந்த சிவமணியை அசட்டை செய்துவிட்டு, மகேஸ் வீதிக்கு வருகிறாள்.

'இவளுக்கு என்ன பைத்தியமா பிடித்துவிட்டது' என்று நினைவு எழ, வீதியில் அவள் நடக்கும் வேகத்தைப் பார்க்க வேண்டுமென்ற எழுச்சியில், சிவமணி கேற்றடிக்கு வந்து எட்டிப் பார்க்கின்றாள்.

மகேஸ் வீதியில் நடக்கவில்லை

புத்தகங்கள் வீதியிலே சிதறிக் கிடக்க, அவள் எதிராக



வந்த லொறியின் சக்கரங்களுக்குள் நசிபட்டுக் கிடக்கிறாள்.

'பரமானந்தன் அரை மணித்தியாலத்திலை; இவள் அரை நிமிஷத்திலை...? என்ற எதிர் நினைவு ஒன்று மின்சாரம் பாய்ச்சுகிறது.

"ஐயோ, மகேஸ்..." என்று அலறிக் கொண்டு, லொறிக்குக் கிட்டச் சிவமணி ஓடுகிறாள்.



12

வேலி



அந்த யாழ்ப்பாணத்துக் கிராமம் தன்னுடைய சுறு சுறுப்பை இழக்கின்றது. பொழுது சாய்ந்து, இரவு புகுந்து விட்டது.

தாய் அடுப்படியில் வேலை யாக இருக்கிறாள்.

படிப்புப் பராக்கில் மேசை யருகில் அமர்ந்திருந்த மகள், "விளக்கு வைச்சு எவ்வளவு நேரமாப் போச்சுது. எங்கை அம்மா தம்பி?" என்று கேட்கிறாள்.



அவன் புள்ளை நாலைஞ்சு நாளாய் நாண்டு கொண்டு நிண்டான் படத்துக்குப் போக வேணும் எண்டு. கொய்யா வின்ரை குணம் தெரியாதே. அவர் வந்தால் அவனாலை ஒரு இடமும் உசும்பேலாது. அதுதான் போட்டு வரட்டு மெண்டு விட்டனான். பத்து மணிக்கிடையிலை வந்திடு வான். பாவம், அவனுக்கும் மற்றமற்றப் பொடியளைப் போலை ஆசை இருக்குந்தானே?"

"உதென்னணை நெடுக அடுப்பெடிக்குள்ளை இருக்கி றாய்?"

"உன்ரை படிப்பைக் கெடுக்கலாமே? கொய்யாவுக்கு நான் சுடுற தோசை எண்டால் நல்ல பிரியம். அங்கை மனுஷனுக்குக் கடைச் சாப்பாடுதானே? அதுதான் உழுந்து ஊறப்போட்டனான். அதை ஒருக்கா அரைக்கப் போறன்."

"சிங்கார வேலா..." என்ற பாட்டைச் சீழ்க்கையடித்து வீட்டுப் படலையே ஒரு உருவந் தாண்டியதை மகள் அறிவாள். சந்தேகமில்லை. அது 'சிங்கார வேலா' பாட்டுத்தான்.

"வயித்தைக் கலக்குது... ஒருக்காக் கக்கூசுக்குப் போட்டு வாறன்" தனக்குத்தானே சொல்வதைப் போல, தாய்க்கும் கேட்கக் கூடியதாக மகள் சொல்லுகிறாள்.

"எதுக்கும் கைவிளக்கை எடுத்துக் கொண்டு போ பிள்ளை....."

"இஞ்சேரும். நாளைக்கு ஐயா கொழும்பிலையிருந்து வாறார். ஏதேன் நினைப்பிலை என்னைப் பாத்துச் சிரிச்சிடா தையும். ஒழுங்கையாலை சீக்காய் அடிச்சுக் கொண்டு போகாதையும். அவர் சரியான சமுசியக்காறர்" என்று மிக

இரகசியமான குரலில் மகள் தன் காதலனிடம் சொல்லுகிறாள்.

"உனக்கு ஐயா எண்டால், எனக்கு அவர் மாமாதானே? உன்னை எனக்குக் கட்டித் தரச் சொல்லிக் கொய்யாவைக் கேக்கப் போறன்."

"ஆளைப் பாருங்கோவன்.....வந்து கேட்டால் விளக்கு மாத்துக் கட்டைத்தான் எடுத்துத் தருவார். நான் கதைக்கிற எண்டு தெரிஞ்சாலே கொண்டு போடுவார்... உங்களுக்கு நெடுகச் சேட்டைதான். கார் ஓட்டிற பழக்கத்திலை நெடுக இதிலை தனகிறதுதான்....."

"கொய்யா வந்தால் பாக்கக் கூடாது. பேசக் கூடாது எண்டெல்லாம் சொல்லுகிறீர்... அப்ப கெதியா வாருமன் ...."

"அம்மா வந்தாலும் வந்திடுவா... போதுமப்பா, போதும்...."

.....

"நான் உங்களைத்தான் கட்டுவன். இது சத்தியம்."

"அப்ப இன்னும் படிக்கப் போறனெண்டு சொன்னீர்?"

"ஐயா படிக்கச் சொல்லுறதாலை படிக்கிறன். சும்மா படிக்கிறதாலை என்ன கெட்டுப் போகுது."

"என்ன, போனவளை இன்னும் காணம்... புள்ளை, புள்ளை..." அடுப்படியிலிருந்து தாயின் குரல் கேட்கிறது.

"வந்திட்டனம்மா... நான் வாறன். நீர் கெதியாப் போயிடும்."

காதலன் கதிகாலால் ஏறி, வேலியைத் தாண்டி மறைகின்றான்.

அந்த இளங் காதலர்களின் சல்லாபத்தைக் கண்ணாற் கண்ட வேலி பெருமூச்சு விடுகின்றது.



"இதிலை இருப்பம். வீட்டுக்கை வேண்டாம். பொடியன் படத்துக்குப் போட்டுவந்து நல்ல நித்திரைதான். ஆனால், பொடிச்சிதான் இருமி இருமிக்கொண்டு கிடக்கிறாள். அவள் பக்குவப்பட்ட பிள்ளையல்லே...?" என்று தாய் சொல்லுகிறாள், தன்னை மறந்து இன்பத்திற் கிணற்றுக் கட்டில் சாய்ந்து கொண்டே.'

"ஐயா வந்தால், எத்தினை நாளைக்கு இஞ்சை நிப்பார்?"

"ஒரு கிழமை லீவு எடுத்துக் கொண்டு இஞ்சை வாராலாம். அதுதான் இண்டைக்கு கட்டாயம் வரவேணு மெண்டு சொன்னனான்."

"இந்த வருசமும் நீர் சொல்லி, எனக்குத்தான் உங்கடை மரங்களை வாங்கித் தர வேணும்."

"உனக்கு இல்லாமல் வேறை ஆருக்கு அவர் குடுப்பார்... வேறை ஆருக்கேன் குடுக்க நான்தான் விடுவேனே?... இது என்ரை சீதண வளவல்லே... நல்ல வடிவாக் கட்டிப்பிடியும்..."

.....

"ஓம், போயிட்டுவா, புள்ளையும் இருமிறாள். இஞ்சை, நாளைக்கு ஐயா நிப்பார். பத்துமணிபோலை ரண்டு போத்தில் பனங்கள்ளுக் கொண்டுவந்து குடும். பாவம், அது கொழும்பிலை ஒண்டும் தொடுறேல்லே... இஞ்சை வந்தாத்தான்..."

"எனக்கு அம்மா சொல்லவேவேணும்? ஒவ்வொரு கோசும் ஐயாவுக்குக் குடுக்கிறனான்தானே?"

அவன் வேலியைத் தாண்டிச் செல்கின்றான்.

வீட்டு எஜமானியம்மாளின் சல்லாபத்தையும் நேரிற் கண்ட வேலி மீண்டும் ஒரு பெருமூச்சு விடுகின்றது.



"அடுத்தநாள் பத்துமணி இருக்கும். ஐயா வந்து விட்ட கலகலப்பு, வீட்டிலே விரவிக்கிடக்கிறது.

ஒரு தடியை எடுத்து, வேலியிலுள்ள கறையான்களைத் தட்டிக்கொண்டிருந்த ஐயா, "வேலியும் நல்லா உக்கிப் போச்சுதுபோலை கிடக்குது" என்று சொல்லுகிறார்.

"ஓமப்பா... புள்ளையும் கடுக்கண்டிட்டுது. ரண்டு வரிச்சு மேலாலை உயத்தி அடைக்கத்தான் வேணும். அடுத்த மாதம் சின்னச் சீட்டின்ரை காசு வரும்" என்கிறாள் தாய்.

பரம்பரை பரம்பரையாக யாழ்ப்பாணத்துக் கௌரவத்தைக் காப்பாற்றிவரும் அந்த வேலி தான் ஓரடி இன்னும் வளரப் போவதைப் பற்றிச் சந்தோஷப்படவில்லை. அது மீண்டும் ஒரு தடவை பெருமூச்செறிந்து, யாழ்ப்பாணத்துக் கௌரவத்தைக் காப்பாற்றுங் கருமத்தை இயற்றிக் கொண்டு இருக்கிறது.



13

ஊருக்காக



"என்ன சின்னத்துரை, கொப்புவுக்கு அரிசி குடுக்கப் போற போலை கிடக்கு?"

"ஓமம்மான்."

"என்ன குத்தரிசியோ, சுப்பன் அரிசியோ?"

"வரியத்திலை ஒரு நாளைக்குத் தானை பாருங்கோ, குத்தரிசியாகக் குடுத்திடுவம். ஆச்சி தன்ரை கைப்படக் குத்தித் தந்த நல்ல புழுங்கல் அரிசி." "அப்பிடியே?... ஓ, குத்தரிசி யெண்டால்

அவையளும் கொண்டு போற கையோடை களைக்கு இல்லுப் போலை கஞ்சியாவது வடிச்சுக் கிடிச்சுக் குடிப்பினம். அது சரி கொப்புவை உனக்குத் தெரியுமே?"

"உரிச்சுப் படைச்சு என்னைப் போலைதான் இருக்கு மெண்டு ஆச்சி சொல்லுறா."

"கொப்பன் பிள்ளை வேறை ஆரைப் போலை இருப்பான்? உன்னைப் போலைதானையடா இருப்பான்."

"நான் எங்கையம்மான் அந்தாள்ரை முகத்தைப் பாத்தன்? நான் எடுத்தடி வைச்சு நடந்தண்டே அந்நாள் போயிட்டுது. அடிச்சுக் கொண்டாலும் ஆறேழு நாள் செல்லுமெண்டு ஆச்சி இண்டைக்கும் இத்தித்து மாண்டவ. 'வாறன் உதிலை போயிட்டு' எண்டு சொல்லிப் போட்டுப் போன ஆள் பிணமாக வருமெண்டு ஆருக்குத் தெரியும்? அந்த இயமனுக்குப் பொறுக்கேல்லே..."

"உன்னோடை ஆரும் கூடிக்கீடி வந்தவையே?"

"இல்லையம்மான்."

"அப்ப வாவன், அப்பிடி ஒரு மூலையாப் பாத்துக் குந்துவம்."

"மூட்டை வலு கனமாக் கிடக்கு. எத்தினை கொத்தரிசி?... காய் பிஞ்சுகளுமாக்கும்."

"ஒரு கொத்தரிசியும், ஒரு சிறங்கையும்; கத்தரிக்காய் பச்சை மிளகாயும் கிடக்கு."

"கோத்தைக்கு கொப்பரிலை இப்பவும் சரியான ஆசை தான். பின்னை இருக்காதே? அவளும் வாழுற உண்ணுற வயதிலை அவனை வாரிக் குடுத்திட்டு நிக்கிறதெண்டால் ஆராலைதான் அவளவு கெதியா மறக்க முடியும்? கொப்பனை இப்ப நினைச்சாலும் என்ரை கண்ணுக்கை



நிண்டு ஆடுறான். சை! அவன் என்ன ஆம்பிளை? பின்னை இப்பதையுங் சுறோங்குகள் மாதிரியே? ம்.... என்ன செய்யிறது. நீயும் கோத்தையும் குடுத்து வச்சது அவ்வளவு தான்... அதுசரி சின்னத்துரை. சும்மா சாத்திரப் படிக்கு ஒரு சிறங்கை அரிசியைக் குடுக்கிறதுக்கு உதேன் உவளவு அரிசியையும் பண்டாரிக்குக் குடுக்க வேணும்? நேராகக் கொப்பன் வந்து வாங்கிற தெண்டாலும் பாதகமில்லை. கோத்தை அப்படி யெண்டால்தான் அடுத்த ஆடி அமாவாசைக்குப் போதக்கூடிய அரிசியை வண்டில்லை ஏத்தி அனுப்பிப் போடுவாளே!... பின்னை அவள் பாவி கோத்தையின் ஆசையையும் ஏன்தான் கெடுப்பான். நானும் அங்கினையுக்கை ரண்டு சிறங்கை கட்டரிசியும் ஒரு வாழைக்காய்ப் பிஞ்சும்தான் கொண்டந்திருக்கிறன். ஏதோ உள்ளதைத்தானை குடுக்க வேணும்?"

"அதுசரியம்மான்."

"பொயிலை குடிக்கிறனியே?"

"இல்லை யம்மான்."

"அப்ப சீக்கிறேட்டுக் குடிக்கிறனியாக்கும்."

"ஒண்டும் குடிக்கிறதில்லை அம்மான்."

"வலு நல்ல பழக்கமாக் கிடக்கு. இந்தக் காலத்துப் பொடியளுக்கை நீ ஒரு புது நாணயமாகத்தான் கிடக்கடா சின்னத் துரை. கைம்பெண்டாடிச்சி எண்டாலும் உன்னைக் கழுதை போலை வளக்கேல்லைக் கோத்தை. பின்னைத் தேப்பனேடை இருக்கிறதுகள்... தாயடை சீலை – என்ன மாய் வாயாலையும் மூக்காலையும் புகை விடுதுகள். அதுகளைத்தான் உன்னாணை அறுதலிபிள்ளை யெளெண்டு சொல்ல வேணும்."



"ஓமம்மான். என்ரை பெரியாச்சியின்ரை மேனும் ஒருத்தன் உப்புடித்தான்."

"ஆர் மூத்தான்ரை மேனைச் சொல்லுறியே? ஓ அதை நானுங் கண்டனான். அது இப்பவே அழிஞ்சுபோகத் துவங்கியிட்டுது... வலு குளிராக் கிடக்கு. பல்லோடை பல்லுக் கிட்டிக் கொள்ளுது. சுத்துப் புகையையும் தூக்கி யெறியிறனெண்டு நிக்குது குளிர். பழக்கமில்லாத எங்களுக்கு கடல்காத்து குடலைக் கூட உலுப்பி எடுக்குது. ஓ வயதும் போவிட்டுது தானை. எனியும் பின்னை என்ரை உடம்பு தாங்கிறனெண்டதே! அதுசரி, உனக்கு நடுங்கேல்லையே சின்னத்துரை?"

"சும்மா சாடையா."

"ஓ. நீ இளந்தாரிதானை? நானும் உன்ரை வயதிலை உப்புடித்தான். நீயாவது உடம்பிலை சட்டை போட்டுக் கொண்டே சாடையா நடுங்குது எண்டிறாய். நான் அப்ப மேலிலை துண்டு இல்லாமலே இருந்திடுவன். இப்பவும் உவளவாது தாக்குப் பிடிக்குதெண்டால் அப்பதைக் குரக்கன் புட்டும், ஒடியல் புட்டுந்தான்... அதுசரி கடலைப் பாத்தியே? அலையள் ஒவ்வொண்டும் பனையள்ரை உயரத்துக்கு வருகுது. இண்டைக்கு சனசந்தடியைக் கண்டாப்போலைதான் உவளவு கொந்தளிக்குது. வெளிச்சக் கூட்டிலை இருந்து வாற வெளிச்சம் அலை யள்ளை படேயிக்கை விடிஞ்சுவாற காத்தாலைச் சூரியனைப்போலை கிடக்கு. பேந்து வெள்ளி விறிசு கொளுத்திறமாதிரியும் அலையள் சிதறிப் பறக்கையுக்கை நல்ல வடிவாக் கிடக்கு.... என்னடாப்பா, இப்பவே கொட்டாவி விடுறாய்? கள்ளுக்கும், நித்திரைக்கும்



நல்லாக் கதைக்க வேணும் சின்னத்துரை. இல்லை யெண்டால் ஒரேடியா மொச்சுப் போடும். பின்னை ஒரு நாலஞ்சியத்து கடலையைக் கச்சானை வாங்கிக் கொறியன்."

"ஓமம்மான். நானும் அப்பிடித்தான் நினைச்சனான். கடலைக்காறியளை இஞ்சினையிக்கை கிட்டக் கிளலையும் காணேல்லை."

"உதிலை திரும்பினாப் போலைதானை, ஒருக்கா எட்டி மிரிச்சு போவிட்டு வாவன். உன்படை என்படை தெரியாத உந்த நரல் சனத்துக்கை வலு கவனமாப் போவிட்டு வருவியே? உண்ணாணையடா சின்னத்துரை, மறந்திடாமல் எரப்பன் சுண்ணாம்பு கிள்ளிக் கொண்டா. இஞ்சை கறண்டத்துக்கை கிடக்கிறது கலடு பத்திப்போச்சு."

"அதுக்கென்னம்மான். கொண்டாறன்."

"பத்திரம். பத்திரம். பாத்துப் போடா. பேந்தாரும் தாறுமாறாக் கிடக்கிற பெண்பிரசுக்கு மேலை மிரிச்சுப் போடாதே. கழுத்தான் காதான் அறுக்க வந்த கள்ள னெண்டு பிடிச்சுக் கொண்டுபோடுவாங்கள். நானிருக்கிற குறிப்புத் தெரியுமில்லே? சரி. சரி. போட்டுச் சீக்கிரம் ஓடியா."

'நல்ல பொடியன். அறுதலியெண்டாலும் வலு அடக் கொடுக்கமா வளத்திட்டாள் பொட்டை. பின்னை என்னட்டையொரு விடுகாலிப் பொடியன் இருக்கே, நானிருந்து வளத்தே தறுதலையாப் போட்டு தெண்டால்... ஏதோ கிரகதோசமெண்டு செங்கட்டி வேலுப்பிள்ளைச் சாத்திரியார் சொன்னவர். அதுதான் அவனை உப்புடிக் கொண்டு சுத்துது. எனக்கென்னம்மோ நம்பிக்கையில்லை.



திருந்திறவனெண்டால் ஒரு கட்டையிலை கட்டின பிறகும் திருவாலியாத்திரிவானே? பின்னை மூத்தவன் குமாரசாமி தான் எனக்கு இந்தத் தினத்திலை ஒருபிடி அரிசி யெண்டாலும் என்ரை நாமத்தைச் சொல்லிக் குடுக்கும்.

'எங்கை உவன் பொடியன் போனானே போனான், என்னும் காணேல்லை. குறிப்புக் கிறிப்புத் தெரியாம்லுக்கு எங்கனாச்சும் அலையிறானாக்கும். நான் நினைச்சது சரியாத்தான் போச்சுது. அங்கினையுக்கை ஆரோ ஒருதன் மிலாந்திறான். ஓ, அவன் போலைதான் கிடக்கு.'

"எட பொடி, சின்னத்துரை... இஞ்சையிஞ்சை, இந்தப் பக்கமா வா... கவனம். பாத்து வாடா மேனை."

'எத்தினை வரியமா வந்து போற எனக்கே திகைப் பூண்டிலை மிரிச்சது மாதிரிக் கிடக்கு... இதுகள் முந்தநாள் வந்த தவ்வலுகளுக்கு என்ன தெரியப்போகுது.'

அம்மான். சின்னத்துரைக்கு கலங்கரை விளக்காகித் திசை காட்டினார்.

"நல்லவேளை அம்மான். நீங்கள் கூப்பிடயில்லை யெண்டால் நான் அங்காலை அள்ளுப்பட்டுப் போடுவன். திக்குத் திசை ஒண்டும் தெரியேல்லை அம்மான்."

"சரி, சரி. சுண்ணாம்பு கொண்டந்தினியேடா?"

வெற்றிலைக் கடுதாசியாயிருந்த 'சிமெந்து' முழுத்தாள் ஒன்று மடிப்புக் குலைக்கப்படுகிறது. அதற்குள் பல பிரிவு கள். அதில் ஒன்றுக்குள் பண்டாரத்திற்குக் கொடுக்க வேண்டிய தெற்பைக் காசும் தட்சணைக் காசும். மற்றொன்றுள் 'வசுக்கூலி'. வேறொரு மடிப்புக்குள் விரல்கள் ஓடி உலாவி வெற்றிலைப் புறமாக வந்து நிற்கின்றன.

பட்டாணிக் கடலை சின்னத்துரையின் பற்களுக்குள்



அகப்பட்டு படீர் படீரென்று வெடித்து நொருங்குகின்றன. அவனுக்கு வந்த நித்திரையைத் தகர்த்தெறியும் 'நித்திரை டைனமைட்' ஆக அது இருந்ததால் அவன் வெகு உற்சாகமாகவே காணப்பட்டான். என்றாலும் அம்மான்தான் பேச்சைத் தொடங்கினார்.

"போன கோசும் நீதானை வந்து அரிசி குடுத்தெனி கொப்புவுக்கு?" – பாக்குத் துகள்களும் வெற்றிலையும், கோலிக் குழிபறித்துக் கிடந்த உள்ளங்கைக் குண்டிற்குள் வைத்து வலப் பெருவிரலால் நசுக்கப்படுகின்றன.

"ஓமம்மான்."

இருளின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கும் கடலைப் பார்த்துக் கொண்டிருந்த சின்னத்துரை, அம்மானுக்குப் பதிலளித்தான். அந்த உடனேயே அவன் பார்வை மறு படியும் இருளை ஊடறுத்துக் கடலைப் பார்த்தது. 'கடல் அப்படி அடித்துப் புரண்டு அழுவதே இருளினின்றும் தன்னை விடு வித்துக் கொள்வதற்காகத்தான்' என்று அவனுக்குப் படுகின்றது. கடலின் அந்த இழவோலத்தைக் கேட்டுப் பாய்ந் தோடிவரும் கலங்கரை விளக்கின் ஒளிக் 'கிறிஸ்', கடலைத் திருகும் அந்த இராட்சத இருளைக் குத்திக் கிழிப்பதான பிரமை, சின்னத்துரைக்கு. அவன் அந்த ரசனையிலையே தன்னை வெகுநேரமாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தான்.

அநுமானங்கள் பிரிந்து நிற்கமுடியாத கஞ்சாக் கசக்கல். அம்மானின் உள்ளங்கைக்குள் இரத்தம் பிழிந்தது. நாட்டு வைத்தியன் சாராய ஊறல் தூளுக்குச் சொல்லிக் கொடுக்கும் பிரமாணமாக, மூன்று விரல் சேர்க்கையுடன் வாய்க்குள் அனுப்பப்படுகிறது. துவையல்,



நாக்கு, கொடுப்பிற்குள் 'அதக்கும்' தொழிலை அந்தரங்கமாகவே செய்கிறது. கொடுப்பதையும் மிடறு முறிதலும் 'கொடுக்கல் வாங்கல்' செய்கின்றன. 'சுத்துப் பொயிலையில்' தடித்த பிரதேசமாகப் பார்த்து ஒரு 'நுள்ளு'க் கிள்ளப்படுகிறது. 'இன்னுமொரு சுத்துக்குப் போதும்' என்ற நினைவோடு கடதாசியை மடித்து மடிக்குள்...

வெற்றிலை போட்ட உற்சாகம். நித்திரைக்குப் போக்குக் காட்டிய எக்களிப்பு. காற்றுவாக்கில் எட்டி ஓர் 'பீச்சல்' துப்பல். குளிகைப் பிரமாணமடைந்த புகையிலைத் துண்டு வெற்றிலை கரையாமல் இருப்பதற்காக கொடுப்பிற்குள் அனுப்பப்படுகிறது. குதிபோட்டுவரும் கதைக்கு, பாவம், சின்னத்துரைதான் பக்கத்தில் இருக்கின்றானே.

"போன வரியத்தைக் காட்டிலும் இந்தமுறை சனம் வலு குறைவு; இல்லையே, சின்னத்துரை?... போன கோசு வந்தவையின்ரை தேப்பன்மார் திரும்பி வந்திட்டினமோ?.. இல்லையெண்டால் போனமுறை குடுத்தவை இந்த முறை அரிசி வாங்கத் துவங்கியிட்டினமோ என்னவோ? இஞ்சை கீரிமலைக்கு வந்தால் செத்தவங்கடை சூப்பன் வைச்சு அரிசி வாங்கிறவையேக் கண்டுபிடிச்சுப் போடலாம்" என்று சொல்லிக் கொண்டுவந்த அம்மான் கதையைத் துண்டித்த வேகத்துடன் அவசரமாகச் சின்னத்துரையை முழங்கை யால் இடித்து, எதிரே சென்ற யுவதிகளைச் சாடை காட்டினார்.

அந்த யுவதிகளை மோப்பமிட்டுச் செல்லும் இரு யுவர்கள். அவர்கள் இருபாலாரிலும் ஆங்கில நாகரிகம்



அப்பட்டமாகத் தெரிந்தது.

அம்மானுக்கும் சின்னத்துரைக்கும் அவர்கள் பேசிய பரிபாஷை விளங்கவில்லை. குமரிகளின் சிரிப்பு இனிமை யாகத்தான் கேட்கிறது. 'எங்கை?' என்ற உள்ளார்த்தமான கேள்வி இருவரின் நெஞ்சிலும் சுழியோடிவர, ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்கிறார்கள்.

"ஆக்களில்லாத பக்கத்துக்குப் போகினம் அம்மான்" சின்னத்துரை சொன்னான்.

"ஓமோம்! அப்பதானே வசதி. அங்காலை கொஞ்சம் மறைவுகளும் கிடக்கு" என்றார் அம்மான்.

"இவையளுக்கும் தேப்பன்மார் இல்லையே?"

"இந்தக் காலத்திலை தேப்பன்மார் இருக்கிறதும், இல்லாமலுக்குப் போறதும் ஒண்டுதான் சின்னத்துரை. தேப்பன்மார் உயிரோடை இருக்கேக்கையே இண்டைக்கு இஞ்சைவந்து எத்தினைபேர் அரிசி குடுக்கினம் தெரியுமே?"

"என்னம்மான் சொல்லுறியள்? எனக்கொண்டும் விளங்கேல்லை."

"உனக்கு விளங்காதுதான் சின்னத்துரை. விளங்கச் சொல்லுறன், பின்னைக் கேளன். உவன் சின்னத்தம்பியை உனக்குத் தெரியுமெல்லே?"

"ஆரம்மான், பள்ளியவத்தையில் சின்னத்தம்பியைத் தானை சொல்லுறியள்? தெரியும்; நல்ல மனிசன்."

"நீ ஒரு அறுதலி மேனடா. வெளுத்ததெல்லாம் பாலெண் டோடா நினைக்கிறது? அவனும் உங்கினையக்கை வந்திருப்பான்ரா, பாத்துப் பேசு. பேந்தேன் எங்களுக்கு அந்தப் பொல்லாப்பை. அவன் ஆருக்குப் பிறந்தவன் தெரியுமே?"



"தெரியாதம்மான். ஆருக்கு?"

"முடமாவடிச் சந்திரசேகரிக்கல்லேயெடா பிறந்தவன். ஆத்தை ஆடின ஆட்டந்தெரியாது. அவர் பெரிய வெண்டி றேசன் கணக்கு. வல்லவன் பம்பரம் மண்ணிலையும் ஆடும், மற்ற இடங்களிலையும் ஆடும்."

"அப்ப தேப்பன் குருநாதிக்குத்தானை அரிசி குடுக்க போன முறையும் வந்தவர். இந்த முறையும் உங்கினையுக்கை தான் வத்திருப்பார்."

"நான் சொன்னன், நீ ஒரு கள்ளு முட்டியெண்டு... எட சின்னத்துரை, குருநாதி உயிரோடை இருக்கையுக்கை தான்ரா உவன்ரை தாய் சந்திரசேகரியோடைட் கூடியிட்டாள். அந்த இழவை ஒருநாள் கண்ணாலை கண்டாப்போலைதானை அவன் கிடந்து அழுந்திச் செத்தவன். அப்ப இந்தப் பிறவு பிறந்திட்டுது. அவனையும், சந்திரசேகரியையும் கண்டனி தானே? ஒரே அச்சாக இலையே ரண்டு பேரும்?"

"ஓமம்மான், அப்பிடியே சங்கதி? அப்ப, இப்ப உயிரோடை இருக்கிற சந்திரசேகரிக்குத்தான் அரிசி குடுக்க வந்திருக்கிறானெண்டு சொல்லுங்கோ. அப்ப பேந்தேனம்மான் குருநாதி யின்ரை பேரைச் சொல்லி அரிசி குடுக்க வாறவன்?"

"அவனையுந்தான் ஏன் குறை சொல்ல வேணும்? எல்லாம் அந்தப் பத்தினிப் பரத்தை ஊருக்காக வேசம் போடுறாள்."


இருவரும் மௌனமாகிக் கடலைப் பார்க்கிறார்கள்.

'பரத்தைக்கு வாயிருப்பது போல், கடலுக்கும் அலை இருக்கிறது' என்று படுகிறது அம்மானுக்கும் சின்னத் துரைக்கும்.



14

இழவு



"என்ன, கொத்தான் வெந்து போய் வாறீர் உந்த வெய்யி லுக்கை? எங்கை இந்த நேரத்திலை? வெய்யில் கொளுத்தது, கையிலை ஒரு குடையைக் கிடையைக் கொண்டு வரக்கூடாதே?"

"நான் காணும் ராத்திரி, உதிலை எப்பன் வடக்கம் பிராயுக்கை ஒரு மாட்டு விஷயமா வந்தனான். வந்த இடத்திலை எல்லுப்போலை

சுணங்கிப் போச்சு. பின்னை அவன் மனிசன் - ஆர் தெரியுமே - எங்கடை வன்னிய சிங்கத்தான் தான் - என்னண்ணை இப்ப அவசரம்? நல்லா இருண்டு போச்சு. கொஞ்சத்துக்கு இதிலை சரிஞ்சு போட்டு, வெள்ளாப்பிலை எழும்பித் தட்டிக் கொண்டு போனியெண்டா மாட்டுக்கும் களையிருக்கா தெண்டு தடுத்துப் போட்டான் பாவி. அதுதான் காணும்... எப்பெப்ப எனி இஞ்சாலை வாறனே தெரியாது. கையோடை ஒருக்கா உங்களையும் பாத்துக் கொண்டு போலாமெண்டு தான்..."

"என்ன கொத்தான், சித்திரை வைகாசி வெய்யில் மாதிரியெல்லை வேசமேன்ரை வெய்யில் கொளுத்துது. அது இணலுக்கை வந்தாப்போலைதான் காணும் நல்லாத் தெரியுது. உஹ்ஹ் உஹு... அக்கினி, அக்கினி. அது கிடக்க எங்கை அன்னத்தின்ரை சிலமனைக் காண யில்லை? மாட்டையும் வெளியிலை வெய்யிலுக்கை கட்டிப் போட்டு வந்திட்டன். எரெப்பன் தண்ணி வச்சால் நல்லது. பாவம், வாய்பேசாச் சாதியெல்லே."

"உங்கினைக்குள்ளை இப்ப நிண்டாள் பாவி. ஒரு வேளை அடிவளவுப் பக்கம் போயிருப்பபாள், ஆடுகளுக்குத் தண்ணி கிண்ணி வைக்க. எணே... இஞ்சை பாரன் கொண்ணன் வந்திருக்கிறார். அவங்கடை இழவு வீட்டுக்கு மொருக்காப் போக வேணும் காணும், அதுதான் மனுசி ஆவாவெண்டு நிக்குது."

"ஆர் கொத்தான் செத்தது?"

"என்னவுமது, உமக்கு இழவறிவிக்கயில்லையே? நல்ல புது நாணயந்தான். நான் முதலிலை நினைச்சன் நீரும் அதுக்காத் தான் வந்திருக்கிறீராக்குமெண்டு; வீரகத்தி



யானும், பெண்டிலுமெல்லோ காணும் வீட்டு விட்டத்திலை கவுறு போட்டுத் தூங்கியிட்டினம்" என்றார் ஆறுமுகத்தார்.

"என்னவுமது, பேய்க் கதை பேசுகிறீர்? போன கிழமை தானை காணும் பெரிய கடையுக்கை கண்டு கதைச்சனான். மோள் வீட்டை போட்டுவாறமெண்டு சொன்னவை இரண்டு பேரும். என்ன கொத்தான் நம்ப முடியாமக் கிடக்கு."

"இன்றைக்கிருப்போரை நாளைக்கிருப்பரோ என்றெண்ணவோ திடமுமில்லை இறைவா கச்சி ஏகம்ப நாதனே."

"ஓமோம். எண்டாலும், என்னவும் காணும் இந்த வயதிலை இப்பிடி அவச் சாவு செத்துப் போட்டினம்? ஏதோ இல்லாதது செல்லாதுகளே இருக்கிறதை வைச்சுக் கொண்டு பாத்தாலும் பங்கை இல்லையெண்டாலும் ரண்டு மூண்டு தலைமுறைக்குப் போதுமே காணும். அவங்கள் பெடியளும் - மக்கள்தான் - அவங்களும் நல்ல நிலைமையிலை இருக்கிறாங்கள். பெடியள் அஞ்சு பேரேல்லே? என்ன சொன்னீர்?... ஓ, ஓ, அவன் அந்த வாதக்காரனேடைதான். பெட்டை ஒண்டுதானே? அவளையும் நல்ல இடத்திலை கரை சேத்துப் போட்டாரெண்டு கேள்வி. பேந்தேன் காணும் உப்பிடிச் செத்தவை?...."

"நீர் என்னவும் கொத்தான். அத்திபூத்தாப் போலை ஆடியிலை ஒருக்கா அமுவாசையிலை ஒருக்கா வாற உமக்கு இதெல்லாம் எங்க காணும் தெரியப்போகுது? நீர் நினைக்கிற அண்டையில் வீரகத்திப்பிள்ளையின்ரை குடும்பமில்லைக் காணும். அதெல்லாம் தலைகீழாக மாறிப்போச்சு" என்ற ஆறுமுகத்தாரின் பேச்சுக்குக் குறுக்கே அவர் மனைவி அன்னப்பிள்ளையின் குரல் விழுகிறது.



"அதுகள் ஒண்டுக்கையொண்டு சிக்குப்பட்டுப்போய் கிடக்குதுகள். அந்தச் சவம் கிடாய்க் குட்டி மற்றதுகளை நிக்கக்கிக்க விடுதில்லை. நாளைக்கு அதின்ரை காலுக்கு ஒரு பூட்டாங் கவுறு போடத்தான வெணும். அந்தக் கோதாரியளோடை ஒண்டும் கேக்கயில்லை. உதாரோடை கதைக்கிறியள்?"

"கொண்ணையெல்லையப்பா வந்திருக்கிறார்" என்று சொல்லவும் அவள் அங்கு வந்து சேர்ந்தாள்.

"ஆர் பெரியண்ணையே... களைச்சுப்போய் வந்திருக் கிறாப் போலை கிடக்கு."

"அப்பிடியொண்டுமில்லைப் பிள்ளை. முதல்லே அந்த மாட்டுக்குத்தான் எல்லுப்போலை தண்ணின் காட்டிவிடு அன்னம், அப்பபடியே எனக்கும் கொஞ்சம் பச்சைத் தண்ணின் தா" என்றார் பொன்னர்.

"ஏனண்ணை, தேத்தண்ணி வச்சுத்தாறன்."

"இல்லைப்பிள்ளை, முதல்லே தண்ணி விடாய்க்கு பச்சைத் தண்ணிதான் நல்லது."

முதலில் வாய் பேசும் சாதியாகிய பொன்னரிடத்தில் செம்புத் தண்ணீரைக் கொடுத்துவிட்ட அன்னம், வாளி யைத் தூக்கிக் கொண்டு மாட்டிற்குத் தண்ணீர் வைக்க நடந்தாள்.

தண்ணீர் குடித்த பொன்னர், "அப்பகாணும் நானும் கையோடை இழவு வீட்டுக்குப் போவிட்டுப் போக லாமெண்டு பாக்கிறன்..... அங்கை ஊரிலையும் கட்டாயம் அறிவிச்சிருப் பாங்கள். அதுசரி, எப்ப எடுக்கப் போறாங்களாம்?"

"செத்து மூண்டு நாளச்சு, மணங் குடுத்திட்டுது.



ஏன்தான் என்னும் வச்சுக்கொண்டிருக்கிறாங்களோ தெரியேல்லை. அவங்கள் பொடியன் ஆறேழு தந்தி அடிச்சும் என்னும் வரயில்லையெண்டால்....."

"ஓமோம், அவங்கள் பொடியளும், பொட்டையுமெல்லே வரவேணும். ஓங்காணும், கோணிலை பேசி இருந்தால் இவளவத்துக்கு வந்திடுவாங்களில்லே? பெத்தது களில்லே, எனி எப்ப முகத்திலை முழிக்கிறது"

'இவை தந்திக்கு மேலை தந்தி அடிச்சவைதான். தந்தியளும் இப்ப தவால்லே தானாம் போகுது."

"மேளம் வந்திடுத்துப்போலை கிடக்கு" என்று இடையில் புகுந்தாள் மாட்டுக்குத் தண்ணீர் வைத்துவிட்டு வந்த அன்னம்.

"என்னவும், இடி மோளம் போலை கிடக்கு. வலு டீங்காத் தான் செய்யிறாங்கள் போலை" என்றார் பொன்னார்.

"ஓமோம். அவை செத்த சாவுக்கு அதைப் பின்னை பிறை சித்தம் போட்டுச் சொல்ல வேண்டாமே? தூ...! மானங் கெட்ட சவங்கள். அவள் ஓடினவளும் வாறாளாக்கும்" என்ற முகத்தார், தன் அருவருப்பைக் காறித்துப்பிக் காட்டினார்.

"அவ வந்தாப் பெரிய மேடரெல்லோ நடக்கும்? அவளுக்கு அறிவிச்சிருக்க மாட்டாங்கள். அவள் எங்கை இருக்கிறா ளெண்டு தெரியேல்லையாம். அவளைக் கொலை செய்யிறதுக் கில்லே தேடித்திரிஞ்சவன் அவன் மாமன்" அன்னம் அடுக்களைக்குள்ளிருந்து சொன்னாள்.

"என்ன கொத்தான், ஏதோ ஓடினது கீடினது எண் டெல்லாம் பேசுறியள்? வீரகத்தியானுக்கு ஒரு மோள் தானே... அவளுக்குத்தானே கல்யாணம் தடபுடலாகச்



செய்தவர்? பேந்தார் காணும் ஓடினது?'

"நீர் ஒண்டு காணும், அந்த அவள்தான் கட்டிக் கொடுத்தவனை விட்டுட்டு இன்னொருத்தனோடை 'வாணம்' விட்டுட்டாள், போன வியாழக்கிழமை. அந்த மானக் கேட்டைத் தாங்க மாட்டாமைத்தானே காணும் இவைகள் கவுறு போட்டு கொலைபண்ணியிருக்கினம்" என்று விளக்கினார் முகத்தார்.

"என்ன இழவு விழுந்த கதையாக் கிடக்கு! சொந்தப் புரியனை விட்டுட்டு, கள்ளப்புரியனோடை ஓடியிட்டா ளெண்டு சொல்லும்... ஓஹோ! அப்பிடியே சங்கதி? எனக்கு உன்னாணை இப்பதானே காணும் விளங்குது. நீர் என்னவும், கதை அப்ப இன்னும் கிடக்கு எண்டு சொல்லும். நான் அங்கை வட்டக்கச்சியிலை கமம் ஒண்டை எடுத்துப் போட்டு ராப்போலா அதுக்குள்ளை கிடந்து நாயா உழைக்கிறன். எனக்கு ஏங்கை காணும் இதெல்லாம் விளங்கப்போவுது."

"அதுசரி கொத்தான், தெரியாமக் கேக்கிறன்;" உவளைத் தானே வீரகத்தியான் பத்தோ பதினைஞ்சு வரைக்கும் படிப்பிச்சவர்? நல்ல வடிவான பொட்டை. உரிச்சுப் படைச்சு சரியா சுத்தம் சுவம் அவரைப் போலைத் தான். அதுக்கு உப்பிடிக் குறுக்காலைபோன புத்தி வந்திட்டுது பாரும். அப்ப நான் நினைக்கிறன் காணும், அப்பவே படிக்கிற காலத்திலை தொட்டு இப்ப ஓடினவனுக்கும் உவளுக்கும் தொடுப்பு இருந்திருக்க வேணும். அதுதான் காணும் அவளின்ரை முந்தின புரியன் காறப் பொடியன் அவன் பொடியனுக்கும் நல்லவொரு பேர் கனகசபையோ.... ஓ, ஓ, அப்பிடித்தான். பொடியன்



அவற்றை சொந்தக்காறன்தானே? அவனும் ஒரு மாசிற்ற ரெல்லே... ப...ங்...க இல்லையில்லையெண்டு போனாலும் ஒண்டரை இலச்சத்துக்குப் பதியாமப் பாக்கலாம் அவனுக்குக் குடுத்த சீதணம். பளையிலை கிடக்கிற அந்தத் தென்னந் தோட்டத்தோடை தான்... அப்ப பொட்டையளைப் படிப்பிச்சுப் பாரன். உப்பிடிக் குதியன் குத்தித் திரியிறவள்களைக் கூட்டிக் கொண்டோடிய வனைச் சொல்லும். உவனோடை ஓடினது மாதிரிதானே இன்னெருத்தனோடையும் கூடிக் கொண்டோடுவாள் எல்லாம் ஓடுகாலி கூட்டம்தான். உப்பிடியானவைதானே கடைசியிலை ஓட்டுமடத்தடியிலை போய் சேருவினம்" என்று நிறுத்தினார் பொன்னர்.

"தேத்தண்ணி ஆறப்போவுதண்ணை குடியுங்கோ" என்று அன்னம்மா இடையில் புகுந்தாள்.

"முகத்தார்...ஓய் முகத்தார்.....நிக்கிறாரோ?"

"படலையிக்கை ஆரோ கூப்பிடினம்போலை கிடக்கு. ஒருக்கா எட்டிப்பாரணை" என்றார் ஆறுமுகத்தார்.

"அப்புக்காத்தற்றை ஆனைக்குரல்போல கிடக்கு. ஓ,ஓ, அவர்தான்... ஏன் வழி தெரியேல்லையா? வாருங்கோவன்" அன்னம் அப்புக்காத்தரை வரவேற்றுவிட்டு குசினிக்குள் நுழைந்தாள்.

"என்ன முகத்தார், எப்ப சாமத்தியப்பட்டனீர்... மூலையக்கையிருக்கிறீர்? எடடே... பொன்னரும் விண்ணாணமா வந்திருக்கிறார்... ஓ.ஓ, இழவு வீட்டுக்காக்கும். ஏன் கிளம்பிறதில்லையே... எல்லாரும் வந்திட்டாங்களாம்; இனி வெயிலும் தணிஞ்சுபோடும்" என்றார் அப்புக்காத்தர்.



"உமக்கென்னகாணும் ஊரிருக்கு உம்மைத் தாங்க... நாங்களும் அப்பிடியே....? ஊரொச்சம் வீடு பட்டிணி எண்ட கதைதான் உங்கடைபாடு. ஊர் அப்புக்காத்து எண்டால் என்ன குறைஞ்ச உத்தியோகமோ? சரி இரும். எல்லுப் போலை தேத்தண்ணி குடிச்சிட்டு நடப்பம்" என்றார் முகத்தார்.

"எனக்குத் தேத்தண்ணி வேண்டாம் காணும். நான் கந்தன்ரை கொட்டிலை இருந்துதான் வாறன். இண்டைக்கு வீரகத்தியானும் பொண்டிலும் போற வழிக்குப் புண்ணியம் தேடவேணுமெண்டு ஒருக்கா முழுகிப்பாப்பம். என்ன பொன்னர், ஊமாண்டி மாதிரி இருக்கிறீர்? கோண மலையின்ரை கொசுப்பிற்றல்லை ஒவ்வொரு ஊசி போட்டால் பேந்தென்ன?.... போற வழியெல்லாம் சூடேத்திக் கொண்டே போவம்" - அப்புக்காத்தர் வெகு யதார்த்தமாகப் பேசினார்.

"இஞ்சையெடும் முகத்தார் எல்லுப்போலை தாவடி யானிலை. வேசமென்ரை குடலைப் பிரட்டிக் கொண்டு வருது. ஒரு புகையை இழுத்து விழுங்கினால் இந்தப் பிரட்டலை நரம்புகளுக்கையிழுத்துக்கொண்டு போடும். வேசமென்ரை வெறும் வயிறு. அதுதான் இப்பிடிச் செய்யுது. பின்னே, அவன் பொடியன்ரை கள்ளிருக்கே... ஆற்றே... கந்தன்ரை கள்ளுத்தான்... ஒரு பிள்ளை இண்டைக்கும் விரல் மடிக்க முடியாது. சாமான் என்டால் அவன்ரைதான் சாமான்... பின்னே, உங்கினைக் குள்ளை இருக்கிறாங் களே தண்ணி கலந்து வைச்சுக் கொண்டு... உன்னாணை நான் உவங்களட்டைக் குடிக்கிற தெண்டால் ரண்டு மூண்டு நாளைக்கு வயித்தாலை போகேலை எண்டால்தான்



குடிப்பன். பேதிக்குத்தான்காணும் உவங்கடை சாமான் வலுதிறம்" என அப்புக்காத்தர் பேச்சை நிறுத்திக் கொண்டு வாயில் சுருட்டைப் பொருத்திப் பற்ற வைத்தார்.

"என்ன காணும், ஏதாவது கீறிக் கிழிச்சவங்களே?" அப்புக்காத்தரைப் பார்த்துக் கேட்டார் முகத்தார்.

"வந்த பொலிசுக்காறனுக்கும் டாக்குத்தனுக்கும் ஐம்பதும் நூறுமாகக் கைமாறிச்சுது. அலுவலெல்லாம் சரியாப் போச்சு" என்றார் அப்புக்காத்தர்.

"எண்டாலும் ஊருக்கை அந்தப் பொடியள் எனித் தலை காட்ட முடியாது பாரும்" என்றொரு கொழுக்கியைப் போட்டார் பொன்னர்.

"மெய்யோய், தெரியாமத்தான் கேக்ககிறன்காணும். அவள் பொடிச்சி சொன்னவளே உப்புடி உவையை அவச்சாவு சாகச்சொல்லி? அல்லது, மற்றவையைத்தான் ஊருக்கை தலைகாட்ட வேண்டாமெண்டு சொன்னவளே?... ஏங்காணும் ஒரு மாதிரியாத் திகைச்சுப்போய் பாக்கி றியள்?... இஞ்சை வாரும் முகத்தார், ஊருலகத் திலை எவ்வளவோ காரியங்கள் நடக்குது. இப்ப நாங்கள் எல்லாருமா அவள் பொடிச்சியைத் தானே குறை சொல்லுறம்; இல்லையே? குடும்பங்களுக்கை எத்தினை யோ சங்கதியள் கிடக்கும். அதிலையும் இந்தக் காலத்துப் பொடியளும் பொட்டையளும் இருக்கே... எனக்கு வீரகத்தியானே சொல்லியிருக்கிறாரெண்டால் பாத்துக் கொள்ளுங்களேன். அதென்னனெண்டு நினைக்கிறி யளோய்? - 'பொட்டையைப் படுகுழியிலை தள்ளிப் போட்டன் அப்புக் காத்து' எண்டு. என்னை உங்களுக்குத் தெரியுந்தானே. எப்பன் எப்பனாக எல்லாத்தையும் புடுங்கிப் போட்டன், அவன் பாவியின்ரை வாயிலையிருந்து. அதைச்



சொல்லேக்கை அவன் மனிசன் அழுதுவிட்ட அழுகை இருக்கே காணும், ச் ச் ச்... அது அந்த ஆண்டவனுக்கும் கேட்டிருக்கும் காணும். 'ஏனண்ணை எல்லாம் நல்லாத் தானை செய்து வைச்சனி' எண்டதுக்கு, அதெல்லாம் சரிதான் அப்புக்காத்து, அவள் பொடிச்சி கலியாண எழுத்தைத் தள்ளிவிச்சுவிடச் சொல்லி ஒத்தைக் காலிலை நிக்கிறாள். இல்லையெண்டால் என்ரை பிணத்திலதான் முழிப்பியள் எண்டு சொன்னாளாம். விசயம் என்னெண்டு நெருக்கிக் கேட்ட பிறகுதான் பொடிச்சி வெக்கம் மானத்தை விட்டிட்டு சங்கதி இப்பிடி யெண்டு சொல்லி, தாயையும் தகப்பனையம் கட்டிப்பிடிச்சு அழுது-கரைஞ்சாளாம். பாவம். அவள் சொன்னதைக் கேட்டாப் போலையும் இந்த மனிசன் வீரகத்தியான் சிலபல புத்தி மதியளைச் சொல்லிச்சிதாம் பாவி. என்னெண்டு கேட்டியளே? பிள்ளே, எல்லாம் இருக்க இருக்கச் சரியாப் போடும் குஞ்சு. எல்லுப் போலை பல்லைக் கடிச்சுக் கொண்டிரு. என்ன செய்யிறது? அதுகும் முடிச்சு மூண்டு மாதமாகேல்லைப் பிள்ளை. அதுக்கிடையிலை என்னெண்டு மேனை கலியாண எழுத்தைத் தள்ளுறது? பேந்து ஊர் தேசத்திலை எந்த முகத்தோடை பிள்ளை நான் திரியிறது? நாலு நல்லவன் பெரியவன்ரை முகத்திலை என்னை முழிக்க வேண்டாமெண்டு சொல்லுறியே பிள்ளை? எல்லாத்துக்கும் அந்த சந்நதியான் உன்னைக் கைவிடமாட்டான் எண்டு சொல்லிப்போட்டு வந்தாராம்....." – அப்புக்காத்தர் பேச்சை நிறுத்திக் கொண்டு சுருட்டை மறுபடியும் பற்றவைத்துக் கொண்டு தொடர்ந்தார்.

"சரி முகத்தார், இஞ்சை பெண்டுகள் ஒருத்தரும் கிட்ட இல்லைத்தானே, நான் ஒண்டு கேக்கிறன் திடுகிட



மாட்டியளே?... நீயும் நானும் பெண்டில்மாரோடை தானே இருக்கிறம் – இல்லையே? இப்ப எங்களுக்கு மத்தியானத் தைத் தாண்டிப் படு பொழுதாப்போட்டாலும் கூட என்ரை பெண்டிலையோ, உன்ரை பெண்டிலையோ என்னொருத்த னோடை போகச் சொல்லிச் சொல்ல மனம் வருமேகாணும்? உன்னாணைத் தெரியாமத்தான் கேக்கிறன்? இதுக்கு மறுமொழி சொல்லும் பாப்பம். நீ நாலு எழுத்தாவது தெரிஞ்ச மனிசன்."

இழவு வீட்டிற்குச் செல்வதற்காக வேட்டிமாற்ற எழுந்த முகத்தார், அசைவற்றுச் சிலையாகி நின்றார். அருகிலி ருந்த பொன்னரின் வாயில் ஈயொன்று தன்னிச்சையாய்ப் புகுந்து ஒளித்து விளையாடி வெளியேறிற்று. அங்கே நிலவிய அந்த நீண்ட மௌனத்தின்பின், புதிர் விடுவிக்கும் வாக்கில் ஒரு சிறு புன்னகையை வெளிப்படுத்திக் கொண்டே அப்புக்காத்தர் சொன்னார்:

"அந்தப் பொட்டையின்ரை புரியன் இதைச் செய்யச் சொல்லி அடிச்சு நெகிட்டு ஆய்க்கினைக்குமேலை ஆய்க்கினை செய்து கொடுமைப்படுத்தினானாம். பின்னை அவளும் பொடிச்சி இந்த அநியாயத்தை யெல்லாம் எத்தனை நாளைக்குத் தான் பொறுத்துக் கொண்டிருக் கிறது சொல்லுங்கோ பாப்பம்?"

அவசரமாக - ஆனால் ஆத்திரத்தின் சிகரத்தில் நின்ற பொன்னர், ஓங்கி நிலத்தில் உதைத்துக்கொண்டே "அடிப் பண்டி வேசேமேனை, கெட்ட வடுவாவை என்னும் உயிரோ டையே விட்டிருக்கிறாங்கள். அவனைக் கொல்ல வேணும்: அவனைக் கொல்ல வேணும்; அவனைக் கொல்லாம விடுறது தான் பாவம்."



"அது சரிகாணும், அவனென்ன ஆம்பிளையா அல்லது அலிறாசுக்கோலா? அந்தக் கெட்ட நாயை ஆரோ பெத்தும் போட்டாளே" என்ற முகத்தார் வேட்டியை இடுப்பில் இறுக்கிக் கட்டிக் கொண்டார்.

"அன்னம் எங்கை நிக்குது..." என்று அக்கம்பக்கமாகத் திரும்பிப் பார்த்துக் கொண்ட பொன்னர் சொன்னார். "அது தான் காணும் அந்தப் பண்டிவேசேமேன், பொல்லாத பொடியள் விளையாட்டுக்காறனாமோய். அவனுக்கு வாற வங்களுக்கு இவள் பொட்டையே முந்தானை விரிக்க வேணும்?" என்று இரகசியம் பேசும் குரலில் அப்புக்காத்தர் சொன்னார்.

பொன்னர் ஒன்றும் விளங்காது விழித்தார்.

அப்புக்காத்தர் பேசியதை அரைகுறையாகக் கேட்டுக் கொண்டுவந்த முகத்தாரின் சகதர்மினி அன்னப்பிள்ளை இடையில் புகுந்து, "அவன் பொடியன் பின்னை உப்புடி நெடுகப் பொடியளோடை சுத்தி விளையாடிக் கொண்டு திரிஞ்சால், அவளும் பொட்டைதான் என்ன செய்யிறது? உண்ணாணைத் தெரியாமத்தான் சொல்லுறன். ஒரு பெண் சென்மமெண்டாப் போலை ஆகக் கசக்கி மணக்கிறதே?" என்று பெண்களின் கட்சியை எடுத்துப் பேசினாள்.

விஷயத்தைப் பச்சையாகப் பேசவிரும்பாத ஆறுமுகத்தார் "சரி கிளம்புங்கோ போதும்" என்று கொண்டே நடந்தார்.

பொன்னர் ஒருவருடனும் பேசாமல் நடந்தார். கடைசியிற் பரிமாறப்பட்ட பரிபாஷை அவருக்கு விளங்க வேயில்லை. அது அவர் மனதைக் குழப்பியது அதைப் புரிந்துகொண்ட அப்புக்காத்தர், அவருடைய காதில்



ஏதோ குசுகுசுத்தார்.

"அடடே, அப்படியே சங்கதி! என்ன இழவு விழுந்த விளையாட்டு? மூதேசித் தரித்திரியம் பிடிப்பாங்கள் உப்புடியும் செய்யிறாங்களே? தூ!"


துப்பி முடித்துத் தலையை நிமிர்த்தினார் பொன்னர். எதிரே கோணாமலையின் கொட்டில்.

மூவரும் கொட்டிலுக்குள் புகுகிறார்கள்.



15

யாழினிக்கு ஒரு கடிதம்



எனது அன்பான மகள் யாழினிக்கு,

நீ உயிருடன் இருந்தபோது வன்னி வள நாட்டிலிருந்து எழுதிய கடிதம். உன் உயிர் பிரிந்து நீ வீர மரணம் அடைந்து விட்ட சில மாதங்களின் பின்பு என் கைகளில் கிடைத்ததம்மா.

இன்று நீ உயிருடன் இல்லை என்பது தெரிந்தும்,உன் கடிதத்திற்கு பதில் எழுதும் என் பைத்தியக்காரத் தனத்தை பலரும் பரிகசிக்கத்தான் செய்வார்கள்.



கடிதங்கள் ஏன் கல் வெட்டாக இருக்கக் கூடாது? உலகில் பலரின் கடிதங்கள் இன்றும் கல்வெட்டுக்களாக பேணிப் பாதுகாக்கப் படுகின்றனவே. ஆம் மகளே! நான் எழுதுவது வெறும் கடிதம் மட்டுமல்ல. அது கல்வெட்டே தான்.

உனக்கு, உன்னைப் போன்றே வீரமரண மடைந்த உன் அண்ணன் ராகவனுக்கு, உங்கள் திடீர் மறைவினால் திடுக் குற்று இருதயம் நின்று போய்விட்ட உங்கள் அன்னை சிவகாமிக்கு, இங்கு ஊணுறக்கமின்றி உங்களை உருகி வளர்த்த உங்கள் அப்பாச்சிக்கு, உங்கள் அன்பு சித்தப்பா வுக்கு என்று எல்லோருக்குமாக நான் எழுதும் கடிதம் கல் வொட்டாகவே இருக்கட்டும்.

மகளே யாழினி! ஒரு உண்மையை இங்கு நான் சொல்லி யாக வேண்டும். அது என் உயிருக்கு உயிரான நீங்கள் இல்லை; என் உயிரிலும் மேலானவர்கள் நீங்கள் என்னை விட்டுப் போய் விட்ட பின்பு நான் நானாக இல்லைத்தான். சில வேளைகளில் என் சுயத்தையே இழந்து றோட்டு களிலும் ஒழுகைகளிலும் நின்று பிதற்றுகிறேன். யார் யாரையோ எல்லாம் வாய்க்கு வந்தபடி திட்டுகிறேன். ஏசுகிறேன். அழுகிறேன். சிரிக்கிறேன்.

அதனால், சுப்பிரமணியத்துக்கு சிரசு தட்டிவிட்ட தென்றும், அந்தச் சித்த சுவாதீனத்தில் சில வேளைகளில் தன்னை இழந்த் நிலையில் என்னென்னவோ பிதற்றுகிறான் பைத்தியம், என்றும் பலரும் சொல்லிப் பேசிப் போவதையும் கேட்கின்றேன். சின்னஞ் சிறிசுகளின் கல்லுக்குருனி, எச்சில் மாங்காய் என்பவற்றின் எறிதலுக்கும் உட்படுகின்றேன்.



அன்பு மகளே யாழினி! உனக்கு நன்கு ஞாபகமிருக்கும். நாம் நமது சொந்தக் கிராமமான அந்தச் செம்பாட்டு மண் பூமியை விட்டு இடம் பெயர்ந்த ஆண்டு மாதம் திகதி எல்லாம் ஞாபகமிருக்கும். நீ இன்று உயிருடன் இருந்திருந்தால் அதனை விவரமாகச் சொல்வாய். ஆனால் எனக்கோ இன்று எல்லாம் மறந்து போய்விட்டது. யாழ்ப்பாண போர்ப்பிரளயம் தொடங்கி உத்தேசமாக ஒரு பதினைந்து வருஷம் இருக்குமா? இருக்கும். அப்போதிருந்து ஓடத்தொடங்கிய நாம் இப்போதும் ஓடிக் கொண்டேதான் இருந்தோம். அடுத்த கிராமம் அயல்கிராம் என்று தூரம் தூரமாக ஓடி வந்து சுகாதாரக் கேடான சுடலை நிலங்களில் கொட்டில் குடில் வைத்துக் குந்தினோம். இந்தச் சுடுகாடுகளே பின்னர் மாவீரர் துயிலும் இல்லங்களாக பரிணமித்து சரித்திரப் பிரசித்தம் பெற்றன.

மீண்டும் ஓட்டம் இடம் பெயர்வு. யுத்த சன்னத்தர்களான சண்டாளர்களால் ஓரிடமும் நிம்மதியாக இருக்க முடிய வில்லை. இப்படியாக நாம் ஓடி ஓடி ஒளித்துத் திரிந்து யாழ்ப்பாணத்தை அண்டிய கோண்டாவில் கிராமத்தை வந்தடைந்தோம். நல்ல வேளையாக போராளிகள் குடும்பம் என்ற பெருமையால் பிரதான றோட்டுக்கரை ஓரமாக வீடொன்றும் கிடைத்தது. அது நீயும், உன் அண்ணனும் கப்ரின் மேஜர் பட்டியைப் பெற்று விட்டதனால் கிடைத்தபெரும் பேறு.

மகளே யாழினி! இங்கிருந்துதான் எமது கடைசியான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த யாழ்வலிகாமத்து மக்களின் இடம் பெயர்வு ஆரம்பித்தது என்பதை நீ நன்கு அறிவாய்.



யாழ்ப்பாண மக்கள் தென்மராட்சி, வடமராட்சியை நோக்கி நடந்தார்கள். ஆனால் அடுத்த அடி எடுத்து வைத்து நடக்கவே இடைவெளி இல்லாத ஜன நெரிசலில் ஒருவன் இப்படிச் சொன்னான். 'இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க வட்டில் சுமந்து மருங்கசைய - என்று இந்த வேளைக்குப் பொருத்த மற்ற அமராவதி அம்பிகாபதி பாடலை பொருந்தும் என்று பாடினானோ என்னவொ தெரியவில்லை. இதைக்கேட்டு அவன் பக்கத்தில் வந்த இன்னொருவன் 'குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடை மெலிந்து...' என்ற பாட்டைச் சொன்னான். யாழ்ப்பாணத்து மக்களின் அன்றைய அந்த மந்தை நிலைக்கு அந்த நெரிசலில் பலரும் பலவிதமான ஒப்புமையை தாங்கள் அறிந்த அளவில் சொன்னார்கள். இன்னொருவன் சொன்னான், 'இப்படித்தான் மாஸ்கோவில் நடந்த போராட்டத்தின் போதும் மக்கள் வெள்ளம் மாசே-துங்கின் பின்னால் அணி திரண்டு போனது' என்று! இதைக் கேட்ட ஒருவன் காறித்துப்பி பின்பு சொன்னான், "எல்லாம் தெரிந்த பல்லி கடைசியில் தான் கூழ்ப்பானைக்குள் விழப் போவது முன் கூட்டியே தெரியாமல் கூழ்ப் பானைக்குள் விழுந்து விட்டான்." என்று! இதைக்கேட்டு சிலர் சிரித்தார்கள்; சிலர் முறைத்தார்கள்.

மகளே யாழினி! இப்படியாக அந்த இடம் பெயர்வு நடைபவனி நாவற்குழி கைதடியை அடைவதற்கு நாட்கணக்காகின. அதற்கு இடையில்தான் எத்தனை எத்தனை அனர்த்தங்கள் அவலங்கள் நடந்து முடிந்தன? இந்தத் துன்பியல் நாடகத்தை பார்த்து அந்த ஐப்பசி மாதத்து வானம் கூட அழுது தீர்த்தது. செம்மணி



உப்புவெளியின் கடலோரியின் சேறும் சகதியுமான அந்த மார்பளவு தண்ணீருக்குள்ளால் நடந்த போது எத்தனை குழந்தைகள், வயோதிபர்கள் மாண்டு மடிந்தார்கள்?

ஓ, மகளே யாழினி! இங்குதான் உன் சித்தப்பாவும், அப்பாச்சியும் செத்து மடிந்தார்கள். ஏற்கனவே மார்பு வியாதிக்காரனான சித்தப்பாவும், அப்பாச்சியும் உடன் வர மறுத்தபோதும், நான்தான் அவர்களை வலுக்கட்டாயப் படுத்தி இழுத்துப் பறித்து சுமந்து வந்த வேளையில், அந்த உப்புவெளி மூடாத்திப் பிரதேசத்தின் மழை, குளிர், கூதல் என்று எல்லாம் ஒருங்கே சேர்ந்து அவர்களைக் கொன் றொழித்தன. வேம்பிராய் சுடலையில் வெந்து நீறாகியும் போய்விட்டார்கள்.

மகளே யாழினி! இதெல்லாம் உனக்கோ, உன் அண்ணனுக்கோ, உங்கள் அம்மாவுக்கோ தெரியாதுதான். நீங்கள் போராளிகள் என்பதால் முதலில் பின் வாங்கி அங்கால் போய்விட வேண்டும் என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் பெற்ற பிதாவாகிய என்னைக்கூட நான் என் வேலைத் தலத்திருந்து வருமுன்னே விட்டுச் சென்று விட்டீர்களே!

மகளே, ஆதியோடந்தமாக நடந்த சிற்சில சம்பவங்களை இங்கு சுட்டிக்காட்டினேன். மீளக் குடியமர்ந்த பின்பு உன் கடிதம் கிடைத்ததென்பதால் மிச்ச சொச்சத்தையும் எழுதுகிறேன். என் கையில் உள்ள கடிதத்தை மீண்டும் பிரித்துப் பார்க்கின்றேன். சொந்த வீட்டுக் கரிசனையுடன் நாம் கடைசியாகக் குடியிருந்த அந்தக் கோண்டாவில் வீடு வாசல் மரந்தடிகளை எல்லாம் விசாரித்து எழுதி இருக்கின்றாய்.



மகளே! அன்றொரு நாள் திருநெல்வேலியில் றோட்டோரம் நிழல் தந்து நின்ற நூற்றாண்டு மரமொன்றின் கிளையிலிருந்து கிளைமோர்க் குண்டொன்று வெடித்துச் சிதறி படையினருக்கு பெரும் அனார்த்தத்தை விளை வித்தது. அதனால் நாங்கள் குடியிருந்த வீட்டு வளவின் வேலிக்குள்ளாக நின்ற மாமரம், பலாமரங்கள் கூட இனிமேல் கிளை மோர் குண்டுகளாகவே காய்க்கலாம் என்ற அச்சத்தில், கிளைச் சேதம் செய்யப்பட்டு மூளிகளா கவே நிற்கின்றன. பொதுவாக யாழ்ப்பாணத்தில் றோட்டோரங்களில் நிழல் தந்து நிற்கும் நூற்றாண்டு மரங்களின் கிளைகள் யாவும் அகற்றப்படுவதால் இனிமேல் களைத்துச் சோர்ந்து வரும் மனிதர்கள்...

மகளே யாழினி! உனக்கு இன்னொன்றும் சொல்ல வேண்டும். உன்னோடு எந்நேரமும் ஓட்டி உறவாடித் நிற்குமே நாம் வளர்த்த செல்லப் பிராணி ஜிம்மி. கடைசி இடம் பெயர்வின் போது அதனையும் விட்டுச் சென்றோம். அல்லோலகல்லோலமான அந்த வேளையில் தன் தன் உயிரையே பெரிதென மதித்து, பெற்ற பிள்ளையைத் தொட்டிலிலும், பெற்ற பிதா மாதாவை இனிக் கட்டையிலே போகின்ற கடைசிக் காலம்தானே என்றும் விட்டுச் சென்றவர்களும் எம் மத்தியில் இருக்கையில், அந்த வேளையில் இந்த ஜிம்மி நாயை மட்டுமா நாம் நினைவில் வைத்திருக்குப் போகின்றோம்? அந்த ஜிம்மியை ஒருநாள் தற்செயலாக திருநெல்வேலிலுள்ள சோதனைச் சாவடியில் பார்க்க நேர்ந்தது. என் சொந்த பந்தம் எல்லாவற்றையும் தொலைத்த துயரத்தில் மூழ்கி என் சுயத்தையே சில வேளைகளில் இழந்து பிதற்றி வந்த அந்த வேளையில்



தான் அதனைக் கண்டேன். பல நாய்கள் மத்தியில் அது நின்றிருந்தது. என் பிதற்றல் குரல் ஒலியின் அறிமுகத் தன்மை தெரிந்தோ என்னவோ அதுகும் வாலை ஆட்டி முனகியது. இருந்தும் ஜிம்மிதானா என்பதை உறுதி செய்யும் மனோபாவத்தில் என் உச்சந்தலையில் கைவைத்து உள்ள மயிர் நான்கைந்தையும் பிடுங்கும் தோரணையில் இழுத்து நினைவு படுத்திப் பார்த்தேன். ஆம் ஜிம்மிதான். இருண்ட கறுப்பு நிறத்து அழகு சேர்க்கும் வகையில் கழுத்தில மட்டும் வெள்ளையாய் மலர் மாலை சூடி நிற்கும் கோலத்தில்... அது ஜிம்மியே தான்.

இன்னொன்று மகளே! நான் என் விசர்க் குணத்தில் யாழ்ப்பாணத்து வீதிகளில் சுற்றித்திரியும் வேளைகளில் பல சோதனைச் சாவடிகளை கடந்தே செல்கின்றேன். ஆமிக்காரர்களுக்கு நான் பரிச்சயம் ஆகிவிட்டபடியால் என்னை மட்டும் எந்தச் சோதனையுமின்றி 'போ பைத்தியம்' என்பார்கள். அப்போது அந்தச் சென்றிகளில் இடம் பெயர்வின் போது யாழ்ப்பாணத்து மக்கள் விட்டுச் சென்ற நாய்கள் கும்பலாகத் தஞ்ச மடைந்து நிற்பதைப் பார்க்கிறேன். உள்ளூர்ப் பறை நாயிலிருந்து மிக உயர்ந்த சாதி இன நாய்கள் வரை நிற்கின்றன. ஆனால் அவைகளை இங்கு நாம் உடனிருந்து வளர்த்தபோது பிற நாய்களைக் கண்டு ஒன்றை ஒன்று கடித்துக் குதறும் தங்கள் பூர்வ நாய்க்குணங்களை இழந்து மிக ஒற்றுமை யாக நிற்பதாகவே எனக்குப் படுகின்றது. எமது ஜிம்மியை அடையாளம் கண்டு கொண்ட நான், சென்றியில் நின்றிருந்த ஆமிக்காரர்களை அணுகி "ஐயா... அந்தக் கறுப்பு கழுத்தில் வெள்ளை இருக்கிற நாய், நான் வளர்த்த



நாய்.." நான் சொல்லி முடிப்பதற்குள், "அடேப் பைத்தியம்! நீ வளர்த்தது?..ஆ வந்தாக கூட்டிப் போறது" என்றான் ஒரு ஆமிக்காரன்.

மகளே யாழினி! நீங்களெல்லாம் என்னை நிர்க்கதி யாக்கி தனிமையில் இந்தப் பூமியில் விட்டுச் சென்ற பிறகு, இன்றைய எனது பைத்தியக்கார பிதற்றலை கேட்பதற்கும், ஆறுதல் கூறுவதற்கும் ஒரு அத்தியந்த ஜென்மம் வேண்டு மல்லவா? அதனால்....

"வா ஜம்மி" என்றேன் வாஞ்சையுடன் விரல்களைச் சுண்டி! ஜிம்மி வாலை ஆட்டியது. பின்பு உடன்நின்ற மற்ற நாய்களையும், ஆமிக்காரர்களையும் அது மாறிமாறிப் பார்த்தது. முனகியது. அவர்களிடமிருந்து விடைபெறும் வேதனையின் அறிகுறியோ அந்த முனகல்?

வளர்த்தால் மட்டும் பொதுமா? நாதியற்ற நிலையில் அன்று நடுத்தெருவில் நாம் விட்டுச் சென்றபோது, ஏதும் அறியாது ஏங்கித் தவித்து நின்ற அந்த வேளையில் முன்பின் அறியாத இந்த யூனிப்போம் மனிதர்கள் அடைக்கலம் தந்து ஆதரித்த அந்த நன்றிக்கடனை அதனால் அவ்வளவு சுலபத்தில் மறந்து போய் விட முடியுமா?... வேண்டுமானால் ஆறறிவு படைத்த மனிதன் அதனைச் செய்வான். இது கிள்ளி வைத்தவர்களை ஜென்மம் பூராவும் மறக்காத நன்றி உள்ள பிராணி அல்லவா?

அதனால் அந்த ஆமிக்காரர்களையும், என்னையும் ஜிம்மி மாறிமாறிப் பார்த்து முனகியதிலிருந்து 'சூ... என்றவுடன் ஓடி வரும் நாயாக இல்லாமல், யார் செய்த நன்றி பெரிது?... யாருடன் நிற்பது, போவது என்ற மனப்



போராட்டத்தில் தவிப்பதாக எனக்குப் பட்டது. அதனால் அதனை மேற்கொண்டு கூப்பிடாது திரும்பி நடந்தேன். சிறிது தூரம் சென்று முனகல் ஒலி கேட்டு திரும்பிப் பார்த்தேன். ஜிம்மி இரு கன்னைக்கும் இடை நடுவில் நின்று பரிதவித்தது.

மகளே யாழினி! இன்னொன்றும் இங்கு சொல்ல வேண்டும். நீங்கள் இங்கிருந்தவரை எந்தப் பிரச்சனையும் தராதிருந்த நாமிருந்த வீட்டின் சொந்தக்காரன் வீட்டை விட்டு எழும்பும்படி பயமுறுத்திக் கொண்டிருக்கின்றான். 'காட்டிக் கொடுப்பேன்' என்கிற ஒரு கூட்டமும் இருக்கும் வரை...

இதோ அவனும் இந்த நேரம் பார்த்து இந்தச் சோதனைச் சாவடியில் வந்து நிற்கின்றான். அந்த ஆமிக்காரர்களிடம் என்னைக் காட்டி என்னவோ சொல்கிறான். அதைக் கேட்ட ஆமிக்காரன் என்னைக் கூப்பிட்டான். போனேன்.

"அடே நீ புலி ஆள்?.." என்று உறுக்கிக் கேட்டான்.

"இல்லை ஐயா" என்றேன்.

"அப்ப இந்த நரி ஆள் சொல்றது நீ புலி ஆளென்று..."

"புலி ஆக்கள் எல்லாம் இப்ப நரி ஆக்கள் ஆயிட்டாங்கள் ஐயா. அதுதான் சொல்லுறார்" என்றேன்.

"அடே, புலி ஆளை விட நரி ஆள்தான் மிச்சம் பொல்லாத ஆளு..." என்றான் ஆமிக்காரன் அவனைப் பார்த்துப் பின்பு என்னைப் பார்த்துச் சொன்னான் "நீ பயித்தியம். போ... போ..." என்றான்.

"அவன் பயித்தியம் மாதிரி நடிக்கிறான் ஐயா" என்றான் வீட்டுக்காரன்.



"அடே இப்ப நீ போறது இல்லே...உன்னை மாதிரி ஆளுங் களாலைதான் இந்தச் சண்டை எல்லாம் வந்தது. போ போ" என்று அவனைப் பார்த்து கையை ஓங்கியபடி சொன்னான் ஆமிக்காரன்.

மகளே யாழினி! சுயநலமும் சந்தர்ப்ப வாதமும், வக்கிர புத்தியும் கொண்ட இந்த மாதிரி மனிதர்களால்தான் தமிழ் சாதி இன்று அழிகுடியாயிற்று. மெத்தப் படித்து அரசியல் நடத்தியவர்களிலிருந்து எல்லோரும் தங்களுக்குள் ஒற்றுமைப்பட முடியாமல் போனதனால் அந்த யாழ்ப்பாண மண் அப்படியாயிற்று. ஒரு நல்ல யாழ் வீணைக்குரிய இனியநா தத்தை இனி இசைக்கப் போவதில்லை என்றே நினைக்கின்றேன். ஏனெனில் அதன் பிரதான ஒற்றுமை நரம்பு எப்போதோ அறுந்து போய் விட்டது.

மகளே யாழினி! வன்னி வள நாட்டில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தின் உறங்கும் உன்னைத் துயிலெழுப்பி, இக்கடிதத்தை உன்னிடம் சேர்ப்பிக்கும் தபால்காரன் பொறுப்பை தெய்வத்திடமே ஒப்படைக்கும் உன் அப்பன் -

சுப்பிரமணியம்.



16



கள்ளும் கதையும்



தாகம் மேலிட்ட காகம் தண்ணீர் இருப்பிடத்தை நோக்கி பறந்து வந்த வேகத்தில் கள்ளுக் கோப்பி றேசன் கொட்டிலை வந்தடைந்த சாம்ப சிவத்தார் கொக்காக மாறி, வாடி இருக்க வேண்டிய தாயிற்று.

'வந்த கள்ளு விற்று முடிந்த விட்டதாம். இன்னும் இரண்டொருவரின் கள்ளு வர வேண்டுமாம்...வாற நேரம் தான்.. வந்து விடும். இருங்கோ' என்றான், நீட்டு கால்சட்டை போட்டிருந்த



கள்ளு விற்பனவுகாரப் பொடியன்.

அதனால், தாகம் தீர்க்க காகமாகப் பறந்த வந்த சிவத்தார் கொக்காகவாடி இருக்க வேண்டியதாயிற்று.

"கார்த்திகை, மார்கழி மாதங்களில் கள்ளு கொஞ்சம் தட்டுப்பாடான காலம்தான். அதிலும் அந்த மனிசன் என்.எம்.பெரேரா உவங்களுக்காக நல்லதொரு கள்ளுக் கூட்டுறவுச் சங்க அமைப்பு முறையை ஏற்படுத்திக் குடுத்தும், உவங்கள் இன்னும் வீடுகளிலை வைச்சு வித்துப் போட்டு மிச்சத்தைத்தான் இந்தக் கொட்டிலுக்கு கொண்டுவந்து குடுக்கிறவங்கள்."

ஏலவே இரண்டு போத்தல் கள்ளைக் குடித்து உடலில் ஏற்படுத்திக் கொண்டிருந்த உசாரில் வெகு கலகலப்பாக கனகிளியாக மாறியிருந்த கனகசபையர் சொன்னார்.

"கண்டறியாத கோப்பிறோன் சங்கமும், கள்ளு விற்பனவும். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த சான்றோர் போய், சங்கம் வைத்து கால்சட்டை போட்டு கள்ளு விக்கிற ஒரு கூட்டம் வந்ததாலைதான் இந்தளவு சீத்துவக் கேடும். ஓமோம், எல்லாம் இண்டைக்கு உத்தியோக தோரணையாய்ப் போச்சு" எரிச்சல் மேலிட்ட சிவத்தார் அப்படிச் சொன்னார்.

ஏற்கனவே இரண்டை மாட்டிப் போட்டு வெகு குசாலாக இருந்த கனகசபையர், சிவத்தாரின் இந்த அகட விகடப் பேச்சைக் கேட்டு வாய்விட்டுச் சிரித்தார்.

"வெகு அருமையாகச் சொன்னீர் சிவத்தார். அதுசரி ஏது இண்டைக்கு இவ்வளவு சுணக்கம்? நான் கொஞ்சம் முந்திவிட்டன். இல்லையெண்டால் நானும் உம்மைப் பொலை காகமாக வந்து கொக்காக வாடி இருந்திருப்பன்.



நல்ல வேளை நானும் வர சின்னவியும் கள்ளைக் கொண்டு வந்தான். அதிலை இரண்டை வாங்கி 'மளார் மளார்' எண்டு அடிச்சன். அந்த உசாரிலைதான் இப்ப கனகிளியாக மாறி யிருக்கிறன். பொதுவாக கள்ளு சாராயம் குடிக்க வாறது களின்ரை கதை இப்படித்தான் இருக்கும். எப்படி என்று கேட்கிறீரோ சிவத்தார்?" என்றார் கனகர்.

"சொல்லும்" என்றார் சிவத்தார்.

"காகம், கொக்கு கனகிளி அனுமான் பேச்சுக்கு இராவணன், பின்னே கும்பகர்ணன்....' என்ன ஏதாவது விளங்கிச்சுதே?"

"நீர் சமா வைக்கத் தொடங்கி விட்டீர். நானும் ஒண்டை இரண்டை அடிச்சிருந்தால் அந்தப் போதை தரும் ஞானத்திலை எல்லாத்தையும் புரிஞ்சு கொண்டிருப்பன். இப்ப எல்லாம் ஒரே மந்தமாக் கிடக்கு" என்றார் சிவத்தர் சலிப்புடன்

"சரி சொல்லுறன் கேளும்... தண்ணீர் விடாய் எடுத்த காகம் மாதிரி இஞ்சை இந்தக் கொட்டிலுக்கு தவித்துப் பறந்து வாறம். கள்ளு இன்னும் வரவில்லை எண்டவுடனே இப்ப உம்மைப் போலை கொக்காக வாடி இருக்க வேண்டி இருக்கு. இரண்டை அடிச்சு உசார் வந்தவுடனே இப்ப என்னைப் போலை கனகிளியாக மாறிவிடுகிறம். அப்புறம் இன்னொண்டையும் இறக்கினால் அநுமான், அதாவது குரங்குச் சேட்டை எல்லாம் வந்துவிடும்... அதுக்குப் பிறகும் ஒண்டு இரண்டைப் பாவிச்சால்... இலங்கேஸ்வரன் இராவணன்தான். மீசையை முறுக்கிவிட்டு 'ஆற்றா அவன்?... அப்படியும் ஒரு விண்ணனோ இந்த வீரவாகு வோடை நின்றுபிடிக்க' என்று வீர வார்த்தைகள் பேசி



அதுக்குப் பிறகு என்ன?... போய்ப் படுத்தால் கும்பகர்ணன் தானே!" என்று தான் சொன்ன தொடர் வார்த்தைகளுக்கு விளக்கமளித்தார் கனகசபையர்.

"கள்ளுக்குக் கதை புருஷன் என்ற மாதிரி ஒரு அருமையான விளக்கம்தான் கனகர். நானும் ஒண்டு இரண்டைப் பாவிச்சால் உதுக்கு ஏட்டிக்குப் போட்டியாக ஏதும் சொல்லுவன் ப்ச்.... இப்ப வெறும் உதட்டைச் சூப்பிக் கொண்டிருக்கிறன்" என்றார் சிவத்தார்.

"ஆ, இந்தா வந்திட்டுது. சினம் தீர இரண்டை வாங்கி அடியும் சிவத்தார். கனகிளி அநுமானாக கொஞ்சநேரம் இதிலை இருந்திட்டு... பிளா உங்கினை கிடக்கும்... எடுத்துக் கழுவிப் போட்டு வாங்கும்" என்றார் கனகர்.

"ஓமோம், கழுவிக் குடுத்த காலம் போய், இப்ப கழுவிக் குடிக்க வேண்டிய காலம் வந்திட்டுது. ம்... இன்னும் என்னென்ன மாற்றங்கள் வரப்போகுதோ ஆர் கண்டார்கள்" என்றார் சிவத்தார்.

"எல்லாம் சரிதான் சிவத்தார், எனக்கு உம்முடைய உந்தக் கிரந்தக் கதைகள்தான் பிடிக்கிறதில்லை... எல்லா மாற்றங்களும் வந்திட்டுது. இனி வாறதுக்கு ஒண்டு மில்லை. காலத்தோடை மாறிப் போகக் கற்றுக் கொள்ள வேணும்."

"என்ன சொல்லுறீர் கனகர்?"

"கொட்டிலுக்குள்ளை விற்பனவுகாரப் பெடியன்ரை கதிரையிலை இருந்து கொப்பியளைப் பார்த்துக் கொண்டி ருக்கிறாரே ஒருத்தர்.... ஆளைத் தெரியுமே?.... கவனியும் பிறகு சொல்லுறன்" என்றார் மெல்லிய குரலில் கனகர்.

"உவரொரு மாஸ்றரெல்லே...பேரும் ஏதோ வேதக்காரப்



பேர்... ஞாபகத்துக்கு வருகுதுமில்லை... இஞ்சினைதான் அடிக்கடி கண்ட நினைப்பாக கிடக்கு. இரகசியமாக வந்து அடிச்சிற்றுப் போறவராக்கும் எண்டு நினைக்கிறன்."

"உவர் தான் இப்ப இந்தக் கோப்பிறோன் சங்கத் தலைவர். பேர் அலோசியஸ் மாஸ்ற்றர்" என்றார் கனகர்.

"இந்தக் கள்ளுக் கோப்பிறேரன் சங்கத் தலைவரோ?... அது கள்ளுச் சீவல்காரங்களொல்லோ தலைவராக வர முடியும். அதிலும் வேதக்கார வெள்ளாளன்... அப்ப உவரும் சீவுகிறவரே?" ஆச்சரியம் அதிசயம் எல்லாம் கலந்த தொனியில் கேட்டார் சிவத்தார்.

"ஓமோம், ஆள் வெளிக்கிட்டு வாறார். பேசாமல் இரும். விருததாந்தத்தைப் பிறகு சொல்லுறன்" என்றார் கனகர்.

"என்ன கோதாரியிலை போன கதையாக்கிடக்கு" என்று சொல்லி நிறுத்தினார் சிவத்தார்.

இதற்கு இடையில் வெளியெ வந்த அலோசியஸ் மாஸ்றர் கனகரைக் கண்டுவிட்டு, கண்டும் காணாது மாதிரிப் போய் விடாது, இரண்டு வார்த்தையாவது கதைக்க வேண்டுமென்று "என்ன கனகண்ணை கன கிளியாக மாறிவிட்டியள் போலை கிடக்கு?"

"இல்லை மாஸ்ரர், சம்மா முஸ்பாத்திக் கதைதான். கள்ளுக்குக்கதை புருஷன் என்பார்கள். ஒரு ரேஸ்ற் மாதிரித்தான் இந்தக் கதைகள்" என்றார் கனகர்.

"இன்னொண்டையும் சொல்ல மறந்திட்டீர் கனகர். சாராயத்தைக் குடுத்து பூராயத்தைக் கேள் எண்டும் சொல்லுவார்கள். இஞ்சை வந்தால் ஊர் தேச மனிதர்களின் புதினங்களை எல்லாம் நல்லா அறியலாம்" என்றார் இடையில் புகுந்து சிவத்தார்.



"என்ன முஸ்பாத்தியோ பனம் பாத்தியோ... கள்ளை அளவுக்கு மிஞ்சி குடிச்சால் கனக்க கதைக்கத்தான் வேண்டி வரும். கள்ளைக் குடியுங்கோ அளவோடை, ஆனால் கள்ளு மனிசரைக் குடிக்கக்கூடாது கண்டியளோ. ஆதிகாலத்தில் இருந்து இன்றைவரைக்கும் கள்ளு, சாராயம், கஞ்சா குடித்து காலத்தால் அழியாத பல அற்புத கவிதைகளையும், காவியங்களையும் தந்த எம் புலவர்கள் சிலரும் உண்டு. அதனால் கள்ளுக்குடிப்பது வெறும் முஸ் பாத்திக்கும் சண்டை சச்சரவும் என்றிருக்கக் கூடாது தெரிஞ்சுதோ... சரி நான் வாறன்." மாஸ்ற்றர் சைக்கிளில் ஏறிச் சென்றார்.

"என்னடாப்பா, சாத்தான் வேதம் ஓதின கதையாக வல்லோ இருக்கு" என்றார் சிவத்தார்.

"பேய்க்கதை பேசாதீர். அந்தாளின்ரை அறிவுக்கும் ஆற்றலுக்கும் நீரோ நானோ அருகிலைகூட நிற்க முடியாது. கள்ளுச் சீவுகிறவனெல்லாம் கடை கெட்டவன் என்று நினைக்கிறீரோ?... ஒருநாள் கதைக்கப் போய் மாஸ்ற்ரட்டை நல்ல செப்பமாக வாங்கிக் கட்டிக் கொண்டான்."

"அது சரி கனகர் தெரியாமல் தான் கேட்கிறன்.... உந்தச் சட்டம்பியார் பென்சனும் எடுத்துக்கொண்டு, நல்ல வசதிவாய்ப்போடை இருக்கிற மனிசன். என்ன அவசரத் துக்காக எந்த எளியஞ்சாதித் தொழிலை செய்ய வெளிக்கிட்டவர்? அதுதான் காணும் அவற்றை பிள்ளைக் குட்டிகள் நல்ல தண்டு தரமான உத்தி யோகங்கள், தொழில் துறைகளிலை இருக்கிறாங்களாம். அப்பிடி இருந்தும் உவரை உந்த சாண் நார் தொழிலைச் செய்ய



அனுமதிச்சவங்களே?... சே, எங்களுக்கே தலைகுனிவாக் கிடக்கு உந்த மனிசன்ரை செயலையும் கதையையும் கேட்க " என்றார் சிவத்தார்.

"அவர்களைப் பொறுத்தவரையில் இவர் எப்போதோ கர்த்தருக்குள் நித்திரை ஆகிவிட்டார். அதாவது செத்துப் போய்விட்டார். உதைத்தான் இப்ப நான் சொல்ல வாறன் கேளும்" என்ற கனகர் தொடர்ந்து சொன்னார்.

"வாத்தியார் எப்போதுமே ஒரு தனிப் போக்குடைய மனிசன். யேசுபகவானுடைய திருநாமத்தை ஜெபித்துக் கொண்டு, அவருடைய பாதையை 'சமயத்தை' பின்பற்றுவ தான மனோபாவத்தில், சிலுவைக் குறியை கழுத்தில் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு, சாதிகுலம் கோத்திரம் என்ற சம்பிரதாயப் போக்குகளை கடைப்பிடித் தொழுகும் வைரித்த கிறிஸ்த்தவர்களிடையே இவர் ஒரு தனிப் போக்குடைய மனுசன். அதனால் அவர் தனிமைப்படுத்தப் பட்டு விட்டார் என்று மற்றவர்கள் சொன்னாலும், அதுவல்ல உண்மை.

"வாத்தியாரின் பொழுது போக்குத்துறைகள் – தொழில் கள் பல உண்டு. படம் வரைவார். பத்திரிகைகளுக்கு எழுதுவார். தச்சுத்தொழில் கூடச்செய்வார். அது மாதிரித் தான் இந்தச் சீவல் தொழிலையும் கருதிச் செய்யப் செய்யிறாராக்கும்.

"வாத்தியார் கொஞ்சம் பாவிக்கிற மனிசன்தான். அதில் எந்த ஒளிவுமறைவும் இல்லை. ஆனால் அதுதான் கதி என்று எங்களைப் போலை குடிச்சிற்று, பினாத்திக் கொண்டு திரியிற பேர் வழியில்லை. அந்த வேளைகளில் தான் வாத்தியார் படம் கீறவதும், பத்திரிகைகளுக்கு



எழுதுவதுமாக இருப்பார்.

"வாத்தியாரின் செடிக்கிணற்றடி வளவில் கையாலை எட்டித் தேங்காய் பிடுங்கக் கூடிய அந்த கட்டையான தென்னம்பிள்ளைகளில்தான் சின்னவி கள்ளுச் சீவிக் கொண்டிருந்தான். ஆறடி உயரமுடைய வாத்தியாரின் தோற்றுத்துக்கு ஏற்றாப்போல, அரைவாசிப் பங்குடைய கைகளை உயர்த்தினால் சின்னவி மரத்தில் இருந்து கொடுக்கும் கள்ளு ஏதனத்தை வாங்க முடியும். அத்தனை கிட்டடியான வட்டுள்ள மரங்கள். அதனால் சின்னவி செய்யும் தொழிற் செயற்பாடுகளையும் வெகு உன்னிப் பாகப் பார்த்த வண்ணம் கீழே கதிரையில் வாத்தியார் அமர்ந்திருப்பார். சில வேளைகளில் தவிர்க்க முடியாத காரணங்களினால் சின்னவி பாளை சீவ வராத வேளை களில், வாத்தியார் ஏணியை மரத்துடன் சார்த்தி வைத்து அதன் மூலம் ஏறி பாளைசீவி கள்ளிறக்குவார். இப்படித் தான் வாத்தியார் மரமேறி கள்ளுச் சீவத் தொடங்கிய கதை ஆரம்பித்தது. பிறகென்ன?... அலோசியஸ் மாஸ்ற்றர் கள்ளுச் சீவுகிற கதை அந்த வட்டாரம் முழுவதும் பரவி விட்டது. அந்தச் செய்தி இந்தக் கோப்பிறேசன் சங்கத் திற்கும் எட்டவே, அவர்களும் வந்து பார்த்து சங்கதி உண்மையே என்பதை உறுதிசெய்து கொண்டபின், சட்டம் கதைத்தார்கள். வாத்தியார் எந்த ஒழிப்பு மறைப்புமின்றி உண்மையை ஒத்துக்கொண்டார். அவர்களின் சட்ட திட்டங்களுக்கு அமைய மனமொப்பி சங்கத்திலும் சேர்ந்தார். பொதுக் கூட்டம் நடைபெற்ற போது வாத்தியார் எவ்வளவோ மறுத்தும், அவரையே சங்கத்தின் தலைவரா கவும் தேர்ந்தெடுத்து விட்டார்கள். அந்த வேளையில்



வாத்தியார் பேசிய பேச்சு பத்திரிகைகளில் வந்தது. இப்ப அந்தப் பேச்சின் சுருக்கத்தை சொல்லுறன் கேளும் சிவத்தார்.

"யாழ்ப்பாணத்தில் தொழில்கள் சார்ந்த சாதி அமைப்பு முறையிலே, இந்தச் சீவல் தொழில் செய்பவன் ஒரு கீழ் சாதியாக, அதாவது தீண்டத் தகாதவனாக என்று ஒதுக்கப்படுகிறான். அவன் உற்பத்தி செய்யும் பொருளை உண்பவர்களாலேதான் இப்படித் தாழ்த்தப்படுகிறான். இந்த உண்பவர்களும் பாவனையாளர்களும் யாரென்று பார்த்தால், யாழ்ப்பாணத்து பெருங்குடி மக்களே ஆவார். நீ நுகர்வதாலேதான் அவன் உற்பத்தி செய்கிறான். உண்பவன் இல்லை என்றால் உற்பத்தியாளன் இருக்க மாட்டான்.

" என்னைப் பொறுத்தவரையில், இதை ஒரு சாதிக்குரிய தொழிலாக நான் கருதவில்லை. இது ஒரு விஞ்ஞான பூர்வமான தொழில். அதனால்தான் இத் தொழிலை எனது பொழுது போக்கு துறைகளில் ஒன்றாக கருதிச் செய்ய முன் வந்தேன். நெடுந்தீவு என்ற இடத்தில் இந்த தொழிலை சகல ஜாதியரும் செய்கிறார்கள். அதற்காக எந்தச் சாதிமுறையும் பேணப்பட்டு அங்கே ஒருவரை ஒருவர் ஒதுக்கி வைக்கவில்லை.

"தோழர் என். எம். பெரேரா அமைச்சராக இருந்தபோது கொண்டு வந்த இந்தக் கூட்டுறவு அமைப்பு முறையானது, இந்த தொழில் சார்ந்த மக்களுக்கு ஒரு அரிய வரப்பிரசாதம் ஆகும். இந்த அமைப்பிற்குள் இன்று சீவல் தொழில் சாராத பல சாதி யாரும் உத்தியோகம் என்ற பொதுத் துறைக்கு வந்துள்ளதால் சாதித்துவம் சற்றுத்



தளர்ந்து காணப்படுகிறது. ஆகவே காலப் போக்கில் இந்தச் சீவல் தொழிலுக்குரியவர்கள் ஒதுக்கப்படும் சாதியல்ல என்ற நிலைப்பாடு ஏற்படவும் வாய்ப்புண்டு.

"கேட்டீரோ சிவத்தார், வாத்தியாரின் பேச்சின் சுருக்கத்தை?... வாத்தியார் சொன்னதில் ஞாயம் இருக்கத் தான் செய்கிறது. அவங்கள் தங்கள் ஊன், உதிரம், வியர்வையை சிந்தி உழைக்கும் உழைப்பின் மூல தனத்தில் உத்தியோகம் என்ற போர்வையில் இன்று பலசாதியும் வியர்வை சிந்தாமல் கதிரைகளில் அமர்ந்து காரியம் பார்த்து சம்பளம் பெறுகிறார்கள் என்றால்..." என்ற கனகர் கதையை முடிக்கவில்லை. அதற்குள் சிவத்தார் குறுக்கே புகுந்தார்.

"அப்படியென்றால் இப்ப உந்த வேதக்காரச் சட்டம் பியாரும் அந்தச் சாதியாகி விட்டார் என்று சொல்லும். தூ!..." காறித்துப்பியபடி சொன்னார்.

"சிவத்தார் உம்முடைய காறல் துப்பலுக்குரிய அர்த்தம் எனக்கு புரியாமல் இல்லை. நீங்கள் இன்னும் சாதித் திமிரிலைதான் நிக்கிறியள். காலத்தோடை மாறிப்போகக் கற்றுக்கொள்ள வேண்டும் தெரிஞ்சிதே!

"வாத்தியாரின் பேச்சின் சுருக்கமும், அவருடைய பேட்டியும், அவருடைய புகைப்படத்துடன் 'கற்பகம்' என்ற பத்திரிகையில் வெளிவந்தபோது வாத்தியாரின் பிள்ளை குட்டிகளும், உறவுக்காரர்களும் துடித்துப் பதைத்துப் போனார்கள். அதனால் அந்தப்பத்திரிகைப் பிரதிகளை வாங்கி எரித்துச் சாம்பலாக்கியதுடன், வாத்தியாருக்கும் ஒரேயடியாக ஈமக்கிரிகைகள் செய்து முடித்துவிட்டார்கள் என்று அவருடைய ஒரு மகன் விக்ரர் ஒருநாள்



சொன்னான்" என்றார் கனகர்.

"அவங்கள்தான் சரி. எவ்வளவு தலைகுனிவான கீழ்சாதித் தொழிலை செய்ததுமல்லாம் அதைப் பத்திரி கையிலும் போடுவிச்சு பகிரங்கப்படுத்திப் போட்டாரே... எளிய சட்டம்பி" என்றார் சிவத்தார் பற்களை நெருமியபடி

"கதைத்துப் பிரியோசனமில்லை சிவத்தார், காலம் தான் உதுக்குப்பதில் சொல்ல வேண்டும். சரி வாரும் போவம்" என்று எழுந்து நின்ற கனகர் வயிற்றைத் தடவி பெரிதாக வாயு பறித்துக் கொண்டார்.

"காயுமே இது பொய்யடா காற்றடைத்தபையடா... இதற்கு இடையில்தான் எத்தனை எத்தனை சாதி சமய பேதங்களெடா என்று நான் சொல்லவில்லை. முன்னமே சொல்லி வைத்து விட்டார்கள். இப்போது என் வயிற்றில் நிற்கும் கள்ளும் அதைத்தான் சொல்கிறது" என்றார் கனகர்.

"அடடே, நேரம்போனதே தெரியவில்லை. மதியமும் திரும்பி விட்டது. கள்ளுக்குக் கதை புருஷன் என்று சும்மாவே சொன்னார்கள். வெறியும் முறிகிற பக்கு வத்துக்கு வந்து விட்டது. இன்னும் ஒண்டை அடிச்சால் நல்லதுதான். அதுக்கு கள்ளுமுடிஞ்சுது என்று சொல்கி றானே பெடியன். ம்..மனிசி வள்ளிநாயகியும் இண்டைக்கு முறையாக குட்டிபோட்ட பெட்டை நாயாகத் தான் வாய் வைக்கப் போறாள்" என்றார் சிவத்தார்

"ஏன் என்ன சங்கதி?... ஏதாவது தனகி கினகிப்போட்டு வந்தீரோ?.."என்றார் கனகர்.

"சே,சே. அப்படியொன்றுமில்லை. கறிக்கு ஏதாவது மச்சம் மாமிசத்தை வாங்கி வரச் சொன்னாள். நானும் இண்டைக் கெண்டு, உம்முடைய கதையோடை நல்லா



மினக்கெட்டுப் போனன். 'அதுதான்...' என்றார் சிவத்தார்.

"இன்றைய பாட்டுக்கு இரண்டு முட்டையை வாங்கிக் கொண்டுபோம். நானும் அதத்தான் செய்யப் போறன். சரி வாரும். உதிலை உவன் கோணாமலையனிட்டை ஒண்டொண்டு வடிசாராயம் அடிச்சிட்டுப் போவம். கள்ளுக்கும் அதுக்கும் வலு அச்சாவாக, கண கணப்பாக இருக்கும்" என்றார் கனகர்.

"காகம், கொக்கு, கனகிளி, அநுமான் பேச்சுக்கு இராவணன் பின்னெ கும்பகர்ணன்... கனகன்ரை அனுபவமும் வாத்தியாற்றை கதையும் வலுசோக்காத் தான் இருக்கு. இந்த போதை தந்த ஞானத்தோடை பார்கையிலே காற்றடைத்த பொய்யான இந்த அற்ப ஆயுசு வாழ்க்கையிலே மனிதரை மனிதர் உணராமல் எத்தனை சாதி சமய பேதங்களைத் தான் பார்க்கிறம். இந்த வகையிலே வாத்தியார் ஒரு யேசுகிறிஸ்து நாதர்தான்" என்று பினாத்திக்கொண்டு வீடு வந்து சேர்ந்தார் சிவத்தார்.

"இண்டைக்கு நல்ல ஏத்தம் போலகிடக்கு. அதுதான் யேசுபிரான், இராவணன் கும்பகர்ணன் எல்லாரும் வாயிலை அறம்புறமாக வருகினம்" என்றாள் அவர் மனைவி வள்ளிநாயகி

"அதெல்லாம் போகட்டும் இப்ப என்ன கறியடி?"

"கறியும் முறியும் தின்ன வந்திட்டார் வெறி முறிய ...கோமணத்துத்துணியிலையே குழம்பும் சூப்பும் வைக்கிறது? வெட்கம் கெட்ட குடிகாரச்சாதி, தூ.....!" என்று சொல்லி காறித்துப்பினாள் மனைவி.

"இந்தாடி ஒண்டைப் பொரியடி, மற்றதை அவியடி" என்று கூறிக் கையிலிருந்த முட்டைகளை மனைவி முன்



விட்டெறிந்தார் சிவத்தார்.

"அடப் பாழ்படுவானே! விலைகுடுத்து முட்டையை வாங்கிவந்து வீசி எறிந்து உடைச்சுப் போட்டுப் போறியே. அந்தளவுக்கு வெறி இராவணனாக்கி விட்டிருக்கு. இனிக் கும்பகர்ணன் தானே! போய்ப்படும். எல்லாம் வெறி முறியச் சுகம்வரும்" என்று தனது அர்ச்சனையைத் துவங்கினாள்.





17

வழி பிறக்குமா?

பனிபோர்த்த அந்த வைகறைப் போதினில் முற்றத்தில் நின்ற பூவர மரத்துடன் முதுகைச் சார்த்தி எழுவான் திசையைப் பார்த்து நின்றிருந்தாள் திலகம்.

மரமும் கொடுகும் மார்கழி மாதத்து கொடிய குளிர் மனித என்புகளின் குழலட்டையை உறைய வைக்கும் அந்த வேளையில் இவள் திலகம் யாரை எதிர்பார்த்து எதற்காக இப்படித் தவமியற்றுகின்றாள்?





விடியப் போகின்றது. பறவைகளின் கூட்டுக் குரலொலி அன்றைய விடிதலை அவசரமாகப் பறைசாற்றுகின்றது. விடிந்தால் தைப்பிறப்பு; தைப்பொங்கல்.

'தைபிறந்தால் வழிபிறக்குமாமே!'

மூத்த குடியில் வந்தோர் முன்னெப்போதோ சொன்னது. இன்றும் சொல்லப்படுகின்றது.

'தை பிறந்தால் வழி பிறக்கும்!!

எது ஏதற்கென்றில்லாமல் எதற்கும் பொதுவாகச் சொல்லி வைத்த பழமொழி.

மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.

மூத்தோர் சொன்னதெல்லாம் – சொல்வதெல்லாம் வார்த்தை அமிர்தமா?

காலமாற்றத்தின் நீரோட்டத்தில் எத்தனையோ பொன் மொழிகளும் பழமொழிகளும் கவ்வைக்குதவாமலும் போய் விட்டனவே.

'தை பிறந்தால் வழி பிறக்கும்.'

மொட்டாக - பூவாக - பிஞ்சாக - காயாக - பழமாக...

எத்தனை எத்தனையோ மனித ஜீவன்களை அவலமாய் அகாலமாய் கொன்றொழித்து - தின்று தீர்க்கும் கொடிய யுத்தம் தொடங்கியபின் எத்தனையோ தைப் பிறப்புகள் வந்து போய் விட்டனவே.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' மூத்தோர் சொன்னது. இன்றும் சொல்லப்படுகின்றது. இந்தத் தைப்பிறப்புடனாவது இந்த மக்கள்படும் அவலங்களுக்கு ஒரு வழி பிறக்குமா?

ஆனால் இந்த தைப் பிறப்பென்ன? இனி எத்தனை தைப் பிறப்புகள் பிறந்தாலும் - வந்தாலும் தன் வாழ்வில் எந்த வழியும் - விடிவும் பிறந்து விடப் போவதில்லை என்ற



முடிவிற்கு வந்தவளாய் - தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய எவனையோ - எதையோ எதிர்பார்த்து அவனிடத்து தன் முடிவில்லாத துயரக் கதைக்கு 'முடிவென்ன?' என்று கேட்டு - முடிவில்லை யென்றால் 'என்னையும் முடித்து விடு ' என்ற நெஞ்சக் குமுறலுடன் நின்றிருந்தாள் திலகம்.

பனிப்புகாருடன் கூடிய இருள் பிசுபிசுப்பு அகலாத அந்த அதிகாலைப் போதினில் - அன்றைய புதிய தைப் பிறப்பில் - புதிதாக சிரசுதயமாகி வரப்போகும் பாலசூரியனைப் பார்த்து 'அடபாதகனே! அன்றைய இந்நாளில் முற்றத்தில் பொங்கிப் படைத்து உன்னை ஆராதித்து நன்றிக்கடன் செய்து நின்றவனை கொன்றொழிப்பதை பார்த்திருந் தாயே! ஓ, நன்றி அறிதல் இல்லாதவனே! என் வாழ்வின் அஸ்தமனத்தை இத்தனை சுறுக்கில் தந்து விட்டாயே. இது உன் இளம் பருவ நியதிக்கு உகந்ததா? உன்னைத் தான் பார்த்துக் கேட்க நிற்கிறேன். ஏன் ஒழிந்து கிடக்கின்றாய்' திலகம் தனக்குள் கதைத்துப் பொருமிக் கொள்கிறாள்.

வழமையில் எழுவானில் துள்ளிக் குதித்து வந்து தன் சின்னச் சின்ன கரங்களால் துள்ளி விளையாடும் அன்றைய இளம்பரிதி திலகத்தின் நெஞ்சக் குமுறலின் பிரதிபலிப் பான வதனத்தைக் கண்டு கொள்ளத் தயங்குவது போல் கார் முதிலினிடையே ஒளிந்து கிடந்தான்.

நிலம் வெளிக்கத் துவங்கிவிட்டது. இருந்தாலும் அயலட்டத்து வீட்டு முற்றங்களில் பொங்குவதால் எழும் புகை மண்டலம் பனி மூட்டப் புகாருடன் இரண்டறக் கலந்து கருந் திரை போர்வையால் போர்த்திருந்த



நிலமடந்தையின் கோலம் கூட, திலகத்தின் ஒளியிழந்து கருமை படிந்து கிடக்கும். முகபாவத்தின் பிரதிபலிப்போ என்று எண்ணத் தோன்றுகிறது.

வழமையான புலரிப்பொழுதின் மலர்ச்சித்தன்மை கடுகளவு மின்றி அன்றைய புதியதைப் பிறப்பின் காலை வேளையின் இயல்பூக்க நியதிகள்கூட துக்கித்துக் கிடப்பதான கோலம் காட்டிக் கிடக்கையில் –

"என்ன திலகம்! இண்டைக்கு தைப் பொங்கலல்லோ... நீ பொங்கவில்லையோ?"

இருள் திரை முற்றும் அகலாத அந்த அதிகாலைப் போதினிலே குளித்து முழுகிய கோலம் காட்ட கூந்தலைத் தளயவிட்டு, பூவோடும் பொட்டோடும் பனிமூட்டச் சீதளக் காற்றுடன் மெல்ல வந்த புஷ்பம் திலகத்தைப் பார்த்துக் கேட்டாள்.

அயலவளான புஷ்பத்தின் அவ்வேளைய பிரசன்னத் தையும், இக்கேள்வியையும் திலகம் சிறிதும் எதிர்பார்க்க வில்லை

"ம்....."

திலகம் தனது நாசித் துவாரம் விரிய உள்ளிருந்து வெளியேற்றி துயரப்பெருமூச்சின் காங்கை பனி மூட்டச் சீதளக் காற்றையும் ஊடறுத்து எதிரே நின்ற புஷ்பத்தின் உடலைத்தீய்ந்தது.

"பொங்கிறவர் போன பின்பு, எனக்கென்ன பொங்கலும் புதுநாளும் புஷ்பம்! எல்லாம் போக்காளனோடை போய் விட்டது. புருஷன் உழைப்புமில்லை வருஷப் பிறப்புமில்லை என்றாகிவிட்ட எனக்கு, நல்ல நாளென்ன பெருநாளென்ன? நாளும் போளும் நலிந்தோர்க்கெது?"



புஷ்பம் தனது நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

அன்றைய பொங்கல் பண்டிகை தந்த உற்சாக நிலையில் - திலகத்தின் வாழ்வில் - விழுந்த பேரிடியின் சோக சம்பவத்தை ஓரிரு வருடங்களுக்குள் மறந்தவளாய் கேட்டிருக்கக்கூடாத அந்தக் கேள்வியையிட்டு மனம் நொந்தவளாய் -

"என்னவோ நினைப்பிலை உண்மையாக மறந்து போய்க் கேட்டிட்டன் திலகம். என்னை மன்னிச்சுக்கொள். வாறன்..."

புஷ்பம் வந்தபோதும், திலகத்துடன் கதைத்தபோதும், இருந்த உற்சான நிலை குன்றியவளாய் நிலம் பார்த்து தளர் நடையுடன் நடந்தாள்.

ஓ. மறதியே! நீ மகத்தான ஒரு வரப்பிரசாதம்தான். உன் அறைணைப் பிறப்பில்லையெனில் வாழையடி வாழை யாக வரும் மனித சமுதாயம் என்றோ அழிந்தொழிந்து போயிருக்குமோ! திலகம் நினைத்தாள்.

'இந்தப் புஷ்பமும் பாவப்பட்ட - பரிதாபப்பட வேண்டிய பிறவிதான். இவளுக்காவது - இந்தத் தைப் பிறப்புட னாவது - எமது மூத்தோர் சொன்ன தை பிறந்தால் வழி பிறக்கும் பழமொழி பலிதமாகட்டும் - வழி பிறக்குமா என்று பார்ப்போம்...'

இவளது கணவன் காணாமல் போய் இரண்டாண்டுகள் கடந்தோடிப் போய்விட்டன. சோதிட ஆசான் சிவசுப்பிர மணியத்தின் சாத்திரக் கூற்றில் நம்பிக்கை வைத்து எங்கோ - எப்படியோ உயிருடன் இருப்பான்; இருக்கின்றான் என்ற நம்பிக்கையில் இன்னும் தன் சுமங்கலிக் கோலத்தை கலைக்காமல் இருந்து வருகின்றாள். இவள் நானாக



"வேண்டாம். அறுதலி, வாழாவெட்டி, மூளியலங்காரி, முழி வியளத்துக் குதவாதவள் என்ற வக்கணச் சொற்களுக்கு இலக்காகாமல் இருக்கவேண்டும்.

இளம் குருத்து பாலசூரியன் முகிலிடை இருந்து பிதுங்கி மெல்ல வெளிப்பட்டு புவியை எட்டிப் பார்த்தான்.

அண்ட சராசரத்தின் ஆக்கத்திற்கும் இயல்பூக்கத் திற்கும் அனாத இரட்சகனான - ஆதவனாகிய தன்னை ஆராதித்து நன்றிக்கடன் செலுத்த தலைப்பட்டு முற்றங்கள்தோறும் புதுப்பானை வைத்து பொங்கிப் பூரித்து நிற்கும் மாந்தரிடையே... இவள் ஒருத்தி...

இன்று இந்தத் திலகம் ஒருத்தி மட்டுமா?

வாழவேண்டிய வயதில் தங்கள் வாழ்க்கைத் துணைகளை அவலமாய் - அகாலமாய் பறிகொடுத்து அல்லல்பட்டு நிற்கும் ஆயிரமாயிரம் திலகங்கள் பொட்டிழந்து பூவிழந்து தங்கள் கண்களில் கண்ணீருலை வைத்துப் பொங்கி நிற்கின்றார்களே! அந்தத் துயரக் காட்சியை இந்தப் பொன்னான திருநாளில் புதிதாக சிரசு தயமாகி வரும் பாலசூரியன் கண்டு கொள்ளாமலா இருப்பான்?

முற்றத்துப் பூவரசமரத்துடன் நின்றிருந்த திலகத்தின் கண்ணெதிரே சில வருஷங்களுக்கு முன்பு வரை மாட்டுத் தொழுவமாக இருந்த கொட்டில் ஒன்று. அதில் இன்று மாடுமில்லை கன்றுமில்லை என்றாகி அழிந்து துவைந்து அரைகுறையாகக் கிடக்கின்றது. அதன் உள்ளே ஒரு ஓரத்தின் மூலையில் கலப்பையும் நுகமும் துருப்பிடித்த நிலையில் கிடக்கின்றன.

அவை சொல்லும் கதை?... வெறும் கற்பனைக்



கதையல்ல அவளது உணர்வோடும் உடலோடும் ஒன்றி விட்ட கதையல்லவா அது? திலகத்தின் கண்களில் இருந்து பெருக்கெடுத்த கண்ணீர் ஆறு இமைவரம்பை உடைத்தோடுகிறது.

அந்தக் கலப்பையும் நுகமும் அவள் கணவன் கார் மேகத்தின் கரங்கள் கைப்பற்றி நிலபுலத்தை உழுது பயிரிட உதவிய சாதனங்களல்லவா? பிறர் போற்றும் அவன் உழைப்பின் பெருமைக்கு சான்றுபகரும் சாதனங்களான அவை இன்று சீண்டு வாரின்றி துரப்பிடித்த நிலையில் அவள் கண்ணெதிரே கிடக்கின்றன.

ஆனால் அவளை உழுத கலப்பையும் நுகமும்?

அந்த அவலக் காட்சியை பொங்கிச் சொரியும் கண்ணீரினூடே காண்கிறாள் திலகம்.

பொற்கிரணங்களை புவியிடை பரப்பி அன்றைய தைப் பிறப்பின் புதிய பாலசூரியன் தங்கமெனத் தகதகத்துவான வீதியில் வலம் வரப் புறப்பட்டிருந்தான்.

ஊரெல்லாம் முற்றங்களில் நீருலை வைத்துப் பொங்கும் தைப்பொங்கல் திருக்காட்சி. ஆனால் கண்ணீருலை வைத்த கண்ணீர்ப் பொங்கல் பொங்கி நிற்கும் திலகத்தின் கண்ணீர்ப் பொங்கலை என்னவென்று சொல்வது? அவள் கணவன் கார்மேகத்தின் கரிய நெடிய உருவத்தின் கண் கொள்ளாக் காட்சியும் – நினைப்பும் அந்தத் தை திங்களைக் காணும் போதெல்லாம் தகித்தக்கொண்டு வருகின்றதே. ஆம்; அவள் கணவன் கார்மேகம் அகால மாய் மாண்டு மடிந்து போனது பொங்கல் தினத்தன்று தான்...



மூன்று ஆண்டுகள் எப்படி ஓடி மறைந்து விட்டன? எழுவானின் முறுவலித்து வந்த இந்தப்பாலசூரியனுக்குத் தான் முற்றத்தில் பொங்கிப் படைத்து உழவனுக்குரிய நன்றிக்கடனைச் செலுத்தி ஆராதித்து நிற்கின்றான் கார்மேகம்.

வானம் பிளந்து பேரிடியான நெருப்புக்கோளம் எங்கோ வீழ்ந்தது. பூமி பூகம்பமேற்பட்டு நடுங்கிற்று! நிதானிப்பதற் கிடையில் இந்த சூரியக்குஞ்சு கூட அந்தப் புகை மூட்டத்தில் மறைந்து போய்விட்டான். கார்மேகத்தை பூமி பிளந்து விழுங்கிக் கொண்டதா? அவன் நின்றிருந்த இடத்தில் சின்னதாய் கிணறொன்று தோண்டப்பட்டுக் கிடந்தது.

யானை வெடியும் சீன வெடியும் கொழுத்தி இந்தத் திவ்விய பண்டிகைத் திருநாட்களை கொண்டாடிய காலமும் ஒன்றிருந்ததுதான். அதெல்லாம் பொய்யாய் பழங் கதையாய் மெல்லப் மெல்லப் போனதுவே. கண்ணி மைக்கும் நேரத்தில் வாளில் உறுமி மறைந்த சீனத்தயா ரிப்பான அந்த யுத்த விமானம் விட்டெறிந்து போன குண்டொன்று திக்கெல்லாம் அதிரும் படியாக முற்றத்தில் வீழ்ந்து வெடித்தபோது...

இப்பொழுதும் அவளால் முடியவில்லை. வாய்விட்டு, ஒப்பாரிக் கோலம் குழைந்து அழுதாள்...

"என்னடி மோனை திலகம்! காலம் காத்தாலை பித்துப் பிடித்தவளாட்டம் பல்லோடு பல்லுக்கிட்டுகிற உந்தப் பனிக் குளிருக்கை போயிருந்து கொண்டு... நல்ல நாள் பெருநாளிலை எப்பிடி ஒப்பாரிவைச்சு கூக்குரல் எழுப்பினாப் போலை போனவன் வரவா போகிறான்?"



அதிலையும் அயலட்டம், என்ன சொல்லும்? 'உவதான் ஒருத்தி தான் புது நாணையமாகப் புரியனைப் பறி கொடுத்தது மாதிரி குத்தி முறிஞ்சு ஒப்பாரி வைக்கிறா. இந்த தமிழ்ச்சாதியிக்கை இண்டைக்கு உவவைப் போலை எத்தனை எத்தனை இளசுகள் தங்கடை புரியன் பிள்ளையளைப் பறி குடுத்திட்டு மூலைக்கை முனகிக் கொண்டு கிடக்கையுக்கை... உவதான் ஒருத்தி புது நாணயமா முத்தத்திலை வந்திருந்து கண்ணீர்ப் பொங்கல் பொங்கிறா' என்று வக்கணை சொல்லாதுகளோ?

"அவன் போக்காளன் போன இந்த நாளை நினைச்சால் நெஞ்சு வெடிச்சுப் போகும்தான். ம்... அதுக்காக நெடுக அதையே - அவனையே நினைச்சு நினைச்சு நெக்குருகி நீயும் நினைவிழந்து போனால், அவன் நாமத்தைச் சொல்ல பிறந்திருக்கும் சின்னஞ் சிறுசுகளின்ரை கெதி என்னவாகும்? யோசித்துப்பார்.... இனி அதுகளை ஆளாக்கி பேராக்கி அதுகளின்ரை முகத்திலை - நிழலிலை அவனைக் கண்டு ஆறுதல் அடையிறதைப் பாராமல்... இஞ்சை பார்! நீ அழுகிறதைப் பார்த்து பெடியனும் எழும்பி இருந்து அழுகின்றான்.

"உந்த விம்மலையும் விக்கலையும் விட்டிட்டு எழும்பிவா. வந்து பார்க்கிறதைப் பார்..." திலகத்தின் பேர்த்தியார் பொன்னம்மா பாட்டி ஏதோ சொல்லுகிறாள்.

'படீர்...."

பூவரமரத்துடன் குந்தியிருந்து முழங்கால்களுக்குள் முகத்தைப் புதைத்து விம்மிக் கொண்டிருந்த திலகத்தின் அருகே வெடித்த அந்த வெடிச் சத்தத்தில் திடுக்குற்று துடித்துப் பதைத்து எழுந்து நின்றாள் திலகம்.



சயிக்கிள் வால்வ் கட்டைக்குள் நெருப்புக்குச்சி மருந்தைத் திணித்து சிறுகம்பியின் இணைவுடன் வெடி அடித்த அந்த உபகாரணங்களுடன் சிரித்து நின்றான் எட்டு வயதான அவள் பெற்ற பாலகன்.

உரித்து வைத்து அவள் கணவன் கார்மேகத்தின் அச்சுப் பதிவில் அவனை அவள் கண்டாள்.



18

புரட்சி ஓங்குக!



தோழர் மணியத்தின் திடீர் வருகையைக் கண்டு, தோழர் கிஷ்ணன் வெகுவாகப் பூரித்துப் போனார்.

"வாங்கோ தோழர் எப்படி இருக்கிறியள்? வீட்டிலை பிள்ளை குட்டிகளெல்லாம் சுகத் தானா? என்ன இப்படி ஒரு வருஷத்துக்கிடையிலை ஆளே அடையாளம் தெரியாத மாதிரி வயக்கெட்டு உருமாறிப் போனி யள்? உள்ளே வாங்கோ தோழர்."

சம்பிராதய முகமன் வரவேற்பு என்றில்லாமல், உள்ளார்ந்த அன்புடன் தோழர் மணியத்தை தோழர் கிஷ்ணன் வரவேற்று உபசரித்தார்.

பெரிய பங்களா என்று சொல்வார்களே, அந்த மாதிரி பங்களா வீடுதான். தோழர் கிஷ்ணனுக்கு இது போன்ற இன்னும் இரண்டு மூன்று வீடுகள் உள்ளன. 1995-ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அந்த நில நடுக்கத்தை — அதை வேறு எப்படிச் அழைப்பது — மறக்க முடியுமா? மக்களெல்லாம் அல்லோல கல்லோலப் பட்டுக் குடிபெயர்ந்து தென்மராட்சியையும், வடமராட்சியையும் ஆக்கிரமித்துக்கொண்டபோது, உப்புச் சிரட்டைக்குக்கூட வழியில்லாத நிலையில் வட மராட்சியை வந்தடைந்து, அந்த கரவெட்டிக் கிராமத்தின் றோட்டோரம் பூவரச மரமொன்றின் நிழலின்கீழ் களைத்து சோர்ந்து சுருண்டு விழுந்தது தோழர் மணியம் குடும்பமும். பூவரசுடன் சாய்ந்து, கால்களை நீட்டி எறிந்தபடி வயல்வெளியை வெறித்துப் பார்த்தபடி இருந்தார் அந்த மனிதன். திடீ ரென்று அவரெதிரே வந்து நின்று ஒரு மனிதன் அவரைக் குறி குறிப்பாகப் பார்த்துவிட்டு "நீங்கள் தோழர் மணியம் தானே?" என்று கேட்டான்.

ஒரு திடுக்காட்டமுமின்றி மெல்லத் திருப்பி அந்த மனிதனை சுரத்தின்றி பார்த்தார் தோழர் மணியம். பாத யாத்திரையும், பசித்திருந்த பட்டினிக் களைப்பும் அவர் கண்களின் பார்வையைக்கூட பஞ்சணமாக்க, எதிரே நின்றவரின் முகம், இமைகளை ஒரு தரம் கசக்கி விட்டுப் பார்த்தும்கூட, உருவ அடையாளம் பிடிபடவில்லை. ஆனால் குரல் மட்டும் எங்கோ எப்பொதோ கேட்டது மாதிரியான ஓர் உணர்வு...



"என்ன தோழர், கண்களைக் கசக்கிவிட்டுப் பார்த்தும்கூட அடையாளம் கண்டு கொள்ள முடிய வில்லை.....? நான்தான் தோழர் கிஷ்ணன். நல்லா ஞாபகப் படுத்திப் பாருங்கள்!"

"அடடே நம்ம தோழர் கிஷ்ணன்? அந்த துவாரகை கிஷ்ணன் கோயில் ஆலயப்பிரவேசத்தின்போது அடிபட்டு இரத்தம் சிந்திய தோழர் கிஷ்ணனா? நம்ம இரத்தமல்லவா, அவ்வளவு சுலபத்தில் மறந்து போய்விட முடியுமா என்ன? பார்த்துச் சந்தித்து ரொம்பக் காலமாப் போச்சில்லை. வயசும் போய்விட்டது. ஞாபக சக்தியும் மங்கத் தொடங்கி விட்டது" என்றார் தோழர் மணியம்.

"ஆமாம்; தோழர். இரத்தத்தின் இரத்தம். ஒரே இரத்தம். அந்த இரத்தங்கள் இன்று வீணே சிந்தப்பட்டு ஆத்தலைந்து அல்லல்பட்டு வருவதைப் பார்க்கும்போது என்ரை இரத்தம் கொதிக்குது தோழரே. அன்று உங்கள் தலைமையின் கீழ் நடந்த ஆலயப்பிரவேச போராட்டம், தேநீர்க்கடைப் போராட்டங்கள் என்பவற்றை எல்லாம் அவ்வளவு சுலபத்தில் மறந்து போய்விட முடியுமா? தோழர், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளல்லவா அவை, அப்படி இருந்தும்..." என்று தோழர் கிஷ்ணன் பழையதும் புதியதுமான போராட்டங்களிலே தோய்ந்து உணர்ச்சி வசப்பட்டு கதைத்தவற்றைப் புரிந்து கொண்டவர்போல் தோழர் மணியம் சொன்னார்.

"குளம் குட்டை கலங்குவது நல்லதுதான் தோழர். அந்த வகையில் இந்த யாழ்ப்பாணக் குட்டை கலங்கியது நல்லதுதான். ஆனால் இது இன்று வேறு விதமாய்ப் போய் விட்டது. இது குளத்தைக் கலக்கி மீன்களை பருந்துக்கு இரை கொடுத்த கதையாக அல்லவா போய் விட்டது?"



"அது சரி தோழர், நாங்கள் பழையதையும் புதியதையும் நினைத்து கதைத்து இப்ப ஒன்றும் ஆகப் போவதில்லை. தலைக்கு மேல் வெள்ளம் வந்துவிட்டது. இனி முழமென்ன சாணென்ன? அந்த வெள்ளத்தில் அள்ளுண்டு இதோ வந்து விழுந்து சுருண்டு கிடக்கும் இந்தப் பிள்ளை குட்டிக ளோடை இப்ப என்ன செய்யப்போறியள்?... போக்கிடம் ஏதும் இருக்கா?... ஏதாவது நினைச்சு வைச்சிருக்கிறி யளா?" என்று கேட்டார் தோழர் கிஷ்ணன்.

"போக்கிடமா? எனக்கா? இல்லையெண்டாமல் மனிசி யின்ரை சொந்த பந்தமென்று கொஞ்ச சாதிசனம் துன்னாலைப் பக்கத்திலை இருக்கினம்தான். கொம்யூ ஸமும், சமத்துவமும் பேசி ஓட்டாண்டியாகப் போனதுடன் அந்த சாதி மேலாளர்களின் முகச் சுழிப்பிற்கு ஆளாகி விட்ட எனக்கு அங்கையெல்லாம் போய் நின்று இந்தப் பிள்ளை குட்டியளும் அவமானப்படுகிறதை நான் விரும்ப வில்லைத் தோழர். முன் அனுபவங்கள் நிறைய உண்டு. அதனால்தான் சொல்கிறேன். ஆனால் மனுசிக்கு அவை இடத்துக்குப் போகத்தான் விருப்பம். ஆனால் எனக் கென்றால்..." என்று சொல்லி நிறுத்தினார் மணியம்.

"அப்படி என்றால்..." என்றார் தோழர் கிஷ்ணன்.

"இரண்டொரு பழைய தோழர்களின் நினைவு வருகிறது. அவர்களும் அப்பவே என்னைப் போல் வங்குரோத்து கேசுகள்தான். ஆனாலும் மனித நேயம் உள்ளவர்கள். இப்ப எப்படி இருக்கிறார்களோ, எங்கே இருக்கிறார்களோ போய்ப் பார்த்தால் தான் தெரியும்."

"தோழர், உங்களுக்கோ, உங்கள் மனிசி மக்க ளுக்கோ ஆட்சேபனை இல்லையென்றால் என்னுடன்



வாருங்கள். இப்போதைக்கு நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார் தோழர் கிஷ்ணன்.

கொம்யூனிஸ்ற் தோழர் மணியத்துக்கு தெய்வ நம்பிக்கை இருக்கோ இல்லையோ தெரியாது; ஆனால், அவர் மனைவி மக்களுக்கு அதீத தெய்வ நம்பிக்கை உண்டு. அவர் மனைவி கிழக்கே வல்லபுரக்கோயில் இருக்கும் திக்கை நோக்கி கை கூப்பிக் கும்பிட்டு 'எல்லாம் அந்தப் பெருமான் திருவருள்' என்றாள் வாய்விட்டு.

தோழர் கிஷ்ணனுடைய மனித நேயத்துடன் கூடிய இந்த அனுசரிப்பையும் ஆதரவு வார்த்தைகளையும் கேட்டு தோழர் மணியம் உள்ளூரப் பூரித்துப் போனாலும், கிஷ்ணனுடைய வாழ்க்கைப் பின்னணி அவரை வெகுவாகக் குழப்பியது. கொட்டில் குடில் வாழ்க்கையும் ஆணும் பெண்ணுமாய் ஆலாய்ப் பறந்து பறந்து கூலி கொப்புக்குப் போய் அன்றடித்து அன்றே வாயில் போடும் அன்றாடம் காச்சி வாழ்க்கையுமாக வாழும் இந்த மனிதன்... 'ஓ கிஷ்ணா நீ சாதாரண மனிதனில்லையப்பா. இருந்தஞோ இல்லையோ வறுமையிலும் செம்மையான இந்தப் பெருந்தன்மை மிக்க மனிதன், ஓ எமது செங்கொடி நிழலின் கீழ் நின்று கற்றுணர்ந்த பாடம்தான் இப்படி ஒரு மாமனிதனாக உருவாக்கி இருக்க வேண்டும்.' தோழர் மணியத்தின் நினைவுகள் சிலிர்த்தன.

யாழ்ப்பாணத்தில் இடதுசாரி இயக்கம் காலூன்றிய போது – இல்லை இல்லை காலூன்றுவதற்கு — சாதிப்பாகு பாட்டையும் ஒரு பிரதான கருவியாகப் பயன்படுத்தியது. கந்தபுராண கலாச்சாரமே தமது கலாச்சாரமென பாவலாப் பண்ணிக் கொண்டிருந்த யாழ்ப்பாணக் கலாச்சாரத்துக்



குள் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் காரணமாக இடதுசாரி இயக்கமும் அதற்குள் அழுங்கிப் போய் விட்டது. அதனால் தான் சாதிப் போராட்டத்தை வர்க்கப் போராட்டமாக்கி, அதற்கும் சாதிமான்களே தலைதாங்கும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இடதுசாரி இயக்கம் இங்கு காலூன்றியது. அதனால் ஆலயப் பிரவேசப் போராட்டமும் தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்களும்தான் அன்று அறம் புறமாய் நடந்து இடதுசாரி இயக்கத்தை வலுப்பெறச் செய்தது. ஆனால் சாதிப் பாகுபாடு ஒழிந்ததா?

"என்ன தோழர் நான் கேட்டதையிட்டு கடுமையாக யோசிக்கிறியள் போலை கிடக்கு. " தோழர் மணியத்தின் நீண்ட பின்னோக்கிய நினைவுகளுக்கிடையே தோழர் கிஷ்ணன் புகுந்து கேட்டார்.

"இல்லை தோழர் பழைய நினைவுகள் கொஞ்சம் வந்தது. தோழர், இல்லாமையிலும் எங்கள் இக்கட்டான நிலை கண்டு அனுசரித்து ஆறுதலழிக்க முன் வந்த உங்கள் பெருமனதை எப்படிப் போற்றுவதென்று தெரிய வில்லை. கொட்டில் குடிலோடு கூடிய உங்கள் ஏழ்மை நிலையில் குமரும் குட்டியுமான என்னுடைய இந்தப் பெரிய குடும்பத்தை எப்படி...?" தோழர் மணியம் சொல்லி முடிக்க வில்லை. தோழர் கிஷ்ணன் வாய்விட்டு மெல்ல சிரித்தார்.

"பரவாயில்லை... வாங்கோ தோழர் போகலாம். உங்களுக்கு சகல வசதிகளுடனும் கூடிய ஒரு தனி வீடு தாறன். மிச்சத்தைப் பிறகு பார்க்கலாம் வாங்கோ" என்றார் கிஷ்ணன்.

" தோழர் மணியம் அசந்து போய் விட்டார்.

"....."



"என்ன தோழர், நம்பிறது கொஞ்சம் கஷ்டமாகத் தானிருக்கும். ஏனென்றால் ஆயுதப் போராட்டம் தொடங்கிய இருபது வருஷத்துக்குப் பிறகு ஆளை ஆள் பார்க்கிறமல்லவா? அதனால் என் வாழ்க்கையின் பிற்பகுதி உங்களுக்கு தெரிய ஞாயமில்லைத்தான். நான் இப்போது முந்தின ஓட்டாண்டி கிஷ்ணனில்லை தோழர். ஏன் தோழர் அப்பிடியே ஏங்கிப்போய் நின்றிட்டியள்? என்னடா தோழர் கிஷ்ணனுக்கு எப்போதிலிருந்து நட்டு லூசாப் போச் செண்டு யோசிக்கிறியளா?... பரவாயில்லை வாங்கோ கதைத்துக் கொண்டே போகலாம். இன்னுமொரு கூப்பிடு தூரத்தில் தான் வீடு. பிள்ளைகளும் நல்லாக் களைத்து சோர்ந்து போய் விட்டார்கள். அம்மாவின் கால்களும் அடியெடுத்து வைக்க ஒஞ்சிக்கின்றன. அதுக்கென்ன ஆறுதலாகப் போவம்" என்றார் தோழர் கிஷ்ணன்.

அதற்கிடையிலும் ஒரு மின்வெட்டான நினைப்பு வந்து போனது. அந்தக் காலத்தில் தோழர் மணியத்தின் தலைமையில் நடந்த போராட்டங்களில் கிஷ்ணனும் சகாக்களும் "புரட்சி ஓங்குக, சாதி ஒழிக, சமத்துவம் பேணுவோம்" என்று சுலோமிட்டபடி ஊர்வலமாக பின்னால் செல்வார்கள். ஆனால் இன்றோ மணியம் குடும்பம் பசி யோடும் தாகத் தோடும் கண்ணை மின்னும் களைப்போடும் தோழர் கிஷ்ணனின் பின்னால் செல்வதுதான் அந்த மின்சொடிப்புக்குக் காரணம்.

"கேட்டியளோ தோழர், அன்றைய இந்தக் குசேலப் பிறப்பான இந்தக் கிஷ்ணனுக்கு பத்துப் பெடியள் என்பதும் உங்களுக்குத் தெரியாதுதான்? பதினொன்றாவதுதான்



பெடிச்சி... என் குடும்பம் எப்படி இருந்திருக்கு மென்று யோசித்துப் பாருங்கள். எல்லாம் நண்டும் குஞ்சுமாக வஞ்சகமில்லாமல் வதவதெண்டு பெத்துத் தள்ளிப் போட்டாள் கனகம். இந்தக் குஞ்சு குருமானை வளர்த்தெடுக்கப்பட்ட பாடு அன்று கொஞ்ச நஞ்சமல்ல. நானும் கனகமும் திண்டநாளும் தின்னாத நாட்களுமாய் ஐயையோ.... ஒரு காலத்தில் இதுகளால் நான் பட்ட சிறுமைகள் – இன்று சிறப்பினைத் தந்திருக்கிறது. அதுகளை எப்படியோ வளர்த்தெடுத்து இயன்றவரை நாலெழுத்துப் படிப்பித்தும் போட்டன்.

"அன்று 'பூச்சி புழுக்கள் மாதிரி இந்த குஞ்சுகளை பிதுக்கித் தள்ளி இருக்குதுகள். என்ன செய்யப்போகுதுகளோ!' என்று சொன்னவர்களின் வாயெல்லாம் அடைக்கும்படியாக இன்று அந்தப் பத்தும் முத்து முத்தாக அள்ளிக் குவிக்குதுகள். பத்தும் இன்று வெளி நாடுகளில்...

"என்ன தோழர், அப்படியே அரண்டுபோய் நின்றிட்டியள்? என்ன நம்ப முடியவில்லையா? அந்தக் காலத்து மந்திர மாயாஜாலக் கதைகளில் வாறது மாதிரி இதுகும் ஒரு அதிசயம்தான். சரி, உள்ளே வாருங்கோ தோழர்" என்று வீட்டுப் படியேறி நின்று அழைத்தார் தோழர் கிஷ்ணன்.

தோழர் மணியத்தினால் மட்டுமல்ல யாராலுமே தோழர் கிஷ்ணனின் இன்றைய செல்வச் செழிப்பின் மகா உன்னத நிலையை நம்பமுடியாது. ஆனால் நம்பித்தான் ஆக வேண்டும் என்பதற்கு சான்றாக அந்தப் பெரிய பங்களா வீடும், வீட்டு முகப்பு முற்றமெல்லாம் விக்கித்துக் கிடக்கும் மலர்ச்செடிகளும் மற்றுமுள்ள நிழல்தரும் இளம் மரக் கன்றுகளும் இருக்கின்றனவே! தோழர் மணியமும்



குடும்பமும் வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்கக் கூசுபவர்கள் போல் முற்றத்தில் தயங்கினார்கள்.

தோழர் கிஷ்ணனின் அன்றைய கொட்டில் குடில் வாழ்க்கையை நினைபடியும், இன்றைய பங்களா வாழ்வின் சீரும் சிறப்பையும் பார்த்து மருண்டபடியும் தோழர் மணியமும் குடும்பமும் மெல்லத் தயங்கித் தயங்கி வீட்டுப் படியேறி, ஹோலில் இருந்த ஸோபாக்களில் கூச்சப்பட்டுக் கொண்டே அமர்ந்தார்கள்.

"இஞ்சேர், கனகம்!" தோழர் கிஷ்ணன் உள்ளே குரல் கொடுத்தார். கனகம் வெளிப்பட்டாள். ஆள் கறுப்பிதான். நாவல் பழக்கறுப்புத்தான். நல்ல வட்டுறுப்பான முக வெட்டு. உழைத்து உழைத்து நன்கு உரமேறி இறுகிப் போன உடல் வாகு. செந்தளித்த முகத்தின் சிரிப்பு வீட்டிற்கு விளக்கெற்றிய மாதிரி இருந்தது. நாற்பத்தைந்து வயது தான் இருக்கும். இன்னும் குறைத்தும் மதிப்பிடலாம்.

"கனகம்! அந்தக் காலத்திலை நான் அடிக்கடி சொல்லுவனே தோழர் மணியம் என்று... எங்கடை தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட்டங்களுக் கெல்லாம் தலைமை தாங்கி எங்களை எல்லாம் வழி நடத்திச் சென்ற அந்தத் தோழர் மணியம் இவர்தான். இங்கேயும் சில கூட்டங்களிலை வந்து பேசியும் இருக்கிறார். இன்று ஆளே கோலம்மாறி, குறியும் மாறி, கொண்ட கொள்கை மட்டும்தான் மாறாமல் இருக்கிறார். இது அவருடைய குடும்பமும் பிள்ளைகளும்" என்று மணியத்தையும் குடும்பத்தையும் அறிமுகப்படுத்தி வைத்தார் தோழர் கிஷ்ணன்.

"வணக்கம் வாருங்கோ" கைகுவித்து கும்பிட்டு



வரவேற்ற கனகம் தொடர்ந்து சொன்னாள்: "இந்தக் கோதாரி சச்சரவாலை இந்தக் குமர் வளர்களோடை இடம் பெயர்ந்து இப்படி எல்லாம் அத்தலைஞ்சு திரிய வேண்டிக் கிடக்கு. பிள்ளையளும் நல்லாக் களைச்சு சோர்ந்து போச்சுதுகள். இருங்கோ, இதோ ஒரு நொடியிலை வந்திடுறன்" என்று கனகம் உள்ளே போனாள்.

வந்தவர்களின் களைப்பாற்றுவதற்கான பானாதிவகைகளுடன் அவள் வருவாள் என்பது தோழர் கிஷ்ணருக்குத் தெரியும். அதுவரையும் தோழர் மணியத்துடன் கதை கொடுக்கத் திரும்பியபோது, மணியமும் குடும்பமும் அங்கே சுவரில் புகைப்படங்களில் லயித்து ஆச்சரியமும் ஆர்வமும் பொங்கும் விழிகளுடன் அவற்றைப் பார்த்த வண்ணமிருந்தனர். சின்னதும் பெரியதுமாக பல புகைப் படங்கள் அங்கே மாட்டப்பட்டு இருப்பினும், அவற்றில் முழு அளவிலான நான்கு புகைப்படங்களில் ஒவ்வொரு வெள்ளைக்காரிச்சிகளுடன் சாங்கமுள்ள எமது தேசத்து தமிழின இளைர்கள் நால்வர், மணவாளக் கோலத்தில் கரம் கோர்த்து நிற்கும் படங்களிலேயே அவர்கள் புலன்களும் பார்வையும் லயித்துக் கிடப்பதை தோழர் கிஷ்ணன் உணர்ந்தார்.

"என்ன படங்களைப் பார்த்து விட்டீர்களா? அது ஆர்? எவர்? என்ற கேள்வி எழவே செய்யும். தோழர் முதல் படம் இருக்கிறதே! அதுதான் என்ரை மூத்தவன் மாக்சும் வைபும். அதாவது அவன்ரை பெண்டில். இங்கிலாந்திலை நிக்கிறார். ஒரு காலத்திலை இந்த நாட்டையும் மக்களையும் அடிமை கொண்டு அடக்கி ஆண்ட இங்கிலாந்து இராச பரம்பரையிலை வந்த எங்கடை



எலிசபெத் மகாராணியற்றை சொந்தக்காரப் பெட்டை யைத்தான் கட்டி இருக்கிறான்" என்றார் தோழர் கிஷ்ணன்.

இதற்குள் உள்ளே சென்ற கனகம் பிஸ்கற்றுடன் வரவே, "என்ன கனகம் ரீயே போட்டனி? பிள்ளைகள் இப்போதைக்கு பிஸ்க்கற்றிலை நல்லாச் சாப்பிடுங்கோ. என்ன தோழர் கடும் யோசனை? ரீயைக் குடியுங்கோ..! கனகம்! எனக்கும் ஒரு கப் ரீ தாம்மா... சரி கனகம்! மிச்சம் பெரிய உபகாரம். வேறொன்று மில்லை... எங்கடை பிள்ளை களையும் மருமக்கள் பெடிச்சியளையும் பற்றி தோழருக்கும் குடும்பத்துக்கும் சொல்லிக் கொண்டிருக் கிறன். தோழர், கேக்கிறியளொ? அடுத்த படத்திலை நிக்கிறவன்தான் எங்கடை இரண்டாவது பெடியன் லெனினும் பெண்சாதியும். எப்படி இருக்கு சோடிப் பொருத்தம்? பிரான்சிலை நிக்கிறான். நெப்பொலியன்ரை சொந்தக்காரப் பெட்டடையைக் கட்டப் போறானெண்டு எழுதிக் கேட்டிருந்தான். சரி கட்டடா மோனை எண்டன்; கட்டிவிட்டான். மற்ற மூன்றாவது நாலாவது படத்திலை நிக்கிறவங்கள் தான் ஸ்ரலினும், ஏங்கல்சும்! இரண்டு பேரும் இரும்பன்கள்தான். எதுக்கும் கிறங்காதவன்கள். வெள்ளடியன் சண்டைச் சேவல் பிறப்புகள். ஒருத்தன் ஹிட்லற்றை நாட்டிலையும், மற்றவன் முசோலியின்ரை இத்தாலிப் நாட்டிலும் நிக்கிறாங்கள். அவங்களும் அந்தந்த நாட்டுப் பெட்டையளைக் கொழுவி எடுத்திட்டாங்கள்." இப்படியாக தோழர் கிஷ்ணன் படங்களில் சோடிசேர்ந்து நிற்கும் தமது மக்கள் மருமக்களைப் பற்றி பெருமையோடு சொல்லிய பாணியை ரசித்த தோழர் மணியம் குடும்பம் தங்கள் துன்ப



துயரங்களை எல்லாம் மறந்து வாய்விட்டுச் சிரித்தது.

"ஏன் தோழர் கெக்கட்டம் விட்டு சிரிக்கிறியள்?" என்று கேட்டார் தோழர்சிஷ்ணன்.

"இல்லைத் தோழர் நீங்கள் சொல்லிக் கொண்டு வந்த ரசனைக்குரிய பாணியைப் பார்த்துத்தான் சிரிப்பு வந்தது. அப்படியென்றால் தோழர்...?" என்று மணியம் நிறுத்தினார்.

"மிச்சத்தையும் சொல்லுங்கோ தோழர்" என்றார் கிஷ்ணன்.

"எல்லாப் பொடியன்களும் வெளிநாட்டிலா?" என்று மணியம் இழுத்தார்.

"இது ஒரு பெரிய வித்தையே? இப்ப ஜரோப்பாவும், அமெரிக்காவும், கனடாவும் யாழ்ப்பாணத்தான்ரை கையிலை எண்டு சொல்லுங்கோ தோழர்... நான் இப்படி சொல்லுறன் எண்டு வித்தியாசமா நினைக்காதையுங்கோ. உங்களுக்கு நான் ஒண்டு சொல்லுறன். ஒரு ஐம்பது நூறு கப்பலை, எங்கடை கடற்கரையிலை கொண்டு வந்து நிறுத்திப்போட்டு, வெளி நாட்டுக்கு வர விரும்புகிறவர்கள் எல்லாம் வந்து கப்பலிலை ஏறுங்கோ என்றால் என்ன வயர்யிருக்கும் என்று நினைச்சுப் பாருங்கோ... ஒரு யாழ்ப்பாணிகூட இங்கோ மிச்ச சொச்சமில்லாமல் குண்டியிலை ஒட்டியிருக்கிற இந்த மண்ணைக்கூட தட்டிப்போட்டு போய்விடுவன். அந்த அளவு மண் நேசிப்புத் தான் யாழ்ப்பாணத்தான்ரை மனசிலை இன்றைக்கு இருக்கு" என்றார் தோழர் கிஷ்ணன் காட்டமாக.

தோழர் மணியமும் குடும்பமும் வாய் அடைத்துப் போய் இருந்தது. தோழர் கிஷ்ணரே தொடர்ந்து சொன்னார். "தோழர் இன்னும் எங்களுக்கு ஆறு பெடியங்கள்



வாழ்க்கைப்படாமல் இருக்கிறாங்கள். அவங்களை தமையன்மார் கூப்பிட்டு வைச்சு நல்லமுறையாகப் படிப்பிச்சு பெரிய பெரிய உத்தியோகம் பார்க்கிற அளவுக்கு வந்திட்டார்கள். அவர்களுக்கு கூடுமானவரை இங்கைதான் கலியாணம் செய்து வைக்க விரும்பிறன். தோதாய் வந்தமைந்தால் பார்ப்பம்" என்று கதைத்துக் கொண்டு வந்து தோழர் கிஷ்ணன் உள்ளே முகம் திருப்பினார். "கனகம்" என்று குரல் கொடுத்தார்.

"இதோ வந்திட்டன்" என்று கனகத்தின் உள்ளிருந்து வந்த பதிலைத் தொடர்ந்து, "வரும்போது தெருக்கரை வீட்டு திறப்பையும் கையோடை கொண்டாம்மா. தோழர் குடும்பத்தை அந்த வீட்டிலை இருத்துவம்" என்றார் தோழர் கிஷ்ணன்.

தோழர் மணியம் குடும்பம் ஆளை ஆள் பார்த்துக் கொண்டது. ஒன்றும் புரியவில்லை. தெருக்கரை வீட்டைப் போய் பார்த்தபோது உண்மையில் திடுக்கிட்டுப் போனார் கள். இதுவும் பங்களா வீடுதான். "தோழர் இதுகும் என்ரை வீடுதான். இனி நீங்கள் இங்கை இருக்கிற வரைக்கும் உங்கடை வீடு வாசல் என்று நினைச்சு கொள்ளுங்கோ. கதிரை, கட்டில், மேசை, தனிக் கிணறு , கக்கூசெல்லாம் எல்லாம் வசதியாக இருக்கு. சரிதானே?" என்றார் தோழர் கிஷ்ணன்.

தோழர் மணியம் குடும்பத்திற்கு இடம் பெயர்ந்து வந்த இடத்தில் இப்படி ஒரு வரவேற்பும் உபசாரமும், பங்களா வாழ்க்கையும் எதிர்பாராத விதமாக கிடைத்ததையிட்டு வெகுவாக திக்கு முக்காடிப் போனார்கள்.

மனசு உடைந்து போய் ஐந்து குமர்ப்பிள்ளைகளுடன்



வெறும் மனிதனாக என்ன செய்வேன் என்று தவித்திருந்த போது தோழர் கிஷ்ணனின் ஆதரவு நிழல் தரும் மரமாக அமைந்தது.

இப்படியாக அந்த ஆறுமாதங்களும் தோழர் மணியம் குடும்பம் இடம்பெயர்ந்து வாழ்ந்திருந்தபோது வலிகாமம் போகலாம் என்ற நிலைப்பாடு வந்து, இடம் பெயர்ந்திருந்த மக்களெல்லாம் தங்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு புறப்பட்டுச் சென்றார்கள். தோழர் மணியமும் குடும்பமும் கிஷ்ணன் குடும்பத்திடம் சொல்லக்கொண்டு விடை பெற்றுப் போக வந்த இடத்தில் வார்த்தைகள் வராமல் ஒருவருக்கொருவர் விம்மி விம்மி அழுதார்கள்.

வலிகாமம் போய் விட்ட ஒரு வருடத்தின் பின்பு தோழர் மணியம் இப்போதுதான் தோழர் கிஷ்ணனைப் பார்க்க வந்திருந்தார். மிகவும் துவண்டுபோய், சொல்லமுடியாத துயர் கவிந்த தீயில் எரிபட்டு கருகிய முகமாக சோகமே உருவாகி வந்து நின்றார் தோழர் மணியம்.

"என்ன தோழர்? ஒரு வருஷத்துக்கு இடையிலை இப்படிக் காய்ந்து கறுத்து மெலிஞ்சு ஆளே அடையாளம் தெரியாமல் உருமாறிப் போயிட்டியள்? உங்கடை கடிதம் கிடைத்து வீடு வாசல் எல்லாம் ஷெல்லடியால் இடிந்து துவைந்து போய்விட்டதென்று எழுதியிருந்தீர்கள். சீவியப் பாடும் கஷ்டம் என்றும் எழுதியிருந்தது கண்டு, கடிதம் தந்தவரிடம் சிறிது பணமும் கொடுத்தனுப்பியிருந்தேன். என்னவோ சொல்வார்கள் மரத்தால் விழுந்து கிடந்த வனை மாடும் ஏறி மிதித்துச் சென்ற கதையாக, வீடு போன



தாலை மூத்த மகளுக்கு பேசி வைத்திருந்த கலியாணத் தையும் வேண்டாம் என்று குழப்பிப் போட்டார்கள் என்று எழுதியிருந்தீர்கள். இதென்ன தோழர்? வீட்டுக்குக் கலியாணமா? பெம்பிளைக்கு கலியாணமா? யாழ்ப் பாணத்துச் சீதணக் கூத்துகள் சொல்லி மாளாது. சரி தோழர், வீடு போயிட்டுது ஆள் இருக்குத்தானே... ஆள் இருந்தால் வீடு கட்டலாம்.. சுவர் இருந்தால் சித்திரம் எழுதலாம் எண்ட மாதிரி. அதிலும் இடதுசாரி இயக்க போராட்ட கொம்யூனிஸ்ட் வாதிகளான நாங்களே இப்படி மனதைத் தளரவிட்டால்..." என்று கதைத்து வந்த தோழர் கிஷ்ணன் சில வினாடிகள் இடைநிறுத்தி மீண்டும் தொடர்ந்தார்.

"தோழர், இப்போது நீங்கள் குழம்பிப் போய்விட்ட உங்கள் மகளின் திருமணத்தை ஒப்பேற்றுவதற்காக முப்பது இலட்ச ருபாய் காசு கேட்டு வந்திருக்கிறீர்கள் ஒரு பிள்ளையை மட்டும் கரை சேர்க்க. ஆனால் இன்னும் நாலு குமர்கள் நடுவழியில் நிற்கிறதே! அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்? 'அதுகும் இப்படித்தான் பார்ப்பம்' என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் இது ஒரு சரியான வழி என்று எனக்குப் படவில்லைத் தோழர். இந்தளவு கொடுமைகளும் இழப்புகளும் நடந்தும்கூட யாழ்ப் பாணத்துச் சனம் சீதன பேயையையும், சாதிப் பேயை யையும் இன்னும் வாலாயப்படுத்திக் கொண்டு தானிருக் கிறார்கள்" என்றார தோழர் கிஷ்ணன்.

"என்ன செய்வது? ஊரோட ஒத்துப் போக வேண்டித் தானிருக்கு" என்றார் மணியம்.

"இங்குதான் நாம் முரண்படுகிறோம், தோழர். எமது



இடதுசாரி இயக்கமே யாழ்ப்பாணக் கலாச்சாரத்தோடு அதாவது யாழ்ப்பாண ஊரோடு ஒத்துப்போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால்தான் கடுகதியாக எமது இயக்கம் படு தோல்வியை தழுவ நேரிட்டது என்ற உண்மையை நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். "புரட்சி ஓங்குக! சாதி ஒழிக! சமத்துவம் பெறுவோம்" என்று இந்த சர்வதேச சுலோகத்தை இங்கே முன்மொழிந்தவர்களாலேயே தங்களுக்குள் ஒரு முன்னுதாரண புரட்சிச் செயல் செய்து காட்டியவர்களல்லர். வெறும் உதட்டளவான சுலோகங் களாகவே கடைப்பிடித்தவர்கள். அதனால் தான் 'ஊரோடு ஒத்தோடு என்ற' பத்தாம்பசலி பழமொழி இன்றும் மேலோங்கி நிற்கிறது. கனக்க கதைக்கிறேன் தோழர். வேண்டாம் போதும்." அங்கு மௌனம் நிலவியது. அந்த மௌனம் ஆக்கினை நிறைந்ததாக இருந்தது.

"இப்போது குறுக்கே நான் ஒரு கேள்வி கேட்கின்றேன் தோழர். மனத்தை திடப்படுத்திக்கொண்டு உங்கள் இஷ்டத்தை சொல்லுங்கள் தோழர்" என்று தோழர் கிஷ்ணனே அந்த மௌனத்தை உடைத்தார்.

"தோழர் தலைவர் மணியம் அவர்களே! நான் இப்படி கேட்கிறேன், கதைக்கிறேன் என்பதற்காக மனக்கஷ்டப் படாதையுங்கோ. வற்புறுத்தவில்லை. எனக்குள் ஒரு புரட்சி எண்ணம் மேலோங்கி நிற்கிறது. அதனால்..."

"அதனால்...?" என்றார் மணியம்.

"அதனால் எங்களுக்குள் அந்தப் புரட்சியை, சாதி ஒழிப்பு புரட்சியை செய்து பார்க்க விரும்புகிறேன்" என்றார் கிஷ்ணன்.

"புரட்சியா? சாதி ஒழிப்பா?...எங்களுக்குள்ளா?" என்றார் தோழர் மணியம் ஒன்றும் புரியாதவராக...



"ஆமாம் தோழர். எந்தவித சீதண பாதனத்தையும் எதிர்பாராமல் உங்கள் மகளை நான் என் மருமகளாக்கி கொள்கிறேன், என்ன சொல்கிறீர்கள்? இது புரட்சி இல்லையா தோழர்?" என்றார் கிஷ்ணன்.

தோழர் மணியம், தோழர் கிஷ்ணனின் திடுதிடுப்பான இக்கேள்வியை சிறிதும் எதிர்பார்க்கவில்லை, என்பதற்கு அடையாளமாக பேச்சு மூச்சற்று இருந்தார். "அன்றிலி ருந்து இன்றுவரை சாதியை ஒழிக்கவும் புரட்சி ஓங்கவும் வெறும் உதட்டளவிலான சுலோகங்கள் மட்டும்தானா தோழர்?' என்று கேட்டார் கிஷ்ணன்.

"அதற்கில்லைத் தோழர் நீர் அறியாத யாழ்ப் பாணமல்ல. எங்களுடைய சக தோழர் சிவாவின் கதை உமக்கு நன்கு தெரியும். அவருடைய ஒரு மகள் ஒரு தாழ்த்தப்பட்ட பையனுடன் ஓடியதால் இன்றும் மற்றக் குமர்கள் என்ன பாடுபட்டார்கள் என்பதை நீர் அறிவீர். அதனால் தோழர் கிஷ்ணன் நீ என் ஒரு மகளைத் தான் உன் மருமகளாக்கிக் கொள்ளமுடியும். மற்றப் பிள்ளை களின் கெதி?..." என்றார் மணியம்.

"நீங்கள் சொல்வதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது தோழர்."

சிறிது நேரம் யோசித்த பின்னர், "தோழர் மணியம், நீங்கள் மனப்பூர்வமாக ஒத்துக் கொண்டால், நாமிருவரும் சேர்ந்தே இந்த சமூகம் அறியக் கூடியதாக இந்தப் புரட்சிகர காரியத்தை இங்கே முதல் முதலில் செய்து காட்டலாம். நான் சம்மதம். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்றார் தோழர் கிஷ்ணன்.

அது என்ன என்பது போன்ற கேள்விக்குறிப்




பார்வையுடன் தோழர் கிஷ்ணனைப் பார்த்தார். "தோழர் மணியம் நான் சொல்வதை கேட்டு திடுக்கிட்டுப்போய் விடாதீர்கள். உங்கள் மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் ஐந்து குமரையும் என் வீட்டு அருமை மருமக்களாக்கி கொள்கிறேன். சம்மதா?" என்றார் தோழர் கிஷ்ணன்.

தோழர் கிஷ்ணனின் இந்தக் கேள்வியை உள்வாங்க முடியாமலோ என்னவோ தோழர் மணியம் சிலையாக நின்றார்.



19

ஒட்டாத உறவுகள்



"அம்மா... அம்மா....."

தாயைப் பிரிந்த ஒரு ஆட்டுக்குட்டியின் ஆற்றாமை உணர்வுடன் கூடிய தவிப்பில் அவலக்கூக்குரல் இட்டபடி பிடரியில் குதிக்கால் படும் வேகத்தில் விழுந்தடித்து ஓடிவந்தான் வசந்தன்.

அந்த அவலக்குரல் கேட்டு என்னவோ ஏதோ என்ற நெஞ்சப் பதைப் பதைப்புடன் தாய் புஷ்பமும், சகோதரி மாலதியும்

விழுந்தடித்து படலைக்கு வெளியே ஓடி வந்தார்கள்.

வசந்தன் வந்த வேகத்தில் தாயின் கால்களைக் கெட்டியாக கட்டிப் பிடித்தபடி மூச்சு இரைக்க இரைக்க கண்களும் பிதுங்கிய நிலையில் நின்று திணறினான். வியர்வையில் தோய்ந்து நனைந்து குளிர்ந்துபோயிருந்த அவன் முகத்தையும் உடலையும் மெல்ல வருடி ஆசுவாசப் படுத்தியபடி தாய் புஷ்பம் கேட்டாள். "என்னப்பு!.. என்ன நடந்தது? ஏன் குழறிக்கோண்டோடி வந்தனி... பிள்ளையை யாரும் வெருட்டினவையே...? அம்மம்மா எங்கே?" நெஞ்சப் பதகளிப்பு அடங்காத நிலையில் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டாள் புஷ்பம்.

"அம்மா... அம்மம்மாவை.." ஓடிவந்த இளைப்பினால் மேல்மூச்சு கீழ்மூச்சு விட்டு நிறுத்தி நிறுத்தி கூறினான் வசந்தன்.

"அம்மம்மாவுக்கு என்னடா நடந்தது?... கெதியாக சொல்லடா?" வசந்தனின் பிஞ்சுத்தோள்களைப் பிடித்துலுப்பியபடி அவசரப் படுத்தினாள் தாய் புஷ்பம்.

"அம்மம்மாவை.... அந்தப் பிள்ளையார் கோயிலடி சென்றியிலை நிக்கிற ஒரு ஆமிக்காரமாமா கட்டிப்பிடிச்சு கொஞ்சி..." வசந்தன் சொல்லி முடிக்கவில்லை.

"அடப் பாழ்படுவானே! அந்தக் குறுக்காலை போவானைக் கட்டையிலை வைக்க. அவனை ஒரு தாய் பெத்திருக்க மாட்டாள். நாய்தான் பெத்திருக்க வேணும். அத்தனைக்கு அந்த நாய்மேனுக்கு காமம் கண்ணை மறைச்சுப் போட்டுது. கிரிசாந்தி, ரசனிக் குமரிப் பெட்டைகளையெல்லாம் கொஞ்சிக் குலாவிப் போட்டு கொன்று செம்மனிச் சுடலை மண்ணுக்கை தோண்டிப்



புதைச்சுப் போட்டு, இப்ப பொன்னம்மாக் கிழவிகளையும் கட்டிப் பிடிச்சு கொஞ்சத் துவங்கியிட்டாங்களோ? அந்த நாய் மேனுக்கு இடியேறு விழ" எரிமலையாய் குமுறிய உள்ளத்தில் இருந்து தீப்பிளம்புகளாய் வார்த்தைகள் சிதறிப் பறந்தன.

"பிறகெணை....." வசந்தன் வார்த்தையை இழுத்தான்.

"எந்த இழுவன் கதையை விட்டுட்டு கெதியாய்ச் சொல்லடா குத்தியா..."

சிறுவன் வசந்தனின் இராக ஆலாபரணையிலான இழுவல் வார்த்தைகளால் பொறுமை இழந்த தாய் புஷ்பம் அவனைக் கடிந்து கொண்டாள்.

"பிறகென்ன... அந்த ஆமிக்கார மாமா அம்மம்மாவின்ரை காலிலை தொட்டுக் கும்பிட்டு எங்கட ஆச்சி... எங்கட ஆச்சி எண்டு சொல்லிக் கொண்டு அழுதவர்" என்றான் வசந்தன்.

"இதென்ன இடியேறு விழுந்த கதையாக் கிடக்கு" என்று முனகியவள் எதுவும் புரியாமல் குழம்பிப்போய், தலை சுற்றி கிறுதி வருவதான உணர்வு ஏற்படவே, இருகைகளாலும் தலையைப் பிடித்தபடி பொத்தென்று குந்தினாள் புஷ்பம்.

இத்தனை நேரமாய் உயிரற்ற ஜடமாக விறைத்துப் போய் நின்ற சகோதரி மாலதி "இப்ப அம்மம்மா எங்கையடா?" என்று வசந்தனைப் பார்த்துக் கேட்டாள்.

"அம்மம்மாவும் அழுதவ அக்கா. நான் ஓடி வந்திட்டன்" என்றான் வசந்தன்.

"அம்மம்மாவும் அழுதவவோ?" ஏதேதோ எல்லாம் விபரீத எண்ணங்களும் குழப்பங்களும் உள்ளத்தில் குடி புகுந்து வதைத்தபோது நெஞ்சும் நாவும் வரண்டு போன



வளாய் முடறு முறித்து விழுங்கினாள் மாலதி.

"அக்கா!... அம்மம்மா வாறா... அம்மா... அம்மம்மா வாறாவெணை" வசந்தன் குதூகலத்துடன் துள்ளிக் குதித்தபடி கூறினான்.

மாலதி எதிரே வந்து கொண்டிருந்த அம்மம்மாவை நிமிர்ந்து பார்த்தாள். அவரின் முகத்தில் எந்தச் சாடையையும் கண்டு கொள்ள முடியவில்லை. கண்கள் மட்டும் தூசி விழுந்து கசக்கப்பட்டது போன்று சிவந்து கலங்கிக் காணப்பட்டன. அதிலிருந்து அம்மம்மாவும் அழுதிருக்கலாம் என்ற முடிவுக்கு வந்தாள் மாலதி.

அம்மம்மா வந்ததும் வராததுமாக பேரப்பிள்ளை வசந்தனைக் கடிந்து கொண்டாள்.

"பற்றாக் குறைக்கு இந்தக் குந்தியன் வேறை... எரியிற நெருப்பிலை எண்ணெயை ஊற்றினது மாதிரி.... இவனைக் காணாமல் என்ர நெஞ்சு துடிச்சுப் பதைச்சுப் போச்சு. இப்ப இவனைக் கண்டபிற்குதான் என்ர நெஞ்சிலையும் நாக்கிலையும் ஈரம் வந்தது."

"அந்த ஆமிக்காரன் அம்மம்மாவைக் கட்டிப் பிடிச்சு என்னென்ன கொடுமையெல்லாம் செய்யப்போறானோ என்று பயந்து போய், எங்களுக்கு அதைச் சொல்லுறத்துக்காக வல்லோ பிள்ளை சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவந்தது." தம்பி வசந்தனுக்காக பரிந்து பேசினாள் மாலதி.

வசந்தன் கூறிய அம்மம்மா – ஆமிக்காரன் கதையைக் கேட்டு சர்வாங்கமும் ஒடுங்கிக் குறாவிப் போய் குந்தியிருந்த புஷ்பம் இப்பொழுதுதான் உச்சியில் இருந்து உள்ளங்கால்வரை தாயை ஆசறுதியாகப் பார்த்தாள்.



அம்மம்மா மேற்கொண்டு எதுவும் போசாது மகள் புஷ்பத்தையும் பேரப்பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு வீட்டினுள் வந்தாள்.

வீட்டினுள் வந்த அம்மம்மா விறாந்தைச் சுவரில் மாட்டி வைத்திருந்த புகைப்படத்தை - அது பதினைந்து வருடங் களுக்கு முந்திய புகைப்படம் - அது பழுப்பு ஏறி மங்கலாகி விட்ட அந்தப் புகைப்படத்தை - கண்கொட்டாது சிறிது நேரம் பார்த்தபடி நின்றிருந்தாள். ஏனோ அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது.

'இப்ப என்ன நடந்ததுக்காக - வீட்டுக்குள் வந்ததும் வராததுமாக அந்தப் புகைப்படத்தைப் பார்த்து ஏங்கிப் போய் நின்று இந்த மனிசி இப்படிக் கண்ணீர் சிந்த வேண்டும்? ஓ! அது என் அண்ணன் சேனாதிராசரும் அவரது பிள்ளைகளான சேனதீராவும், புஷ்ப கீதாவும் நாங்களும் சேர்ந்திருந்து எடுத்த படமல்லவா?

'ம்... அண்ணன் செத்தும் பதினைந்து பதினாறு வருஷங் களாகி விட்டன. படமும் பழுத்துப் போய்விட்டது. தமிழனுக்கும் சிங்களத்திக்கும் பிறந்த அந்தச் சின்னஞ் சிறுசுகளுக்கு என்ன நடந்ததோ ஆர் அறிவார்? இருந்தால் நல்ல விடலைத் தரவளியாக இருக்குங்கள்!'

அந்தப் புகைப்படத்திற்குள் இருந்தவர்களைப் பற்றி புஷ்பம் இவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கையில், படத்திலிருந்து பார்வையை விலக்கிக்கொண்ட அம்மம்மா பெரிதான மூச்சொன்றை வெளியேற்றினாள்.

"ம்... இண்டைக்குப் பிள்ளையாரைக் கும்பிட்ட புதுமை யாக்கும். பெருமான் கூப்பிட்டுக் காட்டினது மாதிரி ஆயிட்டுது. எல்லாம் தும்பிக்கையான் புதுமை. நம்பித்தான்



ஆக வேண்டிக் கிடக்கு" என்றாள் அம்மம்மா.

அம்மம்மா கூறியதன் அர்த்தம் புரியாமல் புஷ்பமும், மாலதியும் ஆளை ஆள் பார்த்துக் கொண்டார்கள். அந்தச் சென்றியில் நின்ற ஆமிக்காரன் தன்னைப் படுத்திய பாட்டை சாங்கோபாங்கமாக சிந்திச் சீறிச்சினந்து சீற்றத்துடன் சொல்லித் தீர்ப்பாள் என்று எதிர்பார்த் திருந்தவர்களுக்கு கிழவியின் பேச்சும் போக்கும் உப்புச் சப்பற்றுப் போயிற்று. ஒருவேளை... ஒருவேளை அந்த ஆமிக்காரன் செயலால் அதிர்ச்சியுற்று மூளைமாறாட்டம் ஏற்பட்டு விட்டதோ என்று கூட நினைக்கலானார்கள். திடீரென அம்மம்மா ஆணியில் மாட்டி வைத்திருந்த அந்தப் புகைப்படத்தை கழற்றி எடுத்து, தூசியை தன் முகதலைப்பு சேலையால் துடைத்து மகள் புஷ்பத்திடம் தந்தாள். பின் அதில் நின்றிருந்த அந்தப் பத்து வயதுச் சிறுவனைச் சுட்டிக்காட்டி. "இது உன் அண்ணனின் மகன் சேனாதீராதானே?... இவன்தான் அந்தச் சென்றியிலை நின்று எப்படியோ என்னை அடையாளம் கண்டு கொண்டு எங்கடை ஆச்சி!.... எங்கடை ஆச்சி எண்டு என்னைக் கட்டிப் பிடித்துக் கத்திக் குழறின ஆமிக்காரன். அவனும் இந்தப் போட்டோப் படத்தை வைச்சிருக்கிறான்!" அம்மம்மா சொல்லிக்கொண்டே போனாள்.

ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டநிலை என்று ஒரு நிலை இருப்பதாக பேச்சுவாக்கில் கதைக்கிறார்களே. அப்படி யென்றால் சர்வ புலன்களும் அடங்கி விட்ட நிலையை என்ன வென்று சொல்லுவது? செத்து விட்ட நிலையா? அல்லது சாகப் போகும் தறுவாயா?... இதில் ஏதோ ஒரு நிலையில் பேச்சு மூச்சற்று இருந்த மாலதியும் புஷ்பமும்



அம்மம்மாவை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

எல்லாம் சொற்ப வேளைதான். தன்னை சுதாரித்துக் கொண்டு நெடுமூச்சு விட்டு நிமிர்ந்த மாலதி அந்த மரண வேளையில் மௌன அமைதியைக் கலைத்தவளாய் "ஏன் அம்மம்மா... அந்த ஆமிக்காரன் இந்தப் போட்டோப் படம் மாதிரி ஒரு படத்தை வைச்சிருக்கிறதாலை, மாமாவின் மகன் சேனாதீராதான் என்பதை எப்படி நம்ப முடியும்?... அதிலையும் நாங்கள் போராளி குடும்பம் என்ற பொல்லாப் பையும் தேடிக் கொண்டிருக்கிறம். நல்ல வேளையாக தம்பி ராகவன் கோட்டை அடிபாட்டோடை அப்பவே போய்ச் சேர்ந்திட்டான். இதெல்லாத்தையும் வைச்சுப் பாக்கிற போது ஒரே பயமுமாகவும் கிடக்கு. இதிலை ஏதோ சூதுவாது இருக்குமாப் போலையும் படுகுது அம்மம்மா" என்றாள் மாலதி.

"முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடாதை பிள்ளை. நீ நாலெழுத்துப் படிச்சனி. இண்டைக்கு வாத்தியார் வேலையும் பார்க்கிறாய். ஊருலகத்தை இன்னும் சரியாகப் படிக்கவில்லை எண்டு தான் நினைக்கிறேன். போனதெல்லாத்தையும் புளி விட்டழைக்கிற மாதிரிக் கதைக்கிறதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. இந்தக் காலத்தை வைச்சு நல்லதையும் கெட்டதையும் யோசிக்கவும்தான் வேணும் பிள்ளை.

"எண்டாலும் பிள்ளை மாலதி! இந்த அம்மம்மா நீங்கள் நினைக்கின்ற மாதிரி அந்தளவு மோட்டு ஜென்மமில்லை மோனை... என்ரை பிள்ளையின்ரை சாங்கம்.... அதுதான் அச்சுப் பதிவு அப்பிடியே இந்தச் சேனாதீராவிலையும்



அப்படியே கிடக்கு.. உன்ரை மாமாவின்ரை மறு அவதாரம் தான் அவன்ரை தோற்றம். அந்த மூக்கு, முகம், முழி, கண், காது, கன்னம் அந்தத் தெத்துப் பல் வரிசை எல்லாம் உன் மாமாவை உரிச்சு வைச்சு அப்பிடியே அவதரிச்சி ருக்கிறான். உன்ரை மாமாவை ஒரு தரம் நினைச்சுப் பார். ஆசாட்டமாகவாவது தெரிய வரும்.... நீ, அப்ப சின்னப் பிள்ளைதானே! இந்தச் சேனாதீராவுக்கும் உனக்கும் இரண்டு வயசுதான் வித்தியாசம் மோணை. வேணு மெண்டால் உன்ரை அம்மாவைக் கேட்டுப் பார்.... காணாமல் போய் விட்ட உன்ரை மாமாவை நாங்கள் செத்ததில் ஒன்றாக நினைத்து, மனதிலிருந்தும் மெல்ல மெல்ல மறந்துபோய் விட்ட வேளையில், எண்ணிப் பதினைந்தாவது வருஷம்!... அன்றைக்கு ஒரு காலங் காத்தாலை பொழுது... வான் ஒன்று வந்து எங்கள் வீட்டுப் படலைக்கு முன்னால் நின்றது. அதிலிருந்து ஒருவன் இரண்டு பிள்ளைகளுடன் இறங்கி எந்தக் கேட்டுக் கேள்வியும் இல்லாமல் விறுவிறென்று வீட்டு முற்றத்திற்கு வந்து விட்டார்கள். ஆர்? எவர்? என்று கேட்டறிவதற்குள் வந்தவன். விறைத்துப் போய் நின்ற என்னை கட்டிப் பிடித்து கன்னத்தோடு கன்னம் வைத்து 'அம்மா!... என்ரை அம்மா!...' என்று விக்கி விக்கி கதறி அழுதான். உன்ரை அம்மாவையும் அதுபோலவே இழுத்தணைத்து வைத்துக் கொண்டு 'என்ரை அருமைத் தங்கச்சி புஷ்பா! என்னை மறந்து போய் விட்டியளா அம்மா...' என்று சொல்லிச் சொல்லி அழுதான்.

"பித்துப் பிடித்து திக்கிட்டுப் போய் நின்ற நாங்கள் எப்பவோ காணாமல் போய்விட்டவனை செத்ததிலை



ஒன்றாக நினைத்து மறந்து விட்ட வேளையில் அந்தச் செத்தவன் திரும்பி வந்த விந்தையை அறிந்து நாங்களும் சித்தங் கலங்கி அழுது அரற்றி நின்ற வேளையில்... மிச்சத்தையும் சொல்லட்டுமா மாலதி... அப்போ நீயும் மாமாவுடன் கூடவந்த பிள்ளைகளும் முழுசி முழுசிப் பார்த்தபடி மூலைக் கொருவராய் நின்றிருந்தீர்களே! நல்லா ஞாபகப்படுத்திப் பார் மாலதி!

"பிறகு மாமா தன் பிள்ளைகளை எங்களுக்குப் பழக்கப் படுத்தி வைத்தாரே! பத்து வயதான ஆம்பிளைப் பெடியனை சேனாதீரா என்றும், எட்டு வயதான பொம்பிளைப் பிள்ளையை புஷ்பகீதா என்றும் சொல்லி வைத்தபோது என் அம்மா என்ன சொன்னவள் தெரியுமே?... பேரைக் கூட தன்ரை பேரையும் என்ரை பேரையும் மறந்திடாமல் புஷ்பகீதா என்றும் சேனதீரா என்றும் வைத்து விட்டார் என்றும் சொல்லிச் சொல்லிப் பூரித்துப் போய் நின்றாளே!

"அவர்கள் இஞ்சை இருந்த அந்த ஒன்றரை மாத காலத்திலை நீயும், அதுகளும் வெகு பாசமாகப் பழகி ஆனந்தமாய் ஓடிப்பிடித்து விளையாடித் திரிந்தீர்களே! அதெல்லாத்தையும் கூடவா மறந்திட்டாய் மாலதி! அப்ப ஒருநாள் மாமாவின்ரை வானிலை நாங்கள் எல்லாம் சேர்ந்துபோய் சேர்ந்திருந்து எடுத்தபடம்தான் இந்தப் போட்டோப் படம். மாமாவும் ஒரேயடியாக செத்துப் போறத்துக்காக்கும் இந்த ஞாகபத்தை வைச்சிட்டுப் போயிட்டான் கடைசியாக" என்றெல்லாம் கதையைச் சொல்லிக் கொண்டு வந்த அம்மம்மா சிறிது வேளை நிறுத்தி பெரியதொரு பெருமூச்சுடன் தொடர்ந்து



சொல்லத் தொடங்கினாள்.

"ம்... மாமாவும் பிள்ளைகளும் இஞ்சையிருந்து போன அடுத்த வருஷமோ அதுக்கடுத்த வருஷமோ என்றுதான் நினைக்கிறேன். இந்தக் கோதாரியிலை போன இனக்கலவரம் தொடங்கின ஆண்டு எண்பத்தி மூன்றாம் ஆண்டுதானே? அந்த ஆடிமாதத்திலை கன்னிக்கால் நட்டு துவக்கி வைச்ச இந்த யுத்தத்தாலை இன்றும் ஓடித்தான் திரியிறம்.

"மாமாவையும் அந்த இனக்கலவரத்திலை கொழும் பிலை வைச்சு முடிச்சுப் போட்டாங்கள். ம்... இந்தப் பெடியனை... இண்டைக்கு நடக்கிற தமிழன் - சிங்களவன் சண்டையாலே பதினைந்து பதினாறு வருஷத்திற்குப் பிறகு பார்க்கிற இந்தப் பிள்ளையை... என்ரை பேரப்பிள்ளை என்று சொல்லவே பயமாக்கிடக்கு. சொன்னாலும் நீங்களே நம்பிறியள் இல்லை. ஊருலகமா நம்பப் போகுது?... ஏன் ஒரு சிங்களத்தி பெத்த பிள்ளை யெண்டபடியால் இவ்வளவு சீத்துவக் கேடு? அப்பிடிப் பார்க்கப் போனால் மாமா மட்டுமே சிங்களத்தியை பெண்ணாண்டவன்?... அந்தக் காலத்திலை உத்தியோகத்துக் கெண்டும், வியா பாரத்துக் கெண்டும் போன தமிழர்கள் சிங்களத்தியளைப் பெண்ணாண்டு பிள்ளைகுட்டியளும் பெத்திருந் தவை தானே! அந்த வாரிசுகள் தான் இண்டைக்கு இஞ்சை சுத்தத் தமிழ்பேசுற எங்களை சித்திரைவதை செய்ய ஆமியா வந்து நிற்குதுகள். எல்லாம் ஒரு காலத்திலை தமிழன் செய்த பழி பாவம்! திரும்பி வந்து துரத்தித் துரத்தி அடிக்குது" என்று போனது வந்தது என்றெல்லாம் சுற்றி வளைத்து அம்மம்மா சொல்லவும்...



"ஏன் அம்மம்மா, அப்படியென்றால் இந்த ஆமிக்கார சேனாதீராவை மாமாவின்ரை மகன்தான் என்று நம்பச் சொல்லிறியள்... அப்படித்தானே?"

"நம்பிறதும் நம்பாததும் இனி உங்களைப் பொறுத்தது. ஏதோ நடந்ததைச் சொன்னான். நம்ப வேணுமெண்டு ஏதோ அடிச்சு அப்பம் தீத்தினது மாதிரி நான் இதைச் சொல்லவில்லை. நீ இப்ப என்ன கேட்க வாறாயெண்டும் எனக்குத் தெரியுது மாலதி" என்று நிறுத்தினாள் அம்மம்மா.

"ஓம் அம்மம்மா! எனக்கு இன்னொரு சந்தேகம். அந்த சென்றியிலை நிக்கிற ஆமிக்கார சேனாதீரா நீ வருவா யெண்டு இந்தப் படத்தையும் வச்சுக் கொண்டு நிண்டு உன்னை அடையாளம் கண்டு கொண்டானா?....இல்லை, நீயாக அவனை மாமாவின்ரை மகன்தான் என்று அடை யாளம் கண்டு கொண்டியா அம்மம்மா?....."

"ஆமிக்காரன் எண்டால் ஆருக்குத்தான் பயமில்லை. நான் கிழவியெண்டாப் போலை அவங்களை நிமிர்ந்து பார்த்து பல்லை இழிச்சுக் கொண்டு வரவேணுமா என்ன? நான் என் போக்கிலை தலை நிமிர்ந்து பாராமல் இவனை வசந்தனை எனக்கு முன்னுக்கு விட்டுக் கூட்டிக் கொண்டு வந்தன். அந்த ஆமிக்காரன் இவனைப் பிடிச்ச வைச்சுக் கொண்டு செல்லமாக இவன் சொக்கில் கிள்ளி "சின்னத்தம்பி எங்கே போறது?" என்று என்னெல்லாமோ கேட்டுக் கொண்டிருந்தான். இவன் மிரண்டு போய் நிண்டு என்னைப் பார்த்தான்.

"அப்போதுதான் அவனை அந்த ஆமிக்காரனை நான் நிமிர்ந்து பார்த்தேன். எங்கொ எப்போதோ பார்த்த முகம்.



நான் பெற்றவன் பொக்கிள்கொடி விழாது என் பக்கத்தே கிடந்து வீறிட்டுக் கத்திய போதெல்லாம் என் மார்பில் பொங்கி நின்ற முலையை அவன் வாயில் திணித்து அந்தச் சத்தம் வெளிவராது அடைத்த போதிலிருந்து கேட்ட அந்த இனிய குரலை இன்று இவனின் இந்த ஆமிக்காரன் குரலில் கேட்டதான நினைப்பு என்னுள் எழவே, அவனை மிக உன்னிப்பாக தீர்க்கமுடன் பார்த்தேன். ஊனையும் உள்ளத்தையும் உருக்குவதான எனது உறவுப் பார்வை அவன் உதிரத்தை ஊடுருவி 'தானாடாது விட்டாலும் தன் தசையாடும்' என்ற மூதுரைக்கு உள்ளாக்கியதோ என்னவோ அவன் இப்படிக் கேட்டான்."

"என்ன ஆச்சி அப்பிடிப் பார்க்கிறது?...எங்கை போறது?" என்றான்.

"கோயிலுக்கு போய்விட்டுக்குப் போறம்."

"ஆச்சி பேரென்ன?"

"பொன்னம்மா."

அவன் நெற்றியில் சுருக்கம் விழ நெற்றிப் புருவத்தை உயர்த்தி என்னன தீர்க்கமுடன் ஊடுருவிப் பார்த்தபடி கேட்டான். "ஐ சீ காட் — அடையாள அட்டை இல்லே?..."

"கொண்டுவரவில்லை. வீடு கிட்டத்தான்" என்றேன்.

"உங்க ஐயா பேர் என்ன?"

"அப்பாவு" என்றேன்.

"அப்பாவு!" அவன் நான் சொன்ன பெயரை அழுத்திக் கூறினான். பின்பு தன்னிச்சையாக எனக்கும் கேட்கும் படியாக இப்படி முனகினான்.

"அப்பாவு பொன்னம்மா சேனாதிராசா..."

"ஆச்சி! நீங்க இடம் பெயர்ந்து இருக்கிறதுதானே?



உங்க சொந்த ஊரு வசாவிளான்தானே?' அவன் கேள்வி மேல் கேள்வியாக கேட்டான். நான் இமை வெட்டாது அவனையே பார்த்தபடி நின்றேன்.

"ஆச்சி உங்கடை மகன் சேனாதிராசா எண்டொரு ஆள் இருந்தது தானே?" அவன் குரல் கமறலுடன் வெளிவந்தது.

"அவர் கொழும்பிலை கலவரத்திலை செத்துப் போயிட்டார் தம்பி."

"ஆச்சி!.... எங்கட ஆச்சி! நா உங்கடை பிள்ளை யின்ரை பிள்ளை ஆச்சி. சேனாதிராசா பிள்ளை; உங்கடை பேரப்பிள்ளை. என்னை நல்லாப் பாருங்கோ ஆச்சி. பத்து வயசிலை உங்கடை வீட்டுக்கு தாத்தாவோடை நாங்க, தங்கச்சி நான் எல்லாம் வந்திருந்தது..." அவன் அக்கம் பக்கத்தில் நின்றவர்களைக்கூட மறந்தவனாய் அரை குறைத் தமிழில் ஏதேதோ சொல்லிச் சொல்லி அழுதான்.

"கடவுளின் தீர்ப்பாக வந்ததுதான் இந்த இனக் கலவரங்களும் கொடிய யுத்தமும் வந்திருக்கு. பிள்ளையை, புரியனை, பேரப் பிள்ளையை அவலமாய் அள்ளிக் குடுத்திட்டு பிறந்த மண்ணில் இருந்தும் துரத்தப் பட்டு ஆத்தலைஞ்சு திரியும் என்னைப் போன்றவர்களுக்கு அழுகை தானே துணை.

"என் பிள்ளையின் சாங்கத்திலிருந்த இந்த ஆமிக்காரப் பெடியனை என் பிள்ளையின் பிள்ளையாக இருப்பானோ என்றெல்லாம் என் மனம் பேதலிச்சு குழம்பிப் போய் நின்ற வேளையில் அவனே நான் உங்கள் பிள்ளையின் பிள்ளை யென்று சொன்ன போது எந்தத் தாயினால்தான் அழாதிருக்க முடியும்? நானும் அழுதேன். பிறகு அவன் என்



கையை ஆதாரத்துடன் பற்றி அருகிலுள்ள தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்று இதே போட்டோப் படத்தை எடுத்துத் தந்தான்" என்றெல்லாம் கதையை அம்மம்மா நம்பும்படியாக சொல்லி முடித்தாள்.

அம்மம்மாவுக்கு வயது அறுபதை தாண்டி விட்டாலும் இன்னும் வாக்குமாறிப் போய்விடவில்லை என்பது மகள் புஷ்பத்திற்கும் பேர்த்தியார் மாலதிக்கும் நன்கு தெரிந்த விடயம்தான். அவளுடைய நினைவாற்றலும் அறிவாற்றலும் இப்போதும் அற்றுப் போய் விடவில்லையென்பதை மாமா வின் மகன் தான் இந்தச் சேனாதீரா என்பதை புள்ளி விபரமாகக் கூறி ஆணித்தரமாக அடித்துச் சொன்னதன் பின்பும் அதனை நம்ப முடியாமல் இருக்கமுடியுமா?

மறுநாள் காலையில் தெருநாய்கள் "அவக்... அவக்" என்று குரைத்து அந்தத் தெருவின் சுற்றாடல் மனிதர்களைத் திகிலடையச் செய்தன.

"ஆமிக்காரங்களாக்கும்... அந்த அறுவாரைக் கண்டால் தான் இந்த நாய்ப் பட்டாளம் இப்படி அறம்புறமாக குலைக்கிறது. ஓ. அவங்கள்தான்... இந்தா வாறாங்கள் இண்டைக்கென்ன றவுண்ட்டப்போ செக்கப்போ என்ன இடியேறொ தெரியவில்லை. அறுவாரைக் கண்டால் மனிசற்றை கையுமோடாது. காலுமோடாது. செய்த கரியங்களை அப்பிடியே அப்பிடியே விட்டிட்டு விறைச்சுப் போய் நிக்க வேண்டிக்கிடக்கு..."

ஆமிக்காரங்களின் வருகையைக் கண்டு இப்படித் தனக்குள் புறுபுறுத்துக்கொண்ட அம்மம்மா கூட்டிக் கொண்டிருந்த முற்றத்தை அரைகுறையாக நிறுத்திவிட்டு



கூட்டுமாறுடன் விறைத்துப் போய் நின்றாள். படலையைத் திறந்து வந்த இருவரில் ஒருவன் தொப்பியைக் கழற்றியபடி அம்மம்மாவின் அருகே வந்து நின்று சிரித்தபடி "ஆச்சி!..." என்றான்.

'அட சேனாதீரா...?' ஆச்சரியத்துடன் இப்படி தனக்குள் நினைத்த அம்மம்மா முகமலர்ச்சியுடன் "வா தம்பி சேனாதீரா" என்று சிரித்தபடி அன்பு ததும்ப வரவேற்றாள்.

"ஆமிக்காரங்கள்" என்றவுடன் அவரவர் செய்த காரியங்களை அப்படி அப்படியே. விட்டுவிட்டு வீட்டினுள் இருந்து வெளியே வந்து தாய் புஷ்பத்தை ஒட்டிக்கொண்டு நின்ற மாலதி, வசந்தன் ஆகிய ஒவ்வொருவரையும் சேனாதீராவிற்கு சொல்லிவைத்தாள் அம்மம்மா.

"நந்தா... எங்கட மாமி... தாத்தாவோடை எல்லாம் மறந்திட்டியளா நந்தா..." நா தழுதழுக்க ஈரலித்த கண்களுடன் புஷ்பத்தின் கால்களைத் தொட்டு கும்பிட்டான் சேனாதீரா. "அம்மம்மாவை அறிவுகெட்ட முண்டம் என்று ஆர் சொல்ல முடியும்? ஆரோ ஒரு சிங்கள ஆமிக்காரனைப் பார்த்துவிட்டு வந்து அண்ணனின் பிள்ளையென்று ஆயிரம் தடவைகள் அடித்துக் கூறிய போதும் இதுவரை அரைகுறை நம்பிக்கையுடன் நம்பியும் நம்பாமலும் இருந்த புஷ்பம் அழுதே விட்டாள்.

"மல்லி சேனாதீரா!... அண்ணாதான் ஆமியாக வந்திருக்கிறாரோ என்று நினைச்சன். அண்ணன் சாகயில்லை..." புஷ்பம் வழிந்த கண்ணீரைத் துடைத்த வளாய் சேனாதீராவின் கன்னத்தை தொட்டு தடவி வருடியபடி இப்படிக் கூறினாள். அதன் பின்பு சேனாதீரா சாதாரண உடையில் வீட்டுக்கு வர தொடங்கிவிட்டான்.



வீட்டில் எல்லோருடனும் அன்புடனும் பண்புடனும் பேசிப் பழக நாட்கள் மாதங்களாகி போய்க் கொண்டிருந்தன.

சேனாதீராவின் வருகையால் செத்துப்போன அண்ணன் சேனாதிராசா திரும்பி வந்து விட்டதான ஆனந்தத்தையும் சந்தோஷத்தையும் அனுபவித்துக் கொண்டிருந்த அம்மம் மாவும் புஷ்பமும் நாளடைவில் அயலட்டத்தின் அபத்தமான "குசு குசு" கதை பேச்சுக்களால் பெரும் துயரம் அடையத் தொடங்கினார்கள்.

"என்ன உந்தச் சிங்கள ஆமிக்காரன் உங்கை அடிக்கடி வந்து அடுகிடை படுகிடையாக கிடந்து போறான். என்ன சங்கதி?" என்று தான் கதை ஆரம்ப மாயிற்று.

"சுத்து மாத்துக் கதையளிலை உவளுகள் நல்லாக் கைதேர்ந்தவளுகள். அவவைத் தெரியுமே? அவதான் அந்த மாலதிக்குமரி. வாத்தியார் வேலை பார்க்கப் போறனெண்டு சொல்லி வழி தெருவிலை, அதுதான் அந்தச் சென்றியிலை நிக்கிற உவனை வலை வீசிப் பிடிச்சுப் போட்டு இப்ப அண்ணன்ரை பிள்ளை ஆமிக்காரப் பிள்ளை எண்டெல்லாம் கதையளக்கினமே. அவ அதிலை நிண்டு அவனோடை பல்லை இழிச்சிழிச்சு கதைக்கிறதை நாங்கள் கனதடவை பார்த்திருக்கிறம். முழுப்பூசணிக் காயை முக்காக்கொத்து சோத்தாலை மறைக்கிற கதை யாக ஆருக்கு மாயமாலம் போடுறாளவை?" எனக் கதை வளர்ந்தது.

"இக்கணம் பெடியங்கள் அறிஞ்சாங்களனோ உதாலை பெரும் வில்லங்கம்தான் வரும். உங்கினை ஒட்டிப் பதுங்கி கண்டுகாணாமல் திரியிற இயக்கப் பொடிபெட்டைக்கும்



இதாலை பெரும் ஈனம்தான். உந்த இரணியச் சாதியை இஞ்சை இருந்து அடிச்சு கலைச்சுப் போட வேணும்" எனக் கதை முற்றியது.

அயலட்டத்தின் இந்த மாதிரியான "குசுகுசு" கதை பேச்சுக்கள் காதில் விழுந்தபோது, அம்மம்மாவினதும் புஷ்பத்தினதும் சப்தநாடிகளும் நின்றன.

பெருமூச்சு விட்டபடி இப்படியாக தங்களுக்குள் நினைத்துக் கொண்ட அம்மம்மாவும் மகள் புஷ்பமும் ஊரின் ஊத்தைத்தனமான நிந்தனைப் பேச்சு வார்த்தைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க நினைத்து தங்களுக்குள் கதைத்துப் பேசி ஒரு முடிவிற்கு வந்தார்கள். அதனால் அன்று சேனாதீரா வீட்டுக்கு வந்தபோது அவனை வரவேற்று உபசரித்து பின்பு அம்மம்மா அவனைப் பார்த்து "தம்பி சேனாதீரா இப்படிச் சொல்லுறதக்காக நாங்கள் ரொம்பவும் வேதனைப்படுறம், என்ன செய்யிறது? சொல்லவும் வேண்டித்தான் கிடக்கு. எல்லாம் உன்ரை நன்மைக்காகத் தான் இப்படிச் சொல்லுறதும். நீ அடிக்கடி இங்கே வந்து போகாதே. அதனாலை உனக்கு எங்களுக்குந்தான் அபாயம். தமிழன் சிங்களவன்ரை இந்தக் கொடிய யுத்தத்தாலை சனங்களும் ஆளை ஆள் வெறுக்கிறார்கள். உன்னை என்ரை பிள்ளையின்ரை பிள்ளை பேரப்பிள்ளை எண்டு சொன்னாலும் நம்பிறாங்களில்லை. சிங்கள ஆமிக்காரனை தங்கடை எதிரி எண்டுதான் நினைக்கிறாங்கள்..."

அம்மம்மாவும் புஷ்பமும் ரொம்பவும் வேதனையுடன் ஒரு வகையாக திக்கித் திணறி சேனாதீராவுக்கு விடயத்தைப்



புரிய வைத்த போது அவன் கல்லாகச் சமைந்து போயிருந் தான். அப்பொழுது திடீரென்று தெருவின் திருப்பத்தில் கேட்ட துப்பாக்கி வேட்டுக்களின் அதிர்வினால் திடுக்குற்று எழுந்து நின்றான் சேனாதீரா.

"சரி ஆச்சி நான் போயிட்டு வாறது" என்று கூறி படலைக்கு வெளியே வந்தான் சேனாதீரா.

"டுமீல், டுமீல், டுமீல்...." தெருவில் சேனாதிராவின் எதிரே சைக்கிளில் வந்த ஒருவனின் கையிலிருந்த துப்பாக்கி இன வெறி பேசி ஒய்ந்தது. தெருவில் சேனாதீரா சுருண்டு போய் விழுந்து கிடந்தான்.

அங்கே தெருமுனையில் மாலதி சுருண்டு கிடந்தாள்.

அங்கே மாலதி -

இங்கே சேனாதீரா -

எதற்காக இந்தச் சாவுகள்?



20



காலம் தாழ்த்திய ஞானங்கள்

காணிப்பிரச்சனை ஒன்று காவல்துறை வரைக்கும் போய் விட்டது. விசாரணைக்காக காவல்துறைக்கு வருமாறு வந்த கட்டளையை கேட்டறிந்த போது பஞ்சவர்ணம் பைத்தியக் காரியாக மாறி வாய்க்கு வந்த படியெல்லாம் காவல் துறை யையும் அன்றைய ஆட்சி யாளர்களையும் தன்பாட்டில் திட்டித் தீர்த்துக் கொண்டி ருந்தாள். "கண்டறியாத காவல்

துறையும் கலியாணத்துறையும். ஊர்தேசமறிந்த சொக்கலிங்கம் விதாரனயாற்றை தோம்பு துலவாரம் அறியாமலே அவற்றை மோள் இந்தப் பஞ்சவர்ணத்துக்கு விசாரணைக்கு வரும்படி கட்டளை பிறப்பிச்சிருக்கிறாங்கள். தமிழ்ச்சாதியின்ரை விடுதலைக் காகப் போராடப் போறமெண்டு வந்து, இப்ப வந்த காரியத்தை விட்டிட்டு, நாய் பார்க்க வேண்டிய வேலையை கழுதை பார்த்த கதையாக வல்லோ செய்கிறாங்கள்.

"கோடு - கச்சேரி, பொலிசு - தலைமைக்காரன் தலை யிட்டு தீர்க்க வேண்டிய கர்ணி பூமி கல்யாண விஷயங் களிலை உவை ஏன் தலையிடுகினம்? இல்லை; நாய்க்குத் தெரியுமே போர்த்தேங்காயைப் பற்றி? அந்தக் கணக்காக தூசு துரும்புகள், நிண்டது கண்டதெல்லாம் வந்து துவக்குத் தூக்கினாப் போலை எல்லாம் தெரியும் எண்ட நினைப்பிலை தம்பியவை தலைகால் புரியாமல் நிண்டாடுகினம்..."

நாட்டு நிலைமையும், வீட்டு நிலைமையும் நன்கு தெரிந்து புரிந்திருந்த வடிவேற்கரசர் மனைவி பஞ்சவர் ணத்தின் பிதற்றல் பேச்சைக்கெட்டு வெலவெலத்துப் போனார். போராளிப் பெடிபெட்டையின்ரை காதிலை இவள் பாவியின்ரை பேச்சு வார்த்தை தட்டுத் தவறி கேட்டுச்சுதோ...

வேறு வினையே வேண்டாம். வாய்க்காறி என்றும், வாய் குடுத்து தப்பேலாது என்றும் பேர் பெற்றுவிட்ட பஞ்சவர்ணத்துடன் எப்படியோ வாழ்ந்து நாலைந்து பிள்ளைகளையும் பெற்று நல்லபடியாக வளர்த்து நாலு பெடியளையும் வெளியாலையும் அனுப்பிப் போட்டார்கள்.



எப்போதுமே வசதி வாய்ப்புடன் இருந்து வரும் குடும்பம். அப்படி இருந்தும் மனைவி பஞ்சவர்ணத்தின் ஈவிரக்கமற்ற பேராசை அவள் அறிவுக் கண்களை மறைத்துதான் இன்று காவல்துறைவரைக்கும் கொண்டு போய் விட்டிரக்கிறது.

"இஞ்சை பார் பஞ்சவர்ணம். உன்ரை ஆசை அறிவை மறைச்சுப்போட்டுது. நீ கொஞ்சம் மனிததன்மையோடை நடந்திருந்தால் இந்தளவு கிஞ்சலும் கிலிகேடும் வந்திருக்காது. கோவிச்சியாக இருந்தாலும் உன்ரை கொப்பர் விதானையார் ஊர்தேசமறிய வைப்பாடிச்சியாக வைத்திருந்தவளுக்குப் பிறந்த பிள்ளைதான் அந்தக் கனகிப் பெட்டையும். கொப்பர் அகாலமாகச் செத்துப் போக வில்லையெண்டால், அந்தப் பனம்கூடல் காணியை அவள்ரை பேருக்குத்தான் எழுதியிருப்பார். அந்தப்பிள்ளை இண்டைக்கு இருக்கக் குடிநிலமில்லாமல் பிள்ளை குட்டியலோடை ஆத்தலைஞ்சு திரியிறாள். அதிலை ஒரு பரப்பு காணியைக் கொடுத்து குடியிருத்தினால் என்ன கெட்டுப் போகப் போகுது? அப்படிச் செய்தால் உன்னையும் உன்ரை கொப்பரையும் ஊர்தேசமும் போற்றும் காவல்துறையும் ஒண்டும் செய்யாது. அந்தப்பிள்ளை இஞ்சை வந்து அக்கா தங்கச்சி முறை கொண்டாடி வீட்டுக்காரியங்களையெல்லாம் உன்னோடை விழுந்துகட்டி செய்த போதெல்லாம் அவளைக் கோவிச்சியெண்டா நினைச்சனி?...."

"பின்னை என்னெண்டாம் நினைச்சனான்...? கோவியச் சாதி எங்கடை வீட்டுவேலைக்காரர்தானே?"

"காலம் மாறிப்போச்சு பஞ்சவர்ணம். கதைக்கிறதை அளந்துகதை. உதை இண்டைக்கு சொல்லுகிற இடத்திலை சொன்னால் விளக்கு மாத்தாலைதான்



தருவாங்கள். அது ஏதோ பாவப்பட்டுப் பிறந்ததாலை - பஞ்சப்பட்டதாலை - வாய்க்கு வந்தபடியெல்லாம் கதைக்காதை."

"அப்பற்றை வைப்பாடிச்சிக்குப் பிறந்த பிள்ளையென்று எனக்குத் தெரியும்தான். அதுக்காக காணிக்கும் அவளுக்கும் என்ன உரிமை? நாளைக்கு ஊரிலை உள்ள தெல்லாம் வந்து என்ரை அப்பனுக்குத்தான் பிறந்த னாங்கள், அதனாலை எங்களுக்கும் காணியிலை உரிமை யிருக்கெண்டு வந்து நிற்கப்போகுதுகள். இண்டைக்கு கோடு கச்செரி இருக்கு மெண்டால் கோவிய தங்கச்சிக்கு முறையான பாடம் படிப்பிச்சுப் போட்டுத்தான் விடுவன் ஓ.... இவங்கள் முந்தநாள் முளச்சு மூன்று துளிர்கூட விடாத பெடியள். ஆட்சி அதிகாரம் செய்ய வந்து முறை தலை தெரியாமல் நிண்டு ஆட்டம் போடுதுகள். அவையின்ரை காவல் துறையும் காவாலித்துறையும்...

"நாளைக்கு என்னை என்ன தும்மப் போகினம் எண்டு ஒருக்கால் பார்ப்பம்... ஓ!"

"இஞ்சை பார் பஞ்சவர்ணம். நுணலும் தன்வாயால் கெடும். அந்தக் கணக்காக கெட்டழிஞ்சு போகப் போறாய். காலநேரத்தை அறிஞ்சு கதை பேச்சை வைச்சுக் கொள். வீணாக உந்த வாயைக் காட்டி வில்லங்கத்து குள்ளை போகாதை. வாய்க்கொழுப்பு சீலையாலை போகச் செய்வாங்கள் பெடியள். அப்போதைக்குத் தொ- ியும். அவங்கள் ஒன்றும் கற்றுக் குட்டியளில்லை. நாளைக்கு கவனமாகப் பதிலைச் சொல்லு தெரிஞ்சுதே?....

"என்னையும் விசாரிப்பாங்கள்தான். எனக்குச் சம்மத மெண்டுதான் சொல்லுவன். நீயும் அந்தப்பிள்ளை



கனகத்துக்கு அந்தக் காணியிலை ஒரு பரப்புக் காணி யாவது குடுக்கிறதுக்கு சம்மதம் எண்டு சொல்லிப் போட்டு வா. வீணாக, ஏடாகூடமாக கதைச்சு வில் லெண்டத்தை விலைக்கு வாங்காததை தெரிஞ்சுதோ?..."

"இவர் பெரிய தருமப் பிரபுதானே! வல்லாளத்துரையே என்ரை வடிவேற்கரசுவே! ஏதோ உழைச்சுப் பிழைச்சு தேடித் திரட்டி வைச்சவராட்டமல்லோ அவற்றை கதையும் போக்கும். ஊரான் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே எண்டு உடம்பிலை நோகாமல் பெண்டாட்டிமாற்றை சீதனத் திலை குசால் பண்ணவாறவையின்ரை மேட்டிமையான பேச்சுக்களுக்கொண்டும் குறைச்சலில்லை.

"இந்தப் பஞ்சவர்ணத்துக்குக்கிட்ட உந்தப் பம்மாத்து ஒண்டும் எடுபடாது. ஒரு துடை நடுங்கியைக் கொண்டு வந்து என்ரை துணையென்று கட்டிவைச்சினமே! என்ரை அப்பரும் ஆத்தையும்! அதுகளைத்தான் சொல்ல வேணும்."

இவளிடத்தில் வாய் கொடுத்து தப்பெலாது என்பதும் வாய்க்கு வாய் காட்டி வளர்த்துக்கொண்டு போவாள் என்பதும் வடிவேற்கரவருக்கு எப்போதோ இருந்து தெரிந்த விடயம்தான். இத்தனை காலமாக குடும்பமென்ற தேர் எப்படியோ இழுபறிப் பட்டு வந்துவிட்டது. பெண்டிலுக்குப் பயந்தவன் என்றொரு பட்டமும் உண்டுதான். அதற்காக குடும்பத்து நற்பெயரைக் கொட்டிக் குலைக்கவும் விரும்பவும் இல்லை.

மறுநாள் காவல்துறையின் விளக்கத்துக்கு கணவன் மனைவி இருவரும் சென்றிருந்தார்கள்.

அங்கே... விசாரணைக் குழுவின் நடுநாயகத்



தலைவியாக... சீருடையில் வீற்றிருந்த பெடிச்சியைக் கண்டபோது பஞ்சவர்ணம் தம்பதியர் முகம் வெளிறி வெலவெலத்துப் போய் விறாந்தையிலே நின்று விட்டார்கள்.

அது... அது பள்க் கணபதியின் மகள் பாஞ்சாலி அல்லவா?...

அவள் போராளியாக போன தெண்டல்வா கேள்வி...

பஞ்சவர்ணத்துக்கும் வடிவேற்வரசருக்கும் அந்த இடத்தில் பாஞ்சாலியைக் கண்டது முதல் இன்னமும் ஜீரணமாகாத பழைய நினைவுகள் நெஞ்சில் புரண்டு புரண்டு நினைவுக்கு வருகின்றன.

அப்போது இந்தப் பாஞ்சாலிக்கு என்ன வயசிருக்கும்? பத்து வயசிருக்குமா? இருக்கும். ஒரு பனங்கட்டிக் குட்டான் வார்பிலமைந்த உடலமைப்போடு கூடிய துருதுருவென்ற நாவற்பழ நிறத்தோடு கூடிய கண்களுமாக அதைப் – அந்தச் சிறுமியைப் பார்ப்பதே – நல்ல பனங்கட்டியை, நாவற்பழத்தை சுவைத்த இனிய நினைவே எவருக்கும் வரும்.

அன்று அந்தச் சிறுமி பாஞ்சாலிக்கு நிகழ்ந்த அந்த விபத்துக்கு, அந்த நாய் கடித்துப் பிடிங்கியதற்கு, காரணமாயிருந்த மனைவி பஞ்சவர்ணத்தை பார்த்து அவரது முகத்தில் வெறுப்பும் வேதனையும் பிரதிபலிக்க சொன்னார், "பஞ்சவர்ணம், உனக்குந்தப் பேர் கொஞ்சமும் பொருத்தமில்லை. அஞ்சுவர்ணம் பொருந்திய பஞ்சவர்ணக்கிளியென்று ஒரு அழகான கிளியிருந்துதாம். ஒருவேளை உனக்குந்தப் போர் வைச்சதுக்குப் பிறகுதான்



அந்தப் பறவை இல்லாமல் போச்சுதோ என்னவோ? உனக்கு பஞ்சமி அல்லது பஞ்சமா பாதகி என்ற பேர்தான் பொருத்தம். ஏனென்றால் அஞ்சுவிதமான பஞ்சமா பாதகக் குணங்களும் உன்னிடத்திலை அடைஞ்சு போய்க் கிடக்கு. என்ன இருந்தாலும்,என்னதான் குறைஞ்ச சாதிக்காரப் பிள்ளையாக இருந்தாலும், நாய் கடிக்கப் பாய்ந்தபோது 'ஐயோ.. அம்மா...' என்று அவலக்குரல் எழுப்பியபடி கடையில் வாங்கிவந்த அரிசி சாமான்களும் தெருவில் கொட்டிச் சிந்துப்பட்ட நிலையில் உன் கால்களை கெட்டியாகக் கட்டிப் பிடித்த போது, தீட்டுப் பட்டுவிட்ட தாய் நினைத்து. நீ அந்தக் குழந்தையின் பிஞ்சுக் கரங்களை பலாத்காரமாக பிடுங்கி எடுத்துத் தள்ளிய போது நிலத்தில் விழுந்த பிள்ளையை நாய் கடிக்கப் பார்த்து நின்றாயே! ஓ, நீயும் ஒரு தாயா? நாயிலும் கேடு கெட்டவள் சண்டாளி" என்று திட்டித் தீர்த்தார்.

இன்று அதே பள்க் கணபதியின் மகள் பாஞ்சாலியை இந்தக் காவல்துறை விசாரணை மண்டபத்தில் கண்ட போது அந்தப் பழைய கறை படிந்த இருண்ட ஞாபகங்கள் இருவர் நெஞ்சிலும் புரண்டு புரண்டு வருவது இயல்புதானே?

அந்த யாழ்ப்பாணத்து கிராமத்தின் ஒரு பகுதியான மேட்டுக்குடி நிலப்பகுதி தன் சுறுசுறுப்பை இழக்கின்றது. மற்றொரு பகுதியான தாழ்நிலக் குடிமக்கள் வாழும்பகுதி சுறுசுறுப்படைகின்றது. குஞ்சுகளுக்கு இரைதேடி வந்து கூடையும் பறவை இனத்தின் உறவுகளான இந்த மக்கள் அன்றாடக் கூலிப்பிழைப்பிலிருந்து கொட்டில் கூடுகளுக்கு வந்து தமது குஞ்சுகளுக்கு உணவூட்ட ஆரம்பிக்கும் வேளை.



அன்று அந்த மாலைப்பொழுது மயங்கும் வேளையில் களைத்துச் சலித்து வியர்வையில் உப்புப் பூத்த மேனியுடன் கொட்டில் திரும்பிய கணபதியின் மனைவி கண்ணாத்தாள் வீட்டில் மகள் பாஞ்சாலி இல்லாதது கண்டு குரல் எடுத்து அயலில் எங்கோ கூப்பிடு தூரத்தில் விளையாட்டில் நிற்பாள் என்ற நம்பிக்கையில் கூப்பிட்டாள்.

"புள்ளோய்... புள்ளொய்...பாஞ்சாலி..."

அயலில் கூப்பிடு தூரத்தில் தோழிகளுடன் மாங் கொட்டை போட்டு கெந்தி விளையாடிக் கொண்டிருந்த பாஞ்சாலி, தாயின் குரல் கேட்டு விளையாட்டை விட்டு விழுந்தடித்து ஓடிவந்து தாயின் முன்னெ நின்றாள்.

"ஆத்தை களைச்சுப்போய் வந்திருக்கிறனம்மா... பிள்ளை ஓட்டமாய் ஓடிப்போய் பொன்னம்பலத்தின்ரை கடையிலை அரைக் கொத்தரிசியும் மிச்சத்திற்கு சீனி தேயிலையும் வாங்கிக் கொண்டோடிவாணை... அச்சாப் பிள்ளையெல்லே. பிள்ளை வந்தவடனெ ஆத்தை தேத்தண்ணி ஊத்தித்தருவன்." பிள்ளையின் கும்பியும் கொதித்தே கிடக்கும் என்பதை உணர்ந்த அந்தத்தாய் குளிர் சொல்லால் பாஞ்சாலியை நனையச்செய்து குஞ்சுப் பெட்டி மூடலையும் காசையும் கொடுத்தனுப்புகின்றாள்.

தாய் சொல் தட்டாத அந்தச் சின்னஞ்சிறு பெண் பாஞ்சாலி மேட்டுநிலக்குடிப் பகுதியிலுள்ள பொன்னம்பலம் கடையை நோக்கி சிட்டுக்குருவியாய் பறந்து சென்றாள்.

மாலை நேரத்து அந்த இரணிய மைமல் வேளையில் அரிசியுடன், சிறுசிறு பொட்டலச் சுருள்களில் சீனி, தேயிலை சகிதம் கடையில் இருந்து திரும்பி வருகையில் தான் அந்த விபரீதம் நிகழ்ந்தது.



பஞ்சவர்ணம் தன் வீட்டுக் கேற்றடியில், கட்டவிழ்த்து விடப்பட்ட அந்தக்கடியன் நாயுடன் நின்று கொண்டிருந்தாள். சிறுமி பாஞ்சாலி தன் போக்கில் விறுவிறென்று ஓட்டமும் நடையுமாக வந்தபோது அந்த நாய் அவளை நோக்கி உறுமி எழுந்தபோது "ஐயோ ....அம்மா.." என்று அலறியபடி பஞ்சவர்ணத்தின் கால்களை கெட்டியாக கட்டிப் பிடித்துக்கொண்டாள் பாஞ்சாலி.

தீண்டத்தகாத அந்தச் சிறுமி தன்னைத் தொட்டுக் கட்டிப்பிடித்த தோஷத்தை எண்ணித் துடித்த பஞ்சவர்ணம், சினத்துடன் குழந்தையின் கரங்களை விலக்கித் தள்ளிய போது, மண்ணில் விழுந்த குழந்தையை நாய் கடித்துப் பதம் பார்த்தது.

இந்தக் களேபரம் கேட்டு வீட்டினுள் இருந்து விழுந்தடித்து ஓடிவந்து வடிவேற்கரவர் நாயைக் காலால் உதைத்துக் கலைத்ததுடன், சிறுமி பாஞ்சாலியைத் தூக்கி தன் தோளில் போட்டுக்கொண்டு மனைவியைப் பார்த்துச் சொன்னார் "நீயும் ஒரு தாயாடி?.... நாயிலும் கேடுகெட்டவளே. நீ ஒரு ராட்சதியெடி" என்றார்.

இதோ, அதே பள்க் கணபதியின் மகள் பாஞ்சாலி இன்று பஞ்சவர்ணம் தம்பதியரை விசாரித்து விளங்கி அவர்களுக்கு அறிவுரை சொல்லும் ஆற்றல் பெற்று விட்டாளா? அல்லது தங்கள் பழைய செயல்களுக்காக இதையொரு சாட்டாக வைத்து பழி தீர்த்துக் கொள்வாளா?

செய்தவை நெஞ்சை உறுத்த பலவாறான நினைவுகள் குறுக்குமறுக்காக தம்பதியரின் நெஞ்சில் வந்து போயிற்று. வடிவேற்கரசர் மனைவி பஞ்சவர்ணத்தின்



காதில் ரகசியமாகச் சொன்னார்.

"நீ அண்டைக்கு இந்தப் பிள்ளைக்கு செய்த மனிதாபிமானமற்ற கொடுமையான செயல்தான் இண்டைக்கு அதுக்க முன்னாலை இப்படி கைகட்டிக் கொண்டு நின்று பதில் சொல்ல வேண்டிய நிலைக்கு கொண்டு வந்து விட்டிருக்கு. ஆனைக்கு ஒருகாலம் என்றால் பூனைக்கும் ஒரு காலம் வரும் என்றது இப்ப சரியாத்தான் போச்சு. அதனாலை நீ செய்த பாவங்களுக்கெல்லாம் பரிகாரமாக படைத்தவனை நினைத்துக்கொண்டு நல்ல படியாகப் பதிலைச் சொல்லு" என்றார் வரவேற்கரசர்.

"ஐயா அம்மா நீங்கள்தானே பஞ்சவர்ணமும் வடிவேற் கரசரும்?... உள்ளே வாருங்கோ" என்று அழைத்துச் சென்றாள் இன்னொரு காவல்துறை பெண்.

பஞ்சவர்ணத்தின் முகம் வெளிறி வியர்க்க பாஞ்சாலியின் எதிரே வந்து நின்றாள்.

"வாங்கோ பஞ்சவர்ணம் அம்மா. எப்பிடி சுகமாக இருக்கிறியளா? அப்பிடிக் கதிரையிலை இருங்கோ. ஐயாவும் இருங்கோ. "இன்முகத்துடன் வரவேற்று அமரச் செய்தாள் பாஞ்சாலி.

"பிள்ளை பாஞ்சாலி, பழசுகளையெல்லாம் மறந்திடம்மா. போனதெல்லாத்தையும் ஒரு பொல்லாத கனவாக நினைச் சிடம்மா. இப்ப நீங்கள் எங்களுக்கு தமிழ் மக்களுக்காகச் செய்யிற தியாகத்தை நினைச்சு இந்த பஞ்சவர்ணம் அம்மா கூட பழைய போக்கையெல்லாம் மாத்தியிட்டா..."

வடிவேற்கரசர் அசடு வழிந்த சிரிப்புடன் முந்தி விழுந்து



மனைவி பஞ்சவர்ணத்தின் பழைய செயல்களுக்காக எல்லாம் பாஞ்சாலியிடம் மன்னிப்புக் கேட்கும் பாவனையில் கதைத்தார்.

அதற்கு புன்னகை பூத்த முகத்தினால் பாஞ்சாலி சொன்னாள்.

"பழசும் புதிசும். நீங்களும் அந்தப் பழைய பத்தாம் பசலித்தனங்களை எல்லாம் மறக்கிறதுதான் நல்லது ஐயா. ஆனால், அது அவ்வளவு சுலபத்திலை யாழ்ப் பாணத்திலை இருந்து மறைஞ்சு போய்விடுமென்று நான் நினைக்கவில்லை. இப்ப அது போராளிகளின்ரை துவக்கு முனையிலே தூங்கிக் கொண்டிருக்கு. அவ்வளவுதான்" என்றாள் பாஞ்சாலி. தொடர்ந்து சொன்னாள்.

"அதை எல்லாத்தையும் நீங்களும் மறந்திடுங்கோ. மறக்கத் தெண்டியுங்கோ. பழைய சங்கதிகளுக்கு பழிவாங்குவதற்காக நாங்கள் இங்கே இருக்கவில்லை. எல்லாரும் மனிசராக – மனிதத்தன்மையுடன் நடந்தால் அதுவே போதும். பஞ்சவர்ணம் அம்மாவும் அந்தப் பழைய சங்கதிகளை எல்லாத்தையும் நினைச்சுத்தான் ஏங்கிப் போய் இருக்கிறார் போலை இருக்கு. கணபதியின் மகளுக்கு முன்னாலை இப்படியெல்லாம் நிற்கவேண்டி வந்திட்டுதே என்று கலங்கிறாங்களோ என்னவோ தெரிய வில்லை."

பாஞ்சாலி புன்னகை மாறாத முகத்துடன் சொல்லி முடித்தாள்.

வயது முதிர்ச்சியோ – அனுபவ முதிர்ச்சியோ அற்றவளான அந்த இளம் யுவதியின் பொறுப்புள்ள பேச்சின் இதம் கண்டு வாயடைத்துப்போய் அவளையே



பார்த்தபடி அமர்ந்திருந்தார்கள் பஞ்சவர்ணம் தம்பதியர்.

"சரி, அதெல்லாம் போகட்டும். நாங்கள் விஷயத்துக்கு வருவோம். இதிலாவது நீங்களும் மனிதத்தன்மையுடன் நடந்து கொண்டால்தான் நீங்கள் மனுசர்களாக மாறி விட்டீர்கள் என்று நம்பமுடியும். ஏன் பஞ்சவர்ணம் அம்மா, அந்தக் கனகம் அக்கா உங்களாட்டமே ஒரே அச்சில் வார்த்தெடுத்த அக்கா தங்கச்சி மாதிரி இருக்கிறார். உங்கள் ஐயா சொக்கலிங்கம் விதானையாரின் மேலதிக சுகபோக வாழ்விற்காக – சட்டப்படி 'கசாது' எழுதி மணம் செய்த உங்கள் அம்மாவை விட – மேலதிக சுகபோக வாழ்விற்கு ஊர் தேசமறியத் துணையிருந்த அந்தக் கோவியத் தாய் உங்கள் ஐயாவுக்கு பெற்றெடுத்த பிள்ளைதான் அந்தக் கனகம் அக்கா என்பது ஊரறிந்த உண்மை. முந்த நாள் பிறந்த எனக்கு இதெல்லாம் வழி வழியாகத் தெரிகிறதென்றால் நீங்கள் அறியாமல் இருக்க முடியாது. அதுமட்டுமல்ல. உங்கள் ஐயா உயிருடன் இருந்த காலத்தில் அந்தக் கனகம் அக்கா உங்களோடு இரண்டறக் கலந்து அக்கா தங்கச்சி முறை கொண்டாடி, உங்கள் வீட்டுக்காரியங்களில் எல்லாம் விழுந்து கட்டிச் செய்து வந்திருக்கு. அப்படி இருந்தும் அந்த அக்காவை கடைசி வரை வேலைக்காரி என்ற உள்ளார்ந்த நினைப் புடனேயே இருந்து வந்திருக்கிறியள்.

"உங்கள் ஐயா ஒருவருக்கும் எழுதாமல் விட்டுப்போன அந்த கணேஸ்வரம் காணியிலை ஒருபரப்புக் காணியாவது அக்கா எழுதித்தந்து ஆதரிப்பா என்றுதான் அது கடைசி வரை நினைச்சிருக்கு. ஆனால் நீங்கள்தான் அதின்ரை மனதை உடைச்சு சுக்குநூறாக்கிப் போட்டியள்.



"நீ ஐயாவுக்குப் பிறந்திருக்கலாம். அதுக்கும் காணிக்கும் என்னடி சொந்தம்? வம்பிலை வரத்திலை பிறக்கிறதெல்லாம் விதானை சொக்கலிங்கத்தின்ரை பேரைச்சொல்லிக் கொண்டு வந்து காணி பூமியிலை உரிமை கேட்குதுகள். ஒரு தொட்டுத் திங்கிற சுண்ணாம்பு கூடத் தரமாட்டன்' என்றெல்லாம் சொன்ன நீங்கள் தானே?... இப்படியெல்லாம் அந்த அக்காவை நீங்கள் பேசி இருக்கக் கூடாது.

"அதுதான் பஞ்சவர்ணம் அம்மா, ஐயா நான் சொல்ல வாறதை ஓரளவுக்கு புரிஞ்சிருப்பியள் என்று நினைக் கிறன்... அந்தக் கனகம் அக்கா அகாலமாக புருஷனையும் இழந்து இருக்கக் குடி நிலமும் இல்லாமல் பிள்ளை குட்டியளோடை ரொம்பக் கஷ்டப்படுகிறா. உங்களுக்கு இருக்கிற சொத்துப் பத்து எத்தனையோ தலைமுறைக்குப் போதக்கூடியது. ஆண்டனுபவிக்கக் கூடியது. இத்தனை சொத்துச் சுகம் இருந்தும் இன்னும் போதாதென்று ஆம்பிளைப் பிள்ளைகள் நாலையும் சீமைக்கும் அனுப்பி வைத்து மேலும் செல்வம் சேர்க்கிறியள். இங்கே நாங்கள் பெட்டைப் பெடிச்சிகளாகவும் நின்று சிங்களப் பேரின வாதிகளோடு எதிர்த்து பெரும் போராட்டமும் - சண்டையும் செய்கிறோம். வீட்டிற் கொரு ஆண்பிள்ளை வந்து வீரப் போராட்டத்தில் இணைந்தால் அந்த வீணர்களை விரட்டி அடிப்பது எவ்வளவு சுலபமாக இருக்கும்? தமிழனின் வீரவரலாறு வியத்தகு விதத்தில் இன்னும் வீறுகொண் டெழுந்திருக்குமே..." என்றெல்லாம் கதைத்துக்கொண்டு வந்த பாஞ்சாலி கடைசி வரிகளைச் சொன்னபோது அவள் கண்கள் சிவந்து... அந்த வீராங்கனையின் பெருமூச்சின் காங்கை எதிரேயிருந்த பஞ்சவர்ணம் தம்பதியரின் முகத்தில் பட்டுச் சுட்டு வியர்க்கவும் வியக்கவும்

வைத்தது. சிலநிமிட இடை வெளிக்குப் பிறகு பாஞ்சாலி தொடர்ந்து சொன்னாள்.

"இதோ பாருங்கோ பஞ்சவர்ணம் அம்மா – ஐயா, 'அந்தக் கணபதியின்ரை மகளும் எங்களுக்கு அறிவு சொல்கிற அளவுக்கு வந்திட்டாளோ? அற்பனுக்கு பவிசு வந்திட்டுது' என்றுகூட நீங்கள் உங்களுக்குள் நினைக்கலாம்.

"நான் சொல்வது அதிகாரத்தனத்தினாலல்ல; அன்போடு சம்பந்தப்பட்டது. மனிதப்பண்போடு சம்பந்தப் பட்டது. அற்பத் தனம் மனிதர்களுடைய செயல் பாடுகளி லைதான் தங்கியிருக்கு. அதனாலை நீங்கள் மனிதர்களாக - அந்த அக்காவுக்கு அந்தச் சொரியல் காணியில் ஒரு பரப்புக் காணியை எழுதிக்குடுத்து, அல்லது குடியிருக்கவாவது அனுமதியுங்கோ என்று கேட்டுக் கொள்கிறேன். என்ன சொல்லுறியள்? சரி இன்னும் ஒரு கிழமைக்கிடையிலை நல்லதொரு முடிவுக்கு வரப் பாருங்கோ. இல்லையென்றால் நாங்கள் வேறை முடிவு தான் எடுக்க வேண்டிவரும். சரி இப்போ நீங்கள் போகலாம்.' இத்துடன் பாஞ்சாலி எழுந்து உள்ளே சென்றாள். பஞ்சவர்ணம் தம்பதியர் சில நிமிடங்கள் வரை கல்லாய் சமைந்து அங்கேயே இருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் திடீர் திடீரென்று அடிபாடுகளும் விமானக்குண்டு வீச்சுகளும் அகோரமாக நடக்கத் துவங்கியது. பாஞ்சாலி மேலிடத்து உத்தரவுக்கு இணங்க களம் குதித்தாள்.

அந்தச் சமரிலே பாஞ்சாலி வீரமரணம் அடைந்த



செய்தி ஊரில் பரவியபோது, ஊரே திரண்டு நின்று தெரு வெல்லாம் தோரணங்கட்டி வீரமரணமடைந்த அந்த வீராங் கனையின் துக்கத்தைக் கொண்டாடியது. செய்தி அறிந்து வரவேற்கரசர் துடித்துப் பதைத்து துக்க வீட்டுக்குப் புறப்பட்டபோது மனைவி பஞ்சவர்ணம் சொன்னாள்.

"கொஞ்சம் இருங்கோ, நானும் வாறன். எங்களுக்காக உயிர் தியாகம் செய்த அந்த உத்தமியின் முகத்தை, இந்தப் பாவியாகிய் நானும் கடைசியாக ஒரு தடவை பார்த்து விட வேண்டும்" என்றாள் பஞ்சவர்ணம் தளதளத்த குரலில் கூறினாள்.



21



தந்தைக்கு உபதேசம்

பொழுதும் வானின் உச்சி முகட்டுக்கு வந்து விட்டது. பன்னிரண்டு மணி இருக்குமா? இருக்கும். கோயில் மணி ஏன் இன்னும் அடிக்க வில்லை?...! இதென்ன துவக்கு வெடிச் சத்தம்?... வலு கிட்டவாக... கோயில் வாசல் சந்திப் பக்க மாகத்தான் கேட்குது. என்னவோ ஏதோ ஆர் கண்டார் கள். யாழ்ப்பாணத்து கந்த புராண கலாச்சார காலம் போய், ஆயுத கலாச்சாரம் வந்து விட்ட



இந்த வேளையில் இதெல்லாம் சர்வ சாதாரண சங்கதிகளே.

மனித உயிர்கள் நாய் பூனை மற்றும் ஜீவராசிகளின் உயிர்ப் பெறுமதிகூட இல்லாமல் போய்விட்டது என்பதாக மகாலிங்கத்தார் நினைத்துக் கொண்டு இருக்கையில், சைக்கிளில் வந்திறங்கிய கிட்டு பரபரப்புடன் கேட்டான்.

"சங்கதி தெரியுமோ அண்ணே?"

"கோயில் வாசல் சந்திப் பக்கமாக துவக்கு வெடிச் சத்தம் நாலைந்து முறை கேட்குது. அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறன். அதுக்கிடையிலை நீ வந்திட்டாய். நீதான் ஊர்க் குருவியாச்சே. விஷயத்தைச் சொல்லன்."

"அதுதான். உங்கடை கூட்டாளி மணியத்தாற்றை மகன் முகுந்தனை சந்தி லைற்போஸ்ற்றிலை கட்டி வைச்சு பகிரங்கத் தீர்ப்பு முடிச்சாச்சு."

"....."

"என்ன மூச்சுப் பேச்சைக் காணயில்லை. அப்படியே ஒரே யடியாக செமிச்சுப் போயிட்டியள்" என்றான் கிட்டு. நீந்தப் புறப்பட்டவர் சுழிநீர் இழுப்பில் அகப்பட்டு இழுபட்டு எங்கெல்லாமோ அலைக்களிக்கப்படும் நிலைக்குத் தள்ளப் பட்டார் மகாலிங்கத்தார்... அந்த இழுப்பின் அலைக்கழிப்பினூடே அவரது நண்பன் மணியம் இழுபட்டு வந்தார்.

மணியம் மண்டையைப் போட்டு... இல்லை இல்லை மண்டையில் போட்டு... மல்லாக்காக விழுந்து கிடந்த அந்தக்காட்சி. அவர் மனக்கண் முன்னே விரிகிறது.



'நண்பா, மணியம்! பெற்ற பிள்ளையே உன்னை... இன்று நினைத்தாலும்... உன்னை எவ்வாறு உன் பிள்ளை மாய்த்தானோ அவனும் இன்று அதே கதிக்கு ஆளாகி விட்டான். நீ பெற்ற பிள்ளைதான்; சின்ன வயதில் என்னையும் "மாமா மாமா" என்று கூப்பிட்டவன்தான்... தந்தைக்கு உபதேசம் செய்தவனைக் கும்பிடும் நாம், தந்தையைக் கொன்று மற்றவர்க்கு உபதேசம் செய்யப் புறப்பட்ட இவனை, உன் பிள்ளை முகுந்தனைதான் சொல்கிறேன். அவனின் செத்த சவத்தைக்கூட பார்க்க மனம் வருமா? யாருக்கு மனம் வரும்? என்றாலும் இந்தப் பெடியன் முகுந்தனும் ஒரு பாவம் தான். இதற்குப் பின்னணியான மனிதர்களை இந்தப் பிள்ளையை இந்த நிலைக்கு ஆளாக்கிய, மணியத்தின் குடும்பத்தை சீரழித்த அந்த உதவாக்கரை மனிதர்களுக்கும் இந்த மின் கப்பத் தண்டனை வழங்கப்பட வேண்டும். வழங்குவார்களா?'

"என்னண்ணை நான் என்னவோ சொல்ல நீங்கள் உங்கள் பாட்டுக்கு வேறை எங்கையோ போய் விட்டியள் போலை கிடக்கு?" பொறுமை இழந்த கிட்டு மகாலிங்கத்தாரின் தோளைத் தொட்டு உலுக்கியவாறு கேட்டான்.

"ஓ... ஓ.... ஆ, என்ன சொன்னனி கிட்டு?... வேறை எங்கையும் இல்லை. மணியத்தையும் அந்தக் குடும்பத்தையும் பற்றித் தான் நினைச்சன்."

"இல்லை இந்தப் பேய்ப் பெடியன் இருந்தது மாதிரி இயக்கத்திலையே இருந்திருக்கலாம். ஏதாவது அடி பாட்டிலை செத்திருந்தாலாவது பெருமையாக – மறக்க முடியாதவனாக இருந்திருப்பான். இவன் இயக்கத்தை



விட்டுவந்து, இயக்கத்தின்ரை பேரைச் சொல்லி கூடாத காரியங்கள் செய்யப் போய்த்தானே உவனுக்கு உந்தக் தண்டனை கிடைச்சது?"

"பாவம்! தகப்பன் மாதிரியே அகாலமாய் முடிஞ்சு போய் விட்டான். அந்தாளாவது வாழ்ந்து அநுபவிச்ச மனிதன் ம்..." என்றான் கிட்டு.

"ஆண்டவன் தீர்ப்பொன்று இருக்காமே! அதுதான் இதெல்லாம். அந்தத் தீர்ப்பு உண்மையாக இருந்தால் இவனை இந்த நிலைக்கு ஆளாக்கிய இவன் தாய் வழி உறவுக்காராங்களான பேரன் பேர்த்தி, மாமன்மாருக்கும் இந்தத் தண்டனை வேணும். கிடைக்கட்டும்." மகாலிங்கம் தன் பேச்சினூடே இன்னும் சிலருக்கு சாபமிட்டார்.

மகாலிங்கம் இட்ட சாபத்துக்குரியவர்களுக்கும் இந்த முகுந்தனுக்கும் இடியப்பச் சிக்கல் மிகுந்த மணியத்தின் வாழ்க்கை முறையின் பின்னணி தெரியாத கிட்டன் எதுவும் புரியாமல், மரத்தில் ஏறிவிட்ட அணிலை நிலத்தில் நின்று அண்ணாந்து பார்த்தும் நிற்கும் நாயாக அவரைப் பார்த்தான்.

"கிட்டா!... உனக்கு இதொண்டும் புரியாத புதிராகத் தான் இருக்கும். அந்தக் கதையைச் சொல்லுறன் கேள்" என்றார் மகாலிங்கம்.

"மணியத்தைக் கொன்றவனே இந்த முகுந்தன்தான். ஆனால் கொல்லுவித்தவர்கள் முகுந்தனின் தாய்வழி உரித்தாளர்களான பேரன், பேத்தியும் மாமன்காரன் மயிலன் ஆகியோருந்தான். அதுதான் அந்தக் கடவுள் தீர்ப்பு அவர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்றேன். என்ன.... திடுக்கிட்டுப் போனியா?



"ஆ. மிச்சத்தையும் கேள். மணியத்துக்கும் எனக்கும் உள்ள சிநேகித்தைப் பற்றி உனக்கும் சாடைமாடையாத் தெரியும் தானே? அவரைப் பற்றிய சகல பூர்வாங்க வரலாறும் அறிந்த படியால்தான், மணியத்தின்ரை போக்கு எனக்கு அறவே பிடிப்பதில்லை. அதற்காக அவனை நான் வெறுக்கவுமில்லை. அது அவருடைய சொந்த விவகாரம். ஒரு நண்பன் என்ற முறையில் சொல்லுறவரைக்கும் சொல்லி பார்த்திட்டன். அதிலிருந்து அவனைத் திருத்த முடியவில்லை."

"அதென்னண்ணை? அப்படி ஒரு பிழையான நடத்தையான ஆளா?" என்றான் கிட்டு.

"அதுதான். இந்தக் கு. கூ.வன்னா விஷயத்திலை கொஞ்சம் ஆள் பிழையான போக்குடையவர்."

"அது என்னண்ணை கு.கூ.வன்னா என்றால்..."

"அது தான்ராப்பா இந்தக்குடி, கூத்தி என்பதை சுருக்கி சொல்லுறது. இப்ப விளங்கிச்சுதே? சரி கேள். ஒரு மனிதனுடைய பலவீனத்தைச் சொல்லும்பொது அவனுடைய பலத்தையும் சொல்லத்தான் வேணும் இல்லையே?"

"ஓமண்ணை. கட்டாயம்."

"மணியத்துக்கு ஓடிற்றராக வேலையும் கிடைத்து விட்டது. அதாவது ஓடிற்றர் மணியம் ஆயிற்றார். இந்த ஓடிற்றர் மணியத்தின்ரை சம்பாத்தியம் இருக்கே.... அட எங்கப்பா! ஒரு கொஞ்சக் காலத்துக் கிடையிலேயே வத வதெண்டு எக்கச்சக்கமாகச் சம்பாதிச்சப் போட்டார். இரண்டாவது பிள்ளையின் குருச் சந்திர யோகம் செல்வத்தை குவிச்சதெண்டு கதை.

"அகடவிகடச் சம்பாத்தியக்காரர் எல்லாம் இந்தக்



குருச்சந்திர யோகத்தை சொல்லுறத வழக்கம்தான். உங்கை உள்ள திடீர்ப் பணக்காரர் எல்லாம் நேர்மை யாகவே சம்பாதிச்சவை? எல்லாரும் குறுக்கு வழி கொள்ளைக்காரர்தான். சரி அதை விடு. சொத்து பிள்ளை குட்டி பேரப் பிள்ளை சந்தானத்துக்கும் போதும் என்ற நினைப்பாலோ என்னவோ வேலையையும் இராசினாச் செய்துவிட்டு ஒரே அடியாக ஊரோடையே வந்துவிட்டார். ஊரோடு வந்தும் மனிதன் சும்மா இருந்தானா? பெரிய பெரிய கடைகள் கொம்பனிகள் என்று கணக்கு வழக்கும் பார்த்துக் கொடுத்து... ஓயாத உழைப்புத்தான்.

"பாவம்! இந்த வேளையில்தான் அவருடைய மனைவி மனோகரி நாலாவது பிரசவத்தின் போது தவறிப் போய் விட்டாள். ரொம்பச் சின்ன வயசுதான். ஒரு முப்பது வயசு தானிருக்கும். பேருக்கேற்ற மாதிரி மனோரம்மியமான மனசுக்கும் கண்ணுக்கும் ரொம்பக் குளிர்ச்சியான பெண் தான்.

"இந்த மாதிரி மனசுக்கும் கண்ணுக்கும் குளிர்ச்சியைத் தருகின்ற பெண்ணாப் பிறந்தவளை வைச்சுக்கொண்டு, மணியம் ஊர் மேய்ச்சலிலை என்ன சுகத்தைத்தான் காண்கிறானோ என்று நினைக்கத்தான் ஆருக்கும் மனம் வரும். இந்தக் கு.கூ வன்னா குப்பாடியோடை இருந்து சீரழியிறதை விட நேரகாலத்தோடை போய்ச் சேர்ந் திட்டாள் அந்தப் புண்ணியவதி.

"மணியம் மனைவி உயிருடன் இருந்த வேளையிலேயே அதுதான் கு.கூ.வன்னா விஷயத்திலை மோசமான ஆளாயிருந்திருக்கிறாரென்றால்.... மனைவி இல்லாத போது எப்படியிருந்திருப்பார் என்று யோசித்துப்பார் கிட்டு...



"அப்படி ஒரு வார்ப்பாக அமைந்த பிறப்பு அவன். ஆளுடைய தோற்றமும் அப்படிப்பட்டதுதானே? ஆளின்ரை கெம்பீர ஆகிருதி தோற்றத்தின் உடல்வாகு இருக்கிறதே! ஆள் அப்படி ஒரு இராச களை பொருந்திய தோற்றம்தான். நான் மணியத்தின் நண்பன் என்ற முறையில் அவருடைய பலம் பலவீனங்களை அறிந்தவன் என்ற முறையில் சொல்கிறேன் கேட்டியோ கிட்டு."

"ஓமண்ணை. நல்லாயிருக்கு மணியத்தாற்றை கதை. மிச்சத்தையும் சொல்லுங்கோ" என்றான் கிட்டு.

"மணியம் இந்த ஊர் மேய்ச்சல் – அதுதான் பெண் பிடிக்கிற விஷயத்திலை – மேலும் அவர் கெட்டழிஞ்சு போகக் கூடாதென்பதற்காக பிள்ளைகளைப் பராமரிப் பதற்காக என்ற போர்வையில் அந்த ஏழைப்பெண் கனகம் மாவை வேலைக்காரி என்பது போல வீட்டோடை சேர்த்து விட்டேன். ஏனென்றால் மணியத்தின் சொத்தில் மட்டும் கண்ணும் கருத்துமாயிருந்த மனோகரியின் தாய் தகப்பனும், தமயன் தம்பிமாரும், மணியம் மறுமணம் செய்து கொள்வதை விரும்பவில்லை; விரும்பவும் மாட்டார்கள் என்பது தெரிந்ததுதான் கனகம்மாவை வேலைக்காரி என்ற போர்வையில் சேர்த்துவிட்டேன்.

"மணியம் கனகம்மாவை படுக்கையிலும் பயன் படுத்துவார் என்பதும் நன்கு தெரிந்துதான் அந்தக் காரி யத்தைச் செய்தேன். ஏனென்றால் மணியம் சாக்கடைக் கூட்டங்களுக்குள் போய் பெண் பிடித்து சீரழிந்து போவதை நான் விரும்பவில்லை.

"இப்படியாக்கப்பட்ட மணியத்திற்குள் ஒரு உண்மை யான நேர்மையான ஒரு மனிதமும் இருந்திருக்கின்றது



என்பதை கனகம் கர்ப்பவதியானபோது அறிந்தேன். மணியம் அதை என்னிடம் சொன்னது மல்லாமல், 'என்ன செய்யலாம்' என்றும் ஆலோசனை கேட்டார்.

"செய்வதற்கு என்ன இருக்கு மணிய்ம்... இரண்டே இரண்டு வழிதான் இருக்கு... ஒன்று கருவை அழிப்பது; இல்லையேல் கனகத்தைக் கைப்பிடிபது அதாவது அவள் வயிற்றில் சுமந்து நிற்கும் அந்தக் குழந்தைக்கு நீ ஊரறிய அப்பனாக வேண்டும்' என்றேன்.

"'நீ சொன்ன இரண்டாவது வழிதான் சரி. கனகத்தை ஏற்றுக் கொள்கிறேன் மகான்' என்றான் மணியம். நான் மணியத்தை சந்தேகத்துடன் உற்று நோக்கினேன். கிஞ்சித்தும் ஒரு சிறு மாகாணி அளவு கூட வஞ்சகத் தன்மை இல்லாது, உண்மை நேர்மை வாய்மை ஒன்று சேர்ந்த உறுதிப் பாட்டை அவன் முகம் பிரதிபலித்தது.

"நான் சிறிதும் அதனை எதிர்பார்க்கவில்லை. ஊர் மேய்ச்சல்க்காரனான மணியம் இப்படி ஒரு உயர்ந்த மனிதத் தன்மையுடன் கூடிய ஓர் முடிவுக்கு வருவான் என்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. அதனால் மணியத்தின் கரத்தைப் பற்றி என் மனப்பூர்வமான வாழ்த்தை அவனுக்குத் தெரிவித்தேன்.

"'ஆனாலும் மணியம் நீ ஒன்றை யோசித்துப் பார்க்க வேண்டும். நீ கனகத்தை ஏற்றுக்கொள்வதை உன் முந்தின தாரத்து உறவு மனிதர்கள் விரும்புவார்களா?' என்று கேட்டேன். 'என் சொத்தில் மட்டும்தான் அவர்கள் கவனமெல்லாம்! என் சுகத்தில் அல்ல. நான் எப்போது சாவேன் இந்தச் சொத்தெல்லாத்தையும் அமசடக்கிப் போடலாம் என்று காத்திருப்பவர்கள்தான் அவர்கள்.



அதனால் நான் கனகத்தை ஏற்பதை, சொத்து சிதறிப் போய் விடும் என்ற எண்ணத்தில் விரும்ப மாட்டார்கள் தான். கனகத்தையும் அவள் வயிற்றுக் குழந்தையையும் நான் அந்தரிக்க விட மாட்டேன். இது சத்தியம் மகான்' என்றார் மணியம்.

"'உண்மையிலேயே நீ ஒரு சாதாரண மனிதனில்லை ; மணியம் மனிதருள் மாணிக்கம்' என்று பாராட்டினேன். அப்போது இந்த முகுந்தனுக்கு என்ன வயதிருக்கும்? பதினாலு பதினைந்து வயதிருக்குமா? அப்படித்தானி ருக்கும். இந்த வயதிருக்கிறதே, இது ஒரு அபாயகரமான வயது. இந்த முகுந்தனின் தாய்வழி உறவு மனிதர்களின் சகவாசமும், தந்தை மணியத்தின் மேல் அருவருப்பை ஏற்படுத்தக்கூடிய துர்ப்புத்திகளும் முகுந்தனை நன்றாகப் பற்றிக்கொண்டு விட்டன. அதனால் அவன் மதிப்பு கணிப்பற்ற முறையில் தகப்பனை எடுத்தெறிந்து கதைக்கவும் நடக்கவும் தலைப்பட்டான். அந்த வேளை யில்தான் நாட்டு நிலமையும் மோசமடைந்திருந்தது.

"முகுந்தனின் போக்கு வாக்குகளில் ஏற்பட்டிருந்த மாறுதல்களை அவதானித்து வந்த மணியம் ஒரு நாள் மகனைக் கூப்பிட்டு வைத்து அன்பாகவும் ஆதரவாகவும் சில புத்திமதிகளைச் சொல்லியிருக்கிறார்.

"'இஞ்சை வா முகுந்தன். நீ சின்னப்பிள்ளை. உலக அறிவு போதாது. உன் கொம்மாவின் ஆக்களைப் பற்றி உனக்கு நல்லாத் தெரியாது. தோலிருக்கச் சுளை எடுக்க நினைக்கிற ஆக்கள். உங்களிலைகூட உண்மையான கரிசனை கிடையாது. உங்களை ஒரு கருவியாக வைத்து இந்தச் சொத்தை எல்லாம் சூறையாடவே நினைக்



கிறார்கள். அதனாலைதான் சொல்லுறன். வீணாக அவர்களின் கூடாத புத்திமதிகளைக் கேட்டு கெட்டழிந்து போகாதை. உங்களுக்கு என்ன குறை வச்சனான். எல்லாம் செய்யிறன். பிறகென்ன? இனியாவது அங்கை இங்கை போறதை விட்டிட்டு வீட்டிலை ஒழுங்காக இருந்து படி' என்று சொல்லியிருக்கிறார்.

'"என்னையும் வேலைக்காரியோடை இருக்கச் சொல்லுறியளா?' முகுந்தன் கன்னத்தில் அறைந்தாற்போல் தகப்பனைப் பார்த்துக் கேட்டிருக்கிறான். முகுந்தனின் வாய்த்துடுக்கான பேச்சின் அர்த்தம் புரிந்தாற்போன்ற ஆவேசத்தில் எழுந்த மணியம் அவனை ஆத்திரம் தீர அடித்ததில் ஒன்றும் வியப்பில்லைத்தான். அவன் ஒரு போதுமே இவ்வாறு நேருக்கு நேர் நின்று தந்தையை விட்டெறிந்து ஏறுக்கு மாறாக கதைத்ததோ பேசியதோ கிடையாது. அப்படிப்பட்ட பிள்ளை இப்படித் தலைகீழாக மாறி விட்டதை நினைத்தபோது அந்தக் கொடியவர்களை சப்பித்துப்ப வேண்டுமென்ற ஆத்திரமே மேலோங்கியது. அவை அவன் தாய் வழி உறவினர்கள் அவரைப் பற்றி தூஷித்து கதைத்துத் திரியும் கதையின் தாக்கமே என்பதை மணியம் அறியாமலில்லை.

"அவன்ரை காம வெறிக்காக வேலைக்காரியை பெண்டிலாக வைச்சுக்கொண்டு, பிள்ளைகளை வளர்க்கிறதுக்காக அவளை வச்சிருக்கிறதாக பம்மாத்துக் கதை எல்லாம் கதைச்சு ஊரை ஏமாத்திற மாதிரி எங்களுக்கும் காது குத்தலாம் எண்டலலோ பார்க்கிறான்?' என்ற கதை பேச்செல்லாம் மணியத்தின் காதுகளுக்கு எட்டாமலா போகும்? அந்தக் கொடியவர்கள் முகுந்தனின்



பிஞ்சு நெஞ்சில் விதைத்து விட்ட நஞ்சு விதை விபரீதமாகவே போய்விட்டது.

"முகுந்தன் இயக்கத்திற்குப் போய்விட்டான் என்ற செய்தி மணியத்தை திடுக்கிடவைத்தது. தான் அவசரப் பட்டு ஆத்திரத்தில் அடித்ததால்தான் முகுந்தன் உந்த முடிவுக்கு வந்தானோ என்று நினைத்துக்கூட தன்னைத் தானே நொந்து கொண்டார். பிள்ளைகளை நல் வழிப்படுத்தக் கண்டித்தால், தண்டித்தால், அல்லது அவர்களின் கண் மண் தெரியா காதல் லீலைகளுக்கு குறுக்காக நின்றால், என்று அவர்களின் விருப்பத்துக்கு அல்லது அறியாப் பருவத்து விபரீத எண்ணங்களுக்கு குறுக்காக நின்றால், இயக்கத்துக்குப் போய் விடுவதான அன்றைய சில பிள்ளைகளின் போக்கையும் மணியம் நினைத்துப் பார்த்தார்.

"முகுந்தன் இயக்கத்துக்குப் போய்விட்டதை அறிந்து முதலில் வெருண்டடித்தாலும், பின்னர் தன்னைத்தானே இவ்வாறு தேற்றிக்கொண்டார். 'சரி நாமும் நம் மண்ணுக்காக ஒரு சிறு பங்களிப்பேனும் செய்ததாக இருக்கட்டும். முகுந்தன் அந்த வகையிலாவது நம் மண்ணைக் காத்த பெருமைக்குரியவனாகட்டும்' என்பதே அதுவாகும்.

"இவ்வேளையில்தான் அன்றைய யாழ்ப்பாணத்தில் விடிந்தும் விடியாத கருக்கல் வேளையில், வீடுகளின் பின் வளவு வேலிக் கதியால்களை வெட்டிப் பிரித்து வழி திறந்து கொண்டு. வீட்டினுள் வந்து நித்திரைப் பாயைச் சுற்றி நிற்கும் இந்திய இராணுவ பரிச்சயமும் தொடர்பும் மணியத்தின் ஆயுளைக் குடிப்பதற்கும் ஏதுவாயிற்று.



ஒன்றுமே அறியாத அந்த மனிதனை, இல்லாத பொல்லாத தெல்லாம் சேர்த்து ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தி பொல்லாத மனிதனாக கதையைத் திசை திருப்பி விட்டார்கள். பாவம்! எதுவும் அறியாத அந்த மனிதனுக்கு இதையிட்டு ஒரு மொட்டைக் கடிதம்கூட வந்தது. கடிதத்திலுள்ள சாராம்சத்தை பார்த்த மணியம், அப்போதே செத்துப் போய்விட்டதான நிலையை அடைந்தார். அதனால் அவர் மற்றைய வெளிநட மாட்டங்களைச் கூட வெகுவாகக் குறைத்துக் கொண்டார். அப்படி இருந்தும் அது நடந்தது.

"இரண்டு வருஷம் எப்படி ஓடிப்போயிற்று! மணியம் கண்ணுக்குள் நிற்கின்றார். நேற்று நடந்தது மாதிரி இருக்கு. அன்று சாயங்காலமும் மணியத்தைக் கண்டு விட்டுத்தான் வந்திருந்தேன். அன்றிரவு ஏழு மணி இருக்கும். ஒரு வான் மணியத்தின் கேற்றடியில் நின்று 'மணியண்ணை, மணியண்ண' என்று அவசரமாகக் கூப்பிட்டிருக்கிறான்.

"'ஆர் தம்பி, என்ன வேணும்?' என்றிருக்கிறார் மணியம்.

'ஒரு அவசர அலுவல். ஒருக்கால் வந்திட்டுப் போங்கோ!' மணியம் கேற்றைத் திறந்த போது, றோட்டோர மின் கம்பி வெளிச்சத்தில் சிலர் நிற்கக் கண்டார். அதில் ஒருவன்... அவன்... முகுந்தன். 'முகுந்தா' என்று அழைத்தபடி அவனை ஆசையோடு அணுகியபோது, துவக்கு வெடிச் சத்தம் மிக அருகில் கேட்டது. றோட்டோரம் நின்ற மஹோக்கனி மரங்களில் இருந்த காகங்கள் அலறி அடித்துக் கொண்டு அங்குமிங்குமாகப் பறந்தன. மணியம் சத்தமில்லாமல் மல்லாந்து விழுந்து கிடந்தார்."



மகாலிங்கத்தார் சொன்ன அவரது நண்பர் மணியத்தாரின் கதையைக் கேட்டிருந்த கிட்டு கண்களைத் துடைத்துக் கொண்டு கேட்டான். "இப்படியுமா பிள்ளைகள் இருக்கிறார்களா?"

"இருக்கிறார்களே!

"கந்தபுராண கலாச்சாரம் என்ன, எந்தப் புராண கலாச்சாரம் வந்தாலும், யாழ்ப்பாண மனிதர்கள் இருக்கும்வரை இந்தப் புராணங்களும் நடந்துகொண்டு தானிருக்கும். தந்தைக்கு உபதேசித்தவன் அல்லவா கந்தன்?" என்று மகாலிங்கத்தார் முடித்தார்.



22



அவருக்கும் தெரியும்

"மச்சான் எல்லாருக்கும் ஒரு சந்தோஷமான செய்தி. பொச்சர் சூரியருக்கு ஆம்பிளைப்பிள்ளை ஒன்று பிறந்திருக்காம். அதுதான் தலைகால் தெரியாத புளுகத்திலை கற் கண்டு சொக்ளேற் எல்லாம் வாங்கி இண்டைக்கு எல்லாருக்கும் சப்பிளை பண்ணியிருக்கிறார்."



"என்னது பொச்சருக்குப் பிள்ளை பிறந்திருக்கா? சோக்கல்லோ, நல்ல சொக்கட்டான்



விளையாட்டுக் கதையாய்க் கிடக்கு."

"இதிலை என்னடா ஜோக் இருக்கு?..."

"இல்லை... மலடன், நபுஞ்சகன், பொச்சன் என்றெல்லாம் பெயரெடுத்த பிறகு – இவ்வளவு காலத்திற்கு பிறகு- பிள்ளை பிறந்திருக்கென்றால்...'

"நாங்களெல்லாம் பேரப்பிள்ளைகளையும் கண்டிட்டம். இவன் பாவிக்கு இப்ப தானே பெடி பிறந்திருக்கு?'

"பிஞ்சிலை பழுத்ததாலை பேரப்பிள்ளைகளை நேரகாலத் தோடை கண்டிட்டியள் நீங்கள். அந்தாள் சூரியர் லேற் மரீஜ். அதனாலை லேற்றாத்தான் குழந்தையும் பிறந்திருக்கு. நாற்பது ஐம்பது வயதில் குழந்தை பிறக்கக் கூடாதா என்ன?"

"அப்ப ஒரு முறையான பார்டிக்கு இடமிருக்கென்று சொல்லு."

"உனக்கு எப்பவும் திங்கிறது குடிக்கிறதிலைதான் கெடு. போ காணும் அங்காலை."

எல்லோரும் சிரித்தார்கள்.

கச்சேரி ஐயா சிவசூரியன் அலுவலகச் சகாக்கள் கற்கண்டு – சொக்லேற்றை சுவைத்தபடி இப்படியெல்லாம் தங்களுக்குள்ளாகப் பேசிக் கொண்டார்கள்.

உண்மைதான்; 'மலடன், நபுஞ்சன் பொச்சன்' என்ற பழிப்புரைச் சொற்களால் சூரியரைப் போகவிட்டுப் புறம் கூறிக் கதைக்கும் பேர் வழிகள் சொல்வதிலும் உண்மை இருக்கத்தான் செய்தது.

'எல்லாம் அந்தப் பெண்ணாப் பிறந்தவளின் பக்தி விசுவாசத்தாலைதான் இத்தனை வருஷத்திற்குப் பிறகு இப்படி ஒரு அதிசய அற்புதம் நடந்திருக்கு' – இப்படியும்



கதைத்துக் கொண்டார்கள் ஊரார்கள்.

கடந்த பத்தாண்டுகளாக சொர்ணம் சுற்றிவராத கோயில் குளங்கள்தான் உண்டா? தென்னிந்திய திருத்தல யாத்திரைகளும் செய்து திரும்பியவளாயிற்றே! செய்து விட்ட நேத்திக் கடன்கள்தான் கொஞ்ச நஞ்சமா? ஒரு கோயிலுக்கு தங்கப் பவுணால் தொட்டிலும் பிள்ளையும் செய்து கொடுத்தாள். ஒரு கோயில் தேர்த் திருவிழாவின் போது சூரியர் பறவைக்காவடி எடுத்தும், சொர்ணம் தீச்சட்டி சுமந்து இறங்கியதுங்கூட ஊராரின் நெஞ்சில் இன்றும் பசுமையாக உள்ளது.

பாவம் இவ்வளவும் எதற்கு? ஒரு பிள்ளைப் பூச்சிக்காக. என்ன இருந்தென்ன... என்ன வந்தென்ன? எந்தப் பெரிய சொத்துப் பத்து... கார், பங்களா, பெருத்த உத்தியோக சம்பாத்தியம். இவற்றிற்கும் மேலாக ஐயா மனம் வைத்து இனிமேல் செய்ய இயலாது என்ற காரியங்களை செய்து கொடுப்பதால் அதீதமாய் கிடைக்கும் அடிஷனல் வருவாய்.

சேய்! என்ன இருந்து என்ன, வந்தென்ன? அந்தப் பெரிய அரண்மனை போன்ற வீட்டில் ஒரு சின்னஞ்சிறுசின் சத்தம் இன்றுவரை இல்லையே. அந்தப் பிள்ளைப் பாக்கியத் துக்காக ஏங்கி நின்று இத்தனையும் அந்த அம்மா செய்து முடிக்கிறார் என்றால்...

ஐயா?... ஐயாவுக்கு இந்த நேர்திகீர்த்தியிலை எல்லாம் அவ்வளவாக நம்பிக்கையில்லை. அந்த அம்மாவின்ரை அரிகண்ட ஆய்க்கினைக்காகத்தான் அங்கினை அரை குறை மனத்தோடை இழுபறிப்படுகிறவர் ஐயா. அம்மாவின்ரை பயப்பாட்டிலைதான் இதுக்கெல்லாம் இணங்கிறவர் போலத் தோன்றும். எல்லாம் அப்படியும்



தான் இப்படியும்தான். இதெல்லாம் பெரியிடத்து விஷயம், எங்களுக்கு ஏன் வீண் வம்பு?

"எல்லாம் ஒரே புதிராய்க் கிடக்கு..."

ஒருபுதிருமில்லை. நொடியுமில்லை. எல்லாம் துலாம்பரம் தான்.

ஆண்டுகளாகியும் பிள்ளையில்லை. எனவே, ஒரு பிள்ளைப்பேற்று மருத்துவ நிபுணரை அணுகி ஆலோசித்து ஆராயந்தபோது, ஐயாவிலைதான் ஏதோகுறை என்பதை அறியவந்தபோது, பிள்ளைப் பேற்றுக்காக கோயில் குளங்களையே பெரிதும் நாடத்தொடங்கினாள் அம்மா.

சொர்ணத்தின் வேண்டுதல்களும் பிரயத்தனங்களும் வீண் போகவில்லை. இதோ அவர்கள் ஏக்கங்கள் எல்லாம் தீர்ந்தது போல், அந்தப் பென்னம் பெரிய அரண்மனை போன்ற வீட்டில் ஒரு சின்னஞ் சிறிசின் சத்தம் அவர்களை சிலிர்க்க வைத்தது.

ஆனாலும் ஒரு சங்கதி. அதையும் சொல்லத்தான் வேண்டும். ரொம்பக் காலத்துக்குப் பிறகு பிறந்த அந்தச் சின்னஞ் சிறிசின்ரை ஜாதகத்தை கணித்து குறித்த சாத்திரி சொன்ன பலாபலன்களைக் கேட்டபோது சூரியர் திடுக்குற்றுப் போனார்.

சோதிடர் சொன்னதாவது :-

"ம்... குழந்தை பிறந்திருக்கிற நேர காலத்தையும் கிரக சஞ்சார நிலைகளையும் பார்க்கிறபோது அனுட்டத்துக் குரிய ஜாதகனாக படுகிறது. மாரகன் திசையில் ஜனனம்; அதாவது பிறந்திருக்கிறது. தந்தையாக்கப்பட்டவருக்கு அவ்வளவு நன்மைக்குரிய காலமாகச் சொல்லமுடியாது. எதற்கும் தந்தையாக்கப்பட்டவர் ஒரு வருஷ காலத்திற்கு



கொஞ்சம் அவதானமான இருக்கிறது நல்லது. குறிப்பாக உயரமான இடங்களிலை இருந்து அவலப்படுகிறதுக்கான ஏதுக்களுக்கு இடமிருப்பதாக பலன் சொல்லுது. மாடிக் கட்டிடங்கள், விமானப் பயணம், மரத்தடி இவற்றிலிருந்து தான் அந்த இடர்ப்பாடுகள் ஏற்பட இடமுண்டு. எதற்கும் தகப்பனார் ஒராண்டுவரை கூடுமானவரை வானோக்கிய உயரமான இடங்களிலை இருந்து தொழில்படுவதையும், மேற்சொன்ன இடங்களில் ஏறி இறங்கிப் போக்குவரத்துச் செய்வதையும் தவிர்த்துக் கொள்வது நல்லது."

ஒருவனின் மரணம் நிச்சயம் என்று தெரிந்த போதும் சோதிடனும் வைத்தியனும் அதனை அப்படியே நேருக்கு நேராகச் சொல்ல மாட்டார்கள். சொல்லவும் கூடாதாம். இது அந்தத் தொழில் சார்ந்தவர்களுக்குரிய தர்ம நெறியாம்.

சோதிடர் கூறியதையிட்டு முதலில் துக்கித்துக் கொண்டாலும், வெகு விரைவில் தன்னை சுதாரித்துக் கொண்டார்.

"சை, கண்டறியாத சோதிடங்களும் சுக்குமாயங்களும். இதுகளை நம்பிக்கொண்டு இருந்தால் போர்த்துக் கொண்டு வீட்டுக்குள்ளை குடங்கிக் கிடக்க வேண்டியது தான். கச்சேரிக் கந்தோர் ஐந்தாவது மாடிக் கட்டிடத்தில் இருக்கிறது. அதற்கு ஏறி இறங்கத்தான் வேண்டும். நிர்வாக அதிகாரி என்ற முறையில் அவசர தேவைகளுக்கு வெளி இடங்களுக்கு விமானப் பயணம் செய்துதான் தீரவேண்டும். இவற்றில் ஏறி இறங்காமல் என்ன செய்யமுடியும்?

அப்படியென்றால் கை நிறைந்த சம்பளத்துடன்



காண்போர் தலைவணங்கும் அந்தஸ்துடன் கூடிய இந்தப் பெரிய வேலையை றிசைன் பண்ணவேண்டியது தானா? பண்ணிப்போட்டு....

வீட்டுக்குள் குடங்கிக் கொண்டு கிடந்தால் மட்டும் சாவு வராதா என்ன? ஒருவன் சாகவேண்டிய நியதி இருந்தால் எப்படியோ ஒரு சாட்டு வேண்டும். சாட்டில்லாமல் சாவோ?

சை, தரித்திரம். ஒரேயடியாக இல்லை என்றே இருந்திருக்கலாம். இது பிறந்து பிதாவை நாளாந்தம் செத்துச் செத்து பிழைக்க வைத்துக் கொண்டிருக்கிறதே!

சாவதற்கு யாருக்குத்தான் பயமில்லை? அதற்காக வந்த சாவு விட்டுப்போவதுமில்லைத்தான். ஆனால் மரண தண்டனை பெறப்பட்டவன் நிலையில் அதையே நினைத்து நினைத்து நாளாந்தம் செத்துப் பிழைக்கும் வாழ்க்கை இருக்கிறதே.... சை, அது என்ன வாழ்க்கை? அதுதான் நரக வாழ்க்கையா? சாவு என்பதை நினைத்து நினைத்து ஏங்கிப் பயந்து சாகாமல் கண்மூடி முழிப்பதற்குள் அந்தச் சாவு வந்துவிட வேண்டும். அது தான் உத்தமமான சாவு.

குழந்தையின் பலாபலன்களால் தந்தைக்கு நிகழக் கூடிய அபசகுன துக்குறிகளை சோதிடர் சொன்ன கணத்திலிருந்து இப்படியெல்லாம் தனக்குள்ளாகக் குழம்பித் தவித்துப் போனார் சூரியர். ஆனாலும் தனது குழப்பத்தை யாரிடமும் அவர் வாய்விட்டுச் சொல்ல வில்லை. கட்டிய மனைவி சொர்ணத்திடம் கூடத்தான்.

தனது உள்ளத்து தாறுமாறான குழப்பங்களை யெல்லாம் கொன்றொழித்து மறந்துவிட நினைத்தவராய் மாற்றுவழியொன்றை அதிதீவிரமாய் கைக்கொண்டார் சூரியர்.



ஆம்; மதுபான மயக்கத்தால் தனது உள்ளக் குமுறல்களையெல்லாம் குழிதோண்டிப் புதைத்து விடலாம் என்று நினைத்து அதில் மூழ்கினார் சூரியர். மிதமான குடிப் பழக்கமுடைய அவரின் இந்தப்போக்கையிட்டு மனைவி சொர்ணம் இப்படி நினைத்தார்.

'இத்தனை காலத்துக்குப் பிறகு பிறந்த குழந்தையின் சந்தோஷத்திலை மனிசன் கொஞ்சம் ஓவர்தான். எல்லாம் வீட்டோடைதானே?'

முன்பும் வீட்டில்தான் அவளுடைய அனுமதியுடன் இரண்டாம் பேருக்கும் தெரியாமல் கள்ளக்குடித்து வந்தவர். வழமையாக கந்தோரில் இருந்து வீடு திரும்பியதும், வீட்டு வளவின் மரத்தில் இருந்து சீவல்காரச் சிங்காரத்தால் இறக்கி வைக்கப்பட்டிருக்கும் இரண்டு போத்தல் கள்ளுடன் தன் உடல் அசதியைப் போக்கிக் கொள்ளும் சுபாவமுடையவர் சூரியர். அது அவர் உடல் ஆரோக்கியத்திற்கும் உகந்ததாகவே இருந்தது.

ஆனால் இப்பொழுது அந்த வழமையான கள்ளுடன் சீமைக் குடிவகைகளும் சேர்த்துக் குடிக்கத் தொடங்கி யிருந்தார். இப்படியெல்லாம் தன்னை மறந்த நிலையில் குடித்துங்கூட சில வேளைகளில் அந்த நினைவுகள் திடீர் திடீர் என நெஞ்சை உதைத்துத் திமிறிக்கொண்டு வெளி வரவே செய்தன.

அதனால் சூரியர் கட்டிலில் படுத்து உறங்குவதைக் கூடத் தவிர்த்துக் கொண்டார். கட்டிலும் உயரமானது தானே? குடி போதையிலே இம்மை மறுமை அற்று படுத்துக் கிடக்கும் வேளைகளில் உருண்டு பிரண்டு விழுந்து விட்டால்...



ஒருநாள் மிதமிஞ்சிய போதையில் இருந்த வேளையில் ஒரு கணத்தில் ஒரு கோரமான நினைவுகூட அவர் உள்ளத்தில் எழுந்தது. இத்தனை குழப்பங்களுக்கும் மனச்சஞ்சலங்களுக்கும் காரணமாக 'குழந்தையைக் கொன்று விட்டால்...' என்றும் நினைத்தார். மறுகணமே இந்தக் கொலைகார நினைப்புக்காக தன்னையே நொந்து கொண்டார் சூரியர்.

'சை, எத்தனை பெரிய கொடிய் பாவ நினைப்பு? குழந்தையின் கிரகபலன்கள் என்னைக் கொன்றாலும் பரவாயில்லை. எப்படியோ ஒரு நாள் செத்துத்தான் போகப் போறன். அதற்குள் இப்படியும் ஒரு பாவ மூட்டையை கட்டிச் சுமக்க வேண்டுமா? மேலும் அதன் விளைவு சொர்ணத்தை சாகடித்துவிடும். பத்து மாதமும் சுமந்து பெற்றுவிட்ட பூரிப்பில் திளைத்துக் கிடப்பவளை என் கொலைகார நினைப்பு சாகடித்தே விடும்.'

சூரியரின் நீண்ட மனப்போராட்ட குழப்பங்களுக்கு மத்தியில் எப்படியோ ஒருவருடம் ஓடி மறைந்துவிட்டது.

குழந்தை "ப்பா, ம்மா" சொல்லத் தொடங்கிவிட்டது.

இன்று குழந்தையின் முதலாவது பிறந்ததினம். பிறந்த தினத்தைக் குதூகலமாகக் கொண்டாட கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகள் அமர்க்களமாய் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

சோதிடர் சொன்ன ஒருவருஷக் காலக்கெடு விபரீதம் ஒன்றும் நிகழாமல் கழிந்து போனதையிட்டு பெரிதும் மகிழ்ந்து போனார் சூரியர்.

அதனால் புதிய தெம்புடன் குழந்தை பிறந்த தினத்தை வெகு குதூகலத்துடன் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தார்.



சொர்ணத்திடமிருந்து குழந்தை "ப்பா..." சொல்லி சூரியரை நோக்கித் தாவியபோது அதனை ஏந்தி எடுத்து அணில் கோதிய கொய்யாப்பழ சிவப்பு நிறத்திலிருந்த அதன் வாயை தன் கன்னத்தில் ஒத்தி எடுத்து முத்தமிட்ட போது சொர்ணத்தின் உடம்பின் பால் வாசனை வீசியது.

குழந்தை அசல் அச்சுப் பிசகாமல் உரித்துப் படைத்து தாய் சொர்ணத்தின் சாங்கத்தையே கொண்டிருந்தது. சொர்ண விக்கிரகம்தான்.

"பேய்ச் சாத்திரி!" திடீரென்று சூரியர் இப்படிச் சொன்ன போது அந்த வார்த்தையில் சூடு பறந்தது.

"என்ன மத்தியானத்தான் இன்னும் முறியவில்லையோ? இருந்தாப் போலை இருந்து ஏதோ எல்லாம் அலட்டிறியள்?" என்றாள் சொர்ணம்.

"இல்லை சொர்ணம், அந்தப் பேய்ச் சாத்திரி பிள்ளையின்ரை ஜாதக பலனை சொல்லிக் கேட்டத்திலை இருந்து இந்த ஒரு வருஷமாக எனக்குள்ளே வலுவாகக் குழம்பிப் போனன்."

"ஏன்? என்ன சொன்னவர் சாத்திரியார்?" எனக் கேட்டாள் சொர்ணம்.

"ம்... சாத்திரி என்ன சொன்னவர் தெரியுமே?... ஒரு வருஷத்துக்கு இடையிலை அப்பனைத் திண்டு தீர்க்கிறதுக்குரிய கிரகபலன்களொடை அவதரிச்சு இருக்கு. உயரமான கட்டிடம், விமானப் பயணம், மரத்தடி இவற்றில் இருந்து தவறிவிழுந்து அவலப்படுகிறதுக்கு ஏது உண்டென்றும், எதுக்கும் ஒரு வருஷசதுக்கு அவதானமாக இருக்க வேண்டுமென்றும் சொன்னான். இதைக் கேட்டு திடக்கிட்டுப்போன நான், கச்சேரி வேலையைக்கூட ராஜினாமாச் செய்யவும் நினைச்சன்..."



"அதுதான் இந்த ஒருவருஷமும் கண்மண் தெரியாமல் குடிச்சுத் தீர்தியளாக்கும்?" என்றாள் சொர்ணம்.

"அந்தப் பேய்ச் சாத்திரியின் கதையைக்கேட்டு நானும் வெறும் பேயனாகப் போனன். நல்ல வேளையாக நீ கை எடுத்துக் கும்பிடும் அந்த ஆண்டவன் செயலாலை ஒரு விபரீதமும் நடக்கவும் இல்லை. உன்ரை தாலிக்கும் நீண்ட ஆயுள்தான் போ. இனி முந்தினது மாதிரி சிங்காரத்தின்ரை கள்ளோடை மட்டும் நிப்பாட்டிப் போடுறன் சரிதானே?"

சொர்ணம் தனக்குள் ஆழ்ந்து போனாள். சூரியர் தொடர்ந்து சொன்னார். "சும்மா சொல்லப்படாது. உவன் பெடியன் சிங்காரம் காய் ஆட்டிப் பிரிச்சுப் பாளை சீவிற திலை ஒரு கை தேர்ந்த விண்ணன்தான். பனையின் காய்க்குலையைப் பறிக்கிறபோது பார்த்திருப்பாய்தானே? குலையைத் தோளில் தாங்கி நின்று உடலில் வேர்வை பிழியப் பிழிய ஒவ்வொரு காயையும் ஆட்டி அலுக் குலைத்து...."

சொர்ணத்தின் மார்பைப் பார்த்து சூரியர் இப்படிக் கூறவெ எதையோ புரிந்துகொண்ட வெட்கத்துடன் தலை குனிந்து கொண்டாள் சொர்ணம்.

"எங்கே இவன் சிங்காரத்தை இண்டைக்கு இவ்வளவு நேரத்துக்கும் காணவில்லை. இருளவும் போகுது.. ம்.. மத்தியானத்து எரிபொருள் வயிற்றைக் காந்திது. அவன் சீவி இறக்கிறதிலை புத்தம் புதிதாக இரண்டை அடிச்சால் தான் இந்த வயிற்று எரிச்சல் கூலாக்கும்" என்று சூரியர் சொல்லி வாய் மூடுவதற்குள் கேற்திறக்கும் சத்தம் கேட்டது.

அது சீவல்காரச் சிங்காரம்தான்.



ஆளும் சிங்காரவேலன்தான். கையில் வேலொன்று மட்டும் இருந்தால் அந்த வேலாயுதனே நேரில் பிரசன்ன மாகி வருவது போலவே தோன்றும்.

ஆனால் அவன் சீவல் தொழிலுக்குரிய உப கரணங்களுடன் சிரித்தக் கொண்டு வந்தான்.

"வா, சிங்காரம் ஆயுள் நூறு. இப்பதான் ஐயா உன்னைப் பற்றிக் கதைத்தார்" என்றாள் சொர்ணம்.

"இண்டைக்குப் பிள்ளையின்ரை முதலாவது பிறந்த நாள் கொண்டாட்டம் என்றபடியால் ஐயாவின்ரை கச்சேரி சகாக்கள் அட்டகாசமாக அமர்க்களமாக மினைக் கெட்டுத்தான் போவினம் என்று நினைச்சன். அந்தச் சந்தடி சத்தமெல்லாம் அடங்கினபிறகு போவமெண்டுதான் கொஞ்சம் சுணங்கி வந்தான்..."

"எனக்கு வயிறு கொஞ்சம் எரியிறாப் போல... அதுதான் கொஞ்சம் கள்ளுக்குக் குடிச்சால் சுகமாக இருக்கும்..." என்று சூரியர் இழுத்தார்.

"இதென்ன பெரிய வேலையே ஐயா? இதோ ஒரு நொடியிலை, துப்பல் துப்பி வத்திறதுக் கிடையில், இறக்கிக் கொண்டு வந்திடுறன்.

சிங்காரம் வீட்டோரம் நின்ற மரத்தை நோக்கி விரைந்தான்.

"கவனம்! ஐயாவின்ரை வயிற்றொச்சலைத் தீர்க் கிறதுக்காக உந்தப் பெரிய உயரத்துக்கு அவசரப் பட்டு ஏறி அவலப்படாதை. காலம் அவ்வளவு நல்லாயில்லை..." ஏனோ சொர்ணம் சிங்காரத்தை எச்சரித்தாள்.

சில கணங்களின் பின்னத்தில் சிங்காரம் ஏறியிருந்த பனையின் ஓலைகள் பெரிதாக சரத்து சரத்து ஓலமிட்டு ஓயுமுன்...



"ஐயோ..." என்று ஓங்கி ஒலித்த அவலக்குரலுடன், "தொபீர்" என்று ஏதோ விழுந்த சத்தமும் கேட்டது. வீட்டிலுள்ளோர் எல்லோரும் மரத்தடிக்கு ஓடிச்சென்று பார்த்தபோது சிங்காரம் மல்லாந்து கிடந்தான். அவன் கண் வாய் மூக்கு காது என்பவற்றில் இருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்தது.

பேச்சில்லை. மூச்சு?... அவன் மூக்கருகே கை வைத்துப் பார்த்தார் சூரியர். பேச்சு மூச்செல்லாம் அடங்கி விட்டிருந்தது.

அந்த நேரத்தில், சூரியர் சடுதியாக சாத்தியாரை ஒரு தடவை நினைத்துக் கொண்டார்.



கே.வி. கதைகள் பற்றி...


யதார்த்தப் பண்பும். உருவகக் கதைப்பாணியும் கலந்திருக்கும் **வேலி** என்ற கதை ஒரு காலகட்ட யாழ்ப்பாணத்தை வெற்றிகரமாக உறைபடமாக்கி இருக்கின்றது. இத்தொகுப்பிலே உள்ள மற்றக் கதைகளுடன் **விடிவு, ஒன்றுக்குள் ஆயிரம்** ஆகிய கதைகளை ஒப்பிடும் போது, அவை வெற்றிப் படைப்புகளாகத் திகழ்கின்றமை, கே. வி. என்ற படைப் பாளியிடம் இந்த அடிப்படை மனித அனுதாபம் காணப்படுவதால்தான் என நினைக்கின்றேன்.

இவ்விரு கதைகளிலும் பேச்சு மொழி திறம்படக் கையாளப்பட்டுள்ளன. உத்தி ரீதியாகவும் குறிப்பிடத் தக்கவை. கே. வி. க்கு மேனாட்டு இலக்கியப் பரிச்சயம் அதிகமில்லை. ஆனால் இவ்விரு கதைகளிலும், நனவோடைக்கு மிக அண்மித்த ஓர் உத்தியை அவர் கையாள்கின்றார். வேறு யாருமில்லாவிட்டால் முதியவர்கள் தமக்குள் கதைப்பது இயல்பு. இவ்வுத்தியைக் கையாண்டு, ஏனைய கதைகளில் இல்லாத அளவிற்கு கதாசிரியர் பாத்திரங்களுடன் ஒன்றிப்போய், அப்பாத்திரங்களின் வாழ்க்கையை உயிர்த் துடிப்புடன் எமக்குமுன் நிறுத்துகின்றார்.

தனிக் கறுப்பும், வெள்ளையுமாக உலகை நோக்கிய ஒருவர், இக்கதைகள் மூலமும், **தேர்** என்ற கதை மூலமும் தனது பார்வையை சற்று விரிவாக்கி உலகத்திலுள்ள பல வர்ணங்களையும் காண விழைகின்றார். இவ்வளர்ச்சியைத் தாமதப்படுத்தியதில் எமது சமூக அமைப்பிற்கும் பங்குண்டு.

அதிகம் அறியப்படாத, நிச்சயமாக அறியப்பட வேண்டிய ஒரு சிறுகதை ஆசிரியரின் சிறுகதைத் தொகுதி இது.

ஏ. ஜே. கனகரத்னா



கே.வி.நடராஜன் அவர்க
விடிவு, ஒன்றுக்குள் ஆயிர
தேர் ஆகிய கதைகள் மூல
தனது பார்வையை விரிவாக்
உலகத்திலுள்
பல வர்ணங்களையு
காண விழைகின்றார்
இக்கதைகள் சிலவற்றில் ஒ
எதிர்மறைத் தன்மையையும்
யன்னலுக் கூடாக எட்டி
பார்த்து, காணக்கூடாதவற்றை
கண்டுவிட்டு... இன்பங்காணு
ஓர் உளப்பாங்கையு
நான் காண்கின்றேன்
யதார்த்தப் பண்பும்
உருவகப் பாணியு
கலந்திருக்கும் வே
என்ற கதை ஒரு காலகட்
யாழப்பாணத்தை வெற்றிகரமாக
படமாக்குகின்றது
சமூகம் அறியப்படாத
நிச்சயம் அறியப்ப
வேண்டிய ஒரு கதாசிரியரின்
சிறுகதைத் தொகுதி

-எ.ஜெ.க